T. N. L. A. Debates

OFFICIAL REPORT

VOL: LIV No: 2 and 3

November 11 and 14 1983


V211,31 N83

N83.54.283;1
136066

2742

# தமிழ் நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை 1983 நவம்பர் 11 - தொகுதி LIV எண். 2

**Friday 11th November 1983—Volume LIV No. 2**

சட்டமன்றப் பேரவைத் துறை, சென்னை-600009

Legislative Assembly Department, Fort St. George,
Madras-600009

விலை:ரூ- 3-50காசுகள்)

(Price Rs. 3-50paise

V211_31 N83

N83.54-2 4;3;1

136.66


## உள்ளடக்கம்.

**11-11-1983**

பக்கங்கள்


1. ஒத்திவைப்புத் தீர்மானம்:

கொள்ளையர்களின் தாக்குதலால் சென்னை, தாம்பரம் பகுதியில் நிலவும் பதட்ட நிலை — 117—127

2. கவன ஈர்ப்புகள்—

(அ) வேளச்சேரி சாலையில் மாநகராட்சியினர் குப்பைகளைக் கொட்டுதல் — 127—130

(ஆ) பெரம்பூரிலுள்ள கழிவு நீரிறை நிலையம் — 130—132

3. அமைச்சரவையின் மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானம் (தொடர்ச்சி) — 133—223

திருமதி டி. யசோதா — 133—141

*திரு. என். சங்கரய்யா — 141—167

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி — 172—189

*திரு. கோ. விஸ்வநாதன் — 189—208

திரு. கே. எஸ். ஜி. ஹாஜா செரீப் — 208—223

4. அறிவிப்பு—

பேரவை அலுவல் — 225

5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்: — 223—224

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1983 நவம்பர் 11 வெள்ளிக்கிழமை

ஐப்பசி 25 ருத்ரோத்காரி திருவள்ளுவர் ஆண்டு 2014

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

''அருவினை என்ப உளவோ கருவியான்
காலம் அறிந்து செயின்.''

ஒரு செயலைச் செய்து முடிப்பதற்குரிய உதவிகளோடு செய்தற்குரிய காலத்தையும் நன்கு அறிந்து செய்தால், செய்தற்கரிய செயல்கள் என்பன இல்லாமல் போய்விடும்.

## 1. ஒத்திவைப்புத் தீர்மானம்

### கொள்ளையர்களின் தாக்குதலால் சென்னை, தாம்பரம் பகுதியில் நிலவும் பதட்ட நிலை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் பம்மல் நல்லதம்பி, பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், டி. மணி, தி. கா. நல்லப்பன், இரா. கருப்பையா, சோ. அழகர்சாமி ஆகியோர் '' தாம்பரம் தொகுதியில் பாலாஜி நகரில் 6-11-1983 ஆம் நாள் கொள்ளை, தாக்குதல் இவைகளால் அந்தப் பகுதிகளில் குடியிருக்கும் மக்களிடமும், இரவு நேரங்களில் வீடு திரும்பும் தொழிலாளர்கள் மத்தியிலும் பரவியுள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்க பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும்'' என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து அவர்கள் மிகச் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக்கொள்கிறேன்,

திரு. பம்மல் நல்லதம்பி: பேரவைத் தலைவர் அவர்களே, எனது தாம்பரம் தொகுதியைச் சார்ந்த சிட்லபாக்கத்தில் சில மாதங்களுக்கு முன்னால் இதேபோன்று ஒரு நிகழ்ச்சி நடைபெற்று இருக்கிறது. முகமூடி கொள்ளையர்கள் சில வீடுகளில் கொள்ளை அடித்து இருக்கிறார்கள். அதேபோன்று மேற்கு தாம்பரம் லட்சுமிபுரத்தில் ஒரு 3 மாதத்திற்கு முன்னால் இதேபோன்று முகமூடி கொள்ளையர்கள் கொள்ளை அடித்து இருக்கிறார்கள்.

கடந்த 6-ஆம் தேதி காலை 3 மணி அளவில் கிழக்குத் தாம்பரம் பாலாஜி நகரில் ஒதுக்குப்புறமான இடத்தில் இருக்கின்ற வீட்டில், திரு. வி. ஆர். சுந்தரம் என்பவர் வீட்டிற்குள் ஏறத்தாழ 7 பேர் கொண்ட கும்பல், கருப்புத் துணியை முகத்திலே கட்டிக்கொண்டு, அந்த வீட்டின் எதிரில் நின்றுகொண்டு கற்களைக் குவித்து வைத்துக்கொண்டு, எதிரிலே இருக்கும் வீடுகளின் முன் தாழ்ப்பாளை அவர்களே போட்டுவிட்டு, கட்டையால் அந்த வீட்டின் கதவுகளை உடைத்து, உள்ளே கைவிட்டு அதனுடைய தாழ்ப்பாளைக் கழற்றி, கதவைத் திறந்து உள்ளே போய், அங்கேயிருக்கும் தாய்மார்கள் போட்டு இருக்கும் நகைகளை அவர்களாகவே பீதியில் ஒப்படைத்து இருக்கிறார்கள். இருப்பினும் அவர்கள் தாய்மார்களை மிரட்டியிருக்கிறார்கள். தாலியை மட்டும் கேட்காதீர்கள் என்று கெஞ்சி இருக்கிறார்கள். அவர்கள் தாய்மார்களிடத்தில் இருந்து கைவைத்தே அறுத்து இருக்கிறார்கள். நான் கேள்விப்பட்டு இருக்கிறேன் கொள்ளைக்காரர்கள், திருடர்கள் தாலியைத் தொடாமல் மற்றவற்றைத் தொடுவார்கள் என்று. ஆனால் இந்த நூதனமான திருட்டில் தாலியை முதலில் திருடுவதாகத் தெரிகிறது.

இதைக் கேள்விப்பட்டு நான் அடுத்த நாள் அந்த வீட்டிற்குச் சென்று, அவர்களைப் பார்த்துக் கேட்டபோது, முதலில் தாலியைத் தான் அவர்கள் கைவைத்து எடுக்கிறார்கள் என்று சொல்லப்பட்டது. அவர்கள் எப்படியிருக்கிறார்கள் என்றால் குள்ளமாகவும் அரைக்கைச் சட்டையும் பனியனும் போட்டுக்கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் எப்படி வருகிறார்கள், எப்படி போகிறார்கள் என்பது தெரியவில்லை. இதற்குக் காரணம் எங்களுடைய பாலாஜி நகரில் மின் விளக்குகள் கிடையாது. எங்களுக்கு உடனடியாக மின் விளக்கு போட்டுத் தரவேண்டும் என்று வற்புறுத்தினார்கள். இதையெல்லாம் நான் குறிப்பிடுவதற்குக் காரணம் இன்னும் அவர்கள் பீதியோடு இருக்கிறார்கள். அந்தப் பகுதி இருட்டாகவே இன்னும் இருந்து கொண்டு இருக்கிறது.

அடுத்து, கடந்த 9-ஆம் தேதி பம்மல் சங்கர் நகரில் மலைக்கு அருகில் உள்ள 3 பேருடைய வீடுகளில்—சந்தானம், சம்பத், நாராயணன்—இந்த மூன்று பேரும் அண்ணன், தம்பிகள்—ஒரு வீட்டில் திரு. எஸ். இராஜகோபாலன் என்பவர் 52 வயது மதிக்கத்தக்க பெரியவர் வாழ்ந்துகொண்டு இருக்கிறார்—இதேபோன்று நபர்கள் ஏறத்தாழ 10 பேர் ஒவ்வொரு வீடாகச்சென்று கதவை கட்டையால் அடித்து உடைத்து இருக்கிறார்கள். ஆயுதங்களைக் காட்டி மிரட்டுவது இல்லை. வேறு எந்தவிதமான ஆயுதமோ அல்லது துப்பாக்கியோ கிடையாது. அவர்கள் சவுக்குக் கட்டையால் அடித்து உள்ளே நுழைகிறார்கள், நகைகளை மட்டும் எடுக்கிறார்கள். குறிப்பாக அவர்கள் பேசுகின்ற வார்த்தை 'சலோ, சலோ' என்ற இந்தி வார்த்தையைத்தான் அவர்கள் கடைசியாக உபயோகிக்கிறார்கள். இதைத்தான் நான் 9-ஆம் தேதி காலையிலே ஒரு ஒழுங்குப் பிரச்சினையாகக் கொண்டு வந்தேன், அவர்கள் வீட்டைவிட்டுப் போகின்றபோது அந்த





வீட்டினுடைய சொந்தக்காரரான சம்பத் என்பவரின் மகன் பிரசன்னா என்ற பையன் 9-ஆம் தேதி காலையிலேயிருந்து விம்மிக்கொண்டு இருக்கிறான். நான் நேற்று இரவு 9 மணிக்குச் சென்று பார்த்தபோதும் அந்தப் பையனின் விம்மல் இன்னும் அடங்கவில்லை. புலம்பல் நிற்கவில்லை. அந்தப் பகுதியிலே விம்மல்கள் கேட்டுக்கொண்டிருக்கின்றன. அழுகுரல் கேட்கிறது. கூக்குரல் கேட்கிறது. புலம்பல்கள் கேட்கின்றன. நான் இவைகளைச் சொல்வதற்காகத் தான் 9-ஆம் தேதி ஒழுங்குப் பிரச்சினைக் கொண்டு வந்து அதன் மூலம் பேரவைத் தலைவர் அவர்களின் கவனத்தை ஈர்த்து அந்த அழுகுரலை நிறுத்தலாம் என்று நினைத்தேன். அழுகுரலை யார் அடக்கவேண்டும்? 6 மணிக்கு காவல்துறைக்குச் செய்தி அனுப்பியிருக்கிறார்கள். ஆனால் 8 மணிவரையிலும் காவல் துறையினர் வரவில்லை. நான் அங்கே சென்று பார்த்துவிட்டு திரும்பி சட்டமன்றம் வருவதற்கு முன்னதாக மாவட்டக் காவல்துறை அதிகாரிக்கு தொலைபேசி மூலமாக தொடர்பு கொள்ள முயன்றேன். ஆனால் பேசமுடியவில்லை, காரணம் தொலைபேசி வேலை செய்யவில்லை. பின்னர் ஐ. ஜி. அவர்களோடு தொடர்புகொண்ட பின்னர்தான், நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். இதை நான் சொல்வதற்குக் காரணம் காவல்துறையினருடைய மந்தப் போக்குதான். அவர்களுடைய நோக்கங்கள் வேறு திசையில் திருப்பப்பட்டு இருக்கின்றன. என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு.

அதுமட்டுமல்லாமல், நான் போன நிதி நிலை அறிக்கையில் பேசுகின்றபோதே சொன்னேன். என்னுடைய தாம்பரம் தொகுதி சென்னைப் பெருநகரப் பகுதியை ஒட்டியிருக்கின்ற தொகுதி. அங்கே பலர் புதிதாக வந்து பல புதிய குடியிருப்புகளை உண்டாக்கிக்கொண்டிருக்கிறார்கள். பம்மலிலே மட்டும் 25 புதுக் குடியிருப்புகள் உருவாகியிருக்கின்றன. தந்தை பெரியார் பெயரில், காந்தியார் பெயரில், காமராஜர் பெயரில் அண்ணா பெயரில், அம்பேத்கார் பெயரில், மற்றும் பான்னி நகர், முத்தமிழ் நகர்' திருவள்ளுவர் நகர், பசும்பொன் நகர், ஈஸ்வரன் நகர் என்று இப்படி பல்வேறு புது குடியிருப்புகள் அங்கே உருவாகிக்கொண்டு வருகின்றன. ஆகவே பம்மலிலே ஒரு காவல் நிலையமும், வேடவாக்கத்திலேயும், மடிப்பாக்கத்திலேயும், காவல் நிலையங்கள் வேண்டுமென்று நான் பேசியிருக்கிறேன். ஆனால் இதுவரையில் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. காவல் துறையை இன்னும் பலப்படுத்தவேண்டுமானால் அந்த நான்கு பகுதியிலேயும், புதிய காவல் நிலையங்களை உருவாக்கவேண்டும்.

அதோடு என்னுடைய ஆலோசனை அங்கே ஒவ்வொரு நகரிலும் ஒரு பொது நலச் சங்கம் இருக்கிறது. அந்தச் சங்கத்தோடு நம்முடைய காவல் துறையையும் இணைத்து அவர்களோடு ஒரு குழுவைப் போட்டு இரவு நேரங்களில், அதாவது

வேன்களை வைத்து, ஆயுதம் தாங்கிய போலிசாரை வைத்து ரோந்து சுற்றிவரச்செய்யவேண்டும். அவர்கள் வருகின்ற நேரத்தில், முக்கியமாக ஒதுக்குப்புறத்தில் இருக்கின்ற இடங்களில் உள்ளவர்களிடத்தில் கையெழுத்து வாங்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அவர்களைப் பிடிப்பதற்கு காவல்துறை நடவடிக்கை எடுக்கமுடியாத நிலையில் பொதுமக்களே அவர்களைப் பிடித்துத்தாருங்கள், 10 ஆயிரம் ரூபாய் தருகிறோம் என்று காவல்துறை சொல்லியிருக்கிறது என்று சொன்னால் என்ன நிலைமை ஏற்பட்டு இருக்கிறது என்பதைப் பார்க்கவேண்டும் எனவே என்னுடைய தாம்பரம் தொகுதியிலே இப்படிப்பட்ட சம்பவங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இது காவல் துறையின் போதாதத் தன்மையையும், காவல்துறையினருடைய துரித நடவடிக்கை இல்லை என்பதையும் நான் இந்த நேரத்தில் குற்றச்சாட்டாகச் சொல்ல விரும்புகிறேன். குறிப்பாக அந்தப் பகுதியிலே இருக்கின்ற மக்கள் அனைவரும், நடுத்தர குடும்பத்தைச் சேர்ந்தவர்களாகவும், என். ஜீ. ஒக்களாகவும், தொழிலாளர்களாகவும் இருக்கிறார்கள். அவர்களுக்குப் பாதுகாப்புத் தர வேண்டும். அவர்களுடைய அழுகுரல் நிற்கவேண்டும். அவர்களுடைய விம்மல், அவர்களுடைய புலம்பல் நிற்கவேண்டும். பிரசன்னா என்ற பையன் இன்னமும் அழுதுகொண்டிருக்கிறான். அந்தக் காட்சியைப் பார்த்த காரணத்தால் சொல்கிறேன், இது போன்ற கொடுமைகள் தமிழகத்திலே எங்கும் நடைபெறவில்லை இது சம்பல் பள்ளத்தாக்கிலே நடந்து அந்தக் கொள்ளைக்குச் சமமாக இருக்கிறது. இதற்கு காவல்துறை மிக துரிதமாக வேலையைச் செய்து அவர்களைக் கண்டுபிடிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எனவே இதுபோன்ற பிரச்கினைகளைப் பற்றி பேசுவதற்காகவும், இது ஒரு முக்கியமான பிரச்சினை என்பதாலும், அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இது பற்றி விவாதிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்,

(முற்பகல் 9-10.)

**திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்:** பேரவைத் தலைவர் அவர்களே. இந்த முகமூடிக் கொள்ளையர்கள் சம்பந்தமாக ஏற்பட்டு இருக்கின்ற பாதிப்பையும், மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள பீதி நிலைமையை போக்குவதற்காகவும், மற்றும் இது சம்பந்தப்பட்ட பல்வேறு விஷயங்களைப் பற்றி பேசவேண்டும் என்பதற்காகக் கொண்டுவந்திருக்கிற இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தில் மார்கிசிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நான் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். ஏற்கனவே 6-11-83 அன்று தாம்பரத்திலே உள்ள பாலாஜி நகரில் சுந்தரம் என்பவர் வீட்டில் முதலிலே கொள்ளையடிக்கப்பட்டது. அந்தக் கொள்ளை அடிக்சப்பட்டபோது என்ன நடந்தது என்பதைப் பற்றியெல்லாம், மாண்புமிகு உறுப்பினர் நல்லதம்பி அவர்கள் சொன்னார்கள். ஆகவே, அதற்குள்ளே போய்





நேரத்தை வீணாக்கவிரும்பவில்லை. இதிலே முக்கியமான விவகாரம் என்னவென்று சொன்னால், தாலியையே பறித்து எடுத்துக் கொள்கிற அளவுக்கு மோசமான நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன' முகமூடி கொள்ளைக்காரர்களால். ஆனால் இது அத்தோடு நிற்கவில்லை. முதல் திருட்டு நடந்தவுடனேயே போலீஸ்காரர்கள் ஜரூராக நடவடிக்கை எடுத்திருந்தால், அதற்குப்பிறகு ஏற்பட்ட பல்வேறு சம்பவங்களை தடுத்து நிறுத்தியிருக்க முடியும். ஆனால் அந்த வகையில் முயற்சிகளை எடுக்கவில்லை. போலீஸ் துறையைப் பொறுத்தவரையில் என்ன சொல்கிறார்கள் என்றால், வீடுகள் ஒதுக்குபுறமாக இருக்கிறது. ஏன் ஒதுக்குப்புறமாகப் போய் வீடு கட்டினீர்கள்? இந்த மாதிரியான விசாரணைகள்தான் போலீஸ் தரப்பிலேயிருந்து சொல்லப்படுகிறதே தவிர, போதுமான அளவுக்கு போலீஸ் துறையினர் நடவடிக்கை எடுக்கவில்லை. அப்படி எடுக்காததன் விளைவாகத்தான் 9—11—1983-ஆம் தேதியன்றும் அதே முகமூடிக் கொள்ளைக்காரர்கள் கொள்ளையடித்திருக்கிறார்கள்

முதலிலே நடந்த அந்தக் கொள்ளை நடந்த இடத்திலே ஏற்கெனவே லைட் இல்லை என்று சொல்லப்படுகிறது. ஆனால் இரண்டாவதாக பம்மல் பகுதியிலே, சங்கர்நகர் பகுதியிலே, இருந்த லைட்டையே உடைத்துவிட்டு, அதற்குப்பிறகு, வீட்டுக் குள்ளே புகுந்து, பூட்டை உடைத்து, வீட்டிலே இருந்தவர்களின் மண்டைகளையும் உடைத்து திருடியிருக்கிறார்கள். (குறுக்கீடு) ஆமாம் மூன்று வீடுகளில் புகுந்து இப்படி கொள்ளை அடித் திருக்கிறார்கள். அதில் குறிப்பாக, நாராயணன் அவர்களின் வீடும், சம்பத்து என்பவரின் வீடும் சந்தானம் என்பவருடைய வீடும் கொள்ளையடிக்கப் பட்டிருக்கிறது, இந்த மூன்று வீடுகளுக்குள்ளும் புகுந்துச் சென்று, அவர்களுக்கு சேதம் விளைவித்ததோடு மட்டும் அல்ல, தாலி உள்பட, எல்லாச் சாமான்களையும் கொள்ளை அடித்துச் சென்றிருக்கிறார்கள். இப்படிப்பட்ட கொள்ளைகள் தொடர்ந்து நீடித்துக் கொண்டே போவது சரியானது அல்ல. நியாயமும் அல்ல. அந்த அடிப்படையில் மக்கள் மத்தியில் ஒரு பெரிய பதட்ட நிலையே ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, இதிலே காலா காலத்திலே தலையிட்டு, நிறுத்தவில்லை என்று சொன்னால், மக்களின் பதட்ட நிலையை தணிக்க முடியாது. போலீஸ் துறையினுடைய நடவடிக்கைகளும் காணாது என்ற வகையில் பிரச்சனைளைத் தெரிவிக்க இந்தத் தீர்மானம் கொண்டு வரப் பட்டிருக்கிறது.

போலீஸ் என்ன நடவடிவக்கையை எடுத்தது? போலீஸ் நாயை விட்டார்கள். நாய் என்ன செய்தது என்றால் அப்படியே ஒரு சுற்று சுற்றி வந்து. சினிமா டிக்கட்டுகள் நான்கை காண் பித்திருக்கிறது. பம்மலில் இருக்கின்ற சினிமா தியேட்டரிலே சினிமா பார்த்து விட்டு, திரும்பி வந்தவர்களின் டிக்கட்டுகள் நான்கைத்தான் அது கண்டு பிடித்து கொடுத்திருக்கிறதே தவிர, வேறு எதுவும் இல்லை. அதற்கு பதிலாக அவர்கள் கவனம் வேறு

பக்கம் போகிறது. இந்த திருட்டுக்கான துப்பை தருகிறவர்களுக்கு 10 ஆயிரம் ரூபாய் பரிசு என்று இதேபோன்ற முகமூடி கொள்ளை 57லே 62லே 64லே, பிறகு 68லேயும் நடத்தப்பட்டிருக்கின்றன, அந்தக் கொள்ளைகளை நடத்தியது யார் யார் என்று அந்த குற்றவாளிகளின் விவரங்களை திரட்டுகிற நிலைமைதான் இருக்கிறதே தவிர உண்மையான குற்றவாளியை கண்டுபிடிக்க எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அப்படி எடுப்பதற்கு பதிலாக, ஓரத்திலே வீடு கட்டியிருக்கிறீர்களே. ஆகவே நீங்களே பாதுகாத்துக்கொள்ளுங்கள் என்று ஊரார்களைச் சொல்கிற அளவுக்குத்தான் போலீஸ் நடவடிக்கை இருக்கிறது. இதற்கு நிவாரணம் காணும் வகையில் நடவடிக்கை இல்லை என்றும் சொல்லிக் கொள்ளவிரும்புகிறேன். இந்த நிலை நீடித்தால் பம்மலோடு நிற்காது இந்தக் கொள்கைகள் ஹாஸ்டலுக்குப் தொடர்ந்து சட்டசபைக்கே வந்தால் கூட ஆச்சரியப்படுவதற்கில்லை. ஆகவே அதைப்பற்றி விரிவாக விவாதிப்பதற்காகவும் தற்போது நிலவி வரும் பதட்ட நிலையை போக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் வற்புறுத்தி இதுகுறித்து விரிவாகப் பேச அவையின் இன்றைய இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவை தலைவர் : ஹாஸ்டலுக்கு வந்தால் அங்கே அவர்களுக்கு ஒன்றும் கிடைக்காது.

திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே; கடந்த 6-11-1983 ஆம் தேதியன்று பல்லாவரத்திற்கு சமீபத்திலே இருக்கக்கூடிய அனகாபுத்தூர் போகும் வழியில் சங்கர்நகருக்கு கீழ் பக்கம் இருக்கக்கூடிய பம்மல் என்னும் பகுதியிலே, 25 குடும்பங்கள் வசிக்கக்கூடிய இடத்திலே முகமூடிக் கொள்ளைக்காரர்கள் புகுந்து, 4 குடும்பங்களில் இருக்கக்கூடிய நகை உள்பட சுமார் 1 லட்சத்திற்கு மேற்பட்ட ரூபாயை கொள்ளை அடித்துச் சென்றிருக்கிறார்கள். அந்தக் கொள்ளை சம்பந்தப்பட்ட விவரங்களை பத்திரிக்கைகளின் வாயிலாக பார்க்கிறபோது, 12 பேர்கள் அங்கே புகுந்து கொள்ளை அடித்திருப்பதாகத் தெரிகிறது.

ஆனால், அதற்கு முன்பாகவே, ஒரு மூன்று அல்லது நான்கு நாட்களுக்கு முன்பாக அதே பகுதியில் திருட்டு, முகமூடிக் கொள்ளைக்காரர்களால் நடத்தப்பட்டிருக்கிறது. அப்படி முதல் கொள்ளை நடத்தப்பட்ட பின்பு முறையாக காவல் துறையினர் அந்தப் பகுதியிலே கண்காணிப்புச் செய்து, சந்தேகப்பட்டவர்களை அழைத்து அல்லது முறையாக காவல் இருக்க நடவடிக்கைகளை செய்திருப்பார்களேயானால், இந்த இரண்டாவது கொள்ளையையாவது தடுத்து இருக்க முடியும் என்பது என்னுடைய கருத்து. மேலும் திருடியவர்கள். ஒரு வீட்டிலே புகுந்து அந்த வீட்டிலே அவர்கள் எண்ணுகின்ற நிலைமையின் அளவுக்கு பணமோ மற்ற நகைகளோ இல்லாத காரணத்தால்





பக்கத்திலே இருக்கக்கூடிய ரெயில்வே குமாஸ்தா, பொதுப் பணித்துறையின் என்ஜினீயர்கள், இன்னும் பல்வேறு அரசு ஊழியர்களிடத்திலே கொள்ளை அடித்திருக்கிறார்கள். அது மட்டுமல்லாமல் இன்றைய தினம் பத்திரிகையில் பார்க்கிறபோது காவேரிப்பாக்கம் என்ற இடத்திற்கு சமீபத்திலேகூட இதே மாதிரியான ஒரு கொள்ளை நடைபெற்று சற்றேறக்குறைய 11 ஆயிரத்து 300 ரூபாயும் 6½ பவுன் தங்கச் சங்கிலியும் திருட்டுப் போனதாகவும் முகமூடிக் கொள்ளையர்கள் திருடியதாகவும் பத்திரிகையில் பார்த்தோம். காவேரிப்பாக்கம் இன்றும் ஏனைய பகுதிகளிலே பம்மல் தங்கச்சாலை போன்ற பல்வேறு இடங்களில் முகமூடிக் கொள்ளையர்கள் கொள்ளை அடிக்கிற நிலையைப் பார்க்கிறபோது மேலும் இது ஒரு தொடர்கதையாக இருக்குமோ என்ற ஐயப்பாடு எழுகிறது. காவல் துறையினர் அந்தக் கொள்ளையில் ஈடுபட்ட குற்றவாளிகளைக் கண்டிபிடிப்பதற்குப் பதிலாக பொதுமக்கள் குற்றவாளிகளைக் கண்டுபிடித்து கொடுத்தால் 10 ஆயிரம் ரூபாய் கொடுக்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள், பொதுமக்கள் குற்றவாளிகளைக் கண்டுபிடித்தால் 10 ஆயிரம் ரூபாய் கொடுப்பதாக அறிவித்து விட்டு உண்மையான குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதற்கு காவல் துறையினர் பொறுப்பு ஏற்றுக்கொள்ளமாட்டார்களோ என்ற ஐயப்பாடு மக்களிடத்திலே எழுந்திருக்கிறது. ஆகவே இம்மாதிரியான குற்றங்கள் நடைபெறாமல் இருப்பதற்காக அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இதுபற்றி விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்; மாண்புமிகு தலைவர் அவர்களே, மிக வேதனையும் கவலையும் தரக்கூடிய கொள்ளையடிப்பு நிகழ்ச்சிகள் அண்மையில் மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியதைப்போன்று நடந்து இருப்பது உள்ளபடியே நமக்கு மிக்க வருத்தத்தைத் தருவதாக அமைந்திருக்கிறது. எதிர்பாராத வகையில் திட்டமிட்டு இப்படிப்பட்ட செயல்கள் நடைபெற்று இருக்கின்றன என்பதையும் நாம் அறிவோம்.

6-11-83ம் தேதி இரவு சுமார் 3 மணிக்கு தாம்பரத்தின் ஒதுக்குப்புற பகுதியான பாலாஜி நகரில் கல்பாக்கம் அனல் மின் நிலையத்தில் நிர்வாக பொறியாளராக பணிபுரியும் திரு. சுந்தரம் அவரது துணைவியார் திருமதி பத்மா, மற்றும் அவரது தம்பி திரு சுவாமிநாதன். அவரது துணைவியார் திருமதி ராஜேஸ்வரி ஆகியோர் வீட்டில் தூங்கிக்கொண்டு இருந்தபோது, அடையாளம் தெரியாத கொள்ளையர்கள் மூன்று பேர்கள், சவுக்கு தடிகளால் முன்புறக் கதவைத் தாக்கி உடைத்து, வீட்டினுள் புகுந்து, திரு சுந்தரத்தையும், திருமதி பத்மாவையும் சவுக்கு தடிகளால் தாக்கி, இருவரின் தலையிலும் உடம்பிலும் காயப்படுத்தி, திருமதி பத்மா அணிந்திருந்த தாலி மற்றும் தங்க நகைகளை பறித்துள்ளனர். அவர்களைக் காப்பாற்ற முயற்சித்த திரு சுவாமிநாதனையும் தடிகளால் தாக்கி, தலையிலும் உடம்பிலும்

காயப்படுத்தி திருமதி ராஜேஸ்வரி அணிந்திருந்த தங்க நகைகளைப் பறித்துள்ளனர். காயமடைந்துள்ளவர்களின் கூக்குரல் கேட்டுக் காப்பாற்ற வந்த பக்கத்து வீட்டுக்காரர்கள் திரு. பஞ்சாபகேசன், திரு. முத்துலிங்கம் என்பவர்களை வீட்டின் வெளியே நின்றிருந்த கொள்ளைக் கூட்டத்தைச் சேர்ந்த மற்ற இரு நபர்கள், கற்களை எறிந்து அவர்களின் மார்புகளில் காயப்படுத்தியுள்ளனர். கொள்ளையர்கள் அனைவரும் முகத்தை துணியால் மறைத்து இருந்திருக்கின்றனர். மேலும் அவர்கள் இந்தி மொழியில் பேசியுள்ளார்கள். கொள்ளையடித்த சுமார் 30 ஆயிரம் மதிப்புள்ள 26 பவுன் தங்க நகைகளுடன் வீட்டின் பின்புறம் உள்ள வாயில் வழியாக இருளில் தப்பி ஓடி விட்டனர்.

சம்பவம் பற்றி தொலைபேசி மூலம் தகவல் கிடைத்ததும் இரவு 3-45 மணிக்கு தாம்பரம் காவல் நிலைய உதவி ஆய்வாளர் உடனே சம்பவம் நடந்த இடம் சென்று காயம்பட்டவர்களில் மூவரைச் சென்னை அரசு பொது மருத்துவ மனைக்கு சிகிச்சைக்கு அனுப்பி நடவடிக்கை எடுத்துள்ளார். காயமடைந்த திரு. சுந்தரம், அவரது துணைவியார் திருமதி பத்மாவும், 9-11-83 ஆம் தேதி சாதாரண காயங்களுக்கான சிகிச்சைக்குப் பின் அனுப்பப்பட்டுள்ளனர். திரு. முத்துலிங்கமும், திரு. பஞ்சாபகேசனும் அன்றே புறநோயாளியாக சிகிச்சை பெற்றனர். திரு. சுவாமிநாதன் இன்னமும் சென்னை அரசு பொது மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வருகிறார், அவரது உடல் நிலையில் நல்ல முன்னேற்றம் தெரிகிறது. இது சம்பந்தமாக தாம்பரம் காவல் நிலைய குற்ற எண்828/83 புரிவு 457,/397 இ. பி, கோவில் வழக்கு பதிவு செய்து விசாரணையில் உள்ளது.

(முற்பகல் 9-20)

8—11—83ஆம் இரவு 12-45 மணிக்கு பல்லாவரம் காவல் நிலைய எல்லையிலுள்ள பம்மல் கிராமத்தில் வெளிப்புற பகுதியில் மலை அடிவாரத்தில் அமைந்துள்ள சங்கர் நகரில் குடியிருக்கும் திரு. சந்தானம், திரு. சம்பத், திரு. நாராயணன் ஆகிய மூன்று பேர்களுடைய வீடுகளையும், பெயர் தெரியாத நான்கு கொள்ளைக் கூட்டத்தினர் தாக்கி, தாங்கள் வைத்திருந்த தடிகளால் வீடுகளின் முன்புறக் கதவுகளை தாக்கி, உடைத்து வீட்டினுள் புகுந்து, திரு. சந்தானம், அவருடைன் துணைவியார் திருமதி மைதிலி (வயது 34) என்பவருடைய கழுத்திலும், கைகளிலும், காதுகளிலும் அணிந்திருந்த தங்க நகைகளை கழற்றி வாங்கிக்கொண்டார்கள். திரு சந்தானத்தையும் அவருடைய வீட்டில் வாடகைக்கு குடியிருக்கும் திரு. ராஜகோபால் என்பவரையும், எதிரிகள் அடித்துக் காயப்படுத்தி உள்ளார்கள்.

திரு. சந்தானத்தின் பக்கத்து வீட்டில் சேர்ந்தார் போல் இருக்கும் வீட்டில் திரு. சந்தானத்தின் சகோதரர் திரு. சம்பத் என்பவருடைய வீட்டினுள் எதிரிகள் புகுந்து திரு. சம்பத்தை தாக்கி காயப்படுத்தி அவருடைய துணைவியார் ஜெயலட்சுமி அணிந்திருந்த தங்க நகைகளையும் எதிரிகள் கழற்றி வாங்கிக்





கொண்டார்கள். பிறகு எதிரிகள் திரு. சந்தானத்தின் மற்றொரு சகோதரர் திரு. நாராயணன் என்பவருடைய வீட்டினுள் புகுந்து திரு. நாராயணனை தாக்கி அவருடைய துணைவியார் திருமதி விஜயலட்சுமி அணிந்திருந்த நகைகளையும் பலவந்தமாக பறித்துக் கொண்டார்கள். இந்த சம்பவத்தில் நான்கு ஆட்கள் காயமடைந்து உள்ளார்கள். ஒரே இடத்தில் வரிசையாக அமைந்துள்ள மூன்று சகோதரர் விடுகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. கொள்ளையடிக்கப்பட்டுள்ள மொத்த சொத்துக்களின் மதிப்பு ரூபாய் 20.000/—. 9—11—83ந் தேதி காலை 7 மணிக்குத்தான் இந்த சம்பவம் பற்றி பல்லாவரம் காவல் நிலையத்தில் புகார் செய்யப்பட்டு, மூன்று வழக்குகள் பல்லாவரம் காவல்நிலைய குற்ற எண்கள் 835, 836 மேலும் 837/83 பிரிவு 457, 397 இ.பி. கோவில் வழக்குகள் பதிவு செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டு வருகின்றன.

செங்கை கிழக்கு மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர், செங்கை சரக காவல் துணைத்தலைவர் மேற்பார்வையில், மேற்படி வழக்குகள் தீவிர புலன் விசாரனை செய்யப்பட்டு வருகின்றன. கைரேகை நிபுணர்களும், துப்பறியும் நாயும், ரசாயணப் பரிசோதனை வல்லுநர்களும் இந்த வழக்குகளின் விசாரணைக்கு பயன்படுத்தப்பட்டுள்ளார்கள். மேலும் இது போன்ற சம்பவங்கள் நடைபெறாவண்ணம் பகலில் செங்கை கிழக்கு மாவட்டத்தின் ஒதுக்குப் புறமாக அமைந்திருக்கும் புறநகர்ப் பகுதிகளில் திருடர்கள் நடமாட்டத்தைக் கண்காணிக்க துப்பாக்கி ஏந்திய காவலர்கள் ரோந்தும். தொலைபேசி பொருந்திய வாகனங்களில் ஆயுதம் தாங்கிய காவலர்களும் ரோந்து வருகின்றனர். கொள்ளையரின் நடமாட்டத்தைக் கண்காணிக்க, தியேட்டர்கள், பயணிகள் தங்கும் விடுதிகள், சத்திரஞ்சாவடிகள் ரயில்நிலையங்கள் போன்ற இடங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட காவலர்கள் அனுப்பப்படுகின்றனர். வாகனங்களில் கொள்ளையர் நடமாட்டம் உள்ளதா என்று கண்காணிக்க வாகனங்கள் தணிக்கை செய்யப்படுகின்றன.

இரவில் வான்தந்தி பொருத்தப்பட்ட வாகனங்களில் ஆயுதமேந்திய காவலர்கள் புறநகர்ப் பகுதிகளில் ரோந்து வருகின்றனர். பொதுமக்களும் காவலர்களும் இணைந்து புறநகர்ப் பகுதிகளில் ஆயுதந்தாங்கி ரோந்து வருகின்றனர்.

இரவும் பகலும் பரங்கிமலை கட்டுப்பாடு அறை 431601 431603 ஆகிய தொலைபேசி எண்களில் புகார்கள் பெறப்பட்டு உடன் நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. விசாரணைக்கென தனிக்குழு அமைக்கப்பட்டுள்ளது. கைரேகை போன்ற நுண்புலன்கள் ஆய்ந்து தொடர் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. டில்லி, கல்கத்தா மற்றும் தமிழ்நாட்டில் பிற இடங்களுக்கு விசாரணைக்குழுக்கள் அனுப்பப்பட்டுள்ளன. இந்த வழக்கில் ஈடுபட்ட கொள்ளையர்களை எப்படியேனும்

பிடித்துவிட வேண்டும் என்பதில் காவல்துறையினர் மிக அக்கறையோடும், மிக விறுவிறுப்போடும் பணியாற்றக்கூடிய வகையில் பணிக்கப்பட்டு இருக்கிறார்கள் என்பதை மன்றத்திற்கு தெரிவித்துக்கொள்கிறேன். அகப்படாமல் இருக்கின்ற கொள்ளையர்களைப் பிடிப்பதற்காக சிலபல வழித்தடங்களை கண்டுபிடிக்கவும் டில்லி, கல்கத்தாவுக்கும் காவல்துறையின் குழுக்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன. அது மட்டும் இல்லாமல் சிக்காமல் இருக்கிறவர்கள் கிடைக்கவேண்டும் என்ற அக்கறை காரணமாக பொதுமக்கள் யாராவது பிடித்துக் கொடுப்பார்களானால் அவர்களுக்கு 10 ஆயிரம் ரூபாய் கொடுக்கப்படும் என்று காவல்துறை சொல்லியிருக்கிறதே தவிர பொது மக்களிடம் அந்த பிரச்சனையை விட்டுவிட்டு காவல்துறை கவனிக்காமல் விட்டுவிட்டு இருக்கிறது என்ற நோக்கம் அல்ல, ஏன் என்றால் முகமூடிக் கொள்ளையர்களாக இருக்கிறார்கள். ஏற்கெனவே வடாற்காடு பகுதிகளில் பஸ்களில் சிலபல நாட்கள் தொடர்ந்து கொள்ளையடிக்கப்பட்ட சூழ்நிலையில் அதை உடனடியாக நடவடிக்கை எடுக்காவிட்டாலும் அதை கண்டு அறிந்து கடைசியில் யார் கொள்ளைக்காரர்கள் என்று பார்த்தால் வட நாட்டைச் சேர்ந்த சிலர் திட்டமிட்டு வந்து கொள்ளை அடித்தார்கள் என்று கண்டு பிடிக்கப்பட்டு வழக்குகள் எல்லாம் தொடுக்கப்பட்டதை நாம் அறிவோம். இதிலேயும் கட்டாயம் இந்த கொள்ளைக்காரர் பிடிபடுகின்ற சூழ்நிலையைப் பார்த்து எல்லாவிதமான வகைகளிலும் முயற்சிகளும் எடுத்துக்கொள்ளவேண்டும என்று அரசு விரும்பி அதற்கான நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு வருகிறது.

ஆனால் இப்படிப்பட்ட திட்டமிட்டு கொள்ளைகள் நடைபெறுவதற்கான நிலைமை ஏற்படுமானால் மாண்புமிகு உறுப்பினர்கள் கூறுவது போன்று நாடு முழுவதும் அச்சம் ஏற்படும் நடுக்கம் ஏற்படும் என்பது மட்டும் அல்லாமல் எந்த ஒரு பகுதியிலும் கெடுதல் ஏற்படும் என்பதை அரசு நன்கு உணர்ந்து இருக்கிறது. ஆகவே தான் எந்த பகுதியில் தொடர்ந்து 2 நாட்களாக நடைபெறுகிறதோ அந்த இடங்களில் அதிகமான பாதுகாப்பு ஏற்படுத்தவும், வேறு பல இடங்களில் அதுமாதிரி இருக்கிற இடங்களில் உஷராக இருக்கும்படியாகவும் செங்கற்பட்டு மாவட்டத்தை பொறுத்தவரைக்கும், சென்னையை சுற்றிலும் உள்ள பகுதிகளுக்கும் காவல்துறையைச் சேர்ந்தவர்களுக்கு ஆங்காங்கே அறிவுரைகள் வழங்கப்பட்டு இருக்கின்றன.

அங்கே மின்விளக்குகள் இல்லை என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லதம்பி அவர்கள் குறிப்பிட்டார்கள். அதை விசாரித்துப் பார்த்ததில் அன் ஆதரைஸ்டு போர்ஷனாக இருப்பதன் காரணமாக, அனுமதி பெறாமலேயே அந்தப் பகுதிகளில் வீடுகள் கட்டிக்கொண்டு அதற்கான அனுமதியை அவர்கள் பெறாமலேயே டெவலப்மென்ட் டாக்ஸ் கட்டாமல்



இருப்பதன் காரணமாக சில பல சிக்கல்கள் காரணமாக போதுமான அளவு மின் வசதி செய்யப்படவில்லை என்று குறிப்பிட்டார்கள். பொதுமக்கள் இந்த வகையில் ஒத்துழைப்பு தருவார்களானால் அந்தப் பகுதிகளுக்குத் தேவைப்படுகிறதை செய்து முடிப்பதற்கான வாய்ப்புவசதிகளை ஏற்படுத்த முடியும். காவல் நிலையங்கள் ஏற்படுத்த வேண்டும், புறக்காவல் நிலையங்களை காவல் நிலையங்களாக அமைக்க வேண்டும் என்ற கருத்தையும் மாண்புமிரு உறுப்பினர் திரு, நல்லதம்பி அவர்கள் குறிப்பிட்டார்கள். காவல் நிலையங்களை எங்கெங்கு அமைக்கவேண்டும், எப்படி அமைக்க வேண்டும் என்பதற்கான ஒரு குறிப்பிட்ட அளவுகோல் அடிப்படையில் நாம் அமைத்துக்கொண்டு வருகிறோம். மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்களின் கருத்தையும் அடிப்படையாக வைத்து அந்தப் பகுதிகளுக்கு கூடுதலாக தேவைப்படுமானால் அவசியப்படும் என்ற நிலைமை ஏற்படுமானால் இந்தப் பிரச்னைக்குப் பிறகு காவல்துறையினர் அதைப்பற்றி ஆராய்ந்து செய்கிறபோது தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதை இந்த வாய்ப்பில் கூறி—ஆனால் இந்தப் பிரச்சினையில் அரசாங்கம் அலட்சியமாக இல்லாது தீவிரமாகக் கண்டுபிடித்து கடுமையாகத் தண்டிப்பதன் மூலம் இப்படிப்பட்ட விளைவுகள் ஏற்படாமல் தடுக்க முடியும் என்பதை அரசாங்கம் உணர்ந்து தக்க நடவடிக்கைகளை எடுத்து வருகிறது, என்பதை அவைக்குத் தெரிவித்து இதற்கு மேல் இந்த அவையை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய தேவை ஏற்படாது என்று கூறி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு பேரவை முன்னவரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை இல்லையென்பதால், இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

## 2. கவன ஈர்ப்புகள்

### (அ) வேளச்சேரி சாலையில் மாநகராட்சியினர் குப்பைகளைக் கொட்டுதல்

**திரு. பம்மல் நல்லதம்பி:** தலைவர் அவர்களே, ''சென்னை வேளச்சேரி சாலையில் மாநகராட்சியினர் குப்பைகளை கொட்டுவதால், அங்கு கழிவு நீர் மற்றும் மழை நீர் தேக்கம் ஏற்படுவது குறித்து அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளச்சேரி—மேடவாக்கம் சாலையின் ஓரமாக குப்பை கொட்டியிருந்ததை நூரவி, சாலையையே

அகலப்படுத்தி சீர் செய்யப்பட்டுள்ளது. அதன் பிறகு, தென் சென்னை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தின் அருகில் உள்ள பள்ளமான அரசாங்க காலி நிலத்தில் தற்போது குப்பை கொட்டப்பட்டு வருகிறது. லாரிகள் இந்த நிலத்தில உள்ளே சென்று கொட்டுவதற்கு ஏதுவாக அந்த நிலத்திலேயே பாதைகள் அமைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. பாதைகள் அமைக்கப்பட்டதும் குப்பை பள்ளமான நிலத்தில் மனை மனையாக கொட்டப்பட்டு சமன் செய்து சீராக்கப்படும்.

மேலும் உலக வங்கி நிதி உதவியோடு ரூ. 3.08 கோடி மதிப்புள்ள திட்டமொன்றை சென்னை மாநகராட்சி தற்போது செயற்படுத்த முற்பட்டுள்ளது. அதில் விஞ்ஞான முறைப்படி தாழ்வான நிலங்களை குப்பை கொட்டி நிரப்பியும் மண் கொண்டு மூடியும் நில மட்டத்தை உயர்த்தி மனைகளாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. வேளச்சேரி குப்பை கொட்டும் பகுதியும் இந்த உத்தியைக் கையாண்டு அபிவிருத்தி செய்யப்படும்.

இந்தப் பகுதியில் பல்லவன் போக்குவரத்துப் பேருந்துகள், தடம் 51, 51பி, 51ஜே மற்றும் 51எச் தொடர்ந்து வேளச்சேரி சாலை வழியாக ஓடிக்கொண்டுதான் இருக்கின்றன. இவை நிறுத்தப்பட்டு விட்டதாக உறுப்பினர் கூறுவது சரியல்ல. ஆக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. பம்மல் நல்லதம்பி: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வதுபோல் இப்போது பேருந்து ஓடிக்கொண்டிருக்கிறதேயொழிய அந்தச் சாலை எந்த வாகனமும் ஓட முடியாத நிலையில் படுகுழியாகவும் பள்ளமாகவும் இன்றும் இருக்கிறது என்பதால் உடனடியாகச் நெடுஞ்சாலைத் துறையினர் அந்தச் சாலையைச் செப்பனிடுவதற்கு முயற்சி எடுப்பார்களா? அதே சமயத்தில் சென்னையில் இருக்கிற குப்பையை செங்கல்பட்டு பகுதியில் கொண்டு வந்து உத்திரவில்லாமல் கொட்டுவதை நிறுத்துவார்களா? மற்றொன்று இந்தக் குப்பையை குறைந்தபட்சம் அந்த சாலையிலிருந்து ஒரு பர்லாங்க் தள்ளி வெளிப்புறத்தில் கொட்டுவதற்கு ஏற்பாடு செய்யமுடியுமா?

(முற்பகல் 9—30)

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இப்போது பஸ் ஓடுகின்றது என்று ஏற்றுக்கொண்டதற்காக நன்றி. இந்த கவன ஈர்ப்புத் தீர்மானமே அங்கே பஸ்கள் ஓடவில்லை, நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன என்பதைப் பற்றியது. ஆனால், பஸ்கள் ஓடிக்கொண்டிருக்கின்றன என்று நான் சொன்னதை அவர் ஏற்றுக்கொண்டதற்காக நன்றி. அதே நேரத்தில், அங்கே போடப்படுகின்ற குப்பைகள் இப்போது எல்லாம் சாலையில் இரு மருங்குகளிலும் கொட்டப்படுகின்றது. சாலையை விரிவுபடுத்த வேண்டு





மென்பதற்காக நாம் இந்த காரியத்தை மேற்கொண்டிருக்கிறோம். நான் வேளச்சேரி பகுதிக்கும், பல்வேறு பகுதிகளுக்கும் சென்ற நேரத்தில், அங்கே குப்பையை சாலையிலே போட்டிருந்தார்கள். உடனடியாக மாநகராட்சி அதிகாரிகளைக் கூப்பிட்டு, குப்பைகளையெல்லாம் சாலையின் ஓரத்திலே கொட்டவேண்டும், சாலையிலே கொட்டக்கூடாது என்று சொல்லியிருக்கிறேன். இப்போது சாலை விரிவுபடுத்தப்பட்டு வருகிறது. அது மட்டுமல்லாமல், தாழ்வான பகுதிகளை குப்பைகளால் நிரப்பி, மனை மனையாக வீடு கட்டும் நிலமாக பின்னால் மாற்ற முடியும். உங்களுக்கு உதவி செய்வதற்காகத் தான் மாநகராட்சி இருக்கிறதே தவிர, உபத்திரவம் செய்வற்காக கண்டிப்பாக இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பம்மல் நல்லதம்பி . மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வதுபோல், செங்கற்பட்டு மாவட்டத்திலே, குப்பையை அங்கே கொட்டக்கூடாது என்று அந்தப் பகுதியிலே இருக்கின்ற மக்களின் வேண்டுகோளை நிறைவேற்ற வேண்டுமென்று நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் மற்ற அதிகாரிகளுக்கும் சொல்லியிருக்கிறேன். சென்னை நகரப் பகுதியில் குப்பையைக் கொட்டுவதற்கு ஒரு இடம் இருக்கின்ற காரணத்தினால், அங்கே கொட்ட வேண்டும். அப்படி கொட்டாமல் இங்கே கொட்டுகின்ற காரணத்தினால், பஸ்களிலே பிரயாணம் செய்யும்போது, ஏறத்தாழ 20 நிமிஷங்கள் பயணம் செய்ய வேண்டியிருக்கிறது—3 கிலோ மீட்டர் தூரம் பயணம் செய்ய வேண்டியிருக்கிறது. அப்போது இந்த நாற்றத்தைத் தாங்க முடியாமல், கைக்குட்டையை மூக்கில் வைத்துக்கொண்டு வருகின்ற காட்சியை, பஸ்களிலே அங்கே பிரயாணம் செய்கின்றவர்களுக்குத் தெரியும். அங்கே ஈ. கொசு உற்பத்தியாகின்ற இடமாக பள்ளிக்கரனை, நாராயணபுரம் விளங்குகிறது. அது மட்டுமல்லாமல், ராக்கட் கொசுக்கள், ஈக்கள் அங்கே உற்பத்தியாகின்ற காரணத்தினால், அந்தப் பகுதிக்கு பெயரே 'ஈ நாடு' என்று அந்தப் பகுதி மக்கள் உபயோகித்துக்கொண்டு வருகிறார்கள். ஆகவே, இந்த குப்பைகளை அங்கே கொட்டும்போது, உடனடியாக மண்ணையும் சேர்த்துப் போட்டு கொட்டுவதற்கு வழிவகை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ப குழந்தைவேலு : மாண்புமிகு தலைவர் அவர்களே, குப்பைகள் என்று சொல்லும்போது, அந்தக் குப்பைகளை ஏற்படுத்துவதும் நாம் தான். அதற்கு நாம் தான் உதவுகிறோம் என்பதை தயவுசெய்து எண்ணிப் பார்க்கவேண்டும், ஏனென்றால், இந்த மாநகராட்சியைப் பொறுத்த அளவில், ஒரு நாளைக்கு 1,500 டன் குப்பை கொட்டப்படுகிறது. இதை யார் கொட்டுகிறார்கள்? இங்கே வாழ்கிற மக்கள், வருகிறவர்கள், போகிறவர்கள்தான். யாரும் வசிக்காத இடத்திலேதான் குப்பைகளைக் கொண்டுபோய் கொட்டுகிறோம், [illegible]

மாநகராட்சியைப் பொறுத்த அளவில், குப்பையை கொட்டுவதற்கு என்று தனியாக ஒரு இடத்தை தேர்ந்தெடுத்து பட்டினபாக்கத்தில் கொட்டிவந்தோம். அப்படி கொட்டுகிற போது, அங்குள்ளவர்கள் உயர்நீதி மன்றத்திற்குச் சென்று தடை வாங்கிவந்து விட்டார்கள். ஆகவே, அங்கே கொட்ட முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டது. ஆகவே, இந்த குப்பையைக் கொட்டுவதற்கு வேறு இடம் இல்லாத காரணத்தினால், வேளச்சேரி, மேடவாக்கம், போன்ற பகுதிகளுக்கு போகவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. வேளச்சேரி, மேடவாக்கம் பகுதிகள் தண்ணீர் நிற்கக்கூடிய தாழ்வான பகுதிகளாகும். ஆகவே, அந்த தாழ்வான பகுதிகளை நிரப்பி மேடாக்க வேண்டுமென்பதற்காக இந்த நடவடிக்கையை நாம் மேற்கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் பம்மல் நல்லதம்பி அவர்கள், 'ஈ நாடு' என்று சொன்னார்கள், உண்மையிலேயே, 'ஈ நாடு' இப்போதல்ல; தி.மு.க. ஆட்சி இருந்த நேரத்திலேகூட, இதே கொசுக்கள் ராக்கட் வேகத்திலே மட்டுமல்ல; ஜெட் வேகத்திலே பறந்தன என்பது உங்களுக்குத் தெரியும். ஆகவே, தயவுசெய்து இந்த ஆட்சியில்..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதிலே அரசியல் வேண்டாம். எல்லா ஆட்சிக் காலத்திலும் ஒரே கொசுதான்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : ஆகவே, எப்போதுமே குப்பையைக் கொட்டுகின்ற நேரத்தில், அந்த இடத்தை மனைகளாக மாற்ற வேண்டுமென்ற எண்ணத்தில்தான் செய்யப்படுகின்றது. ஆனால், அதே சமயத்தில் அங்கே மண்ணையும் சேர்த்து கொட்டவேண்டும். அதற்குறிய நடவடிக்கையை உலக வங்கியின் உதவியோடு 3 கோடியே 8 இலட்சம் ரூபாய் செலவில் இதை நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) பெரம்பூரிலுள்ள கழிவு நீரிறை நிலையம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் சு. பாலன், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. சு. பாலன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, "சென்னை பெரம்பூரில் கட்டப்பெற்றுள்ள நீரிறை நிலையம் பல ஆண்டுகளாக செயல்படாமல் உள்ளதால், கழிவு நீர், மழைநீர் அப்பகுதியில் தேங்குவது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, பெரம்பூரில் தற்போது செயல்படும் ஒரு கழிவு நீரிறை நிலையம் உள்ளது. இருந்தபோதிலும், தற்போது மற்றும் இனி



வரும் நீரோட்டங்களுக்கு அதன் திறன் போதாததால், கூடுதலான நீரிறை நிலையம் அதே இடத்திலேயே கட்ட முடிவு எடுக்கப்பட்டு முடிக்கப்பட்டது.

புதிய பெரம்பூர் கழிவு நீரிறை நிலையத்தின் புதிய நீரிறை எந்திரங்கள் தருவித்து கட்டுமானம் செய்யும் ஒப்பந்தம் நவம்பர் 1969-ல் திருவாளர்கள் சந்தரி கம்பெனியாளர்களுக்கு ரூ. 3,16,428 தொகையில் வழங்கப்பட்டது. இறை நிலையம் கட்டுவதில் ஏற்பட்ட தாமதத்தினால், ஒப்பந்தக்காரர் இயந்திரம் கட்டுமானம் செய்யும் வேலையை 1976—ல் ஆரம்பித்தார். ஆனால் 1976-ல் ஏற்பட்ட எதிர்பாராத வெள்ளத்தால் கட்டுமானம் செய்யுப்பட்ட இயந்திரங்கள் வெள்ளநீரில் மூழ்கின! மேலும் சென்னை மாநகராட்சிக்கும் ஒப்பந்தக்காரர்களுக்கும் சில கருத்து வேறுபாடுகள் இருந்தபடியால் வேலைகள் தொடர்ந்து முடிக்கப்படவில்லை. கருத்து வேறுபாடுகள் சென்னைப் பெருநகர் குடிநீர் வாரியத்தால் முடிவு செய்யப்பட்டு ஒப்பந்தக்காரர்கள் சரிசெய்யும் வேலைகளை முடித்து, மேலும் எந்திர கட்டுமான வேலைகளையும் முடித்தனர். மின் இணைப்புகள் அரசு தலைமை மின் ஆய்வாளரால் சோதனை செய்யப்பட்டு நீரிறை இயந்திரங்கள் செயல்பட அனுமதியும் பெறப்பட்டது.

இந்த நீரிறை நிலையத்தில் உள்ள இயந்திரங்கள் செயல்பட, மின்சக்தி கொடுக்க தமிழ்நாடு மின்வாரியத்துடன் தொடர்பு கொள்ளப்பட்டது. அவர்கள் வேலையை ஆரம்பித்து வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. தமிழக மின் வாரியத்தில் இருந்து மின்சக்தி பெற்றவுடன் இயந்திரங்கள் செயல்படத் துவங்கும். இந்த நீரிறை நிலையத்தில் உள்ள இயந்திரங்கள் நவம்பர் 1983 இறுதியில் செயல்படமுடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. சு. பாலன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, இந்த இறை கட்டிடம் கட்ட 1969-ஆம் ஆண்டு ஏற்பாடு செய்யப்பட்டு. 1976-லேதான் இயந்திர கட்டுமான வேலை ஆரம்பிக்கப்பட்டதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தக் கட்டிடத்திற்கும் அங்கே அமைக்கப்பட்ட மெஷினரிகளுக்காகவும் எவ்வளவு தொகை அங்கே செலவு செய்யப்பட்டது? அதே நேரத்திலே மாநகராட்சிக்கும் அதனுடைய காண்ட்ராக்டருக்கும் ஏதோ தகராறு என்று சொன்னார். அது என்ன தகராறு என்பதை அமைச்சர் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சந்தரி கம்பெனியாளர்களுக்கு ரூ. 3,16,428 கொடுக்கப்பட்டது என்றும் அதற்குப் பின்னால் தகராறு ஏற்பட்டு. அந்த தகராறு முடிவாகிவிட்டது என்றும் சொல்லி, இப்பொழுது இந்த மாத இறுதியிலே இந்த நீரிறை நிலையத்திலே உள்ள இயந்திரங்கள் செயல்படும் என்ற தகவல்தான் என்னிடத்திலே இருக்கிறது. என்ன தகராறு? எப்படி முடிவாகியது என்ற விவரங்கள் என்னிடத்திலே இல்லை.

திரு. சு. பாலன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே. அமைச்சர் அவர்கள் ஏதோ தகராறு என்று சொன்னார்கள். நான் அறிந்த வரையிலே, அந்த கான்ட்ராக்டர் வேலை செய்வதில் ரூ. 1,000 தகராறுதான். இந்த ரூ. 1,000-க்காக.7 ஆண்டுகளாகச சரி செய்ய முடியாமல் இருந்து கொண்டிருக்கிறது. இப்பொழுது அமைச்சர் நவம்பர் மாத இறுதியிலே ஆரம்பிக்கப்படும் என்று சொன்னார்கள். அந்த ரூ. 1,000 தகராறு முடிவடைந்து விட்டதா? நவம்பர் மாதம் இறுதியில், இப்பொழுது உறுதி கொடுத்ததைப் போல் நீரிறை நிலையம் ஆரம்பிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற ரூ. 1,000 தகராறு பற்றி எனக்குத் தெரியாது; தகவலும் இல்லை. முக்கியமாக இப்பொழுது கவனிக்கவேண்டியது அந்த நீரிறை நிலையம் எப்பொழுது வேலை செய்யும் என்பது. எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. இந்த மாத இறுதிக்குள் செயல்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவர் அவர்களே, 1969-ல் ஆரம்பிக்கப்பட்டு. 1983 வரைக்கும் வந்திருக்கிறது. அதுவும் நவம்பரிலே செயல்படும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது என்று சொல்லப்படுகிறதே, குறைந்தபட்சம் அமைச்சர் மின்சார இலாகாவோடு தொடர்பு கொண்டு, காலாகாலத்திலே திறக்க விசேஷமான முயற்சி எடுத்துக்கொள்ளப்படுமா என்பதை தெரிந்துகொள்ள விரும்புவதோடு, கழிவு நீரும் மழை நீரும் அங்கே கலந்து குட்டை போல் தேங்கி இருக்கின்றன. அதன் காரணமாக, கொசுக்கள் உற்பத்தியாகிறதே, அவற்றை அப்புறப்படுத்த அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-40)

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால் அட்டென்ஷன் மோஷன் கொடுத்திருப்பது, கழிவு நீர், மழை நீர் சரிவர போகாமல் இருப்பதால். அதற்காக பல லட்ச ரூபாய் செலவு செய்வது பற்றியதுதான். கொசுக்களைப் பற்றியது அல்ல. இருந்தாலும் சொல்கிறேன், ஏற்கெனவே ஒரு பம்பிங் ஸ்டேஷன் இருக்கிறது. இரண்டாவது பம்பிங் ஸ்டேஷன் அதே இடத்தில் கட்டுகிறோம். இது செயல்பட ஆரம்பித்த பின்னர் நாம் எதிர்பார்க்கிற வகையிலே எல்லாம் நடைபெறும் என்று நம்பலாம்.





## 3. அமைச்சரவையின் மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானம்—(தொடர்ச்சி)

*திருமதி டி. யசோதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது பேசுகின்ற ஒரு அரிய வாய்ப்பினை எனக்கு ஏற்படுத்திக் கொடுத்தமைக்கு உங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனக்கு முன்பு இங்கே இருக்கிற உறுப்பினர்கள் நம்பிக்யைில்லாத் தீர்மானத்திலே பல கருத்துக்களை கூறினார்கள். நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை துவக்கி வைத்துப் பேசிய அருமைத் தலைவர் உமாநாத் அவர்கள் தனக்கே உரிய பாணியிலே அன்னை இந்திரா காந்தியைப் பற்றியும், மத்திய அரசாங்கத்தின் நடவடிக்கைகளைப் ப்ற்றியும் மிகவும் வேகமாவும், காரசாரமாகவும் இந்த மாமன்றத்திலே தன்னுடைய முத்திரையை பதித்தார்கள். குறிப்பாக சொல்ல வேண்டுமென்றால் அன்னை இந்திரா காந்தியையும், அவருடைய அரசாங்கத்தையும் சர்வாதிகார போக்கிலே சென்று கொண்டிருக்கிற ஒரு அரசாங்கம் என்று வர்ணிப்பதிலே அவர் தனிப்பட்ட வழியை கையாண்டிருக்கிறார்கள். அப்படி சர்வாதிகார தன்மையிலே சென்று கொண்டிருக்கிற இந்திரா காந்திக்கும், அவரது அரசாங்கத்திற்கும் தமிழகத்தை ஆளுகின்ற அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஒத்துழைப்பு கொடுத்துக் கொண்டிருக்கிறது என்றும் சுட்டிக்காட்டினார்கள். நான் என்ன கேட்கிறேன் என்றால், அன்னை இந்திரா காந்தி, அவருடைய கட்சி, அவருடைய ஆட்சி சர்வாதிகாரம் என்று அவர்கள் சொல்வது உண்மையாக இருக்குமானால், சிலபல மாதங்களுக்கு முன்பாக அஸ்ஸாம் மாநிலத்தில் அன்வாரா தைமூர் முதலமைச்சராக இருக்கிறபோது அவருடைய அமைச்சரவை மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை அங்கே இருக்கிற எதிர்க் கட்சிக்காரர்கள் கொண்டு வந்த நேரத்திலே அவர்கள் அங்கம் வகிக்கின்ற அந்த பேரியக்கம், சர்வாதிகாரத்தினுடைய வழியிலே இருக்கிற, சர்வாதிகாரத்தின் ஒரு பகுதியாக இருக்கிற மாநிலம் என்ற வர்ணனைக்கு உட்பட்டிருக்கிற அந்த அம்மையாருடைய அமைச்சரவையை ஆதரித்தது எந்தவகையிலே என்பதை சுட்டிக் காட்ட அவர்கள் கடமைபட்டிருக்கிறார்கள்.

இன்னும் கூட சொல்லவேண்டுமென்றால், அன்றைக்கு அஸ்ஸாம் மாநிலத்தில் நீங்கள் தந்த ஆதரவு, ஒத்துழைப்பு ஜனநாயத்தினுடைய பாதுகாப்பிற்கா அல்லது சர்வாதிகாரத்திற்கு துணை போனதற்கா என்பதைப் பற்றி நீங்கள் மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் சர்வாதிகாரியாக இருந்திருப்பார்களானால் பஞ்சாப் மாநிலத்தின் பிரச்சனையையும், அஸ்ஸாம் மாநிலத்தின் பிரச்னையையும் அந்த சர்வாதிகாரத்தின் துணைக்கொண்டே அடக்கி, ஒடுக்கி இருக்கலாம். ஆனால் ஜனநாயகத்தின் மூலமாக ஏற்படுகிற முடிவு தான் நிரந்தரமான முடிவு என்கிற எண்ணத்தை அன்னை இந்திரா

கொண்டிருக்கிற காரணத்தால்தான் இதுவரையில் அந்த பிரச்னைகள் நீண்டு கொண்டிருக்கின்றன என்பதை நான் குறிப்பிட ஆசைப்படுகிறேன். இந்திரா காந்தியும். மத்திய அரசாங்கமும் சர்வாதிகார தன்மையிலே இயங்கிக் கொண்டிருப்பது உண்மையாக இருக்குமானால் அவர்கள் கட்சி ஆட்சி இல்லாத பல மாநிலங்களுக்கு பரிபூரணமான ஒத்துழைப்பைக் கொடுத்துக் கொண்டு, அந்தப் பகுதியிலே இருக்கிற அந்த மக்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்று ஆக்கப்பூர்வமான உதவிகளைச் செய்து கொண்டு வருவார்களா என்பதை மறுபடியும் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்னும் கூட சொல்ல வேண்டுமென்றால், இந்த அவையில் பேசிய உறுப்பினர்களிலே பெரும்பாலோர் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும். இ. காங்கிரசும் கூட்டு சேர்ந்து விடுமோ என்ற அச்சத்தின் காரணமாக, பயத்தின் காரணமாக, இன்றைக்கு கூட்டு சேர்ந்து விடுவார்கள், கூட்டு அமைந்து விடும் என்ற வகையில் கருத்துக்களைச் சொன்னார்கள். எங்கள் தலைமையும் சொல்கிறது, இன்னும் அதைப் பற்றி எந்த விதமான முடிவும் எடுக்கவில்லை என்று. அதைப்போல அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலேயும் சொல்கிறார்கள், அது பற்றி இன்னும் எந்தவிதமான பேச்சு வார்த்தையும் கிடையாது, அதைப் பற்றி நாங்கள் இன்னும் சிந்திக்கவில்லை என்று. இருந்தாலும்கூட, இந்தக் கூட்டு அமைந்து விடக் கூடாது என்று பதட்டப் படுகின்ற அரசியல் கட்சிகளின் தலைவர்களையும் உறுப்பினர்களையும் நாங்கள் காணுகின்ற சூழ்நிலை இருக்கிறது.

இன்னும் ஒன்றையும் சொல்கிறார்கள். மத்தியிலே இருக்கின்ற இந்திரா காங்கிரஸ் கட்சியைக் கண்டித்துத்தானே நீங்கள் தேர்தலில் நின்றீர்கள், இந்திரா காங்கிரஸ் கட்சியை எதிர்த்துத்தானே மக்கள் உங்களுக்கு ஓட்டுப்போட்டு நீங்கள் வெற்றி பெற்று அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி அமைந்தது என்று சொல்கிறீர்கள்.

அது உண்மையாக இருந்தால், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துடன் கூட்டுச் சேர்ந்து வாக்குகளைப் பெற்றுத்தானே சட்டமன்ற உறுப்பினர்களாக அவர்கள் வந்திருக்கிறார்கள், அதை வைத்துத்தானே மக்கள் அவர்களுக்கு ஓட்டுப் போட்டிருக்கிறார்கள் என்பதையும் அவர்கள் பரிசீலிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

சில நேரங்களில் நீங்கள் சொல்கிறீர்கள், பாராட்ட வேண்டிய காரியங்களில் பாராட்டுகிறோம், எதிர்ப்பு தெரிவிக்க வேண்டிய காரியங்களுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கிறோம் என்று. அப்படிப்பட்ட நிலைமை உங்களுக்கு மட்டும் சொந்தமான ஒன்றா அல்லது அனைத்துக் கட்சிகளுக்கும் சொந்தமான ஒன்றா? அவர்களைப் போலத்தான் நாங்களும் பாராட்ட வேண்டியவை





களைப் பாராட்டுகிறோம், சுட்டிக் காட்ட வேண்டிய நேரங்களில், எதிர்ப்பு தெரிவிக்க வேண்டிய நேரங்களில் எதிர்ப்பைத் தெரிவிக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்ளகடமைப் பட்டிருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் குறிப்பிட ஆசைப்படுகிறேன்.

மேலும் இங்கே ஒன்றை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். நம்முடைய மாண்புமிகு அமைச்சர் திரு. காளிமுத்து அவர்கள், வெளிமேடைகளில் இந்திரா காங்கிரஸ் பற்றி அவருடைய பாணியில் விமர்சனம் செய்யும் நேரத்தில், கறந்த பால் மடி புகாது என்றும், கருவாடு மீன் ஆகாது என்றும், காய்ந்து போன மலர் மொட்டு ஆகாது என்றெல்லாம் சொன்னார்கள். எங்களைத்தான் அவர் இவ்வாறு சொல்கிறார் என்று இதுகாறும் நினைத்துக் கொண்டிருந்தோம். ஆனால், அருமைச் சகோதரர் இராமலிங்கம் அவர்கள், இது உங்களுக்குச் சொந்தமானதல்ல இது உங்களைப் பற்றியது அல்ல, அது யாருக்கு என்பதைப் பற்றி இந்தச் சட்டமன்றத்தில் விளக்கி காட்டியதற்காக அவருக்கு நிச்சயமாக நான் நன்றி கூறிக்கொள்கிறேன்.

இன்னும் கூட ஒன்றைச் சொல்ல வேண்டும். தமிழக முதல்வர் அவர்கள் நடிகராக இருந்து முதல்வராக வந்திருக்கிறார்கள். நேற்றைய தினம் கூட நம்முடைய மேலவை தலைவர் அவர்கள் டாக்டர் முதல்வர் அவர்களுக்கு நடைபெற்ற அந்த பாராட்டு விழாவிலே சொன்னார்கள். நடிகன் நாடாள முடியுமா என்று கேட்பவர்களுக்கு மத்தியில் மிகப் பெரிய சவாலாக இன்றைக்கு நாட்டை ஆண்டு கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். இன்றைக்கு அவர்கள் நாட்டை ஆண்டு கொண்டு இருக்கிறார்கள் என்றால், எப்படி அவர்கள் ஆண்டிறார்கள்? அவர்கள் சாதாரண நடிகராக இருந்த நேரத்தில் அவர்கள் மீது உண்மையான பற்றையும், பாசத்தையும் வைத்து. அவருக்காக எதையும் செய்வதற்குத் தயாராக இருந்த ஏழை எளிய மக்களின் வாக்குகளைப் பெற்றுத்தான் இன்றைக்கு முதல்வராக அவர்கள் வந்திருக்கிறார்கள். நான் இன்றைக்கு கேட்க விரும்புகிறேன். அந்த ஏழை எளிய மக்களின் உண்மையான நிலைமை இன்றைக்குத் தமிழக முதல்வராக இருக்கின்ற அவர்களுடைய காதுகளுக்கு எடுத்துச் சொல்லப்படாத சூழ்நிலை இருக்கிறது. அவ்வாறு அவர்களுடைய காதுகளுக்கு இந்த நிலைமை செல்வது தடுக்கப்படுவதாகக் கேள்விப்படுகிறேன்.

நான் ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், தமிழகத்தில் அவர் முதல்வராக வருவதற்கு முன்னால், தேர்தல் காலங்களில் அவர் செல்லும் இடங்களிலெல்லாம் நாங்கள் சென்று பார்த்திருக்கிறாம், சோற்று மூட்டையைக் கட்டிக்கொண்டு குடும்பம் குடும்பமாக வந்து காத்திருக்கின்ற மக்களைப் பார்த்திருக்கிறோம். பத்து காசு கொடுத்து சோடா வாங்கிக்கொண்டு வந்து, அவர் இதைக் குடிப்பாரா, அவர் பேசிப் பேசி தொண்டை கட்டிக்கொண்டு விட்டதே. ஆகவே, அவர் இந்த சோடாவை குடித்தால் நல்லதாயிற்றே என்று காத்திருந்து, அதை அவர்

குடித்தால் அவர்களுக்கு அது மிகப் பெரிய மன நிம்மதியையும் திருப்தியையும் ஏற்படுத்தும் என்ற அளவிற்கு இருந்த நிலைமைகளை யெல்லாம் நாங்கள் சங்ககிரி தேர்தலின்போது பார்த்திருக்கிறோம். அப்படிப்பட்ட மக்களுக்கு உரிய நிலையிலே நீங்கள் நடவடிக்கை எடுத்து இருக்கிறீர்களா என்று நினைக்கும்போது அது சற்று வேதனைக்குரியதாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உதாரணத்திற்காக ஒன்றைச் சொல்கிறேன். இன்றைக்கு இருக்கின்ற உணவுப் பங்கீட்டுத் துறையைப் பற்றி எடுத்துக்கொள்வோம். அதில் இன்றைக்கு ஏற்பட்டிருக்கின்ற மிகப் பெரிய ஊழலைப் பற்றிச் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது.

இன்னும் குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், ரேஷன் கடைகளில் சாமான்கள் வாங்குவதற்காகக் கார்டுகள் கொடுக்கிறீர்கள். அதன் மூலமாக முதல் வாரத்தில் அல்லது இரண்டாவது வாரத்தில் ஒரு நாள், 15 நாட்களுக்குள்ளாக, அவர்களுக்குரிய அரிசி, சர்க்கரை, பாமாயில், கோதுமை போன்ற பொருட்களை வாங்கிக்கொள்ள வேண்டுமென்ற கட்டளையைப் பிறப்பித்திருக்கிறார்கள். என்னுடைய ரேஷன் கார்டையே எடுத்துக்கொண்டால், எனக்குப் புதன்கிழமை என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. புதன் கிழமை 1-ஆம் தேதி வருகிறது என்றால். அடுத்த புதன்கிழமை 8-ம் தேதி வருகிறது. பிறகு 12-ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை வந்து விடும். புதன்கிழமை பொருட்களை வாங்கவில்லை என்றால் ஞாயிற்றுக்கிழமை வாங்கியாக வேண்டும். ஞாயிற்றுக்கிழமை சென்று ரேஷன் கடைகளில் நிற்கின்றபொழுது அவர்கள் என்ன சொல்கிறார்கள்? முதல் புதன் கிழமையும் வாங்கவில்லை, அடுத்த புதன் கிழமையும் வாங்கப் போக முடியவில்லை, அதனால் ஞாயிற்றுக்கிழமை போகும்பொழுது அத்தனை பேர்களும் வந்து கூட்டமாக இருப்பதால், இல்லை என்ற ஒரே வார்த்தையைச் சொல்லி விடுகிறார்கள்.

(முற்பகல் 9-50)

அது மட்டுமல்லாமல், அரிசி வாங்கச் செல்லும்பொழுது ரேஷன் கார்டுகளில் சர்க்கரை, பாமாயில் ஆகியவைகளையும் வாங்கியதாக டிக் அடித்து விடுகிறார்கள். இதன் காரணமாக யார் பலன் அடையவேண்டுமென்பதற்காக இப்படிப்பட்ட ரேஷன் கார்டுகளைக் கொண்டுவந்தார்களோ அந்த ஏழை எளிய மக்களுக்கு பொருட்கள் கிடைக்காத நிலைமை இருக்கிறது. அரிசி விநியோகத்திலே, உணவு பங்கீட்டுத் துறையிலே மிகப் பெரிய கொள்ளை நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது என்பதை நான் குறிப்பிட்டுச் சொல்ல ஆசைப்படுகிறேன். இன்னும் கூடச் சொல்லலாம்.

என். ஆர். ஈ. பி. தன்னிறைவுத் திட்டம், வளர்ச்சிப்பணி இவை எல்லாம் நடந்துகொண்டிருக்கின்றது. நேற்றயதினம் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் கூட பாராட்டுவிழாவிலே சொன்



னார்கள், தன்னிறைவுத் திட்டம் என்பது அகில இந்திய அளவிலே இல்லாத ஒன்றாக இன்றைக்குத் தமிழகத்திலேதான் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றது என்று. அந்த எண்ணம் நல்லதுதான். ஆனால் நிறைவேற்றுகின்ற முறையிலே பல தவறுகள் இருக்கின்றன. அந்தத் தவறுகளைச் செய்பவர்கள் யாராக இருந்தாலும், எந்தக் கட்சிக்காரர்களாக இருந்தாலும் நிச்சயமாக அதை விசாரித்து நடவடிக்கை எடுத்தால் அந்தத் திட்டங்களின் பலன் உண்மையிலேயே யாருக்குப் போய்ச் சேர வேண்டுமோ அவர்களுக்கு போய்ச்சேரும் என்பதைத் தரிவித்துக்கொள்கிறேன். இடைத்தரகர்களாக இன்றைக்குச் சிலர் இருப்பதன் காரணத்தால் நல்ல திட்டங்கள் எல்லாம் உண்மையான வெற்றியினைப் பெற முடியாமல் போய்விடுகின்ற நிலைமை இருக்கின்றது.

இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்திலே திரு. உமாநாத் அவர்கள் என்னுடைய தொகுதியினைப் பற்றிச் சுட்டிக் காட்டினார்கள். ஒரே வேலைக்கு இரண்டு முறை வேலை செய்ததாகப் பில் போட்டிருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். உதாரணமாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். சென்ற முறை கூட பேசி இருக்கிறோம். மாகாணியம் என்ற அரிசன மக்கள் வாழ்கின்ற பகுதியிலே சாலை போடுகின்ற பணி, அது வறட்சி நிவாரணப் பணியிலே செய்யப்பட்டிருக்கின்றது சென்ற ஆண்டிலே. அதே போன்று அது தன்னிறைவுத் திட்டத்திலேயும் செய்யப்பட்டிருக்கின்றது என்பதைத்தான் குறிப்பாகச் சொல்ல ஆசைப்படுகிறேன். அது ஸ்ரீபெரும்புதூர் பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த இடம்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

சென்ற ஆண்டிலே வறட்சி நிவாரணப் பணிகள் நடைபெற்றன. அப்படி சென்ற ஆண்டு வறட்சியிலே வேலை செய்தவர்களுக்கு இந்த ஆண்டு வரை பணம் கொடுக்க முடியவில்லை. அது மட்டுமல்ல. மேல்மதுரமங்கலம்-ஜெம்போடை ரோட்டு வேலையில் கிட்டத்தட்ட 50 ஆயிரம் ரூபாய் இன்று வரை கொடுக்கப்படவில்லை. இதைச் சொல்வதன் காரணம் அவர்கள் தனிப்பட்ட ஒரு கட்சிக்காரர்கள் என்பதற்காக அல்ல. எல்லா கட்சிக்காரர்களும் அங்கே பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் இன்றைக்கும் அதே போன்ற சூழ்நிலைதான் இருந்துகொண்டிருக்கின்றது.

வறட்சி நிவாரப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. ஆனால் பணப்பட்டுவாடா இல்லை. பணப்பட்டுவாடா நடந்தது என்றால் எப்படி நடந்தது? அங்கே ஒரு டீ.ஈ. இருக்கிறார் காஞ்சிபுரத்திலே. அவரிடத்திலே சென்று கல்யாண நோட்டீஸைக் காட்ட வேண்டும், எங்கள் வீட்டிலே கல்யாணம் நடக்கின்றது பணம் வேண்டும் என்று கேட்க வேண்டும். அப்படி கல்யாண நோட்டீஸ் காட்டப்படுகிறபோது அந்த கல்யாண நோட்டீஸ் அவருடைய மனதுக்குப் பிடித்திருந்தால் ஒரு சின்ன துண்டுச் சீட்டை கொடுத்து அனுப்புவார் ADEக்கு. அதன் பின்னர்தான் ADE பில்லை போடுவார். அப்படிப்பட்ட நிலைமைதான் இருந்துகொண்

டிருக்கின்றது. இப்படிப்பட்ட நிலைமைகள் காரணமாக என்னுடைய தொகுதியிலே பணம் பட்டுவாடா செய்ய முடியாத நிலைமை இருக்கின்றது.

அடுத்து முதல்வர் அவர்களும், மத்திய நிதியமைச்சர் திரு. பிரணாப்குமார் முகர்ஜி அவர்களும் கலந்துகொண்ட நிகழ்ச்சி நடைபெற்றது. நாட்டிலே வறுமையிலே உழன்று கொண்டிருப்பவர்களுக்குக் கடன் கொடுக்கின்ற நிகழ்ச்சி அது. அந்த நிகழ்ச்சியில் ஜாதியின் பெயரைச் சொல்லி அதாவது அரிசன சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு இட்டிலி கடை வைப்பதற்காக 500 ரூபாய் என்றும் பின்தங்கிய சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு இட்டிலி கடை வைப்பதற்கு ஆயிரம் ரூபாய் என்றும் பெட்டி கடை வைக்க ஆதி திராவிடருக்கு ரூ. 1,000 பின் தங்கிய சமூகத்தைச் சேர்ந்தவருக்கு அதே பெட்டி கடை வைக்க ரூ. 3 ஆயிரம் என்றும் கடன் கொடுக்கப்படுகின்றது. அப்படியானால் ஒரே மாதிரியான கடையினை வைத்து நடத்துவதற்கு அரிசன சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு 500 ரூபாயும் மற்ற மேல் ஜாதிக்காரர்கள் என்றால் அதாவது ஜாதி இந்துக்கள் என்றால் ஆயிரம் ரூபாயும் கொடுக்கின்ற நிலைமை ஏற்பட்டிருக்கின்றது என்றால் சம்பந்தப்பட்ட அமைச்சர்களுக்குத் தொடர்பு இருக்கின்றது என்று சொல்வதற்கு நான் தயாராக இல்லை. இதைத் தயாரித்தவர்களுக்கு பரந்த கண்ணோட்டம் இல்லாத காரணத்தால் பரந்த மனப்பக்குவம் இல்லாத காரணத்தால்தான் இப்படி ஏற்படுகின்றது. சிறப்பாக செயல் வடிவம் பெறுகின்ற ஒரு நல்ல காரியத்தில் இப்படி ஒரு சிறு கறுப்புப் புள்ளியினைத் தோற்றுவிப்பவர்கள் யாராக இருந்தாலும் உரிய நடவடிக்கை எடுத்து அப்படிப்பட்ட நிலைமைகளை அகற்றுவதற்கு முனைய வேண்டும்.

இன்றைக்கு தொழிற் சங்கங்களில் கூட அது போன்ற நிலைமைகள் ஏற்பட்டு இருக்கின்றன. கோயம்புத்தூரிலே 180 பேர் எங்கள் கட்சியினைச் சேர்ந்த முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. ஏ. சுப்பிரமணியன் அவர்கள் தலைமையில் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். நான்கு மாதத்திலே இருந்து 4 ஆண்டு காலம் வரையில் மூடிக் கிடக்கின்ற மில்கள் இருக்கின்றன. 7 ஆயிரம் பேர்களுக்கு மேல் வேலை செய்யக்கூடிய மில்களான ஜனார்த்தனா மில், எஸ். ஆர். சி. மில், பத்மா மில் தமிழ்நாடு ஸ்பின்னிங் மில், போன்ற சில மில்கள் ஓடியும் ஓடாத நிலையில் இருக்கின்றன. (உ.ம்.) ஸ்ரீஹரி, வசந்தா, பவானி ஆகிய மில்களும் மூடிக் கிடக்கின்றன. இந்த மில்கள் எல்லாம் 4 மாதத்திலே இருந்து 4 வருடங்கள் வரை மூடிக் கிடக்கின்ற காரணத்தால் 7 ஆயிரம் தொழிலாளர்கள் பாதிக்கப்படுகின்ற சூழ்நிலை ஏற்பட்டதன் காரணத்தால் கலெக்டர் அலுவலகத்திற்கு முன்பாக போய் போராட்டத்தைத் துவங்கியவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பதைப் பார்க்கிறோம்.





இது தொடர்பாக நாளையதினம் கோட்டைக்கு முன்னாலே அவர்கள் உண்ணாவிரதம் இருப்பதற்காக இன்றைக்குக் காரியங்களை ஆற்றிக் கொண்டு இருக்கிறார்கள்.

அடுத்து, ஆதிதிராவிட நல இலாகாவைப் பொறுத்தவரையில் மிக வருத்தத்திற்குரிய சூழ்நிலையில் அது இயங்கிக்கொண்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆதி திராவிடர் நலத்துறையில், ஆதிதிராவிட சமுதாயத்தினர் நலனுக்காக ஒரு ஆலோசனைக் குழு மாநில அமைப்பாக அமைக்கப்படும் என்று சொல்லப்பட்டது. ஆனால் இதுகாறும் அது அமைக்கப்படவில்லை, என்பதை நான் வேதனையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். முதலமைச்சரைத் தலைவராகக்கொண்டு ஒரு ஹை-பவர் கமிட்டி அமைப்பதாகச் சொல்லப்பட்டு, அதுவும் அமைக்கப்படவில்லை. இன்னும் சொல்லப்போனால், ஆதி திராவிடர் மாணவர்களுக்கு அளிக்கப்படும் ஸ்காலர்ஷிப் பொறுத்தவரையில் 90% அட்டென்டென்ஸ் இருந்தால் தான் கொடுக்க முடியும் என்று தற்போது புது உத்தரவு போடப்பட்டு இருக்கிறது. அவர்களால் எப்படி 90% அட்டென்டென்ஸ் தரமுடியும். திடீரென்று தகராறு வருகிறது. ஜாதிச் சண்டைகள் வருகின்றன தண்ணீர் இல்லாதது போன்ற பல பிரச்னைகள் வருகிறபோது கல்லூரியை இழுத்து மூடுகிறோம். இதுபோன்ற சூழ்நிலைகள் இருப்பதால் 90% எப்படி அவர்களால் அட்டென்டென்ஸ் கொடுக்க முடியும் என்று யோசித்துப் பார்த்து, முன்பு எப்படி ஸ்காலர்ஷிப் வழங்குவதற்கான ரூல் இருந்ததோ அதையே இப்போதும் பின்பற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மத்திய அரசாங்கம் நீதித்துறையைப் பொறுத்தவரையில் அரிசனங்களுக்கும், தாழ்த்தப்பட்டவர்களுக்கும் விகிதாச்சார அடிப்படையில் பதவிகள் தரவேண்டும் என்று சொல்லியிருக்கிறது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் உயர்நீதி மன்ற நீதிபதி, மாவட்ட நீதிபதி, அரசு வழக்கறிஞர்கள்; அரசு உதவி வழக்கறிஞர்கள் ஆகியோரை நியமிப்பதில் விகிதாச்சார அடிப்படையில் கொடுக்க வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது. நம்முடைய சட்ட அமைச்சர் அவர்கள்கூட, நாங்களும் அதை விரைவாக நிறைவேற்றுவோம் என்று சொன்னார்கள், ஆனால் இது வரையில் அது நிறைவேற்றப்படவில்லை, என்பதை இங்கே சுட்டிக்காட்டுவது எங்களுடைய மிகப்பெரிய கடமை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கிராம கூட்டுறவு வீடு கட்டும் திட்டத்தின் மூலம் மத்திய அரசாங்கம் ஒரு வீட்டிற்கு 6,000 ரூபாய் ஒதுக்கித் தந்து இருந்த போதிலும், இந்த மாநில அரசாங்கம் 3,000 ரூபாய் தான் என்று குறைத்து இருக்கிறார்கள். அது தவறு என்று சொல்லி இந்த மன்றத்திலேயே பேசியிருக்கிறோம். அதற்குப்பிறகு வீட்டுவசதி துறை அமைச்சர் அவர்கள் அதை 5,000 ரூபாய் ஆக்குகிறோம் என்று சொன்னார்கள். ரூ. 5,000 தருவதாகச் சொன்னது,

சொன்னதாக இருக்கிறதே தவிர இதுவரையிலும் அது நிறைவேற்றப்படாத ஒன்றாக இருக்கிறது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தாழ்த்தப்பட்டவர்கள் கிருஸ்துவர்களாக மதம் மாறுகின்ற காரணத்தாலே அவர்களுக்கு சமுதாயத்தில் ஒன்றும் மதிப்பு உயர்ந்து விடுவது இல்லை. அதற்குரிய சூழ்நிலையில் அவர்கள் நடத்தப்படுவது இல்லை. ஆகவே, இந்த மதம் மாரிய கிருஸ்துவர்களுக்கும் தாழ்த்தப்பட்டவர்களுக்குக் கொடுக்கப்படும் சலுகைகள் கொடுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அது கொடுக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் கொடுக்கப்பட்டதா என்றால், இதுவரையில் கொடுக்கப் படவில்லை. இன்னும் சொல்லப்போனால் தமிழ்நாட்டில் அதிகமாக மதம் மாறும் சூழ்நிலை ஏற்பட்டு இருக்கிறது. விளம்பரம் இல்லாமல் இன்று அரிசன மக்கள் மதம் மாறிக்கொண்டு இருக்கிறார்கள். இந்த மதம் மாறுவது என்பது ஜாதியின் கொடுமையாலா. பொருளாதாரம் இல்லாத நிலைமையிலா என்பதைப் பற்றி எல்லாம் உண்மை நிலையை அறிய தமிழகத்தில் முதலமைச்சர் தலைமையில் ஒரு குழு போடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதைப்பற்றி நாங்கள் சொன்னோமே என்பதற்காக அக்கறை காட்டாமல் இருந்து விடக்கூடாது. மதம் மாறுவதற்கான உண்மைக் காரணத்தை அறியவேண்டும். அதற்குரிய ஒரு சூழ்நிலையை நாம் உருவாக்க வேண்டும். அதற்காகப் பணியாற்றவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, 1940-ஆம் ஆண்டில் சென்னை நகர மக்கள் தொகை 6 லட்சம் பேர். இன்றைக்கு சென்னை நகர மக்கள் தொகை 47 லட்சம். இந்த 47 லட்சம் மக்களுக்கும் போதுமான அளவிற்கு கழிவுநீர் வசதிகள் செய்யப்படவில்லை. அதற்காக 200 கோடி ஒதுக்கித்தரவேண்டும் என்று இந்த மன்றத்தில் கேட்டோம். இதுவரையில் அதற்காக கால்காசுகூட ஒதுக்கவில்லை. அதன் காரணமாக இன்றைக்கு சென்னை நகரம் கழிவு நீரில் மிதக்கும் நகரமாக இருக்கிறது. அதன் காரணமாக கொசுக்களின் ஏகபோக வளர்ச்சி ஏற்பட்டு, மக்கள் அதன் காரணமாக பல்வேறு நோய்கட்கு ஆளாகி இருக்கிறார்கள். கழிவு நீரை அப்புறப் படுத்துவதற்கு இந்த அரசு எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 10-00)

நம்முடைய சகோதரி ராசாம்பாள் அவர்களுடைய தொகுதியில் கூட ட்ரெயினேஜில் ஒரு சிறுவன் விழுந்து இறந்து இருக்கிறான். அதற்குப் பிறகு அவனுடைய தாத்தா அந்த நாற்றத்தைச் சகிக்கமுடியாமல், அந்த நாற்றத்தின் காரணமாக செத்து விட்டார், அப்படி சூழ்நிலை இருக்கிறது. அதைப்பற்றி நாம் கவனிக்க வேண்டும். சென்னை மாநகராட்சிக்கு ஒரு ஆலோசனைக் குழு அமைக்க வேண்டும்.



அடுத்தபடியாக 'ராக்கிங்' கூடாது என்று நாம் சொல்லியிருக் கிறோம். இந்த மாமன்றத்திலே அதுபற்றி விவாதிருக்கிறோம். ஆனால் தஞ்சை மருத்துவக் கல்லூரியில் ராக்கிங் நடைபெற்று, அரிசன மாணவர்கள் அத்தனை பேர்களும் அந்தக் கல்லூரியை விட்டு ஓடக்கூடிய நிலைமை இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது என்பதை இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தர்மபுரி மாவட்டத்திலே ஒகேனக்கல் பகுதியில் உள்ள காடுகளிலிருந்து அதிகமான மரங்கள் காணாமல் போய்க் கொண்டிருக்கின்றன. அங்கிருந்து மரங்கள் லாரி, லாரியாக சென்றுகொண்டிருக்கின்றன. அதை எல்லாம் தடுத்து நிறுத்த வேண்டும்,

கூட்டுறவு சங்கங்களை எடுத்துக்கொண்டால் இன்றைக்கு ஆளும் கட்சிக்காரர்கள் அதிகமாக இருக்கிறார்கள். அங்கே தவறுகள் நடைபெறாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று கூறி, இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் என் கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பளித்ததற்காக நன்றி கூறி, விடை பெறுகிறேன். வணக்கம்.

ஆளும் கட்சிக்காரர்கள் அதிகமாக இருக்கிறார்கள். அங்கே நல்லவை நடக்க நாங்கள் ஆக்கப்பூர்வமான ஒத்துழைப்புத் தருவோம்.

*திரு. என். சங்கரய்யா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே தோழர் உமாநாத் அவர்கள் முன்மொழிந்திருக்கிற இந்த அரசின் மீது நம்பிக்கை இல்லை என்ற தீர்மானத்தை ஆதரித்து பின்வரும் கருத்துக்களை நான் இங்கே கூற விரும்புகிறேன்.

இங்கே முதலிலே மற்ற பிரச்சனைகளுக்குப் போவதற்கு முன்னால், இந்த நாட்டிலே இருக்கக்கூடிய எதேச்சாதிகார சக்தி என்று நாங்கள் கருதுகின்ற இந்திரா காங்கிரஸ் கட்சியை எதிர்ப் பதிலே, நாங்கள் அஸ்ஸாமில் முன்னுக்குப்பின் முரணாக நடந்து கொண்டோம் என்று ஆளும்கட்சியின் சார்பிலும், இங்கே கடைசியாக பேசிய காங்கிரஸ் கட்சியினுடைய சகோதரி யசோதா அவர்களும் குறிப்பிட்டார்கள். முதலிலே நான் அதுபற்றிய நிலைமையை தெளிவாக்க விரும்புகிறேன்.

அஸ்ஸாம் மாநிலத்தில் காங்கிரஸ் கட்சி இராஜிநாமா செய்ய வேண்டிய நிலைமையை ஏற்படுத்தியது நாங்கள்தான் என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அஸ்ஸாம் சட்ட சபையில், அரசாங்கம் ஏற்பட்ட பிறகு, அந்த அரசின் கொள்கையை அறிவிக்கும் வகையில் கவர்னர்ஸ் அட்ரஸ் வந்தது. அப்போது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் அதற்கு திருத்தம் கொடுக்கப்பட்டது. அந்த திருத்தம் வெற்றி யடைந்தால் மந்திரிசபை ராஜிநாமா செய்ய வேண்டுமென்பதை நாம் அனைவரும் அறிவோம். ஆகவே, அரசாங்கம் இதைப் புரிந்துகொண்டு அப்போது ஆளுநர் உரைமீது நடைபெறவேண்டிய விவாதத்தை ஒத்திவைத்தது. ஒத்திவைத்துவிட்டு, நம்பிக்கையில்

லாத்தீர்மானத்தை எடுத்துக் கொண்டால் ஒரு சௌகரியம் கிடைக் கும் என்று எதிர்பார்த்தார்கள். நம்பிக்கையில்லாத் தீர்மா னத்தின்மீது பேசுகின்ற கட்சிகள் அந்த அரசின்மீது ஏன் நம்பிக் கையில்லை என்பதைக் கூறினால், வாதப்பிரதிவாதங்கள் நடை பெற்றால் அஸ்ஸாமில் இருக்கிற பிரிவினை கிளர்ச்சிக்காரர்களின் கோரிக்கைகளை அரசு ஏற்றுக்கொள்ளவில்லை என்று கூறினால், தனக்கு ஆதரவு கிடைக்கும் என்ற எண்ணத்தில் அந்தத் தீர் மானத்தை எடுத்துக்கொண்டார்கள். அஸ்ஸாமில் பிரிவினை வாதத்தை உறுதியாக எதிர்க்கக்கூடிய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரிக்க முடியாது; ஆகவே தப்பித்துக் கொள்ளலாம் என்று கருதினார்கள். ஆனால் நாங்கள் என்ன கருதினோம்? அந்த நம்பிக்கையில்லாத் தீர்மா னத்தை ஆதரித்தால் பிரிவினைவாதிகளின் கையை வலுப்படுத் தியதாக ஆகிவிடும். அதை எதிர்த்தால் காங்கிரஸ் கட்சி ஆதாயம் தேடும். ஆகவே, அந்த நம்பிக்கையில்லாத் தீர்மா னத்தைப் பொறுத்தவரையில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி பிரிவினை வாதிகளின் கையையும் பலப்படுத்த விரும்பவில்லை, காங்கிரஸ் கட்சியின் கையையும் பலப்படுத்த விரும்பவில்லை, அதனால் நடுநிலைமை வகித்தோம், என்று குறிப்பிட விரும்பு கிறேன்.

இந்த நிலைமை ஏற்பட்டவுடனே அவர்கள் வேறுவகையில் சமாளிக்க முடியும் என்ற சந்தர்ப்பத்திற்கு நாங்கள் விடவில்லை. அவர்கள் கொண்டுவந்த துணைமானியக் கோரிக்கைகளுக்கு நாங் கள் வெட்டுத் தீர்மானம் கொடுத்தோம். மறுநாள் அந்த வெட்டுத்தீர்மானம் நிறைவேறுகிற போதும் அந்த அரசாங்கம் ராஜிநாமா செய்ய வேண்டும் என்பது பாராளுமன்ற மரபு. அதனால் அப்போது இந்திரா காங்கிரஸ் கட்சி முதலமைச்சர் அந்த வெட்டுத் தீர்மானத்தை வற்புறுத்த வேண்டாமென்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியிடம் கூறினார். அதைக் கேட்க வில்லை என்றவுடன் சபையை ஒத்திவைத்தார்கள். அதற்குப் பிறகும் வற்புறுத்துவோம் என்று தெரிந்தவுடன் காங்கிரஸ்கட்சி சபாநாயகரிடம் சென்று அந்த சப்ளிமென்டரி கிராண்ட்ஸ்— துணைமானியக் கோரிக்கைகளை வாபஸ் வாங்குகிறோம் என்று சொன்னார்கள். அதை சபாநாயகர் மறுத்துவிட்டார். எனவே காங்கிரஸ் என்ன தந்திரத்தை கையாளுகிறது என்றால் தேசீய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைதுசெய்து வைக்கப்படுவதைக் கண்டித்து கொடுக்கப்பட்ட அந்த வெட்டுத் தீர்மானத்தை காங் கிரஸ் கட்சியும் சேர்ந்து அவர்களுடன் அந்த வெட்டுத் தீர் மானத்தை ஆதரித்தார்கள், அதனுடைய வேலை அவர்களுக்குத் தான் தெரியும். அவர்களுக்கு எதிராகக் கொண்டுவந்த வெட்டுத் தீர்மானத்தை அவர்களே ஆதரித்து அந்த வெட்டுத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. நிறைவேற்றப்பட்டாலும் அவர்கள் ராஜினாமா செய்யவில்லை. சகோதரி யசோதா அவர்கள், மற்றும் இந்த அஸ்ஸாம் பிரச்சினையைப் பற்றிப் பேசியவர்களும் காங்கிரஸ் கட்சியினுடைய அரசியல் பண்பு என்ன என்பதைப்



பற்றித்தான் இங்கே கொண்டு வரவேண்டும். அவர்களுக்கு எதி ராக கொண்டு வரப்பட்ட வெட்டுத் தீர்மானம், சட்டமன்றத் திலே நிறைவேற்றப்பட்டாலும் ராஜினாமா செய்யாமல் அது அவர்களுடைய நிலையைத்தான் எடுத்துக்காட்டுகிறது. 31-ந் தேதி கடைசிநாள். அன்றைக்கு என்ன செய்தார்கள் என்றால் கொண்டு வரவேண்டிய சாதாரண பட்ஜட்டுக்குப் பதிலாக 4 மாதகாலத்திற்கான இடைக்கால பட்ஜட்டைக் கொண்டு வந்தார் கள். அந்த பட்ஜட் அன்றைக்கு 12 மணிக்குள்ளாக கவர்ன ருடைய ஒப்புதலைப் பெறவேண்டும். ஆனால் மார்க்சிஸ்ட் கட்சி அதற்கும் வெட்டுத் தீர்மானத்தை முன் வைத்தது, அந்த வெட்டுத் தீர்மானத்தை முன்வைத்த உடனே, சபாநாயகர் அன்றைக்கு சபையை ஒத்தி வைத்துவிட்டார். ஒத்தி வைத்துவிட்டு, சபை நடந்து கொண்டிருந்தபோதே கவர்னரின் ஒரு அவசரச் சட்டத்தின் மூலம் அரசாங்கம் அன்றைக்கு இரவே அந்த இடைக் கால பட்ஜெட்டை நிறைவேற்றியது. இந்தக் கொடுமைகள் எங்கா வது நடக்குமா என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும், அந்த மாகாணத்தை நடத்திய காங்கிரசுக்கு—பொதுவாக காங்கிரஸ் கட்சி எப்படித் தந்திரங்களை கையாண்டு இருக்கிறது என்பதைப் பாருங்கள்.

திரு. நா. சுந்தரராஜ் : துணைத் தலைவர் அவர்களே, நம் முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. என், சங்கரய்யா அவர்கள் அஸ்ஸாம் மாநிலத்திலே சட்டமன்றத்திலே நடைபெறுகின்ற சம்ப வங்களைக் குறித்து இங்கே விளக்கமாக சொல்லுகிறார்கள். அந்தத் தகவல்கள் நமக்குத் தெரியாது. எந்த அளவுக்கு எப்படி நடந்தது என்று நமக்கு தெரியாது. ஆனால் கொள்கைரீதியாக அந்த மாநில அரசாங்கத்திற்கு நம்பிக்கை இருக்கின்ற வகையிலே நம்பிக்கையில்லா தீர்மானத்தை அவர்கள் ஆதரித்ததற்குப் பின் னாலேதான் அந்த அரசாங்கம் அங்கே நீடிக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இடையிலே இன்டரப்ஷன் வேண்டாம். உறுப்பினர் சீக்கிரம் முடித்துக்கொள்ள வேண்டும். அடுத்து ஏதாவது கேட்பதாக இருந்தால், எதிர்க்கட்சி தலைவர் பேச இருக்கிறார். அவர் பேசும்போது கேட்கலாம். மற்ற மாநிலங்களைப் பற்றி நாம் விமர்சனம் செய்வதைத் தவிர்க்கலாம்.

திரு. நா. சுந்தரராஜ் : இந்தப் பிரச்சினை சம்பிரதாயமாகத் தொடர்ந்து போகக் கூடாது என்று தெரிவித்துக் கொள்கிறேன். வேறு சட்டமன்றங்களிலே நடைபெறுவதைக் குறித்து இங்கு பேசலாமா?

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : துணைத் தலைவரவர்களே, அஸ்ஸாம் மாநில காங்கிரசில் ஏன் நம்பிக்கை யில்லா தீர்மானத்தை ஆதரிக்கவில்லை என்பதற்காக காரணங் களை எல்லாம் சொன்னார்கள். நாங்களும் அதைத்தான் சொல்

கிறோம். இலங்கை பிரச்சினையில் மத்திய அரசு ஒத்துழைத்ததற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம். விற்பனை வரியை விட்டுக் கொடுக்க மாட்டோம் என்று மாண்புமிகு புரட்சித் தலைவர் எதிர்க்கிறார்கள்.

**மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது விவாதம் நடந்துக் கொண்டிருக்கிறது. அவரவர்களுக்கு பேச, கேட்க உரிமை இருக்கிறது, ஒருவர் பேசும்போது, குறுக்கிட்டுப் பதில் சொல்லாமல், அதை குறிப்பெடுத்துக்கொண்டு அவர் பேசி முடித்த பின்னால் பதில் சொல்வதுதான் முறையாக இருக்கும். இல்லாவிட்டால் சபை சரியாக நடைபெறாது என்று நான் கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** யாரும் குறுக்கிட வேண்டாம். ஏதாவது பேச வேண்டுமென்றால், பேசி முடிந்த பிறகு கேட்கலாம்.

**திரு. என். சங்கரய்யா :** துணைத் தலைவர் அவர்களே, அவர் பேசியதை ஆட்சேபிக்கவில்லை. அவர் அசாம் பற்றி ஏதோ சொன்னார், அதற்கு விளக்கம் சொல்கிறேன். அவர் நாங்களும் செய்கிறோம் என்று சொல்லியிருக்கிறாரே தவிர இந்தப் பிரச்னையில் நான் சொன்ன அந்த கருத்துக்களை அவர் மறுக்கவில்லை. ஆகவே, அன்றைக்கு இரவே ஒரு அவசர சட்டத்தின் மூலம் சட்டசபை நடந்து கொண்டிருக்கும்போதே, இடைக்கால பட்ஜெட்டை நிறைவேற்றி விட்டார்கள். ஆனால் என்ன ஆயிற்று? சட்டசபையை எப்போது கூட்டினாலும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தன்னுடைய வெட்டுத் தீர்மானத்தை கொண்டு வரும் என்று தெரிந்த காரணத்தால் சபைக்கு வராமலேயே காங்கிரஸ் கட்சியினுடைய முதலமைச்சர் இராஜிநாமா செய்து விட்டார், ஆகவே காங்கிரஸ் இராஜிநாமா செய்வதற்கு மார்க்சிஸ்ட் கட்சி தொடர்ந்து முயற்சி செய்தது. அதனுடைய விளைவாகத்தான் அவர்கள் இராஜிநாமா செய்தார்கள் என்பது இன்றைக்கு நிரூபிக்கப்பட்டது. ஆனால் ஒன்றைச் சொல்ல

(முற்பகல் 10-10)

விரும்புகிறேன். எந்தக் காரணத்தைக் கொண்டும் காங்கிரஸ் கட்சியை நாங்கள் எதிர்க்கிறோம் என்ற காரணத்திற்காக, இந்தியாவை விட்டு அஸ்ஸாம் மாநிலம் தனியாக பிரிந்து செல்ல வேண்டும் என்ற பிரிவினை வாதிகளுக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி என்றைக்கும் ஒருபோதும் இடம் அளிக்காது. இன்றைக்கு கூட அந்த பிரிவினைவாதிகள் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஊழியர்களைக் குத்திக்கொல்கிறார்கள். பல பேர்கள் சாகடிக்கப்பட்டிருக்கிறார்கள். என்ன காரணம்? எதற்காக? ஆகவே நான் கூறுகிறோம். இன்றைக்கு ஒரு பக்கத்தலே எதேச்சதிகாரத்தை, அதனுடைய சக்திகளை எதிர்க்கும்போது இக்க



நாட்டினுடைய ஒற்றுமைகளை சீர்குலைக்கக்கூடிய பிரிவினை சக்திகளை எதிர்க்கக்கூடிய ஒரு சரியான அரசியல் தந்திரத்தை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி பின்பற்றுகிறது என்பதை நான் இங்கே கூற விரும்புகிறேன்,

அடுத்தபடியாக, இங்கே நான் குறிப்பிடவிரும்புவது, சகோதரி யசோதா அவர்கள் இதைக் கிளப்பியதால்தான் நான் பதில் சொல்ல ஆரம்பித்தேன். இல்லை என்றால் நான் இந்த பிரச்சினையைப் பற்றி பேசுவதாகவே இல்லை. ஆகவே இந்த ஏதேச்சதிகார சக்திகளைப் பற்றி அன்றைக்குக் கூட மாண்புமிகு உறுப்பினர் ஹாஜா ஷெரீப் அவர்கள் கேட்டார்கள். நான் இங்கே சொல்ல விரும்புவது, எங்களுக்கும் இந்திரா காந்திக்கும் தனிப்பட்ட முறையில் விரோதம் கிடையாது. அந்தக் கட்சி எடுத்துக் கொண்டிருக்கக்கூடிய நடவடிக்கைகளை அரசியல் ரீதியாக எதிர்க்கிறோம். அதுவும், விவரங்களை எடுத்துக் கூறுகிறோம். மத்திய அரசு ஏகாதிபத்தியத்தை எதிர்த்து எடுக்கக்கூடிய நடவடிக்கைகளை நாங்கள் ஆதரித்து வருகிறோம். இதிலே ஒளிவு மறைவு இல்லை, இன்றைக்குக் கூட பாகிஸ்தானிலே நடைபெறக் கூடிய அந்த ஜனநாயக இயக்கத்திற்கு ஆதரவு தெரிவித்ததை, பாரதிய ஜனதாக்கட்சியும், லோக்தளமும் கண்டித்தது. ஆனால் நாங்கள் பாரதிய ஜனதா கட்சியும், லோக்தளமும் எடுத்த நிலை தவறானது என்று கூறுகிறோம். ஜனநாயகத்திற்காக பாகிஸ்தானில் நடைபெறக் கூடிய இயக்கத்திற்கு இந்திய சர்க்கார் ஆதரவு அளித்தது சரியானது என்று கூறுகிறோம். ஆகவே சந்தர்ப்பவாதத்திற்காக தேர்தலிலே வெற்றிபெறவேண்டும் என்பதற்காக நாட்டினுடைய அடிப்படையான பிரச்சினைகளைப் பாதிக்கக்கூடிய விஷயத்தில் இன்றைக்கு இந்திரா காங்கிரஸ் கட்சியை எதிர்க்கக்கூடிய குருட்டுத்தனமான கொள்கையை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்கட்சி பின்பற்றவில்லை. அதேபோல்தான் இன்று கம்பூச்சி அரசாங்கத்தை ஆதரித்தார்கள். ஆப்கனிஸ்தானத்திலே அவர்கள் இன்றைக்கு ஒருநிலையை எடுத்திருக்கிறார்கள். எதற்காக? இன்றைக்கு அமெரிக்க ஏகாதிபத்தியம் அவர்களைத் தாக்குகிறது. அதேபோல் கிரனேடாவிலே அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தாக்குதலை கண்டித்தது என்பதற்காக, இந்தியாவை அமெரிக்க ஏகாதிபத்தியம் தாக்குகிறது. ஆகவே நாங்கள் இதிலே பிரச்சினைக்கு பிரச்சினை பார்க்கிறோம். இந்தியாவினுடைய சுதந்திரத்தை, இந்தியாவினுடைய பாதுகாப்பை பலப்படுத்துவதற்காக, இந்திய சர்க்கார் எடுக்கக்கூடிய சரியான நடவடிக்கைகளை நாங்கள் ஆதரிக்கிறோம். ஆனால் எல்லா நடவடிக்கைகளையும் நாங்கள் ஆதரிக்க முடியாது. உலகத்திலே சோவியத் யூனியனும் ஒரு வல்லரசு, அமெரிக்காவும் ஒரு வல்லரசு என்று இந்திரா காங்கிரசார் சொன்னால் அதை நாங்கள் ஏற்கமுடியாது, ஆகவே பிரச்சினைக்குப் பிரச்சினை நாங்கள் பார்த்து, நாட்டுக்கு நன்மை செய்யக் கூடியவைகளை நாங்கள் ஆதரிக்கிறோம். இன்றைக்கு தோழர் ஈ. எம். எஸ். நம்பூதிரிபாட்

[திரு. என். சங்கரய்யா] [1983 நவம்பர் 11

அவர்கள் இந்திரா காந்தியை சந்தித்தது பற்றிப் பேசினார்
கள். வாஸ்தவம்தான். அரசியல் கட்சிகள் அடிக்கடி சந்திக்க
வேண்டும். சமீபத்தில் நடந்த அகில இந்திய காங்கிரஸ் கட்சி
யினுடைய கூட்டத்திலே. பல்வேறு கட்சிகளிடையே தேசிய
பிரச்சினை பற்றி ஒரு கருத்து ஒற்றுமை வேண்டும் என்று இந்திரா
காந்தி சொன்னார்கள். அதைத்தான் நம்பூதிரிபாட் கூறினார்கள்.
அப்படிச் சொல்லக்கூடிய நீங்கள் அதற்கான சூழ்நிலையை உரு
வாக்குகிறீர்களா? ஒரு பக்கத்திலே தேசிய பிரச்சினை பற்றி,
அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்பு பற்றி அதை எதிர்ப்
பதற்காக, பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு இருக்கும் என்ற காரணத்
தால் நாட்டிலே என்ன செய்ய வேண்டும் என்று எதிர்க்கட்சி
களோடு கலந்து பேச வேண்டாமா அதற்கு பதிலாக என்ன செய்
தீர்கள் என்று கேட்கிறோம். பரூக் அப்துல்லாவின் ஆட்சியை
கலைப்பதற்கு இன்றைக்கும் முயற்சி நடக்கவில்லையா. சேக்
அப்துல்லாவின் மகன், இன்றைக்கு இந்திய அரசியலிலே அதிக
மான பங்கு எடுத்துக்கொள்கிறார்கள் என்பதை வரவேற்பதற்கு
பதிலாக, காங்கிரஸ் கட்சியை தோற்கடித்தார்கள் என்பதற்காக
அந்த ஆட்சியை கலைப்பதற்கு இன்றைக்கும் முயற்சி எடுக்க
வில்லையா? இது எதேச்சதிகார நடவடிக்கை இல்லையா?
இன்றைக்கு பத்திரிக்கையிலே பாருங்கள். ராமகிருஷ்ண ஹெக்டே
தலைமையிலே இருக்கக்கூடிய, கர்நாடகத்திலே இருக்கக்கூடிய
ஜனதா ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு காங்கிரஸ்கட்சி பகிரங்கமாக
முயற்சிக்கவில்லையா? தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சியைக் கலைப்
பது சரியல்ல என்பதை அனைவரும் ஒப்புக் கொள்வார்கள். சட்ட
சபையிலே நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவருவது
என்பது வேறு. ஆனால் அவர்கள் என்ன சொல்கிறார்கள்?
கர்நாடகத்திலே இந்திரா காங்கிரஸ் கட்சித் தலைவர் சொல்கி
றார், இரண்டு வாரத்திலே ஆட்சியைக் கவிழ்த்துக் காட்டுகிறேன்
என்றால் என்ன அர்த்தம்? எதிர்க்கட்சிகளோடு ஒரு மோதுதலை
உண்டாக்குவதற்கான ஒரு ஏற்பாட்டைச் செய்கிறார்களே, இது
தவறு இல்லையா?

அதேபோல் மேற்கு வங்கத்திலே என்ன நடக்கிறது? இன்
றைக்கு ரயில்வே அமைச்சராக இருக்கக்கூடியவர், அங்கேபோய்
மேற்கு வங்க சர்க்காருக்கு எதிராக வன்முறையைத் தூண்டிவிட்டு
அதன் மூலமாக சட்டம் ஒழுங்கு நிலைமையை ஏற்படுத்தி மத்திய
அரசு தலையிடுவதற்கான ஒரு முயற்சியைச் செய்யவில்லையா?
ஆகவேதான் கூறுகிறோம். இந்தக் காரியங்களைப்பற்றி நாங்
கள் பகிரங்கமாக விவாதிக்கிறோம். இப்படிப் பட்டவைகளை
எதிர்க்க வேண்டும். ஆகவேதான் நாங்கள் கூறுகிறோம்.

அடுத்தபடியாக அண்ணா தி.மு.க. நண்பர்கள் எங்கள்மீது
கடுமையாகத் தாக்கினார்கள். அவர்களுக்குச் சொல்ல விரும்பு
கிறேன். 1976—ல் ஒரு ஆட்சியைக் கலைத்தார்கள், பிறகு
1980-ல் ஒரு ஆட்சியைக் கலைத்தார்கள். யார் காலத்தது? இது
எதேச்சதிகாரம் இல்லையா? இந்தப் பக்கத்திலே உள்ளவர்களும்



1983 நவம்பர் 11] [என். சங்கரய்யா]

பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்தப் பக்கத்திலே உள்ளவர்களும்
பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். 7 ஆண்டுக் காலத்திற்குள்ளாக.
மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட 2 மந்திரிசபைகளைக் கலைத்
தது இந்திரா காந்தியல்லவா? இது எதேச்சதிகாரத்தின் போக்
இல்லை என்று யாராவது சொல்ல முடியுமா? ஆகவேதான் இது
மாநில உரிமைகளைப் பறிக்கிற முயற்சி என்று சொல்கிறோம்.
சமீபத்திலே மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் டெல்லிக்குச்
சென்றார். அங்கே 5 முக்கியமான பொருள்கள் மீது வணிகவரி
யை நீக்கிவிட்டு மத்திய சர்க்காருடைய கூடுதல் எக்ஸைஸ் வரி
யைப் போடவேண்டும் என்று திரிபாதி கமிட்டி செய்த முடிவை
வலியுறுத்துவதற்காக மத்திய சர்க்கார் முயற்சிக்கவில்லையா.
மேற்கு வங்கத்தினுடைய நிதியமைச்சர் அசோக் மித்ரா வந்து
கர்நாடகத்திலேயும், சென்னையிலேயும் உள்ள நம்முடைய
அரசுகளைக் கலந்து பேசவில்லையா? அதன் விளைவாக 6
சர்க்கார்கள், காங்கிரஸ் அல்லாத 6 சர்க்கார்கள் அப்படிச்
செய்யக்கூடாது என்று அதை எதிர்த்ததன் விளைவாகத்தானே
அது உடனடியாக அமுலுக்கு வராமல் நின்றிருக்கிறது. ஆகவே
நாங்கள் கேட்கிறோம், இதில் எவ்வளவு திறமை இருக்கிறது
என்பதைப் பார்க்கவேண்டும்.

மாநிலங்களுக்கு இருக்கக்கூடிய உரிமைகளைப் பறிப்பதற்கு
காங்கிரஸ் கட்சி முயற்சிகளை மேற்கொண்டிருக்கிற காரணத்
தால், நாங்கள் அதை எதிர்த்துக் கொண்டிருக்கிறோம். அதே
போல இன்னொன்றையும் கேட்க விரும்புகிறேன். இன்றைக்கு
விலைவாசி உயர்வுக்கு காரணம் யார்? நாட்டிலுள்ள வேலை
இன்மைக்கு அடிப்படைக் காரணம் யார்? ஏகபோக முதலாளிகள்
நன்றாக வாழ்ந்து கொண்டிருப்பதற்கு அடிப்படைக் காரணம்
யார்? சுதந்திர இந்தியாவிலே நிலப்பிரபுக்களின் அதிகாரம்
நீடிக்கப்படுவதற்கு அடிப்படைக் காரணம் யார்? கள்ளப்பணம்
நீடிப்பதற்கு அடிப்படைக் காரணம் யார்? பணவீக்கப் புழக்
கத்திற்கு அடிப்படைக் காரணம் யார்? இந்தச் சக்திகளை
பாதுகாப்பது யார்? இந்தக் கேள்விகளுக்கு இந்தியாவில் காங்
கிரஸ் கட்சிதான் பொறுப்பேற்க வேண்டும். மத்தியிலே
இருக்கக்கூடிய மத்திய அரசுதான்பொறுப்பேற்க வேண்டும்.

ஆகவேதான். இன்னொன்றையும் நான் கேட்கிறேன், ஜனாதி
பதி ஆட்சிமுறையை கொண்டுவர முயற்சிக்கமாட்டேன் என்று
திருமதி காந்தி பகிரங்கமாக கூறுவதற்கு இன்றைக்கு தயாராக
இருக்கிறார்களா? அவர் சொல்கிறார், ஜனாதிபதி ஆட்சி
முறையிலே குறைகள் இருக்கலாம். நாடாளுமன்ற ஆட்சியி
லேயும் குறைகள் இருக்கலாம். அப்பொழுது என்ன அர்த்தம்?
இந்த இரண்டில் எது சிறந்தது என்கிறார்? ராஜ்ய சபாவிலே
பெரும்பான்மை பலம் கிடைத்தால், அவர்கள் இந்திய அரசியல்
சட்டத்தையே மாற்றுவதற்கு தயாராக இருப்பார்கள். இல்லை
யென்றால் ஜனாதிபதி ஆட்சியா?

ஆகவேதான் நான் கேட்டுக்கொள்வது, அனைத்திந்திய
அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைப் போன்ற கட்சி
கள் இன்றைக்கு எக்காரணத்தைக் கொண்டும் அவர்களுக்கு

இப்படிப்பட்ட விஷயத்தில் ஆதரவு அளித்தால், நம்முடைய
சொந்த மாநிலத்தின் உரிமைகள் உட்பட இந்தியாவிலுள்ள
எல்லா மாநிலங்களின் உரிமைகளும் பாதிக்கப்படும் என்று
எடுத்துக் கூறுவதற்காகத்தான் நாங்கள் முயற்சிக்கிறோம். அதே
போல, இப்படி நாங்கள் கூறுவதற்கு, காங்கிர்ஸ் கட்சியோடு
எங்களுக்கு என்ன பிரச்னை? அயல்நாட்டுக் கொள்கைகளிலே
சில நடவடிக்கைகளை நாங்கள் ஆதரிக்கிறோம். அப்படி என்றால்
உள்நாட்டுக் கொள்கைகளையும் ஆதரிக்கணுமா? ஆதரிக்க
முடியாதே.

இன்றைக்கு இந்தியாவிலே ஏகபோக முதலாளிகள், நிலப்
பிரபுக்களின் அதிகாரத்தை எதிர்த்து, மக்களுக்கு நல்லது செய்ய
வேண்டுமென்றால் காங்கிரஸ் கட்சி பின்பற்றக்கூடிய அடிப்
படையான சமுதாய பிற்போக்கான. முதலாளித்துவ கொள்கை
களுக்கு மாற்றாக ஒரு பாதை வரவேண்டும். அதற்காகத்தான்
இடதுசாரிக் ஜனநாயக கட்சிகள் முயற்சிக்கின்றன. அந்த முயற்
சிக்காக நாங்கள் போராடுகிறோம். அதில் என்ன தவறு? அது
முற்றிலும் நியாயமானதே. ஆகவேதான் சொல்கிறேன் அந்தப்
போராட்டம் இந்த அளவிலேதான், இந்த அவையிலேயும்
நடக்கிறது. இதற்கு ஒரு உதாரணத்தைக் கூடச் சொல்ல
முடியும்.

பாரதீய ஜனதா கட்சியும் லோக்தளமும்
சேர்ந்து, இந்து மக்களின் உரிமைகள் பாதிக்கப்பட்டு விட்டன.
வனஸ்பதி தயாரிப்பதிலே, மாட்டுக் கொழுப்பு சேர்ந்துவிட்டது
என்பதை பெரிய பிரச்சினையாக ஆக்கியிருக்கிறார்கள். இந்திரா
காந்தியை தாக்க வேண்டியது ஒன்றுதான் எங்கள் லட்சியமாக
கொண்டிருந்தால், இந்தக் கூட்டத்தோடு சேர்ந்துகொண்டு,
கும்பலோடு கோவிந்தா போட்டிருக்கலாம். ஆனால் இல்லை.
பாரதிய ஜனதா கட்சியும் லோக்தளமும் சேர்ந்த கூட்டணி பிற்
போக்கு கூட்டணி என்று நாங்கள் சொல்கிறோம். அவர்கள்
இப்படி இந்து மக்களின் மதப்பிரச்சினையை எடுத்து வாதாடு
வதை, ஒரு பிற்போக்கான வாதம், கோஷம் என்று சொல்லி
வருகிறோம். ஆகவே, இந்திரா காந்தியை எதிர்ப்பதற்காக
எந்த ஆயுதத்தை வேண்டுமானாலும், எந்த பிற்போக்கான
ஆயுதத்தை வேண்டுமானாலும் எடுத்துப் பயன்படுத்த மார்க்
சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தயாராக இல்லை என்பது மட்டும்
அல்ல, அப்படிப்பட்ட பிற்போக்கான சக்திகளையும் எதிர்த்து
போராடுகிறது. இது நாட்டு மக்களுக்கு நாங்கள் ஆற்றவேண்
டிய கடமை என்று கூறுகிறேன்.

அதேபோல அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்
கழகத்தையும் நாங்கள் குருட்டுத்தனமாக எதிர்க்கவில்லை.
அண்ணா தி.மு.க. 1977-லே ஆட்சிக்கு வந்தது. இதுதான்
முதலாவது நம்பிக்கையில்லாத் தீர்மானம். ஒரு தடவையோ
இரண்டு தடவைகளோ, தொழிலாளர் நல விரோதக் கொள்
கையைக் கண்டித்து தீர்மானம் இந்த அவையிலே நடத்தி



ருக்கலாம். இன்றைக்கு யாரோ சிலர் சொன்னார்கள், அ.தி.மு.க
காங்கிரஸ் கட்சியோடு கூட்டுபோவதற்கு முயற்சிப்பதால் இப்படிப்
பட்ட எதிர்ப்பு என்று. அப்படி இல்லை, அது ஒரு விமர்சனம்,
ஆனால் இங்கே இந்த அரசாங்கம் பின்பற்றக்கூடிய கொள்கை
களைப் பற்றி எங்களுக்கு ஆட்சேபணைகள் எழுந்ததினால்தான்
பிரதானமாக இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு
வந்தோம். அதைத்தான் நான் கூற விரும்புகிறேன். இதற்கும்
உதாரணத்தை வேண்டுமானால் எடுத்துக்கொள்ளுங்கள்.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை குருட்டுத்தன
மாக நாங்கள் எதிர்ப்பாக இருந்தால், இலங்கைத் தமிழர் பிரச்சி
னையிலேயே எதிர்த்திருக்கலாம். இங்கே பார்வர்டு பிளாக்
தலைவர் கூட கேட்டார் அதைப்பற்றி. என்ன புரிந்துகொள்ள
வேண்டும் என்றால், அரசியல் என்பது ஏதோ நேராகப் போடக்
கூடிய ஒரு கோடு அல்ல. ஆனால் நல்லசிவன் அவர்களும்,
நெடுமாறன் அவர்களும் தாக்கப்பட்டபோது நாங்கள் எண்ணி
னோம், அரசியல் காரணங்களால் எதிர்க்கட்சிகளே இந்த
மாகாணத்தில் இருக்க முடியுமா என்று அந்தக் கேள்வி கூட
எங்களிடையே எழுந்தது. அப்பொழுது திராவிட முன்னேற்றக்
கழகத்து நண்பர்களோடும் சேர்ந்து கூட்டு இயக்கம் நடத்தினோம்.
ஆனால் 'அதற்கு முன்பிருந்தே ஜனநாயகப் பாதுகாப்பு
அணி என்ற பெயராலே நாங்கள் போராடிக்கொண்டு
தான் இருந்தோம். திராவிட முன்லேற்றக் கழகம்,
அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆகிய இரண்டையுமே
அவர்கள் இந்திரா காங்கிரஸ் கட்சியோடு இணைந்து அவ்வப்
போது அவர்கள் எடுக்கக்கூடிய கொள்கைகள் சரியில்லை என்று
தானே, திருச்செந்தூரிலே எதிர்த்தோம், பெரியகுளத்திலே
எதிர்த்தோம். திருப்பத்தூரிலே எதிர்த்தோம்.

டாக்டர் இராமலிங்கம் சொன்னார், மண்டை கனம் அதிக
மாகப் போச்சு, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின்
ஆதரவின் விளைவாக இங்கே உட்கார்ந்து கொண்டிருக்கிற
பெரியவர்களுக்கு மண்டை கனம் அதிகமாகப் போச்சு என்று.
தேர்தலிலே தோல்விபற்றிக் கவலைப்படவில்லை. டெப்பாசிட்
போனாலும் பரவாயில்லை என்று, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி
இருக்கிற தொகுதியிலே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி இருக்கிற
தொகுதியிலே, குமரி அனந்தன் கட்சித் தொகுதியிலே போட்டி
யிடவில்லையா எதிராக நின்று, யாருடைய தயவை எதிர்
பார்த்து? கொள்கைக்காக போராடினோம். அப்படிப்பட்ட
நிலைமை வந்து தேவைப்பட்டால், தனியாக நின்று போராடு
வதற்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும், இடதுசாரி கட்சியும்
தயாராக இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால் நான்
கேட்கிறேன். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்
கழகம் யாருடைய உதவியையும் பெறாமல், எந்தக் கட்சியினு
டைய உதவியையும் நாடாமல், தனித்து நிற்பதற்கு அவர்கள்
தயாராக இருப்பார்களா? 1973-லே ஆரம்பித்து, 1977-லே

[திரு. என். சங்கரய்யா] [1983 நவம்பர் 11

[முற்பகல் 10·23]

யிருந்து 1980 பாராளுமன்றத்திலேயிருந்து, 1980 சட்ட மன்றத்திலேயிருந்து, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தனியாக நின்று போட்டியிட்டிருக்கிறதா ? அவரைக் கேட்கிறேன். நான் முதலமைச்சரிடத்தில் கேட்கவில்லை. டாக்டர் இராமலிங்கத்தைக் கேட்கிறேன், அவர் சொல்வாரா? (குறுக்கீடு) அவர் இங்கு இல்லையென்று சொன்னால், அவர் இங்கு இருந்திருக்கவேண்டும். ஏனென்று சொன்னால் ஐக்கியமுன்னணி என்றதந்திரம் இன்றைக்கு நடைமுறையில் உண்டு. பிரதானமாக எதிர்க்கக்கூடிய சக்தியைத் தனிமைப்படுத்துவதற்காக கூட்டணிகளை அமைப்பது, இயக்கங்களை நடத்துவது அரசியல் கட்சிகளுக்குள்ள உரிமை. ஆகவேதான் சொல்கிறேன். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகம் தனியாக இருக்கவேண்டுமென்று நான் சொல்லவில்லை. அதேபோல் அவர்கள் எங்களைப் பார்த்து—முன்னாலேயே சொன்னார்கள்—பிச்சை வாங்கியது என்று, பெரிய கட்சியிடமிருந்து சிறிய கட்சி பிச்சை வாங்குவது ஒரு விஷயம். சிறிய கட்சியிடமிருந்து பெரிய கட்சி பிச்சை வாங்குவது அதை விடக் கேவலம் இல்லையா ? நான் உண்மையாகக் கேட்க விரும்புகிறேன். 1980 ம் ஆண்டிலே நடைபெற்றது சட்டமன்றத் தேர்தல் ஜனங்கள் கெட்டிக்காரர்கள் என்று நான் சொல்கிறேன். 1980 ஆம் ஆண்டிலே நாடாளுமன்ற தேர்தலில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகமும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியும் சேர்ந்து போராடியும் காங்கிரஸ்-தி.மு.க. கூட்டணிதான் வெற்றிபெற்றது. சேர்ந்து போராடியும் அதுதானே வெற்றிபெற்றது. அதை வைத்துக் கொண்டு அவர்கள் தப்புக்கணக்குப் போட்டார்கள். அடுத்த மாதம் மே மாதம் வரக்கூடிய தேர்தலிலே அதே நிலைமை வரும் ஆகவே வெற்றி பெறுவோம் என்றார்கள். தமிழ் நாட்டிலே நிலைமையை 5 மாதத்திலே விஷயத்தையே திருப்பிப் போட்டு விட்டார்கள். வேறுவிதமாக முடிந்துவிட்டது. எதற்காகச் சொல்கிறேன் என்றால் தேர்தலில் திரு. பக்தவச்சலம் தோற்று இருக்கிறார், திரு. அண்ணாதுரை அவர்கள் தோற்றிருக்கிறார்கள், திரு. காமராஜ் அவர்கள் தோற்றிருக்கிறார்கள், எத்தனை அரசியல் கட்சிகளின் தலைவர்கள் தோற்று இருக்கிறார்கள். இந்திரா காந்தி தோற்றிருக்கிறார்கள். தேர்தலில் வெற்றியும் தோல்வியும் வெவ்வேறு. ஆனால் இதைச் சொல்லக்கூடாது. ஒரு தேர்தல் அணி என்று அமைத்துக்கொண்டு அந்த அணியின் மூலமாக வாக்குகளை பெற்றுவந்த நாங்கள் ராஜினாமா செய்ய வேண்டுமென்று கேட்கிறார்கள், அப்படி என்றால் அதேபோல், தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் ராஜினாமா செய்யவேண்டுமல்லவா ? ஆகவே அது பிரயோஜனம் இல்லை, அவர்கள் அப்படிச் சொல்லக்கூடாது. தேர்தல் கூட்டணி வைக்க வேண்டுமென்றால் வையுங்கள். வைக்க வேண்டாமென்றால் வேண்டாம். ஆனால் வைக்கப் பட்டால் பரஸ்பர ஆதரவு இருக்கத்தான் செய்யும். எங்களுடைய ஓட்டுகள் ஆயிரம், 2 ஆயிரம் அல்லது 5 ஆயிரம் என்று 100



1983 நவம்பர் 11] [திரு: என். சங்கரய்யா]

தொகுதிகளிலே பெறுகிறபோது ஒரு ஆட்சி வருகிறது. பேராசிரியர் அன்பழகன் அவர்கள் ஒரு தடவை சொல்லியிருக்கிறார்கள், ஒரு 4 லட்சம் வாக்குகள் திசைமாறிப் போயிற்று, வித்தியாசம் அதுதான். பாராளுமன்றத் தேர்தலுக்கும் சட்டமன்றத் தேர்தலுக்கும் அவ்வளவுதான் வித்தியாசம். அதற்காகத்தான் சொல்கிறேன். அந்த 1% 2% வாக்குகள் திரும்புமானால் தேர்தல் முடிவுகள் ஒரு தேர்தலுக்கும் இன்னொரு தேர்தலுக்கும் முடிவுகள் மாறிப் போய்விடும். ஜனங்கள் நம் கையில் இல்லை. நாம் அவர்கள் கையில் இருக்கிறோம் அதைப் புரிந்துகொண்டால் நல்லது.

இன்றைக்கு குருட்டுத்தனமாக எதிர்க்கவில்லை. இலங்கைப் பிரச்சினையில் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் எங்களுக்கும் அடிப்படையான வித்தியாசம் இருக்கிறது. திரு. நெடுமாறனுக்கும் எங்களுக்கும் அடிப்படையான வித்தியாசம் இருக்கிறது. அவர்கள் நம்மோடு சேர்ந்தும் வேறு இயக்கங்களிலே இருக்கிறார்களே ஆகவே இலங்கைப் பிரச்சினையிலே நாங்கள் அவர்களோடு நிற்கவேண்டுமென்று சொன்னோமா ? சர்வகட்சிக் கூட்டத்திலே எவ்வளவு கடுமையான விவாதங்கள் நடத்தினோம். முதலமைச்சர் இங்கே இருக்கிறார்கள். தி.மு.க.வோடு சேர்ந்து ஜனநாயக உரிமைகளுக்காக ஒரு கிளர்ச்சியை நடத்திய நாங்கள் தமிழ்நாட்டிலே மறு மாதத்திலேயே அனைத்திந்திய அண்ணா தி.மு.க.வோடு சேர்ந்து காங்கிரஸ் கட்சியோடு சேர்ந்து இலங்கைப் பிரச்சினையிலே சரியான நிலையை எடுத்து நாங்கள் பேசவில்லையா ? சர்வகட்சிக் கூட்டத்திலே பேசினோமா இல்லையா ? சிந்தித்துப் பாருங்கள். ஆகவே பிரச்சினைக்குப் பிரச்சினைதான், இன்றைக்கும் நாங்கள் கூறுகிறோம். இலங்கைப் பிரச்சினையிலே அவர்கள் இங்கே வெளியேறினார்கள். ஆனால் அரசு கொண்டுவந்த அந்த தீர்மானத்திற்கு நாங்கள் திருத்தங்களைக் கொடுத்து ஆதரித்து இருக்கிறோம். எதற்காகச் சொல்கிறேன் என்றால் குருட்டுத்தனமாக நாங்கள் எதிர்க்கவில்லை என்பதைக் காட்டுவதற்காகத்தான், அப்படி யாரோ சிலர் சொன்னார்கள் உதாரணமாக நான் சொல்கிறேன். இலங்கைத் தமிழர் பிரச்சினையிலே தமிழக அரசு சரியான நிலைமை எடுக்கவில்லை என்று நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்திருந்தால் அதை நாங்கள் எதிர்ப்பதைத் தவிர வேறு வழியில்லை. சிக்கலைப் பாருங்கள். இலங்கைத்தமிழர் பிரச்சினையில் தமிழக அரசு சரியான நடவடிக்கை எடுக்கவில்லை என்று நம்பிக்கையில்லாத் தீர்மானம், ஒரே ஒரு வரித் தீர்மானமாக இருந்தாலும் நாங்கள் அதை எதிர்க்க வேண்டி வரும்.

பிற்பட்ட வகுப்பினருக்கு இட ஒதுக்கீடு என்பதில் மாண்பு மிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு வரம்பு வேண்டுமென்று சொன்னார்கள். அது ரொம்ப சரியான கருத்து. முழுமனதோடு நாங்கள் அதை ஆதரித்தோம், பின்னாலே அவர்கள் அதை கை விட்டு விட்டார்கள். இன்றைக்கும் நாங்கள் அந்த நிலையில்தான் இருக்கிறோம்.

அதோடு ஊராட்சி மன்றத் தேர்தலிலே தாழ்த்தப்பட்டவர்களுக்கு பெண்களுக்கு இட ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்ற கொள்கையைக் கொண்டு வந்தார்கள். அதையும் முழு மனதோடு ஆதரித்தோம். சத்துணவுத் திட்டம். ஆனால் சத்துணவுத் திட்டம் நடத்தப்படுகிற முறைபற்றிச் சொல்கிறோம். அந்தத் திட்டம்பற்றிக் குறை சொல்லவில்லை. மக்களுக்கு ஏதாவது ஒரு வகையில் ஏதாவது ஒரு நிவாரணம் கிடைத்தாலும் அதை நாங்கள் ஆதரிக்கக் கூடியவர்கள், ஆனால் அது சரியாக நடைபெற வேண்டும் என்பதுதான் எங்களுடைய வாதம். இதையெல்லாம் நான் பட்டியல் போட்டு காட்டுகிறேன் என்றால் நான் பின்னாலே சொல்லக்கூடிய விஷயங்கள் விமர்சனங்களாக இருக்கும்போது அதை நீங்களும் எப்படிப் பார்க்கவேண்டுமென்றால், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக சர்க்காரை ஏதாவது வைத்துத் தாக்க வேண்டுமெனபதற்காக நான் இதைச் சொல்லவில்லை. நியாயமான காரணங்கள் எங்களுக்கு இருக்கின்றன. அதை நீங்கள் ஒத்துக் கொள்ளாமல் இருக்கலாம்.

இங்கே பார்வர்டு பிளாக் கட்சியின் தலைவர் அவர்கள் சொன்னார்கள். தி.மு.க.வும், அ.இ.அ.தி.மு.க.வும் பார்லிமெண்டில் இந்திரா காந்தி இயற்றும் பல சட்டங்களை ஆதரித்தார்கள். அந்த நிலையில் நாங்கள் ஆதரிக்க முடியாது என்று சொன்னோம்என்றார். தொழிலாளர் பிரச்சினையில் மத்திய அரசு கொண்டு வந்திருக்கக்கூடிய அந்த அத்தியாவசிய பணிகள் சட்டத்தை எதிர்ப்பதற்கு தி மு.க. தயார் என்று வந்ததற்கு பின்னால்தான் அப்புறம்தான் அந்த தொழிலாளர் அணிவகுப்பு நடந்தது. அவர் சொல்கிறார் மேற்கு வங்கத்தைப்பற்றி. அவருக்கு நான் சொல்கிறேன் அவருடைய பார்வர்டு பிளாக் சரியான முறையில் மேற்கு வங்கத்தில் எங்களுடைய இடதுசாரி இயக்கத்தில் இருக்கிறது மந்திரிசபையில் இருக்கிறார்கள். திரிபுராவில் எங்களுடைய இடதுசாரி முன்னணியில் இருக்கிறார்கள்.

காஷ்மீரில், ஸ்ரீநகரில் நடைபெற்ற மகாநாட்டில் தி.மு.க. கலந்துகொண்டது. பார்வர்டு பிளாக் கட்சித் தலைவர் சிட்டபாசு அவர்கள் கலந்துகொண்டு இருக்கிறார். நாளைக்கு கல்கத்தாவிலே தேர்தல்முறைபற்றி நடக்கக்கூடிய எதிர்க்கட்சிகள் மகாநாட்டுக்கு வரப்போகிறார். எதற்கு இதையெல்லாம் சொல்கிறேன் என்றால் தி மு.க. வந்தாலே அந்த இடத்திற்கு நீங்கள் போகக்கூடாது என்ற முறையில் அவர் பேசினார். அதற்காக சொல்கிறேன். அவரைப் பொறுத்தவரைக்கும் நான் சொல்கிறேன் அவர் தி.மு.க. வோடு போனதற்கு பிறகுதான் நாங்கள் அவர்களோடு சேர்ந்தோம் என்று சொல்கிறேன். தி.மு.க வோடு எந்தவிதமான கூட்டு இயக்கத்திற்கு போகாமலா திருப்பத்தூர் தேர்தல் நடந்தபோது ஜனநாயக பாதுகாப்பு அணிதானே போராடியது. பெரியகுளம் தேர்தலில் தி.மு.க. அ.இ.அ.தி.மு.க. காங்கிரஸ் கட்சிகளை எதிர்த்து தானே போராடினோம். அப்போது இவர் ஆதரித்தாரா ? திருச்செந்தூர் தேர்தலில்





காங்கிரஸ், தி.மு.க அஇஅதிமுக. இவர்களை எதிர்த்துத்தானே, நாங்கள் போராடினோம். அப்போது ஆதரித்தாரா ? அப்போதும் ஆதரிக்கவில்லை, இப்போதும் ஆதரிக்கவில்லை. எதற்கு கூறுகிறேன் என்றால் அகில இந்திய பார்வர்டு பிளாக் கொள்கை வழக்கப்படி தமிழ்நாட்டில் உள்ள பார்வர்டு பிளாக் நடக்க வேண்டும். இடதுசாரி இயக்கத்தோடு சேர்ந்திருக்கவேண்டும். அப்படி இல்லாமல் இருப்பது துரதிருஷ்டவசமானது என்டதை மட்டும் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன்.

தென்மாநில முதலமைச்சர்கள் மாநாடு நடந்தது, மனப்பூர்வமாக ஆதரித்தோம். அதில் எந்த ஒளிவு மறைவும் இல்லை. காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த நண்பர் திரு. ஹாஜா செரீப் அவர்கள் அன்றைக்கு அதை பிளவு மாநாடு என்று சொன்னார்கள். இந்தியாவை துண்டாக்கக்கூடிய மாநாடு என்று சொன்னார்கள். நாங்கள் அதை எதிர்த்தோம். இன்றைக்கு நான் கேட்கிறேன், அன்றைக்கு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள் அந்த மாநாட்டின் அடுத்த மாநாடு சென்னையில் நடைபெறும் என்று. நடைபெறப் போகிறதா ? அன்றைக்கு அந்த மாநாட்டில் உற்சாகமாக பங்கு எடுத்துக்கொண்ட அ.இ.அ.தி மு.கழகம் இன்றைக்கு ஏன் அதைப்பற்றி அவ்வளவு அக்கறை எடுக்கவில்லை? அதுதான் நான் இங்கே கேட்கிற கேள்வி.

தென் இந்தியாவிலிருந்து 4 ராமர்களும் சேர்ந்து அந்த மாநாட்டை நடத்தினார்கள் என்று புகார். 4 ராமர்கள். அதிலே பாண்டிச்சேரியைச் சேர்ந்த ராமர் போனார் என்ற காரணத்திற்காக அதுவரைக்கும் சும்மா இருந்த இந்திரா காங்கிரஸ் தன்னுடைய ஆதரவை வாபஸ் வாங்கி அந்த மந்திரி சபையை முடித்து விட்டது. அதுவரைக்கும் சும்மா இருந்தார்கள். அவர் பெங்களூர் போய் அந்த தென் இந்திய முதலமைச்சர்கள் மாநாட்டில் கலந்துகொண்ட பிறகுதான் வாபஸ் வாங்கினார்கள். இது அவர்கள் செய்தது. இப்போது நான் கேட்பது அந்த மாநாட்டை பற்றி இன்றைக்கு நினைக்கிறோம். இன்றைக்கும் சொல்கிறேன் அது சரியானது. அன்று என்ன சொன்னோம். இதுபோல மாநாடு அகில இந்திய ரீதியில் காங்கிரஸ் அல்லாத முதலமைச்சர்கள் மாநாடு நடைபெற்றது அதிலே இந்த மாநிலப் பிரச்சினைகள் பேசப்படவேண்டும் என்று நாங்கள் கூறினோம். அதேபோல் விஜய்வாடா மாநாட்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கலந்து கொண்டார்கள். அது எதிர்க் கட்சிகள் மாநாடுதான். ஸ்ரீநகரில் நடைபெற்ற மாநாட்டுக்கு நம்பூதிரிபாட் அவர்கள் பகிரங்கமாக அறிக்கை வெளியிட்டார்கள். காங்கிரஸ் கட்சியை எதிர்க்கக்கூடிய ஒரு தேர்தல் அணியைப் பற்றி பேசுவதற்கு அல்ல. மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்ற ஒரே ஒரு விஷயம் தான் பேசப்படும் என்று குறிப்பிட்டார்கள்.

புதுக்கோட்டையில் நடைபெற்ற எங்கள் மாநில செயற்குழுவில் ஒரு தீர்மானம் போட்டார்கள். அ இ அ தி.மு. கழகம் அந்த மாநாட்டில் கலந்துகொள்ளவேண்டும் என்று. எதற்கு கேட்கிறோம். எதிரிகள் என்று கருதினால் எதற்கு கேட்கிறோம். அ.இ.அ.தி.மு.க. இப்போது ஆட்சியில் இருக்கிறது. இந்த கட்சி ஏற்கனவே அந்த முதலமைச்சர்கள் மாநாட்டை ஆதரித்து இருக்கிறது. ஆகவே இவர்கள் போனால் அந்தக் கோரிக்கை பலம் அடையும், என்று நாங்கள் கேட்கிறோம். அவர்கள் போகவில்லை. அதுதான் எங்களுக்கு ஏற்பட்டு இருக்கக்கூடிய வருத்தம். ஆகவே இப்போது இந்த பிரச்சினையை இத்துடன் வைத்துக்கொண்டு பின் வரும் விஷயங்களைச் சொல்ல விரும்புகிறேன். 19-1-82ல் அகில இந்திய வேலை நிறுத்தம் நடந்தது. அதிலே தஞ்சையில் உள்ள விவசாய தொழிலாளர்கள் தொழிலாளர் இயக்கத்தை ஆதரித்தார்கள் என்று அங்கே துப்பாக்கி சூடு நடந்தது. 3 விவசாய தொழிலாளர்கள் உயிர் இழந்தார்கள். அந்த 3 பேர் உயிர் நீத்ததைப்பற்றி நீதி விசாரணை கேட்டோம். மறுக்கப்பட்டது. அதிலே குண்டு அடிபட்டவர்களில் பலர் இளைஞர்கள், விவசாய தொழிலாளர்கள், ஏழைகள். தோழர் நம்பூதிரிபாட் தலைமையில் அவர்களை நாங்கள் சும்மா விட்டுவிடவில்லை. அந்த குடும்பங்களுக்கு நிவாரணம் அளிக்கின்ற வகையில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி நிதி வசூல் செய்து அவர்கள் குடும்பங்கள் வாழ்வதற்கும் அவர்கள் பெண்கள் திருமணங்களுக்கும், குண்டடி பட்டவர்கள் வாழ்வதற்கும் தோழர் நம்பூதிரிபாட் தலைமையில் நிதி வசூல் செய்து கொடுத்தோம். அந்த வழக்கை வாபஸ் வாங்காமல் தமிழ்நாடு அரசு அப்படியே வைத்துக்கொண்டு இருக்கிறது. மொத்தத்தில் ஆயிரம் பேர்களுக்கு மேல் வழக்குகள் தொடரப்பட்டு அப்படியே இருக்கிறது. பல எதிர்க்கட்சித் தலைவர்கள் எடுத்துச் சொல்லியும் வாபஸ் வாங்கப்படவில்லை. வழக்கு நீதிமன்றத்தில் இருக்கிறது. இதில் அரசியல் கட்சித் தலைவர்களையும் சேர்த்துக்கொண்டார்கள். பிறகு நாங்கள் முதலமைச்சரிடம் மனுக்களை கொடுத்தோம். இன்றைக்கு நான் கூறுகிறேன் அந்த இயக்கம் முறையாகத்தான் நடந்தது. ஆயிரக்கணக்கான பேர்கள் மீது செக்ஷன் 307 படி வழக்குகள் போட்டிருக்கிறீர்கள். அதை வாபஸ் வாங்குவது ஒரு ஜனநாயக இயக்கத்திற்கு நீங்கள் செய்ய வேண்டிய கடமை அல்லவா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

[முற்பகல் 10-30]

அதே போல், தமிழ்நாடு முழுவதும் வகுப்புக் கலவரத்தை உண்டாக்குகின்றவர்களை ஜெயிலிலே போடுங்கள், நாங்களும் ஆதரிக்கிறோம். தொழிலாளி, விவசாயிகள் தங்கள் பிரச்னைக்காக மறியல், சத்தியாக்கிரகம், தர்னா நடத்தியிருந்தால் அதற்காக எல்லாம் வழக்குகள் போட்டதை எல்லாம் நீட்டிக்க வேண்டுமா ? அதைத்தான் நாங்கள் கேட்கிறோம். இது ஜனநாயகத்தைப் பாதுகாக்கக்கூடிய ஒரு கொள்கை என்பதால் நாங்கள் கேட்கிறோம்.



அதே போல், குண்டர் தடுப்பு என்று சட்டத்தாலே ரொம்ப பேர் பிடிக்கப்பட்டார்கள். பாதிக்கப்பட்ட கைதிகள் வாயில்லா பூச்சிகள்— அதிலே நல்லவர்களும் இருப்பார்கள், கெட்டவர்களும் இருப்பார்கள். பாதுகாப்புச் சட்டம் என்ற பெயரில் எந்த இயக்கத்தைச் சேர்ந்தவரையும் ஒரு வருஷத்திற்கு ஜெயிலில் வைக்கலாம். ஒரு போலீஸ் கமிஷனரோ, அல்லது சூப்பரின்டென்டன்ட் ஆப் போலீசோ தாம் திருப்திப்பட்டால் எவரையும் ஜெயிலில் ஒரு வருஷத்திற்கு வைக்கலாம். கொடுமை அல்லவா ? இந்தச் சட்டம் தேவைதானா ? கடுமையான குற்றங்களைப் புரிந்தவர்களை, கடுமையான குற்றவாளிகளை, கடுமையான போக்கிரிகளைத் தண்டிப்போம். ஆனால், இந்தத் தடுப்புக் காவல் சட்டத்தின்கீழ், குண்டர்கள் என்ற பெயராலே யாரையும் கைது செய்யலாமா? தோழர் திரு. உமாநாத் ஒரு உதாரணம் கொடுத்தார். ஒரு பால்காரரை அங்குள்ள சர்க்கிள் இன்ஸ்பெக்டருக்குப் பிடிக்கவில்லை, போடு உள்ளே என்று போட்டுவிட்டார்கள். இன்றைக்கு அரசியல்வாதிகள் அதில் வரவில்லை. கொஞ்ச நாள் ஆகட்டும். இது அந்தக் கட்டத்திற்கு வருகிறதா, இல்லையா, பாருங்கள். எதிர்க்கட்சிகளைச் சேர்ந்தவர்களா, குண்டர்கள் என்று போடுங்கள். ஏனென்றால், தொந்தரவு இல்லை, கோர்ட்டுக்குப் போகவேண்டாம், குற்றச்சாட்டு சொல்ல வேண்டாம் என்ற நிலை. போலீஸ் கமிஷனரோ, அல்லது அந்தப் பகுதி சூப்பரின்டென்டன்ட் ஆப் போலீசோ, திருப்தி பட்டால் போதும், ஒரு வருஷம், 365 நாள் வைத்திருக்கலாம். யோசனை செய்து பாருங்கள், அது இருக்கலாமா?

அதுபோல், நாங்கள் அன்றைக்கே சொன்னோம், ஒரு போஸ்டர் சட்டம் வந்தது, பொது இடங்களிலே போஸ்டர் ஒட்டக் கூடாது என்று, இது நடக்காது என்று. அண்ணா தி. மு. க. போஸ்டர்தான்—பெரிய, பெரிய வண்ண போஸ்டர்கள், சட்டசபை ஹாஸ்டல் பூரா ஒட்டப்பட்டிருக்கிறது. பொது இடங்களில் போஸ்டர் ஒட்டக்கூடாது என்று எதற்காக நடைமுறைக்கு வரமுடியாத ஒரு சட்டத்தைக் கொண்டு வரவேண்டும்.

அதே போல், தொண்டர் படை. காங்கிரஸ் கட்சி சேவாதளம் வைத்திருக்கிறது. அகிம்சைவாதிகள்தான், அவர்களுக்குக் கூட ஒரு சேவாதளம் வேண்டியிருக்கிறது, அவர்களுடைய மாநாட்டைப் பாதுகாக்க. அப்படியென்றால், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாநாட்டைப் பாதுகாக்க வேண்டாமா? அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஜேப்பியார் தலைமையில் வெண்படை என்று கோபாலபுரத்திலே டிரெயினிங் கொடுத்ததாக பத்திரிகையிலே நான் படித்திருக்கிறேன். அப்பொழுது ஒரு அறிக்கை வெளிவந்தது. தொண்டர் படை வைத்துக் கொள்ளலாம். ஆனால், மாஜி இராணுவத்தார், மாஜி போலீசார் இருக்கக் கூடாது என்று. நான் நினைக்கிறேன், திரு. ஜேப்பியார் அவர்களே, ஒரு மாஜி போலீஸ்காரர்தான். எதற்காகச் சொல்கிறேன் என்றால், ஒருவர் ஒரு மாஜி போலீஸ்காரராக இருந்திருக்

கலாம். ஆனால், அவர் வேலையை விட்டுவிட்டு இப்பொழுது அரசியல் கட்சியிலே இருக்கலாம். அப்படியென்றால், அவர் அரசியல் ஊழியராகத்தான் கருதப்படுவார். ஆகையினாலே, இவையெல்லாம் சிறு பிரச்னைகள் என்று நாங்கள் கருதுகிறோம். இவையெல்லாம் பெரிய கொள்கைப் பிரச்னைகள் அல்ல. அநாவசியமான எரிச்சல்களும் கோபங்களும் ஏற்பட வேண்டிய அவசியம் ஏன் என்று கேட்கத்தான் இதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்த பிரச்னை உணவுப் பிரச்னை. தஞ்சாவூரிலே அரிசி இல்லை. விலை உயருகிறது, திருச்சிராப்பள்ளியிலே அரிசி விலை உயருகிறது. இதனுடைய காரணம் என்ன? டாக்டர் நாவலர் அவர்கள் டெல்லிக்குப் போனதைப் பத்திரிகையிலே பார்த்தேன். அங்கே நடந்த மாநாட்டிலே, தமிழ்நாட்டிலும் மேற்கு வங்காளத்திலும் இருக்கக்கூடிய பொது விநியோக முறைதான் சிறந்தது என்று அவர்கள் பாராட்டியிருக்கிறார்கள். அப்படி பார்த்தால் நாம்தான், காங்கிரஸ் அல்லாத இந்த ஆட்சியும், காங்கிரஸ் அல்லாத அந்த ஆட்சியும்தான் இருப்பதிலே ஓரளவு பொது விநியோக ஏற்பாட்டை நன்முறையிலே செய்திருக்கின்றன என்று அகில இந்திய மாநாட்டிலே சொன்னார்கள். ஆனால், நமக்கு என்ன பிரச்னை, என்ன சிக்கல் இருக்கிறது? 18,052 கடைகள் இருக்கின்றன. 1,18,88,000 கார்டுகள் இருக்கின்றன. 1984 பிப்ரவரி மாதம் வரையில் ஒன்றுக்கு 80,000 டன் அரிசியும், 40,000 டன் கோதுமையும் வேண்டும். இந்தக் கோரிக்கைகளை ஆதரித்து ஒரு இயக்கம் நடத்துவோம், தி.மு.க. உட்பட. இப்பொழுது நவம்பரிலே இருக்கிறோம். மாதம் 80,000 டன் அரிசியும் 40,000 டன் கோதுமையும் கொடுக்கவேண்டும் மத்திய அரசு என்று நாவலர் கேட்டிருக்கிறார். இந்த 3 மாத காலத்திற்கு என்ன செய்யப் போகிறோம்? இன்றைக்கு தஞ்சாவூரிலே எப்படி நடந்திருக்கிறது என்றால், சம்பா நடவு முடிந்துவிட்டது. இலட்சக்கணக்கான விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலை இல்லை. அவர்கள் வாங்கிச் சாப்பிட நெல் இல்லை. என்ன ஆகும்? இந்த நிலையை எண்ணிப் பாருங்கள். எனவேதான் நான் கேட்கிறேன், பெரும் நிலப் பிரபுக்கள் வைத்திருக்கும் நெல்லைக் கட்டாயமாகக் கொள் முதல் செய்ய அரசு ஏற்பாடு செய்யக் கூடாதா? வேறு என்ன வழி? இன்றைக்கு மக்களுக்கு உணவு அளிக்க வேண்டுமென்றால், அதைத் தவிர வேறு என்ன வழி இருக்கிறது? அதே நேரத்திலே மத்திய சர்க்காரை வற்புறுத்தலாம் அல்லவா? நீங்கள் அதற்கு ஒரு சர்வ கட்சிக் கூட்டத்தை நடத்தி, அதற்கு ஒரு பந்த் நடத்துவது என்று தீர்மானித்தால், நாங்களே தீர்மானத்தைக் கொண்டு வருகிறோம். அதற்காக ஒரு இயக்கத்தை நடத்தத் தயாரா? பந்த் வேண்டாம். பொதுக்கூட்டம் நடத்தத் தயாரா? மக்களுக்கு உணவு அளிக்க வேண்டும், பிப்ரவரி மாதம் வரையில் பாதுகாக்க வேண்டும். ஆகவேதான் இன்றைக்கு நான் கூற விரும்புகிறேன், இந்த விலைவாசி உயர்வு பெரிய அளவு பாதகப் படுத்தியிருக்கிறது.



இப்பொழுது என்னுடைய குறைபாடு என்னவென்றால், ஜனதா கட்சி உட்பட, திரு. ஜெகஜீவன்ராம் உட்பட ஒரு மாநாடு சமீபத்திலே டெல்லியிலே நடந்தது. தோழர் திரு. ஈ. எம். எஸ். அவர்களை கன்வீனராகப் போட்டு ஒரு கமிட்டி போட்டிருக்கிறார்கள். எதற்காக என்றால், இந்த உணவுப் பொருள்களின் விலைவாசிகளைப் பொறுத்தவரையில், நாட்டிலே உள்ள மக்களைப் பாதுகாக்க மத்திய அரசுக்கு என்ன கோரிக்கை வைப்பது, வேலையின்மையைத் தீர்ப்பதற்கு உடனடியாக என்ன நிவாரணம் கேட்பது, என்று தீர்மானிப்பதற்கு. நான் கேட்கிறேன், அப்படிப்பட்ட ஒரு இயக்கத்திலே, அ.இ.அ.தி.மு.க. சேர வேண்டாமா? தமிழ்நாட்டிலேயே பிரச்னை, தமிழ்நாட்டு மக்களுக்கே அந்த உணவு தேவைப்படுகிறது. அப்படிப்பட்ட நேரத்திலே, இதிலே சேராமல் இருப்பது நியாயமா? சரியாக இருக்குமா? என்று கேட்கிறோம்.

நாவலர் அவர்கள் ஒன்று கேட்கிறார்கள், சரியான கேள்வி. இந்தத் தமிழ்நாட்டிலே உள்ள சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் நெல்லைக் கொள்முதல் செய்ய ரிசர்வ் வங்கி 18% வட்டி வாங்குகிறது. திரு. ஹாஜா செரீப் அவர்கள் பதில் சொல்ல முடிந்தால் சொல்லட்டும். ஒரு மாநிலத்தில் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் கஷ்டப்பட்டு, தன்னுடைய சொந்த பொறுப்பிலே நெல் வாங்குகிறது. அதற்கு ரிசர்வ் வங்கி இலவசமாக கடன் கொடுக்கக் கூடாதா? அல்லது 2% என்று சம்பிரதாயத்திற்கு கடன் கொடுக்க கூடாதா? 18% என்று ரிசர்வ் வங்கி வட்டி கேட்டால் அரசாங்கம் எப்படி நடத்த முடியும்? இதுதான் பிரச்னை. ஆகவே நாங்கள் சொல்கிறோம். விவசாயிகளுக்கு ஒரு நியாய விலை கொடுத்து வாங்க வேண்டும்; மக்களுக்கு நியாய விலையில் கொடுக்க வேண்டும். இடையில் ஏற்படுகிற நஷ்டத்தை அந்த மாநில சர்க்கார் ஏற்றுக்கொள்ள முடியாது என்பதுதான் எங்களுடைய வாதம். அகில இந்திய ரீதியிலே பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாய் வருவாய் இருக்கிற மத்திய சர்க்கார்தான் விவசாயிகளுக்கு நியாய விலை கிடைப்பதற்கும், மக்களுக்கு மலிவு விலையில் பொருள்கள் கிடைப்பதற்கும் வழிசெய்து ஏற்படுகிற நஷ்டத்தை அவர்கள்தான் ஏற்றுக்கொள்ள வேண்டும். அந்தக் கோரிக்கையிலே உங்களுக்கும் எங்களுக்கும் வித்தியாசம் இருக்க முடியாது என்று நம்புகிறேன். ஆனால் அதை நீங்கள் ஏன் கேட்பதற்கு மறுக்கிறீர்கள் என்பதுதான் எங்களுக்கு இருக்கிற முக்கியமான பிரச்னை. அதைப்போல இன்றைக்கு நிலச்சீர்திருத்தம். தமிழ்நாட்டிலே 1½ கோடி ஏக்கர் நிலம் சாகுபடியிலே இருக்கிறது. இதுவரைக்கும் விநியோகம் செய்யப்பட்டதாக நில உடைமை வரம்பாக இருக்கிற சட்டத்திலே வெறும் 75 ஆயிரம் ஏக்கர் இருக்கிறது. சிந்தித்துப் பாருங்கள். ஆனால் அதே நேரத்தில் பினாமி உடைமைகள் ஏராளமாக இருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பினாமி சட்டத்தை ஒரு சிறிய பகுதியை தளர்த்துவதற்கு கொண்டு வந்தார்கள். அதை அவர்கள் ஏற்கவில்லை, மேலே என்ன செய்தீர்கள்? நாங்கள் ஆதரவு அளித்தோம்; ஆதரவு அளிப்போம்.

அதைப்போலத்தான் கோவில் மட நிலங்கள், பொது ட்ரஸ்ட்டுகள். இப்போது மாண்புமிகு அமைச்சர் வீரப்பன் அவர்கள் ஒரு பெரிய வெடி குண்டைப் போட்டிருக்கிறார்கள். நான் சொல்ல விரும்பு கிறேன். திருவாடுதுறை மடத்திற்கு மட்டும் நஞ்சையிலே 8,842.47 ஏக்கர் இருக்கிறது; புஞ்சை 17,889.35 ஏக்கர்; காசி மடம், திருப்பனந்தாள் நஞ்சையிலே 1,003.89 ஏக்கர் இருக்கிறது; இது இரண்டு உதாரணம். மாண்புமிகு உறுப்பினர் அம்பிகாபதி அவர்கள் கேட்ட கேள்விக்கு சில நாட்களுக்கு முன்னாலே தமிழ் நாடு சட்டமன்றத்திலே வைக்கப்பட்ட கேள்வி பதிலிலே அடங்கி யிருக்கிற புள்ளி விவரங்கள்தான் இவை. இன்றைக்கு தமிழ் நாட்டிலே குத்தகை விவசாயிகள் ஏராளமாக இருக்கிறார்கள். பதிவு செய்யப்படவில்லை! சிரமப்பட்டு ஒரு பதிவுச் சட்டம் கொண்டு வந்தோம். அது அமலுக்கு வரவில்லை. நில பிரபுக்கள் தடுக்கிறார்கள். சாட்சியம் சொல்ல மறுக்கிறார்கள். ஆகவே இருக்கிற விவசாயிகள் யார் என்று கேட்டால் கோவில் மட நிலங்களிலே சாகுபடி செய்கிற விவசாயிகள்தான் ஓரளவிற்கு பதிவு செய்யப்பட்ட விவசாயிகளாக இருக்கிறார்கள். மாண்புமிகு வீரப்பன் அவர்களுடைய யோசனை என்ன? அதற்கு விதிவிலக்கு கொடுக்கப்பட வேண்டும் என்கிறார். அப்போது என்ன ஆகும் ? தமிழ்நாட்டிலே ஏற்கெனவே பாதுகாக்கப்பட்டிருக்கிற அந்த குத்தகை விவசாயிகள், நிலை என்ன ஆகும்? பாதுகாப்பு என்றால் என்ன தெரியுமா? விளைச்சலில் முக்கால் பங்கை அவர்களுக்கு கொடுக்க வேண்டும். நிலத்திலிருந்து அவர்களை வெளியேற்ற முடியாது. இந்தப் பாதுகாப்பு இருக்கிறது. இதை எடுத்துவிட வேண்டுமென்றுச் சொன்னால் எப்படி? இன்றைக்கு கோவில் மட நிலங்கள் விஷயத்தில் நாங்கள் சொல்வதை பகுத்தறிவுவாதிகளான நீங்கள் ஒப்புக்கொள்வீர்கள், செப்பரேஷன் பிட்வீன் தி ஸ்டேட் அண்ட் ரெலிஜன்; அதுதான் செக்குலரிசம்; அரசு வேறு, மதம் வேறு. மதத்தை நடத்தக்கூடியவர்கள் அவர்களுக்காக செலவு களை அவர்கள்தான் பார்த்துக்கொள்ள வேண்டும். இதுதான் எங்களுடைய கொள்கை. ஆகவே அப்படிப் பார்த்தால் இன்றைக்கு அந்தக் கோவில்களை நிர்வகிக்க வேண்டியது அவர் களுடைய உண்டியல் வசூல் மூலமாக பக்தர்கள் செய்ய வேண்டியது; ஆனால் நிலத்திலே உழக்கூடிய விவசாயி இருக் கிறானே அவன் வயிறு காயலாமா? உங்களிடத்திலே ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இராமநாதபுரம் மாவட்டம், இராஜ பாளையத்திலே, தேவதானம் என்ற இடத்திலே நூற்றுக்கணக் கான ஏக்கர் கோவில் நிலங்களை நான்கு பேர்கள் வைத்திருக்கி றார்கள் என்று சொல்லி அதை எதிர்த்து எங்களுடைய இயக்கம் போராடிக் கொண்டிருக்கிறது. பெருச்சாளிகளை ஒழிக்க வேண்டு மென்று இங்கே சொல்கிறீர்கள். உங்களோடு சேர்ந்து பெருச் சாளிகளை விரட்டுவோம். அங்கே இருக்கிற நிலங்களை ஒரு ஏக்கர், 1½ ஏக்கர் என்று ஏழை விவசாயிகளுக்கு கொடுப்போம். இன்றைக்கு உதாரணமாக சொன்னால், மேற்கு வங்காளம் என்றால் உங்களுக்கு கோபம் வரவேண்டாம். மேற்கு வங்காளத்தில் இடதுசாரி கம்யூனிஸ்ட் ஆட்சி வந்ததற்குப் பிறகு



இந்தியா பூராவும் நில உடமைக்கு வரம்பு கட்டுகிற சட்டத்திலே உபரியாக எடுக்கப்பட்ட நிலத்திலே பாதிக்கு மேலே நிலம் அந்த மாநிலத்தில் எடுக்கப்பட்டிருக்கிறது. 12 லட்சத்து 58 ஆயிரத்து 625.25 ஏக்கர் நிலம் எடுக்கப்பட்டது. அது 1983 ஆம் ஆண்டு எப்ரல் 20 ஆம் தேதிக்குள் 7.5 லட்சம் ஏக்கர் நிலம், 5 லட்சம் பேர்களுக்கு விநியோகிக்கப்பட்டிருக் கிறது. அவர்கள் என்ன முறையை வைத்திருக்கிறார்கள்? நீர்ப் பாசனம் இருக்கிற நிலமாக இருந்தால் ஒரு ஏக்கருக்கு மேல் கொடுக்க மாட்டார்கள். நீர்ப்பாசனம் வசதியற்ற நிலமாக இருந்தால் 2 ஏக்கர் நிலம் கொடுப்பார்கள். இப்படி 5 லட்சம் புதிய பட்டாதாரர்களை உருவாக்கினார்கள். தமிழ்நாட்டிலே நீங்கள் இந்த நில உடைமை வரம்பு கட்டுகிற சட்டத்திலே ஓட்டைகளை களைந்து விட்டால் போதும்.

(முற்பகல் 10-40)

எத்தனை விதிவிலக்குகள் தெரியுமா? 15 ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்று பெயர். ஆனால் வாஸ்தவத்திலே 60 சாதாரண ஏக்கர்கள் வரையில் வைத்துக்கொள்ளலாம் ஒரு குடும்பம். இதைச் சிந்தித்துப் பாருங்கள். எப்படி நிலம் மிச்சம் கிடைக்கும்? ஏராளமான விதி விலக்குகள் இருக்கின்றன? இந்த விதிவிலக்கு களையெல்லாம் ரத்து செய்து விட்டு, இந்தச் சட்டத்தைச் சரியான முறையிலே பயன்படுத்தி, அமல்படுத்தினால் தமிழ் நாட்டிலே 20 இலட்சம் ஏக்கர்கள் கிடைக்கும், அந்த நிலம் 20 இலட்சம் குடும்பங்களுக்குக் கிடைக்கும். இதைக் காட்டிலும் வறுமையைப் போக்குவதற்கான வழி என்னவாக இருக்க முடியும்? இதைச் செய்வதற்குப் பதிலாக சேலை கொடுப்பது, வேட்டி கொடுப்பது, அரிசி கொடுப்பது என்பதால் மட்டும் பிரச்னை தீர்ந்து விடுமா? அவைகளையும் கொடுக்கட்டும், வேண்டாமென்று சொல்லவில்லை. ஆனால், இது மட்டும் சரி யான வழி வகுக்காது. நிலம் வைத்திருக்கின்ற உரிமையைக் கட்டுப்படுத்தியாக வேண்டும்.

நிலத்தைத் திரும்ப வாங்குகின்ற உரிமைகளையும் கட்டுப் படுத்தி ஆகவேண்டும். இல்லையென்றால் குத்தகை விவசாயி களிடமிருந்து யார் வேண்டுமானாலும் நிலத்தைப் பறித்துக் கொள்ளலாம். அவர் முதலாளியாக இருக்கலாம் அல்லது பெரிய பேக்டரி வைத்திருப்பவராக இருக்கலாம். அவர் நிலத்தை எடுத்துக்கொள்வார். அவ்வாறு இருக்கக் கூடாது. மேற்கு வங்காளத்திலே இவ்வாறு நிலத்தைத் திரும்பப் பெற வேண்டு மென்றால் அவர்கள் மூன்று நிபந்தனைகளை நிறைவேற்ற வேண்டுமென்று வைத்திருக்கிறார்கள். முதலாவதாக, அந்த நிலம் கிடைத்தால்தான் அவர்கள் வாழ முடியும், வேறு வருமானம் இல்லை என்று நிரூபித்தாக வேண்டும். இரண்டா வதாக, நிலம் இருக்கும் இடத்திலிருந்து எட்டு கிலோ மீட்டர் தூரத்திற்குள் அவர்கள் குடியிருக்க வேண்டும். மூன்றாவதாக, மீட்கப்பட்ட நிலத்தைச் சொந்தத்திலேயே உழுது பயிர் செய்வார்

களா என்பதைச் சொல்ல வேண்டும். இவ்வாறெல்லாம் ஒத்துக்
கொண்டால்தான் நில மீட்சி. இல்லையென்றால நில மீட்சி
இல்லை. இவ்வாறு செய்வதன் காரணமாகப் பல இலட்சக்கணக்
கான குத்தகை விவசாயிகள் நிம்மதியாக இருக்கிறார்கள். மேற்கு
வங்க அரசுக்குக் கிராமப்புற மக்களிடத்திலே ஆதரவு இருப்ப
தற்குக் காரணம் இதுதான். மேலும் பத்து ரூபாய் கூலி என்று
அந்தத் தொழிலாளர்களுக்கு நிர்ணயித்தால், அதை அமல்
படுத்துவது யார் என்று பார்க்க வேண்டும். தமிழ்நாட்டில் கூலிச்
சட்டம் வந்துவிட்டது, ஆனால் அது சரிவர அமல் நடத்தப்படு
கிறதா? மாண்புமிகு அமைச்சர் திரு. இராகவானந்தம் அவர்கள்
பொறுப்பு வகிக்கின்ற அந்தத் தொழிலாளர் நல இலாக்கா
மூலமாகச் சட்டம் போடப்பட்டது. ஆனால் அது சரியாக அமல்
படுத்தப்படுகிறதா? இல்லை. இரண்டு ரூபாய், மூன்று ரூபாய்க்கு
வேலை செய்கிறார்கள். ஆனால் மேற்கு வங்காளத்தில்
ஒவ்வொரு பிர்க்காவிற்கும் விவசாயத் தொழிலாளர்களின் கூலிச்
சட்டத்தை அமல் நடத்துவதற்காக இன்ஸ்பெக்டர்களைப் போட்
டிருக்கிறார்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட பஞ்சாயத்துக்களும்
கண்காணிக்கின்றன. எனவே, யாரும் அந்தச் சட்டத்தை
ஏமாற்ற முடியாது. அதன் காரணமாக, அந்த விவசாயத்
தொழிலாளர்கள் தங்களுடைய சொந்தக் காலிலேயே நிற்க
முடிகிறது. ஆனால் தமிழ்நாட்டில் சட்டங்கள் காகிதப் பூவாக
இருக்கின்றன. நான் சட்டத்தைக் குறை சொல்லவில்லை.
அந்தச் சட்டம் எப்படி வந்தது?

மாண்புமிகு ரெவின்யூ துறை அமைச்சரிடத்தில் பேசி,
கமிஷனைப் போடச் சொல்லி, அதன் முன் சாட்சியங்கள்
கொடுக்கப்பட்டன. அந்தக் கமிஷனுக்கு முதலில் திரு. திரவியம்
அவர்கள் தலைவராக இருந்தார்கள் என்றும், பிறகு
திரு. அம்பாசங்கர் அவர்கள் தலைவராக இருந்தார்கள் என்றும்
நான் கருதுகிறேன். அந்தக் குழு பரிசீலனை செய்து அரசுக்குச்
சிபார்சுகளைச் செய்தது. அரசாங்கம் அந்தச் சிபார்சுகளை
ஏற்றுக் கொண்டதாகச் சொல்லப்பட்டது. ஆனால் அவைகளை
அமல் செய்வது யார் பொறுப்பு? செங்கல்பட்டு தாலுக்காவில்
என்ன கூலி கொடுக்கப்படுகிறது என்று கேட்டுப் பாருங்களேன்,
தெரியும். எனவேதான், இவைகளைப் பற்றியெல்லாம் குறை
சொல்ல வேண்டும் என்பதற்காகத்தான் நாங்கள் நம்பிக்கை
யில்லாத் தீர்மானம் என்ற வடிவத்திலே கொண்டு வந்திருக்
கிறோம்.

இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் எதைக் காட்டுகிறது?
தோழர் உமாநாத் அவர்கள் அதையெல்லாம் சொன்னார்கள்.
சட்டமன்றத்தில், நாடாளுமன்றத்தில், எல்லாம் எதற்காக இப்
படிப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள் வருகின்றன. மக்க
ளுடைய பிரச்னைகளைச் சொல்லி அரசாங்கத்தை அசைய
வைக்க முடியுமா என்பதற்காகச் செய்யப்படுகின்ற பெருமுயற்சி
கள்தான் அவை.



600 008



ஆகவே, இன்றைக்கு விவசாயிகளுக்குக் கூலிச் சட்டத்தைக்
றாராக அமல் படுத்துகிறார்களா?

அதேபோன்று கை நெசவுத் தொழிலாளர்களுக்கான சட்டம்
நிறைவேற்றப்பட்டிருக்கிறது. 1–5–83 ஆம் தேதியன்று ரெட்
ராஸ்பெக்டிவ் எஃபக்டிவ் கொடுத்து அதன் பயன் கிடைக்கும்
வகையில் தொழிலாளர் நல இலாக்கா ஆணையிட்டுள்ளது.
ஆனால் இன்றைக்கு மூன்றே மூன்று இடங்களில்தான், மதுரை,
கரூர், ஆரணி ஆகிய இடங்களில் மட்டும் போராட்டம் நடத்தி
அங்கு ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதுகூட தற்காலிக
சமரசம்தான், குறைந்த பட்சக் கூலி என்று கூட தீர்மானிக்கப்
படவில்லை. மதுரையில் 20 நாட்கள் வேலை நிறுத்தம்,
கரூரிலே வேலை நிறுத்தம் என்றெல்லாம் நடத்தப்பட்டிருக்
கிறது. ஏழு இலட்சம் கை நெசவுத் தொழிலாளர்கள் இருக்கி
றார்கள். நீங்கள் கொண்டு வந்த கை நெசவுத் தொழிலாளர்
களுக்கான குறைந்தபட்சக் கூலிச் சட்டத்தின் பலன் ஏழு
இலட்சம் தொழிலாளர்களுக்கும் கிடைக்கும் வகையில் இந்தத்
தீர்மானத்தை நாங்கள் இங்கே கொண்டுவந்ததற்குப் பிறகாவது
நீங்கள் முயற்சி செய்வீர்களேயானால் அதற்கு நாங்கள் முழு
ஒத்துழைப்பு கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறோம். அப்படிக்
கிடைத்தால் அவர்கள் ஓரளவுக்கு மூச்சு விடும் நிலைமை
ஏற்படும். இதுதான் வறுமையைப் போக்கும் வழி என்பதைத்
தெரிவித்துக்கொள்கிறேன்.

மாணவர்கள் பிரச்சினையைப் பொறுத்த வரையில் உதவித்
தொகை பெற 90 சதவீதம் வருகை தேவை என்று சொல்கிறீர்
கள். ஆனால் அது ரொம்பக் கஷ்டமானதாக இருக்கிறது, அதை
நிறைவேற்ற முடியவில்லை. ஆகவே, அந்தத் தயவு செய்து
வர்பஸ் வாங்க வேண்டும், முன்பிருந்த நிலைமைக்கே கொண்டு
வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஆசிரியர்கள் பிரச்னை ரொம்பக் கடுமையாக
இருக்கிறது. கல்வியமைச்சர் அவர்களைத் தலைவராகக்
கொண்ட கல்வி ஆலோசனைக் குழுவில் நானும் திரு. அழகர்சாமி
அவர்களும், திரு. இஸ்மாயில் அவர்களும், இன்னும் வேறு பல
ஆசிரியர் பிரதிநிதிகளும் தன்னாட்சிக் கல்லூரிகளை எடுத்து
விடுவோம் என்று சொன்னோம்.

தன்னாட்சிக் கல்லூரி என்ற நிலைமை யாருக்கு? ஏதாவது
ஒரு அரசாங்கக் கல்லூரி தன்னாட்சிக் கல்லூரியாக இருக்கின்றதா
என்றால் கிடையாது. அத்தனையும் பெரிய முதலாளிகள்
நடத்தக்கூடிய கல்லூரிகள். ஆகவே தன்னாட்சிக்
கல்லூரியிலே அவர்கள் ஆட்சிதான் நடக்கின்றதே தவிர
நம்முடைய ஆட்சி நடக்கவில்லை. அங்கே ஆசிரியர்களைப் பழி
வாங்குகின்றார்கள். அவர்கள் வைக்கக்கூடிய பரீட்சையிலே
பாஸ் பண்ணினால் போதும் அதைத்தான் நான் சொன்னேன்
அமைச்சர் அவர்களிடம், இரண்டு ஸ்டாண்டர்டு வருகிறதே என்று,
மற்றக் கல்லூரியிலே படிக்கக்கூடியவர்கள் தேர்வு எழுதியவுடன்

அவர்களுடைய பேப்பரை எங்கெங்கெல்லாமோ மாறி மாறி அனுப்பும் அரசாங்கம். வேறு ஆசிரியர்கள்தான் பரிசோதிப்பார்கள். அப்படிச் செய்வதன் காரணத்தால் அவர்கள் போடக்கூடிய மார்க்குகளும் நிதானமாக இருக்கும் —ஆனால் தன்னாட்சிக் கல்லூரி அப்படி அல்ல. அவர்களே திருத்துவார்கள், அவர்களே மார்க் போடுவார்கள், அப்படி அவர்களுடைய மாணவர்களாக இருந்தாலும் பட்டம் கொடுக்க வேண்டியது மட்டும் அரசாங்கமாம். எப்படி இருக்கின்றது பார்த்தீர்களா ? அவர்களிடத்திலே படித்த பிள்ளைகளுக்கு பல்கலைக்கழகம் பட்டம் கொடுக்க வேண்டுமாம். நமக்கு அவர்களுடைய தகுதி என்ன என்பதெல்லாம் தெரியாது. ஆனாலும் பல்கலைக் கழகம் தான் பட்டம் கொடுக்கும். இது எப்படி நியாயம் என்று நாங்கள் கேட்டோம்.

அதுமட்டுமல்ல. கோவை பி. எஸ். ஜி., கலைக் கல்லூரியிலே ஆசிரியர்களுக்கு இன்க்ரிமென்ட் கட் செய்திருக்கிறார்கள். எதற்காக? ஆசிரியர்கள் பழிவாங்கப்படக்கூடாது என்று சொன்னதற்காக. அதன் பிறகு மேலும் 7 பேருக்கு அவ்வாறு சம்பள உயர்வு கட் செய்யப்பட்டிருக்கின்றது. அப்போது அரசாங்கம் என்ன செய்தது? சம்பள உயர்வை கட் பண்ணினால் அரசு அதிலே தலையிடமாட்டோம் என்று ஒரு ரூலிங் கொடுத்திருக்கிறார்கள், ஏனென்றால் அது ஒரு மைனர் அஃப்பன்ஸ் (minor offence) என்று சொல்லி அவ்வாறு சொல்லி இருக்கிறார்கள். அது கிடைத்ததோ இல்லையோ தெரியவில்லை. ஆனால் இப்போது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் எம். பி. யாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கக் கூடியவர்தான் அதனுடைய நிர்வாகி. அவர் அங்கே வந்ததற்குப் பிறகு டைம்டேபிள்-படி ஆசிரியர்கள் பாடத்தை நடத்தவில்லை என்று கூறி 7 பேருக்கு மீண்டும் சம்பள உயர்வைக் கட் செய்திருக்கிறார்கள். அவர்கள் என்ன, பள்ளிக்கூடத்து ஆசிரியர்களா ? கல்லூரியிலே பணியாற்றுகின்ற பேராசிரியர்கள் டைம் டேபிள்-படி நடக்கவில்லை என்று சொல்லி 7 பேர்களுக்கு மூன்று இன்கிரிமென்டை க்யூமுலேட்டிவ் எஃபக்டோடு வெட்டி இருக்கிறார்கள். அவர்களுடைய சர்வீஸ் முழுவதையும் கணக்கெடுத்தால் ஒவ்வொரு ஆசிரியருக்கும் கிட்டத்தட்ட 30 ஆயிரம் ரூபாய் நஷ்டம். இதைப் பற்றி சிந்தித்துப் பார்க்கவேண்டாமா ?

அடுத்து கோவை ராமகிருஷ்ணா வித்யாலயாவிலே, அவினாசிலிங்கப் செட்டியார் கல்லூரியிலே பி. காம் வகுப்ப மூடப்பட்டது. அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை. அதேபோல் அரசு கல்லூரியின் ஆசிரியர் திரு. நரசிங்கம் என்பவருக்கு தொடர்ந்து மூன்று ஆண்டுகளாக ஊதிய உயர்வு வெட்டு செய்யப்பட்டிருக்கின்றது. அவர் கடலூரிலே வேலை பார்க்கும்போது கல்லூரி காலண்டரை கடலூரிலே அச்சடிப்பதற்குப் பதிலாக பாண்டிச்சேரியிலே அச்சிட்டார் என்பதற்காக அந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. இன்னும் கும்பகோணத்திலே இருக்கும் போது மாணவர்களிடையே கோஷ்டி மோதல் வரும்போது மாணவர் இல்லங்களை மூடியதால் அரசு வாங்கி வைத்திருந்த காய்-கறி நஷ்டமாகி



விட்டதாம். ஆகவே அவருக்கு இன்கிரிமென்ட் கட், இப்படி எல்லாம் செய்வது ஆசிரியர்கள் மத்தியிலே நம்பிக்கையை ஏற்படுத்துமா ?

சென்னை ராணி மேரி கல்லூரியிலே பணியாற்றக்கூடிய பேராசிரியை திருமதி சரஸ்வதி மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்தது. 3 ஆண்டுகளுக்கு முன்னால் பெண்களைப் பற்றிய ஆபாச போஸ்டர் போடக்கூடாது என்று நடந்த ஊர்வலத்தில் அவர்கள் கலந்து கொண்டார்களாம். இது எப்படி இருக்கின்றது ? நாமே வரவேற்கக் கூடிய ஒரு இயக்கம். நாமே ஆதரிக்கவேண்டிய ஒரு இயக்கம். அப்படிப்பட்ட ஒரு இயக்கத்திலே பங்கெடுத்துக் கொண்டார் என்பதற்காக அவர் மீது நடவடிக்கை. யோசிக்க வேண்டாமா ?

அடுத்து எல்லாவற்றுக்கும் சிகரம் வைத்தாற்போல் காரைக்குடி அழகப்பா கல்லூரியின் முதல்வர் செல்வகணபதி என்பவர் முரடர்களை ஏவிவிட்டு 10 –10 —1983 அன்று பேராசிரியர் நந்தகோபால் தாக்கப்பட்டார். நந்தகோபால், பி. வி. கிருஷ்ணமூர்த்தி, ஆர். எம். மாணிக்கம், நாகப்பன் ஆகியோருடைய வீடுகள் தாக்கப்பட்டன. ஆசிரியர்களுடைய உயிருக்கும் ஆபத்து ஏற்பட்டது. அவர்கள் எங்களிடம் வந்து முறையிடுகிறார்கள் இப்படி நடக்கிறது என்று. ஆகவே நாங்கள் சட்டமன்றத்திலே சொல்கிறோம். எனவே அதுபற்றிய உண்மையை ஆராயுங்கள். நடந்தது உண்மை என்றால் கடுமையான நடவடிக்கை எடுங்கள்.

சென்னையிலே ராயப்பேட்டையிலே ஸ்ரீ வெங்டேஸ்வரா மெட்ரிகுலேஷன் பள்ளி இருக்கின்றது —தனியார்கள் பூராவும் இந்தப் பள்ளிப் படிப்பினை ஒரு வியாபாரமாகவே நடத்துகிறார்கள் —அங்கே மூன்று மாத காலமாக ஆசிரியர்கள் போராட்டம் நடைபெறுகின்றது. அதனுடைய நிர்வாகி என்ன செய்கிறார் தெரியுமா ? சம்பளம் கொடுக்கவில்லை. சம்பளப் பதிவேட்டிலே சம்பளத் தொகையைக் கொடுக்காமல் கையொப்பம்; பி. எஃப். பணம் ஏப்பம் ; நியாயம் கேட்ட ஆசிரியர்கள் மீது ரௌடித்தாக்கு ; பூங்காவனம் வேலை நீக்கம் ; 3 பேர் மீது குற்றம் ; இப்படிப்பட்ட பல்வேறு நிலைமைகளைப் பற்றி அந்த ஆசிரியர்கள் நேராக எங்களிடம் கொடுத்திருக்கிறார்கள், இப்போது தர்ணா, உண்ணாவிரதம் எல்லாம் நடக்கின்றது. இதை எல்லாம் எதற்காகச் சொல்கிறேன். அரசாங்கம்தான் பெரும் பகுதியான பணத்தைக் கொடுக்கின்றது. அப்படி இருக்கும்போது எதற்காக இந்தத் தனியார் துறையை விட்டு வைக்கவேண்டும் ?

அதேபோல் சிவகாசியிலே இருக்கக்கூடிய கல்லூரியிலே உள்ள ஆசிரியர்கள் மீதும் தாக்குதல் ஏற்பட்டிருக்கின்றது என்பதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அடுத்து மிக முக்கியமாக நான் கடைசியாகச் சொல்ல வேண்டிய விஷயம் என்னவென்றால் ஊழல்களைப் பற்றித்தான். முதலிலே இப்படி எல்லாம் ஊழல்கள் நடக்கின்றது என்று நம்பவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆரம்பத்தில்

திலே தன்னுடைய கட்சி எம். எல். ஏ., வந்தாலும் கூட அவர்களைப் பார்த்து அதிகமாகப் பேசுவதில்லை என்ற அளவுக்கு இருந்தது. அதனால் பலருக்கு வருத்தம் கூட இருந்தது. எனவே அது ஓரளவிற்குக் கண்டிப்பான நிலை என்று நாங்கள் எல்லாம் நினைத்தோம். ஆனால் படிப்படியாக இப்படி எல்லாம் வந்ததற்குப் பிறகுதான் மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் அதுபற்றி பொறுப்பான முறையிலே சொல்கின்றது. குற்றச்சாட்டுகளைச் சொல்வது என்றால் சில விதிகள் இருக்கின்றன ? ஆகவே குற்றச் சாட்டுக்கு நாங்கள் போக முடியாது. எனவே பொதுவாகவே சொல்கிறேன். நாங்கள் சொல்வதில் உண்மை இருக்கும் என்று மனச்சாட்சிப்படி நீங்கள் நம்பினால் நடவடிக்கை எடுங்கள். உங்களை ஆதரிக்கக்கூடிய பார்வர்டு ப்ளாக் கட்சித் தலைவரே சொன்னார்கள். ஒரு மாவட்டத்திலே நடந்த வேலைக்கு இன்னொரு மாவட்டத்திலே பில் வாங்கி இருக்கின்றார்கள் என்று சொன்னார்கள். திரு. என். எஸ். வி. சித்தன் அவர்கள் பேசும் போதும் தன்னிறைவுத் திட்டத்தைப் பற்றி சொல்லி இருக்கிறார். என்னிடத்திலேயே பல எம். எல். ஏ. க்கள் வந்து சொல்லி இருக்கிறார்கள். வேலைகள் நடக்காமலே வேலைகள் நடந்ததாக பில் போடப்பட்டிருக்கின்றது என்று சொன்னார்கள். இவற்றை எல்லாம் இந்த அரசைக் குறை சொல்ல வேண்டும் என்பதற்காகச் சொல்லவில்லை.

தன்னிறைவுத் திட்டம் நல்ல முறையில் நடக்கவில்லை. அதற்காகச் செலவழிக்கும் பணத்தின் பலன் 25 சதவீதமாவது மக்களுக்குப் போய் கிடைக்கின்றதோ என்னவோ தெரியவில்லை. இடையிலே காண்ட்ராக்டர்கள், அரசாங்கத்திற்கு வேண்டியவர்கள் என்று சொல்லக்கூடியவர்கள், அதிகாரிகளின் ஒரு கூட்டம் இப்படி எல்லாம்இருந்தால் நல்லதா ? எனவே எல்லா மாவட்டங்களிலும் —எங்களை வேண்டாம் —உயர்ந்த அதிகாரிகளைக் கொண்ட, பாரபட்சம் இல்லாமல் நடந்துகொள்கிறவர்கள் என்று நீங்கள் கருதக்கூடிய சில சீனியர் அதிகாரிகளைக் கொண்ட குழுக்களை அமைத்து மாவட்டங்கள் தோறும் தன்னிறைவுத் திட்டத்திற்காகச் செலவழிக்கப்பட்ட பணம் சரியாகச் செலவழிக்கப்பட்டிருக்கின்றதா, க்வான்டிட்டி அண்ட் க்வாலிட்டி ஆஃப் ஒர்க் நடந்திருக்கின்றதா என்பதை எல்லாம் செக் அப் பண்ணச் சொல்லுங்கள். அதற்குப் பிறகாவது அதில் இருக்கக்கூடிய குறைபாடுகளை நீக்குவதற்கு நடவடிக்கை எடுங்கள்.

(முற்பகல் 10—50)

நான் சொல்கிறேன், பொதுப் பணித்துறையில் இருக்கின்ற அதிகாரிகளுக்கு, அரசாங்க ஊழியர்களுக்கு சம்பளம் கொடுக்க வேண்டும், அவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்க வேண்டும். ஆனால் அவர்கள் அதிலே ஊழல் செய்வதற்கு அனுமதிக்கக் கூடாது. உதாரணத்திற்கு ஒன்றை, நான் கேள்விப்பட்டதைச் சொல்கிறேன். உடுமலைப்பேட்டையில் சில ஆயிரம் பொது





ஜனங்களுக்குப் பயன்படும் கக்கூஸ் கட்டப்படுவதாகவும், அதற்காக வரும் சிமெண்ட் மூட்டைகளை சில இன்ஜினியர்கள் அந்த சிமெண்ட் மூட்டை வரும் லாரியையே திருப்பி எங்கோ எடுத்துக் கொண்டு போவதாகவும் சொல்லப்படுகிறது. இதை எப்படி நாம பாதுகாக்கப்போகிறோம். பி. டபிளயூ. டி. யில் இப்படி நடந்தால் கட்டிடங்க்ள் பத்திரமாக இருக்குமா ? பல ஆண்டுகளுக்கு பள்ளிக் கட்டிடங்கள் பத்திரமாக இருக்குமா ? இது உங்களுடைய பிரச்சினை அல்ல, எங்களுடைய பிரச்சினை அல்ல. இந்த நாட்டு மக்களுக்சான பிரச்சினை. ஆகவே, இந்தக் கட்டிடங்களுக்குப் போடவேண்டிய சிமெண்ட் அளவை சரியான முறையில் போடுகிறார்களா என்பதைச் சரிபார்ப்பதற்காக பொது ஜனங்கள் 50 பேரைக் கூப்பிட்டு, பார் இதிலே 10 மூட்டை சிமெண்ட் போடவேண்டும், நாங்கள் போட்டு இருக்கிறோம், என்று அவர்கள் போடுகின்ற நேரத்திலேயே செக் செய்ய வேண்டும். இப்படி பொது மக்களின் துணை கொண்டு, அவர்களின் ஒத்துழைப்பு கொண்டு இந்தப் பணிகளை நாம் செம்மையாகச் செய்ய முடியும் என்று நாங்கள் கருதுகிறோம். இப்படி இவைகள் கவனிக்கப்பட்டால் ஒழிய வேறு வழியில்லை என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

சில கமிஷனர்கள் —தன்னிறைவுத் திட்டத்திற்சான பில்கள் வருகிறபோது, இவைகள் எல்லாம இல்லேயே என்று கையெழுத்து போடமாட்டேன் என்று சொன்னால், அரசாங்கத்திற்கு நெருங்கிய வட்டாரங்களில் இருந்து அவர்களைக் கையெழுத்துப் போடு என்று நெருக்குகிறார்கள். சரிதான் ஐயா. பெரிதாகக் கண்டுவிட்டாய், போடு கையெழுத்து என்று சொல்கிறார்கள். அதற்காக சிலபேர் கையெழுத்துப்போட பயந்து லீவில் கூடச் சென்று இருக்கிறார்கள். அடுத்தாற்போல வருகிறவர் என்ன செய்வார், பிள்ளைக்குட்டிக்காரர், இப்படி ஒரு இன்ஜினீயர் 10 மூட்டை எடுத்துக் கொண்டு, அதற்கு ஒரு ஜூனியர் கையெழுத்துப் போட வேண்டும் என்று சொன்னால், அவர் வேலை போய்விடுமோ என்று பயந்து கையெழுத்துப் போடுவாரா அல்லது அந்த இன்ஜினியரோடு போராடுவாரா ?

இன்றைக்குப் புகார் செய்வதற்கு நாம் வழிவகை செய்து இருக்கிறோமா? ரகசியமாக இப்படி ஊழல்கள் நடக்கின்றன என்று யாராவது மாநில அரசாங்கத்திற்குத் தகவல் கொடுத்தால், அவர்கள் தான் இன்னார் என்று பெயர் கொடுக்கத் தேவையில்லை இன்ன இடத்தில் இப்படி நடக்கிறது என்று சொன்னால் போதும் என்று சொல்லி, அப்படி தகவல் வந்தால் அதன் மீது நடவடிக்கை உடனடியாக எடுக்கும் நிலைமை இருக்கிறதா? நடவடிக்கை எடுப்போம் என்று சொல்லவேண்டும். அப்படி சொல்கிறவர்கள் யார் என்று தெரிய வேண்டிய அவசியம் இல்லை. நடவடிக்கை எடுத்தால் நாமே கண்டுபிடிக்கலாம். ஏனென்றால் அப்படி ஊழல் குற்றவாளிகளை யாரேனும் அம்பலப்படுத்துவார்களானால், அவர் கொலைகூடச் செய்யப்படலாம். அவருடைய உயிருக்கு ஆபத்து ஏற்படலாம். ஆகவே, அப்படிப்பட்ட ஊழல்

[திரு. என். சங்கரய்யா] [1983 நவம்பர் 11

அம்பலப்படுத்துவதற்கு யாராவது முன்வருவார்களானால் அவர் களுக்குப் பாதுகாப்புக் கொடுக்க இந்த அரசாங்கம் வழிவகை செய்ய வேண்டும். ஆகவே, இன்றைக்கு நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த சட்டமன்றத்திலே இருக்கக்கூடியவர்கள் பேரிலே ஏதா வது புகார்கள் வந்தால் அதை ஒரு கமிஷன் போட்டு விசாரிக்க வேண்டும். ஏற்கெனவே இதற்காக ஒரு சட்டம் இருக்கிறது. அவர்களுக்கு இயற்கையாகக் கிடைக்கக்கூடிய வருமானத்திற்கு அதிகமாக யாராவது சட்டமன்ற உறுப்பினர் சொத்து சேர்த் திருப்பார்களேயானால் யாராக இருந்தாலும் அதைப் பற்றி அரசாங்கம் விசாரிக்க வேண்டும். அப்படி அதிகமாக சொத்து சேர்த்திருந்தால் அவர்கள் ஊழல் செய்து அதைச் சேர்த்திருக்கிறார்கள் என்று நிரூபிப்பதற்கு ஒப்பாகும். எதற் காகச் சொல்கிறேன் என்றால், நேற்றைக்குக் கூட ஒரு அமைச்ச ரிடம் பேசிக் கொண்டிருந்தபோது அவர் சொன்னார்—லஞ்சம் எல்லாம் எப்போது இந்த நாட்டில் ஒழியப் போகிறது என்று விரக்தியோடு சொன்னார். அந்த விரக்தி எங்களுக்குக் கிடை யாது. நாமே விரக்தி அடைந்துவிட்டால் யார் அதைக் கட்டுப் படுத்த முடியும், திருத்த முடியும். இதை ஜனங்களுடைய உதவியோடு நாம் போராட முடியும் என்று நாங்கள்கருதுகிறோம். இப்படிப்பட்ட சூழ்நிலை மேற்கு வங்கத்தில் இல்லை. எல்லா வற்றிற்கும் நான் மேற்கு வங்கத்தை ஒப்பிட்டுச் சொல்வதாகக் கருதக்கூடாது. அங்கே இருப்பது ஒரு மாநில அரசுதான். அதற் கென்று தனி அதிகாரம் கிடையாது. ஆனால் இந்த விஷயத்தில் அங்கே உள்ள எம். எல். ஏ.க்களோ அல்லது ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்களோ இந்த மாதிரியான வேலைகளில் ஈடுபடக் கூடாது என்று போட்டிருக்கிறார்கள். அதனால் அங்கே அது வரவில்லை.

ஒரு செய்தி பார்த்தேன். ஹறவுசிங் போர்டு மீது விசாரணை. வாட்டர்போர்டு மீது விசாரணை. பூம்புகார் கழகத்தில் இயக்குநராக இருந்த பிரபலமான ஒருவர் மீது நட வடிக்கை எடுத்து அ.தி.மு.க. கட்சியில் இருந்து விலக்கியிருக் கிறீர்கள். என்ன காரணம்? குடிநீர் வாரியத்தில் பல ஆண்டு களுக்குத் தேவையான பொருள்களை எல்லாம் வாங்கி வைத் திருக்கிறார்கள். ஓவர் ஸ்டாக். இதற்காகத்தான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சொல்கிறது. முதலாளிகள் தங்களுடைய சப்-ஸ்டான்டர்டு பொருள்களை எல்லாம் எப்படியாவது அர சாங்கத்திற்குத் தள்ளிவிடவேண்டும் என்று பார்ப்பார்கள். இத னால்தான் லஞ்சம் உருவாகிறது. அதற்காக அவர்கள் எவ்வளவு பணம் வேண்டுமானாலும் செலவழிக்கத் தயார். ஆகவே தமிழ் நாட்டு மக்களைப் பாதுகாக்க நாங்கள் சொல்கிறோம்.

1977 ஆம் ஆண்டிலிருந்து நாங்கள் இவைகளை எல்லாம் பார்த்துக் கொண்டிருந்துவிட்டு இன்றைக்குத்தான் சொல் கிறோம். அதுவும் பொதுப்படையாகச் சொல்கிறோம். தயவு செய்து இதை விசாரித்துப் பாருங்கள், தக்க நடவடிக்கை எடுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.



1983 நவம்பர் 11] [திரு. என். சங்கரய்யா]

திண்டுக்கல்லில் 'டான்சி கூட்டுறவுத் தொழிற்சாலை' இருக் கிறது. அங்கே சர்வகட்சித் தொழிலாளர்களும் இருக்கிறார்கள் தி.மு.க., அ.தி.மு.க. உள்பட. அவர்களுக்கு வேலையில்லை. அங்கே 35 தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை கொடுக்க முடியாததால் 'லே ஆப்' கொடுத்திருக்கிறார் கள். காரணம் கேட்டால் ஆர்டர் இல்லை என்று சொல்லு கிறார்கள். ஆனால், அங்கே இருக்கும் தொழிலாளர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்றால் அந்த கம்பெனியினுடைய மேனேஜிங் டைரக்டர் அவருடைய சொந்தக்காரர்களை வைத்து இதே மாதிரி ஒரு தொழிற்சாலையை வெளியே வைத்திருக்கிறார், அரசாங்கத்திற்கு வரும் ஆர்டர்களை அங்கே டைவர்ட் செய் கிறார். அதனால் எங்களுக்கு வேலை இல்லை என்று சொல் கிறார்கள். இதைக் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள் கிறேன்.

பல்லாவரத்தில் 'எல்போர்ஜ்' என்ற தொழிற்சாலையை மூடுவதாக நோட்டீஸ் கொடுத்தார்கள். 6–11–1983 முதல் அரசாங்கத்திற்கு நோட்டீஸ் கொடுத்தார்களா? நிரந்தரத் தொழி லாளிகள் 200 பேர்களும், 100 கேசுவல் லேபர்களும் அங்கே இருக்கிறார்கள். இந்த பாக்டரியிலிருந்து இலாபம் சம்பாதித்து ஓசூரில் இரண்டு தொழிற்சாலைகளை நிறுவியவர்கள் இன்றைக்கு இதிலே நஷ்டம் என்று சொல்லி மூடுகிறார்கள். இதைக் குறித்து அரசுக்குத் தகவல் வந்திருக்கிறதா? இதைப் பற்றி அரசாங்கம் கவனிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆகவேதான் இன்றைக்கு இப்படிப்பட்ட சூழ்நிலையில் அர சாங்கம் இந்தப் பிரச்சனையைப் பரிசீலித்து, அரசாங்கம் சம் பந்தப்பட்ட விஷயத்திலே நாங்கள் சொல்லக்கூடியதில் தீவிர நிலச்சீர்திருத்தத்தை வற்புறுத்துகிறோம். அந்தக் கருத்தை நீங்கள் ஏற்றுக்கொண்டால் இந்த நாட்டு மக்களுக்கு அது நல்லது. இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீதான விவாதத்திலே தமிழக மக்களுக்கு இதன்மூலம் நன்மை கிடைத் தால் அதுவே எங்களுக்குத் திருப்தி என்று கூறி முடிக்கிறேன்.

*திரு. எஸ். ஆண்டித்தேவர் : சார், பாயின்ட் ஆஃப் ஆர்டர். திரு. சங்கரய்யா அவர்கள் என்னைப்பற்றிக் குறிப் பிட்டதால் அவர்களுக்கு நான் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது. இடையிலே குறுக்கிட வேண்டாம் என்று கேட்டுக்கொண்டதால் இப்போது என்னைப் பேச அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவர் பேசிய தற்கு எல்லாம் நீங்கள் பதில் சொல்ல முடியாது. உங்களைப் பற்றி ஏதாவது சொல்லியிருந்தால் அதற்கு மட்டும் கிளாரி பிகேஷன் என்ற முறையில் சுருக்கமாகச் சொல்லுங்கள்.

திரு. எஸ். ஆண்டித்தேவர் : துணைத் தலைவரவர்களே, அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியின் சார்பாகப் பேசியது துரதிர்ஷ்டவசமானது என்று கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்

பேசும்போது சொன்னார்கள். நேற்றே நான் பேசும்போது குறுக்கிட்டபோது கூட நான் சொன்னதை அவர்கள் மறுக்கவில்லை. மறுபடியும் இன்று பேசுகிறார்கள். அண்ணா தி.மு.க. அரசின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவந்து, அண்ணா தி.மு. கழகம் சென்ற ஆண்டு வரையில் எதேச்சாதிகாரத்தை எதிர்த்துவிட்டு, இப்போது முதலமைச்சர் தடம் புரண்டுவிட்டார் என்று சொன்னார். அமைச்சர் காளிமுத்து அவர்கள் சொன்னதைப்போன்று பேசினார்கள். நான் அதற்குப் பதிலாகச் சொல்லும்போது அண்ணா தி.மு. கழகம் தடம் புரளவில்லை; வாடிய பூ மணக்காது, சருவாடு மீனாகாது என்று குற்றஞ்சாட்டி உமாநாத் பேசினார்கள். அவர்கள் அந்தக் கருத்திலிருந்து இன்னும் மாறுபடவில்லை. முதலமைச்சர் அவர்கள் அதை ஏற்றுக்கொண்டார்கள். என் அனுமதியோடுதான் பேசினார்கள் என்று அவர்கள் தெளிவாகச் சொல்லிவிட்டார்கள். ஆகவே, அண்ணா தி.மு. கழகம் தடம் புரளவில்லை. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிதான் தடம் புரண்டு விட்டது. அதற்கு உதாரணமாக நுழைவு வரியை எதிர்க்கும்போது திராவிட முன்னேற்றக் கழக அழைப்பை ஏற்று பாண்டிச்சேரியிலே இந்திரா அரசு ஆதரவுடன் அமைச்சரவை இருக்கும்போது அவர்கள் ஆதரித்தார்கள் என்று சொன்னேன். (குறுக்கீடு) அதற்கு அவர்கள் மறுப்பு தெரிவிக்கவில்லை. இந்திரா காங்கிரஸ் ஆதரவோடு இருக்கும்போது அவர்கள் எதேச்சாதிகார சக்திக்குத் துணை போனார்கள் என்று சொல்வது மட்டுமல்ல; இப்போது என்மீது குற்றச்சாட்டுச் சொல்லியிருக்கிறார்கள். வங்காளத்திலே இருக்கிற எங்கள் கட்சிப் பொதுச் செயலாளர் சிட்டாபாஸ் அவர்கள் காஷ்மீர் மாநாட்டுக்குச் சென்றார்கள்; இங்கே இருக்கிற அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சி அதற்கு மாறுபட்டு நடக்கிறது என்று சொன்னார்கள்.

அவர்களிடம் நான் ஒன்றைத் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். பெரியகுளம் தேர்தலிலே போட்டியிடும்போது அவர்கள் எங்களிடம் கேட்கும்போது, திராவிட முன்னேற்றக் கழகமும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் இங்கே மிதவாதப் போக்கைக் கொண்டிருக்கின்றன; அவர்களை எதிர்க்க வேண்டும் என்று சொல்லுகின்றபோது நான் திரு. சங்கரய்யா அவர்களை நேரடியாகவே கேட்டிருக்கிறேன். வங்காளத்தில் இருப்பதுபோல் இடதுசாரி முன்னணி அமைக்க நீங்கள் தயாரா? தொடர்ந்து பதவிக்கு வந்தாலும் வராவிட்டாலும் இந்த இரண்டு சக்திகளும் தமிழ்நாட்டில் இருக்கும் வரையில், 100 ஆண்டுக் காலமானாலும் போராட நீங்கள் தயாரா? தேர்தல் வரும்போது இராமாவரத்திற்கோ, கோபாலபுரத்திற்கோ போகக்கூடாது என்று சொன்னேன். அதற்கு உத்தரவாதம் கொடுக்க முடியுமா என்று கேட்டபோது அது முடியாது, வருகின்ற காலத்திற்கு ஒப்பந்தம் செய்ய முடியாது, அரசியல் நிலை அப்படி என்று சொன்னார்கள்.



அதன் பிறகு இராமமூர்த்திக்கு ஓட்டு கேட்கும்போது கூட நாங்கள் போட முடியாது; ஏனென்றால் நீங்கள் கூட்டு வைத்திருக்கிற இடம் வேறு, நாங்கள் கூட்டு வைத்திருக்கிற இடம் வேறு, எப்படி போட முடியும் என்று கேட்டேன். அப்போது அவர்கள் எங்கள் பொதுச்செயலாளர் சிட்டாபாஸ் அவர்களைக் கேட்கிறோம்; அவர்கள் ஏற்றுக்கொண்டால் இராமமூர்த்திக்கு ஓட்டுப் போடுவீர்களா என்று கேட்டபோது, அவர்கள் ஏற்றுக் கொண்டால் போடுகிறோம் என்று சொன்னேன். அவர்களைக் கேட்டபோது, வங்காளத்தில் அமைக்கப்பட்டிருப்பது கூட்டணி, ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டில் அதைப் போன்று இல்லை. ஆகவே தமிழ்நாட்டில் பார்வர்டு பிளாக் கட்சி எடுத்த முடிவில் நாங்கள் தலையிட முடியாது என்று சொல்லி விட்டார்கள். வங்காளத்தில் இருப்பதைப் போன்று ஒரு கூட்டணி அமைக்க இடதுசாரி கட்சிகள் தயாரா? அவர்கள் அப்படி இல்லாதபோது தாங்கள் இருக்கிற இடம் மட்டும் இடதுசாரி கட்சிகள் என்று பட்டம் சூட்டிக்கொள்வது நியாயமில்லை. அண்ணா தி.மு.க. வுடன் இருந்தால் அவர்கள் இடதுசாரி; அவர்களை விட்டு வெளியேறிவிட்டால் அண்ணா தி.மு.க. வலதுசாரி என்ற அந்தக் கொள்கையை நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது.

தமிழ்நாட்டிலே இருக்கிற பார்வர்டு பிளாக் கட்சி காங்கிரஸ் கட்சியை எதிர்ப்பதிலே, நேதாஜி ஆரம்பித்த 1939 ஆம் ஆண்டிலிருந்து 1983 வரையில் தொடர்ந்து இருந்து வந்திருக்கிறது. என்றும் அந்த நிலையியிலிருந்து மாறியதில்லை என்று கூறிக்கொள்கிறேன்.

திரு. என். சங்கரய்யா : துணைத் தலைவரவர்களே, அதற்குப் பதில் சொல்கிறேன். இடதுசாரி முன்னணி அமைக்க தாயாரா என்று கேட்கிறார்கள். இடதுசாரி கூட்டு இயக்கத்திலே வருவதற்குத் தயாராக இல்லாத அவர் இடதுசாரி முன்னணி அமைப்பது பற்றி கற்பனை பண்ணுவதா? முதலிலே கூட்டு இயக்கத்தில் வந்து போராடி, அதன் அடிப்படையில்தானே ஒரு அணி அமைக்க முடியும். அதற்கு அவர் தயாராக இல்லை என்பது ஒன்று.

(முற்பகல் 11-00)

இரண்டாவது நாங்கள் இராமாவரத்துக்கோ, கோபாலபுரத்துக்கோ அடிமைப்பட்டவர்கள் அல்ல. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி இன்றைக்கு இந்தியாவிலேயே காங்கிரசுக்கு அடுத்தபடியாக இரண்டு மாநில அரசுகளை நடத்திக்கொண்டு வந்திருக்கிறது. இப்போதும் நடத்திக்கொண்டு வருகிறது. இன்றைக்கும் கூறுகிறோம், கோபாலபுரமும், இராமாவரமும் எங்களை, இந்திரா காங்கிரசை எதிர்ப்பதற்கு அழைத்தால், அவர்களோடு சேர்ந்து போராட, எதிர்க்க வருவோம். இதுதான் எங்களுடைய கொள்கை. 1967-லே மாண்புமிகு அண்ணாதுரை அவர்கள் காங்கிரஸ் ஆட்சியை மாற்று

வதற்காக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியை அழைத்தார். 1971-லே காங்கிரஸ் கட்சியோடு தி.மு.க. போனதனால் மார்க்சிஸ்ட் கட்சி போகவில்லை. 1977-லே அண்ணா தி.மு.க. காங்கிரசை ஆதரித்தது. பாராளுமன்றத் தேர்தலிலே நாங்கள் போகவில்லை. சட்டசபை தேர்தலுக்கு வந்தோம். 1980-லே சட்டமன்றத்திற்கு வந்தோம். நாளைக்கு என்ன என்பது வேறு விஷயம். . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கட்சி விவரங்களை எல்லாம் வெளியே பேசவேண்டும். அவற்றை எல்லாம் இங்கே பேசவேண்டியது அவசியம் இல்லை.

திரு என். சங்கரய்யா: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாங்கள் கூற விரும்புகிறோம். இந்தத் தேர்தல் பற்றியும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி எந்த முடிவுக்கும் வரவில்லை. இப்போது நடைபெறுவது பொது இனங்களுடைய பிரச்சினைகளுக்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய சில கட்சிகள் சேர்ந்து நடத்தக் கூடிய கூட்டு இயக்கம். உதாரணமாக இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் தாக்கல் செய்யப்பட்ட பிறகு, கிரெனடாவில் அமெரிக்க ஏகாதிபத்தியம் தாக்குதல் நடத்தியதை எதிர்த்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கூட்டம் நடத்தியது. இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் தாக்கல் செய்யப்பட்ட பிறகு, திரு ப. உ. ச. அவர்களை அணுகி உங்களுடைய கட்சியின் பிரதிநிதியை அனுப்புங்கள் என்று கேட்டோம். (குறுக்கீடு). இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் தாக்கல் செய்யப்பட்ட பிறகுதான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை, கிரெனடா மீது அமெரிக்க ஏகாதிபத்தியம் செய்த தாக்குதலைக் கண்டிப்பதற்காக வாருங்கள் என்று அழைத்தோம். திரு. மணிமாறனை அவர்கள் அனுப்பினார்கள். திரு. மணிமாறன் அவர்களும் நல்லசிவன் அவர்களும், திரு. நெடுமாறன் அவர்களும் நாங்களும் பேசினோம். இதை எதற்சாகச் சொல்லுகிறேன் என்றால், பிரச்சினைக்குப் பிரச்சினை ஒரு நிலையை எடுக்கிறோம், அதுதான். ஆகவே மாண்புமிகு பார்வர்டு பிளாக் தலைவர் இதைப் புரிந்து கொள்ள வேண்டும் விற்பனை வரியிலே எதிர்த்தோம் என்றால் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்தபோது என்றார். இன்றைக்கும் சொல்லுகிறேன். பார்வர்டு பிளாக்குக்கு என்ன கொள்கை இருந்தாலும்கூட, இந்த இயக்கத்தில் வரத் தயாராக இருந்தால் நாங்கள் சேர்ப்பதற்குத் தயாராக இருக்கிறோம். தேர்தலைப்பற்றி எந்த முடிவையும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி எடுக்கவில்லை. ஆகவே அதைப்பற்றி வேண்டாம். இப்போது இருப்பதெல்லாம் கூட்டு இயக்கம்தான். இன்றைக்கும் சொல்கிறேன். திரு. இராமமூர்த்திக்கு ஓட்டுப் போடவேண்டும் என்றுதான் அவருடைய அகில இந்திய கட்சி விரும்பியது. ஆனால் துரதிருஷ்ட வசமாக



மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் : கட்சி விவகாரங்களை இங்கே பேசிக் கொண்டிருந்தால் நாம் எப்படி இங்கே தீர்ப்பு கொடுக்கப் போகிறோம். அதைப்பற்றி இப்போது பேசி என்ன? பயன். தேர்தல் ஏற்கனவே முடிந்துவிட்டது. மீண்டும் தேர்தல் வரும்போது பேசலாம்.

திரு. என். சங்கரய்யா: ராமமூர்த்தி அவர்களை ஆதரிக்க வேண்டும் என்றுதான் அகில இந்திய பார்வர்டு பிளாக் தலைமை எங்களிடத்தில் சொல்லியது. ஆனால் அவர்களால் தமிழ்நாட்டில் இருக்கின்ற அவர் நண்பர்களை ஒருமைப்படுத்த முடியவில்லை என்பது துரதிருஷ்டவசமானது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கட்சிப் பிரச்சினையைப் பேசுவதற்காக சட்டமன்றம் இல்லை. மக்கள் பிரச்சினையைத்தான் பேசவேண்டும். உங்களுடைய பிரச்சினைகளை வெளியிலே பேசிக்கொள்ள வேண்டியதுதான். (குறுக்கீடு) கட்சி விவகாரம் பேசுவதற்கா நாம் சட்டசபை வைத்திருக்கிறோம்? நம்முடைய உறுப்பினர் சங்கரய்யா சொன்னதைப் போல மக்கள் பிரச்சினையைப் பற்றித்தான் பேசவேண்டும். மக்கள் பிரச்சினையைப் பேசுவதற்குத்தான் நாம் இங்கு இருக்கிறோம், கட்சி பிரச்சினையை கட்சி ஆபீசில் வைத்துக் கொள்ளுங்கள்.

திரு. எஸ். ஆண்டித்தேவர்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அகில இந்திய பார்வார்டு பிளாக் கட்சி, எங்களது அகில இந்திய பொதுச் செயலாளர், திரு. இராமமூர்த்தியை ஆதரிப்பதாகவும், தமிழகத்திலே இருக்கின்ற எங்களது கட்சி, எங்களது இயக்கத்தை ஒற்றுமைப்படுத்த முடியவில்லை என்றும் ஒரு பெரிய குற்றச்சாட்டைச் சொன்னார்கள். எங்களுடைய பொதுச் செயலாளரே நேரிடையாக திரு. இராமமூர்த்தியிடம் சொல்லி விட்டார்கள். நாங்கள் வங்காளத்திலே அமைத்து இருப்பது Front. அதுபோன்று தமிழகத்திலே இல்லை. அவர்கள் அண்ணா தி.மு.கவை ஆதரிக்கிறார்கள். அண்ணா தி.மு. கழகம் காங்கிரசை ஆதரிக்கவில்லை. ஆகவே தி.மு. கழகமும், அண்ணா தி.மு. கழகமும் ஜனநாயக சக்திகள் என்று ஒத்துக்கொள்ளப்பட்டது. ஆனால் அண்ணா தி.மு. கழகம் அவர்களை ஆதரித்தது சரி, அவர்களிடம் நாங்கள் சொல்ல முடியாது என்று சொன்னார்கள் ஆகவே எங்களுக்குள்ளே முரண்பாடு, மத்திக்கும் மாநிலத்திற்கும் இருப்பதாக அவர்கள் சொல்வது தவறு என்று கூறுகிறேன். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இரண்டு பேரும் பேசிக் கொண்டிருந்தால் இதிலே முடிவு வராது. இந்தப் பிரச்சினையை இத்தோடு முடித்துவிடுவோம். தேர்தல்

வரும்போது கூட்டைப் பற்றி பேசுங்கள். இதற்கு சட்ட சபையைப் பயன்படுத்தவேண்டாம். (குறுக்கீடுகள்) அடுத்து உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பேசுவார்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு மன்றத்தின் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச் சந்திரன் அவர்கள் தலைமையில் செயல்படும் அமைச்சரவை மீது இப்பேரவை நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கின்றது என்ற தீர்மானத்தை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் துணைத் தலைவர் மாண்புமிகு உமாநாத் அவர்கள் முன் மொழிந்த தீர்மானத்தை நான் வழிமொழிந்து, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே என்னுடைய பேச்சை துவக்குகிறேன். இந்தத் தீர்மானத்தை எடுக்கவேண்டுமென்று மன்றத்திலே கோரிய சமயத்திலே திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே எழுந்து நின்று அதை நான் செகண்ட் பண்ணுகிறேன் என்ற ஆங்கிலத்திலே சொன்னேன். அது ஏதோ ஒரு மாபெரும் தவறை நான் செய்து விட்டதாகவும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கொண்டு வந்த தீர்மானத்தை முன்னேற்றக்கழகத்தை சேர்ந்தவர்கள் இப்படி ஆதரிக்கலாமா என்று மன்றத்திலே பல உறுப்பினர்கள் ஐயப்பாடுகளை கிளப்பினார்கள். நான் கூறுவதெல்லாம் திராவிட முன் னேற்றக்கழகத்தின் சார்பிலே நாங்கள் ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறோம். மற்றவர்களும் கொடுத்திருக்கிறார்கள். முதலாவது தீர்மானமாக மாண்பு
மிகு உறுப்பினர் உமாநாத் அவர்களுடைய தீர்மானம் தாக்கல்
செய்யப்பட்ட காரணத்தால் அந்த தீர்மானத்தை எடுத்து
விவாதிப்பதன் மூலமாக எல்லாத் தீர்மானமும் விவாதத்திலே
கலந்துகொள்கின்றது என்ற அடிப்படையிலேதான் நாங்கள்
அன்றையதினம் இந்தத் தீர்மானத்தை வழிமொழிந்தோம்.
இதை ஆதரிப்பது ஏதோ தவறு செய்துவிட்டோம் என்று மற்ற
நண்பர்கள் நினைப்பதுதான் தவறு. இது எங்களுடைய
கடமை. நாங்கள் இதை ஆதரிக்காத நிலை ஏற்பட்டு
இருக்குமானால் அதுதான் தவறாகுமே தவிர, ஆதரித்தது
எந்தவிதத்திலேயும் பொறுத்தமற்றது அல்ல என்பதை நான்
கூறிக்கொள்ள விரும்புகிறேன். மன்றத்திலே பல நாட்க
களாக நடைபெறுகின்ற இந்த விவாதத்தில் பல்வேறுபட்ட
உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைக் கூறினார்கள்.
பல குற்றச்சாட்டுக்களைக் கூறினார்கள். இந்த அமைச்சரவை
சரியாக செயல்படவில்லை. இந்த அமைச்சரவையின் பேரிலே
நம்பிக்கையில்லை என்று கூறுவதற்கான காரண காரியங்களை
எல்லாம் முதலிலே பேசிய என்னுடைய அருமை நண்பர்
உமாநாத் அவர்களும், அவருக்குப் பிறகு பேசிய பல நண்பர்
களும் தெளிவாகப் பேசியிருக்கிறார்கள். இன்றையதினம்
தமிழ்நாட்டில் இருக்கின்ற நிலைமை வேறு. அதோடு மட்டு
மல்ல, இன்றையதினமே பார்த்தோம். இன்றையதினம்
அண்ணா தி,மு,கழகம் ஆட்சிப் பொறுப்புக்கு வருவதற்கு





மூலகாரணமாக இருந்தவர்கள் நாங்கள், என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினரும், அதேபோல் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினரும் இந்த தீர்மானத்தில் பேசிய மற்றுமுள்ள கட்சியினரும் நாங்கள் ஆதரவு கொடுத்து நீங்கள் வந்தீர்கள் என்று சொன்னவர்கள்தான் இன்றையதினம் இந்த அமைச்சரவை மீது நம்பிக்கையில்லை என்று பேசக்கூடிய நிலைமையை நான் பார்க்கிறேன்.

[முற்பகல் 11–10.]

ஆக, அந்தக் கட்சிகள் இன்றையதினம் உங்களை நம்பவில்லை. அதுதான் இன்றையதினம் இருக்கக்கூடிய நிலைமை. புரட்சித் தலைவர் அவர்கள், 1971-லே திராவிட முன்னேற்றக் கழகத் திலேயிருந்து பிரிந்த சமயத்தில்—(குறுக்கீடு) 1972-லேயிருந்து பிரிந்த சமயத்திலே, 'எங்களுடைய ஆதரவின் காரணமாக, நாங்கள் எல்லோரும் ஒன்றாக, ஒரே கட்சியில் இருந்ததன் காரண மாக அல்லவா, இந்த ஆட்சி அமைந்தது. இந்தக் கட்சியிலே இரு வேறு கூறாகப் பிரிக்கப்பட்டு விட்டது. ஆகையினால் நீங்கள் எல்லாம் மக்களுடைய நம்பிக்கையை இழந்து விட்டீர்கள், ஆகை யால் நீங்கள் ராஜினாமா செய்யுங்கள்' என்று அன்றைய தினம் ஊர்வலமாக வந்து கேட்டார்கள். ஆனால் இன்றைய தினம் அவ்வாறாக உங்களுடைய வீட்டிற்கோ, அமைச்சர்களுடைய வீட் டிற்கோ வந்து நீங்கள் ராஜினாமா செய்யுங்கள், மக்கள் மத்தி யிலே உங்களுக்கு ஆதரவு குறைந்து விட்டது என்று நாங்கள் சொல்லவரவில்லை. இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், இருக்கக்கூடிய நிலைமை, அன்றைய நிலைமையிலிருந்து சற்று மாறுபட்டு இருக்கிறது. இது நல்லவிதமான மாறுதலா அல்லவா என்று போக போகத்தான் தெரியும். ஆகவேதான், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே இந்த தீர்மானத்தை நாங்கள் ஆதரித்துப் பேசுகிறோம்.

இன்றையதினம் விவசாயிகள், மாணவர்கள், பொதுமக்கள், இன்னும் பல்வேறுபட்ட மக்களும், இந்த அமைச்சரவையின் பேரிலே நம்பிக்கையை இழந்து விட்டிருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் சட்டமன்றத்திலே வந்து சொல்ல முடியாது. சட்ட மன்றத்திலே வந்து சொல்ல முடியாத காரணத்தால்தான் தோழர் உமாநாத் அவர்கள் மூலமாக சொல்கிறார்கள். தோழர் அழகர் சாமி அவர்கள் மூலமாகச் சொல்கிறார்கள். எங்கள் மூலமாகச் சொல்கிறார்கள். இதுதான் இன்றையதினம் இருக்கக் கூடிய பிரச்னை. பல்வேறுபட்ட நண்பர்கள் இங்கே பேசினார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம், எல்லாக் கல்லூரிகளிலும் நடைபெற்ற சம்பவங்கள் குறித்துப் பேசியிருக்கிறார்கள். மருத்து வக் கல்லூரி தேர்விலே, என்ஜினீயரிங் கல்லூரி தேர்விலே, சட்டக் கல்லூரி தேர்விலே, அதேபோல மற்றக் கல்லூரித் தேர்வுகளிலே நடைபெற்ற பல ஊழல்களை எடுத்து, பல உறுப்பினர்கள் கூறி யிருக்கிறார்கள். இதிலே இன்றையதினம் உள்ள லேட்டஸ்ட் ஸ்கோர்-மெடிகல் ரிட்பெட்டிஷன்களைப் பொறுத்தவரையில்

என்னவென்று கேட்டால், கடைசியாக எனக்குக் கிடைத்த தகவலின் படி, பத்திரிகைகளிலே வந்த தகவலின்படி 145 ரிட் பெட்டிஷன்கள், மாணவர்களால் அல்லது மாணவர்களுடைய பெற்றோர்களால் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றன என்பது. மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, என்னிடத்திலே சொன்னார்கள். என்னுடைய உறவினர் பிள்ளைக்கே கிடைக்கவில்லை என்று. அவர்களுக்கே இந்த நிலை என்றால் (மணியடிக்கப்பெற்றது).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மார்க் குறைவாக இருந்ததினால் கிடைக்கவில்லை என்று சொன்னேன்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி :** ரொம்ப நன்றி. உங்களுடைய உறவினரின் பிள்ளையை விடக் குறைவாக மார்க் இருக்கக் கூடியவர்களுக்கெல்லாம், தேர்வு செய்யப்பட்டிருக்கிறதே, அதுதான் முறையா என்று கேட்கிறேன்.

இதிலே லேட்டஸ்ட் ஸ்கோர் என்னவென்றால் 145 ரிட் பெட்டிஷன்கள். அதிலே 113 இடங்களை ஒதுக்க வேண்டும் என்று உயர் நீதிமன்றத்திலே சொல்லியிருக்கிறார்கள். இடம் இருக்கிறதோ, இல்லையோ அது வேறு விஷயம். ஆனால் கிரிக்கெட்டிலே ஸ்கோர் ஏறுவதை போர்டிலே போடுவார்களே, அதைப் பார்ப்பது மாதிரி இருக்கிறது, இந்த ரிட் பெட்டிஷன்களின் எண்ணிக்கை, சுனில் கவாஸ்கர் 23 சென்சுரி அடித்திருப்பதாகச் சொல்கிறார்கள். (குறுக்கீடு) நன்றி, 29 சென்சுரி அடித்திருப்பதாகச் சொல்கிறார்கள். இந்த மாநிலத்திலே இருக்கக்கூடிய அமைச்சரவையின்பேரிலே, மக்களுடைய அவையின் பேரிலே, ' அவர்கள் தேர்தெடுத்த பட்டியலிலே ஊழல் இருக்கிறது ' என்று ஏறக்குறைய 145 பேர்கள் நம்பிக்கையை இழந்து கோர்ட்டுக்கு போயிருக்கிறார்கள் என்றால் அது சாதாரணமான காரியம் அல்ல. அதிலும் பல பேர்களுக்கு பணம் இல்லை. பணம் இருந்தால் போயிருப்பார்கள். பணம் இல்லாத காரணத்தால், பல பெற்றோர்கள் நீதிமன்றத்தை நாடவில்லை.

அத்தோடு மட்டும் அல்லாமல், இந்த மருத்துவக் கல்லூரிகளிலே கொஞ்சம் திறமைசாலிகளையும் பார்த்து நுழைப்பது நல்லது. ஏனென்றால், நோயாளிகளாக உள்ளே போகக்கூடியவர்கள், நலமடைந்து, உயிரோடு வெளியே திரும்பி வரவேண்டும். அதற்காகவாவது கொஞ்சம் திறமைசாலிகளாகப் பார்த்து உள்ளே அனுப்பக்கூடிய வழி முறைகள் ஏதாவது இருக்குமானால், அதைச் செய்ய வேண்டும். அப்போதுதான், அது என்ஜீனியரிங் கல்லூரியாக இருக்கட்டும், சட்ட கல்லூரியாக இருக்கட்டும், அல்லது மருத்துவக் கல்லூரியாக இருக்கட்டும், அது வரவேற்கத் தகுந்ததாக இருக்கும். ஆனால் இன்றைய தினம் இருக்கக்கூடிய நிலைமைகள் வேறு. இருந்த மருத்துவக் கல்லூரியிலோ, அல்லது என்ஜீனியரிங் கல்லூரியிலோ, இன்டர்வியூ மார்க் என்று ஒன்றை வைத்திருக்கிறார்கள். அக்ரிகேட் மார்க 200-க்கு 120 மினிமம் வைத்து, இன்டர்வியூவில் மார்க் 30



என்று வைத்திருக்கிறார்கள். இந்த 30 மார்க்கிலே பிளே பண்ணக்கூடியதுதான் ரொம்ப பிளக்சிபிளிட்டியாக (Flexibility) வேண்டியவர்களுக்கு அதிகமாக, வேண்டாதவர்களைக் கீழே தள்ளி, நல்லவர்களைக் கீழே தள்ளி, பொல்லாதவர்களை மேலே கொண்டுபோய் இப்படிச் செய்வதன் காரணமாகத்தான் இந்த நிலைமைகள் வந்திருக்கின்றன என்பதை நான் தெள்ளத் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். இந்த இன்டர்வியூ மார்க்குகளை டேப்ரெக்கார்ட் செய்திருப்பதாக நான் கேள்விப்படுகிறேன். மருத்துவக் கல்லூரி, எஞ்சினியரிங் கல்லூரி இண்டர்வியூ மார்க்குகளை டேப் ரெக்கார்ட் செய்திருப்பதாக நான் கேள்விப்படுகிறேன். வேறு ஒன்றும் வேண்டாம். ஊழலை ஒழிக்கவும் உண்மையானவர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்ற முறை பின்பற்றப்பட வேண்டுமானால், அரசாங்கமே முன்வந்து செய்யலாம், செய்யமுடியுமோ என்னவோ தெரியாது, காரணம் என்னவென்றால் மாணவர்களை சேர்த்தாகிவிட்டது அவர்களை வீட்டுக்கு அனுப்பமுடியுமா என்று தெரியவில்லை. இண்டர்வியூக்கு டேப்ரெக்கார்டர் வைக்கப்பட்டது. ஒரு குறிப்பிட்ட 80 சதவீதத்திற்கு மேல் மார்க் வாங்கியவர்கள் இண்டர்வியூவிலே தேர்ந்து எடுக்கப்பட்டவர்கள், தேர்ந்தெடுக்கப்படாதவர்கள் - இண்டர்வியூ மாணவர்களுடைய ஊர், பெயர், நம்பர் மட்டும் சொல்லலாம் ; எக்ஸ்பர்ட் டாக்டர்களையோ எஞ்சினீயர்களையோ கொண்டுவந்து அவர்களை வைத்து - அந்த இண்டர்வியூவில் கேட்ட கேள்விகளுக்கு எத்தனை மார்க்குகள் வந்து இருக்கின்றன என்று அவர்கள் முடிவு செய்வார்கள் என்று வைத்தால் நான் நிச்சயமாகச் சொல்வேன், ஒரு ஆயிரம் மாணவர்கள் மருத்துவக் கல்லூரியிலே சேர்ந்திருக்கிறார்கள் என்றால் அந்த ஆயிரம் மாணவர்களிலே குறைந்த பட்சம் 500 மாணவர்களை வெளியே தள்ளக்கூடிய நிலையும், 500 வெளியே இருக்கக்கூடிய மாணவர்களை உள்ளே சேர்க்கக்கூடிய நிலைமையும் இருக்கும். பிரத்யட்சமாக எஞ்சினியரிங் கல்லூரியில் உள்ள நிலைமையும் அதுவாகத்தான் இருக்கும். அதேதான் மற்ற இடங்களிலும். இவைகள் எல்லாம் ஊழல் இல்லையா ? என்று நீங்கள் ஒரு கணம் சிந்தித்துப் பார்க்கவேண்டும்மென்று நான் கேட்டுக்கொள்கிறேன். தமிழ்நாட்டிலே இந்த மாணவர்கள் எல்லாம் இந்த மாணவர்களுடைய பெற்றோர்கள் எல்லாம் இந்த அரசாங்கத்தை நம்பினார்கள். நம்பி நியாயம் கிடைக்கும் என்று எதிர்பார்த்தார்கள். நியாயம் கிடைக்கவில்லை. கானல் நீர் என்று எண்ணி கடுவழி திரியும் மான்போல இவர்களை நம்பி கெட்டுவிட்டார்களே என்ற நிலையை நான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே சொல்லி குற்றஞ்சுமத்த விரும்புகிறேன்.

இரண்டாவதாக கிராமங்களிலே உள்ள நிலை. என்னுடைய அருமை சகோதரர் திரு. அழகர்சாமி கிராமத்திலே ஒரு விவசாயி. அவர் சொன்னார். இன்றைய தினம் என்ன நிலைமை இருக்கிறது ? பத்திரிகையிலே போட்டார்கள். என்ன போட்டார்கள் ? இந்த வருடம் தீபாவளி தமிழ்நாட்டில் சரியாக

இல்லை, பட்டாசு சத்தம் கேட்கவில்லை, எங்கும் துணிமணிக்
கடைகளில் கும்பல் இல்லை, மளிகைக் கடைகளில் கும்பல்
இல்லை, தீபாவளியை மக்களால் கொண்டாட முடியவில்லை,
என்ன காரணம்? இன்றைய தினம் கிராமங்களிலே உள்ள
நிலைமை, அவர்கள் எல்லாம் வறுமையிலே வாடி ஒரு பக்கம்
அவர்களுடைய பணம் சாராயக் கடைக்குப் போகிறது, இன்
னொரு பக்கத்திலே சினிமாக் கொட்டகைக்குப் போகிறது, இன்
னொரு பக்கத்திலே லாட்டரி டிக்கட்டுகள் வாங்குவதிலே அவர்
களுடைய பணம் போகிறது. இன்னொரு பக்கத்திலே அவர்
களுடைய பிள்ளைகளுக்கு வேலை வாங்குவதற்கு பல பேர்களிடத்
திலே ஆயிரம் இரண்டாயிரம் என்று கொடுத்து அழுதுவிட்டிருக்
கிறார்கள். ஆகவே இன்றைய தினம் கிராமங்கள் அழிந்து
கொண்டிருக்கின்றன. நம்முடைய புரட்சித் தலைவர் முதல்வர்
அவர்கள் எம்.ஜி.ஆர். அவர்கள் மதிய உணவுத் திட்டத்தைக்
கொண்டுவந்திருக்கிறார்களே அந்தப்பிள்ளைகள் வாங்கிக்
கொண்டுவந்து கொடுக்கக் கூடிய சோற்றை அங்கே இருக்கக்
கூடிய தகப்பனும் தாயும் தின்று ஜீவித்து உயிர்வாழக் கூடிய
நிலைமைக்கு தமிழ்நாடு தள்ளப்பட்டிருக்கிறது என்றால் இது
வெல்லாம் மகிழ்ச்சிக்குரிய காரியமா என்று உங்களை நான்
கேட்க விரும்புகிறேன்.

இன்னொன்றையும் நான் கேட்க விரும்புகிறேன். நாவலர்
அவர்கள் சென்ற ஆண்டிலே பட்ஜெட்டின்போது சொன்னார்கள்,
ஒவ்வொரு கார்டுக்கும் 20 கிலோ அரிசி கொடுக்கப்படுகிறது
என்று. நான் அப்போதும் எங்கள் தலைவர் டாக்டர் கலைஞர்
மூலமாக எடுத்துச் சொன்னேன், எங்கள் நெல்லிக்குப்பம் நகரத்
திலேயே இரண்டு கிலோ கூட 15 நாட்களுக்குக் கொடுக்கவில்லை
என்று சொன்னேன். உடனடியாக அந்தக் கலெக்டரோடு
தொலைபேசியில் டெலக்ஸில் தொடர்புகொண்டு அவர்களும்
சரி ஆம், அப்படித்தான் நடைபெறுகிறது என்று சொன்னதன்
காரணமாக அதைச் சீர்திருத்துவேன் என்று வேறு சொன்னார்கள்.
சீர்த்திருத்தப்பட்டதா? கிராமங்களுக்கு அரிசி போகிறதா? ஏழை
எளிய மக்களுக்கு அரிசி கிடைத்ததா? 20 கிலோ மாதத்திற்கு
என்று சொன்னார்களே கொடுத்திருக்கிறார்களா? 15 கிலோ
கொடுத்திருக்கிறார்களா? 10 கிலோ கொடுத்திருக்கிறார்களா?
கொடுக்கவில்லையே. கிராமங்களிலே இருக்கக்கூடிய ஏழை மக்
கள், அரிசன மக்கள், பாட்டாளி மக்கள் எப்படி வாழமுடியும்
என்பதை இந்த மந்திரிசபை சிந்தித்ததா என்பதை நான்
திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கேட்க விரும்பு
கிறேன்.

அண்மையிலே உயர் நீதிமன்றத்திலே ஒரு ரிட் பெட்டிஷன்
வந்தது. ஜஸ்டிஸ் மோகன் அவர்கள் கோர்ட்டில் வந்தது. பழ
னிக்குப் பக்கத்திலே இருக்கிற கீரனூர் என்ற ஊரிலுள்ள நாரு
தின் என்ற முஸ்லீம் நண்பர் ஒரு ரிட் பெட்டிஷனை தாக்கல்





செய்கிறார். அரசாங்கத்தினுடைய கொள்கைப் பிரகாரம் 20
கிலோ அரிசியும்; பாமாலினும் கிரோஸினும் கொடுக்கவேண்டும்
மற்றப் பொருள்களும் கொடுக்கவேண்டும் என்று ரிட்பெட்டிஷன்
தாக்கல் செய்தார். ஆனால் அமைச்சர் அவர்கள் பொறுப்பு
ஏற்று இருக்கக்கூடிய அரசாங்கத்தின் கவுண்டரில் என்ன சொல்லி
யிருக்கிறார்கள் என்றால் கிராம மக்களிடத்திலே அரிசி கையிருப்பு
நிறைய இருக்கிறது. அரசாங்கம் கொடுக்கக்கூடிய அரிசியை
அவர்கள் எதிர்பார்க்கவில்லை அவர்களிடத்திலே அரிசி நிறைய
இருக்கிறது என்று சொல்கிறார்கள். நான் உங்களைப் பார்த்துக்

(முற்பகல் 11-20)

கேட்கிறேன். இந்த சட்ட மன்ற உறுப்பினர்கள் அத்தனை பேரை
யும் பார்த்துக் கேட்கிறேன். கிராமத்தில் இருக்கக்கூடிய நிலைமை
அதுவா? அரிசனங்கள் வீடுகளில், ஏழைகள் வீடுகளில், குடியா
னவர்கள் வீடுகளில் தொம்பியிலேயும், பானையிலேயும்
சாலிலேயும், சட்டியிலேயும் அரிசி அடுக்கி, அடுக்கி வைத்து இருக்
கிறார்களா? மாதத்திற்கு 2 கிலோ அரிசி கிடைக்கவில்லை.
இப்படி ஒரு நிலையை அரசு கை கொள்கிறது என்றால் எப்படி?
இதற்கு வேறு காரணத்தைச் சொன்னால் நாங்கள் வரவேற்று
இருக்க முடியும். மத்திய அரசு அரிசி கொடுக்கவில்லை. எங்க
ளுடைய புரட்சித் தலைவர் மத்திய அரசை எதிர்த்து உண்ணா
விரதம் இருந்து பார்த்தார் கிடைக்கவில்லை என்று சொன்னால்
தி.மு.க. சார்பில் உங்களுக்கு உறுதுணையாக இருந்து இருப்
போம், ஆதரித்து இருப்போம். ஆகையால் இதை எல்லாம்
சொல்லாமல், ஏன் கிடைக்கவில்லை தெரியுமா? கிராமங்களிலே
அரிசி கையிருப்பு ஒவ்வொருவரிடத்திலும் இருக்கிறது என்று
சொல்லியிருக்கிறீர்கள். எங்கே இருக்கிறது?

இன்றையதினம் நெற்களஞ்சியம் என்று சொல்லக்கூடிய தஞ்
சையில் இருக்கக் கூடிய விவசாயிகள் ஒரு கிலோ அரிசி 5½ ரூபாய்
கொடுத்து வாங்கக்கூடிய நிலைமை தான் தமிழ்நாட்டில் இருக்கி
றது. இதுதான் நீங்கள் ஆட்சி நடத்தும் லட்சணமா? ஆகையால்
தான் இந்தக் குற்றச்சாட்டைச் சொல்கிறேன். உணவுத்துறை
வழங்குகின்ற முறையில் இந்த அரசு மிகமிக கேவலமான முறை
களை பின்பற்றி ஏழை மக்களை பட்டினிப்போட்டுக் கொண்டு
இருக்கிறார்கள். சொல்வது ஒன்று செய்வது ஒன்றாக இருக்கிறார்
கள் என்பதை நான் இங்கே சொல்ல விரும்புகிறேன்.

இன்னும் ஒன்றை புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில்
மிகவும் சிரமப்பட்டு மிக நேர்த்தியான முறையில் செய்து இருக்கி
றார்கள். காவேரியில் வெள்ளம் வருகிறதோ இல்லையோ காவே
ரியில் கர்நாடகத்திலிருந்து தண்ணீர் விடுகிறானோ இல்லையோ
ஆனால் தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய சாராய கடைகள் மூலமாக
உற்பத்தி செய்யக்கூடிய சாராயத்தை எல்லாம் காவேரியில் விட்
டால் காவேரி கரை புரண்டோடும். அந்தளவுக்கு இன்றையதினம்

தமிழ் நாட்டில் புரகிபிஷன் பாலிசி மதுவிலக்குக் கொள்கை அமுல்படுத்தப்படுகிறது. கிராமத்தில் இருக்கக்கூடிய ஏழை எளிய மக்கள், பாட்டாளி மக்கள், அரிசன மக்கள், பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் இந்த சாராயத்தை குடித்துவிட்டு அதன் காரணமாக அழிந்துகொண்டு இருக்கின்றார்கள். இவைகள் எல்லாம் உங்கள் கண்களுக்கு தெரியவில்லையா? புரட்சித்தலைவர், எம். ஜி. ஆர். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காந்தி விழாவில் பேசுகிற சமயத்தில், காமராஜர் விழாவில் பேசுகிற சமயத்தில், அண்ணா விழாவில் பேசுகின்ற சமயத்தில் சொல்வார்கள். ஆம், நான் உடனடியாக முழுமையான மது விலக்கை மீண்டும் கொண்டுவரப்போகிறேன். இது ஆண்டுக்கு ஒரு முறை சொல்லக்கூடிய உடைந்து போன கிராம போன் ரிக்கார்டு போல் திரும்ப திரும்ப தான் நடைபெறுகிறதே தவிர வேறு ஒன்றும் இல்லை. இன்றையதினம் கிராமத்தில் இருக்கக்கூடிய நிலைமைகள் என்ன? ஆகையால் தான் இந்த ஆட்சியில் குறைபாடுகள் இருக்கின்றன என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

முன்பு எல்லாம் குடிகாரன் என்றால் சமுதாயத்தில் சொஞ்சம் வெறுத்து ஒதுக்கி வைப்பார்கள். ஓரத்தில் எங்கோ கடை வைத்து இருப்பான். பதுங்கி பதுங்கி அங்கே போய் குடிப்பான். அப்போது குடிகாரன் என்றால் சமுதாயத்தில் ஒரு இழுக்கு இருந்தது. நம்முடைய புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் அவனுக்கு ஒரு ஸ்டேடஸ் வந்துவிட்டது. நல்ல ஸ்டேட்டஸ். குடிக்கின்றவன் ஒரு உயர்ந்த ஸ்டேட்டஸ் உடையவன் என்ற நிலைக்கு இன்றைய தினம் உயர்ந்து இருக்கிறான். இது புரட்சி அல்லவா? இன்றைய தினம் என்ன இருக்கின்றது? கடைகள் இருக்கின்றன.

மாண்புமிகு துணைத்தலைவர் அவர்களே, ஒரு முறை சென்னையிலிருந்து காரில் என் குடும்பத்தோடு போகும்போது செங்கற்பட்டில் ஒரு ஒட்டலுக்கு முன்பாக காரை நிறுத்தினேன். டிபன் சாப்பிடவேண்டும் என்பதற்காக, கதவை திறந்து உள்ளே போனால் உள்ளே பெரிய கட்டிடம் ஓட்டல் போன்ற ஒரு பெரிய கட்டிடம் பெஞ்சுகள், நாற்காலிகள் எல்லாம் போட்டு வைத்து இருக்கிறார்கள். அதற்கு பிறகுதான் தெரிந்தது நாங்கள் ஏமாந்து விட்டோம் என்று. அது சாராயக் கடை. எப்பேர்ப்பட்ட ஸ்டேட்டஸ். நீங்கள் யார் வேண்டுமானாலும் காரில் போகக்கூடியவர்கள் பார்க்கலாம். அங்கு இருக்கக்கூடிய அரசு பஸ் டெப்போவுக்கு எதிரில் மிகப் பெரிய ஒரு நிலத்தையும் கட்டிடத்தை யும் வைத்துக்கொண்டு இருக்கிறார்கள். இப்பேர்ப்பட்ட ஒரு அந்தஸ்து ஸ்டேட்டஸை உண்டாக்கி இருக்கிறார்கள் தெரியுமா? இது தான் நீங்கள் செய்த மிகப் பெரிய புரட்சி என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னும் ஒன்று, நம்முடைய மாண்புமிகு இளையபெருமாள் அவர்கள் முன்பு கேட்டார்கள், நாங்களும் கேட்டோம், அரிசனங்களுக்கு திரு. கருணாநிதி வீடு கட்டிக்கொடுத்தார். ஆண்டுக்கு



33 ஆயிரம் வீடுகளைக் கட்டினார். இது போதாது அதிகமான வீடுகளை கட்டுவோம், திரு. கருணாநிதி கட்டிய வீடு சின்ன வீடு. நாங்கள் இன்னும் பெரிய வீடாக கட்டுவோம்—ஒரே ஒரு அறையை வைத்து கட்டினால் எப்படி ஒரு குடும்பம் வாழமுடியும்—இப்படி எல்லாம் நம்முடைய முதலமைச்சர் ஆட்சி பொறுப்பு ஏற்றவுடன் சொன்னார்கள். நான் கேட்கிறேன். கலைஞர் அவர்கள் 33 ஆயிரம் வீடுகள் கட்டி இலவசமாக அரிசனங்களுக்கு அன்றையதினம் கொடுத்தார்கள். நீங்கள் ஆட்சிக்கு வந்தீர்களே. நீங்கள் 1 லட்சம் வீடுகளை கட்டிக்கொடுத்தீர்களா, 50 ஆயிரம் வீடுகளை கட்டிக் கொடுத்தீர்களா, 40 ஆயிரம் வீடுகளை கட்டிக்கொடுத்தீர்களா? வீடுகள் சின்னதாக இருக்கிறது இன்னும் பெரியதாக கட்ட வேண்டும் என்று காகிதத்தில் எழுதி அந்த அந்த அரிசனங்கள் வீட்டில் வைத்துக்கொண்டு இதையே பார்த்துக்கொண்டு, இரு. இதற்கு மேல் ஒன்றும் இல்லை என்று சொல்லக்கூடிய நிலைமைக்குத்தான் தள்ளப்பட்டிருக்கிறதே தவிர அரிசனங்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கக்கூடிய நிலைமை இல்லை. ஏன், இன்றையதினம் அரிசன சகோதரர் இளையபெருமாள் அவர்கள் உண்ணாவிரதம் இருக்கிறார் என்றால், அரிசனங்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கவில்லை இந்த அரசு என்று சொல்கிறார்கள் என்றால் அரிசனங்கள் அரசின் மீது உள்ள நன்மதிப்பை இழந்துவிட்டார் என்று சொல்வது தான் அர்த்தம். ஆகவே தான் சொல்கிறேன் இந்த அரசு சொன்னதை செய்தது கிடையாது. கிராமத்தில் இருக்கக்கூடிய விவசாயிகள் பற்றி நம்முடைய நண்பர் அழகர்சாமி சொன்னார்கள். விவசாயிகளுக்கு இன்றைய தினம் என்ன நிலைமை இருக்கிறது? மின்சாரத்தைப்பற்றி, பத்திரிகையில் பார்க்கிறோம் எல்லா அணைகளும் தேங்கி இருக்கிறது. மின்சாரம் அபரிமிதமாக உற்பத்தி ஆகிறது என்று எல்லாம் இருக்கிறது. சரி, விவசாயிகளுக்கு என்ன கொடுக்கிறார்கள்? 6 மணி நேரம் விவசாயிக்கு மின்சாரம் கொடுத்தால், அவர் நெல் பயிரிடமுடியுமா ? ஒரு ஏக்கரிலே நெல் பயிரிட முடியுமா? வட ஆற்காட்டிலே தென் ஆற்காட்டிலே, சேலம் போன்ற பகுதிகளிலே, மற்றும் கிணற்றுப் பாசனத்தையே நம்பியிருக்கக்கூடிய பல இடங்களிலே, 3 ஏக்கர் 4 ஏக்கர் நிலத்தை வைத்திருக்கிற விவசாயிகள், 5 குதிரை சக்தி மின்சார மோட்டார்களை வைத்துக்கொண்டு, மின்சாரம் எடுத்து, அதிலே நெல் பயிரிடமுடியும் என்றால், இன்றைக்கு அவனுக்கு 6 மணி நேரம் மட்டும் போதுமா? என்ன காரணம்? அவனுக்கு 6 மணி நேரம் மட்டும் கொடுப்பதை பற்றி கவலை இல்லை; மின்சாரம் இல்லையென்றால் கொடுக்காமல் இருக்கலாம். மின்சாரப் பற்றாக்குறை இருக்கிற சமயத்திலே 4 மணி நேரம் தான் கிடைத்தது. குறை சொல்லவில்லை நாங்கள், 3 மணி நேரம்தான் கிடைத்தது, குறை சொல்லவில்லை. காரணம், அப்போது மின்சாரம் இல்லை. ஆனால், இருக்கிற சமயத்திலே ஏன் 6 மணிநேரம் மட்டும் கொடுக்க வேண்டும்? 6 மணி நேரம் மட்டும் மின்சாரத்தைக் கொடுப்பதன் இரகசியம் என்ன? லோ டென்ஷன் டாரிப்பிலே ஓடக்கூடிய தொழிற்சாலைகளை வைத்திருக்கக்கூடியவர்கள், 130 எச்.பி,

வரையிலும் ஓட்டக்கூடியவர்கள் இரண்டு மணி நேரம்
கட்டும் பீக் ஆவர் ரெஸ்டிரிக்சன் வைத்து விட்டு, 22 மணி
நேரமும் அவர்கள் ஓட்டலாம். ஆனால், ஏழை விவசாயிதான்
மாட்டினானா? அவனுடைய மோட்டார் பம்ப் செட்டுக்கு
தான் 24 மணி நேரத்தில் 6 மணி நேரம் மட்டும்தான்
ஓட்டலாம். மீதி 18 மணி நேரம் அவன் நிறுத்தி வைக்க
வேண்டுமென்ற கொள்கை குழப்பத்தின் அடிப்படையிலே
ஏற்பட்டதா? அல்லது விவசாயிகளுக்கு உதவக்கூடியதா
இதற்கு அடிப்படைக் காரணம் நாங்கள் மின்சாரத்தை அதிக
விலை கொடுத்து வாங்குகிறோம். அந்த விவசாயிக்கு 12
பைசாவுக்குத்தானே கொடுக்கிறோம். இப்படிக் கொடுத்தால்,
ரூ 150 கோடி நஷ்டம் ஆகி விடுகிறதே. ரூ. 200
கோடிக்கு நஷ்டம் ஆகிவிடுகிறதே என்று சொல்கிறார்
கள். ஆகவே, கொடுப்பதைப்போல் கொஞ்சம் கொடுத்து,
மீதி மின்சாரத்தை மற்ற பெரும் தொழில்களுக்கு கொடுத்து,
இந்த விவசாயிகளுக்கு கொடுத்தேன் என்று பெயர் இருக்க
வேண்டும், அவனும் உருப்படக்கூடாது என்ற அந்தக்
கொள்கையிலேதான் இன்றையதினம் இந்த அரசாங்கம்
செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அப்படியிருக்கும் போது
நம்பிக்கையில்லாத தீர்மானம் கொண்டு வருவதில் என்ன
தவறு இருக்கிறது என்று நான் கேட்க விரும்புகிறேன்.

நம்முடைய மாண்புமிகு அமைச்சர் காளிமுத்து அவர்கள்
இங்கே இருந்தார்கள். அவர்கள் சென்ற ஆண்டிலே,
கரும்புக்கு விலை நிர்ணயம் செய்தார்கள். அதற்கு முந்தைய
ஆண்டு விலை நிர்ணயம் செய்தார்கள். மாண்புமிகு
முதலமைச்சர் அவர்களும் இருந்தார்கள். சென்ற ஆண்டிலே
அரசாங்கம் மில்களுக்கு எல்லாம் அறிவித்து, நீங்கள் எல்லாம்
ரூ. 155 குறைந்தப் பட்ச விலையாகக் கொடுக்க வேண்டும்.
8.5 சதவீதம் ரெக்கவரி இருக்கிறது என்றால், ரூ. 165
கொடுக்க வேண்டுமென்று ஆணையிட்டார்கள். அது போதாது
என்று விவசாயிகள் சார்பிலே, நாங்கள் அத்தனைப் பேரும்—
எல்லோரும்— முறையிட்டதற்குப் பிறகு அப்பொழுது ரூ 10
கொடுத்தார்கள் எங்களிடத்திலேயிருந்து வாங்குகின்ற செஸ் நிதி
பணத்திலிருந்து. ஒவ்வொரு டன்னுக்கும், அவர்கள் ரூ. 10
கொடுத்தார்கள். ஆனால், இன்றைய தினம் என்ன நிலைமை?
இந்த ஆண்டிலே எப்படி இருக்கிறது? அப்படி ஒவ்வொரு
கரும்பு விவசாயிக்கும் முறைப்படி கொடுக்கப்படுகிறதா?
இல்லையே. அரசாங்கம் கொடுத்திருக்கின்ற புள்ளி விவரத்தைப்
பார்க்கிறோம். அவர்கள் கொடுப்பதில், ஒரு மில்லுக்கும் இன்
னொரு மில்லுக்குமே வித்தியாசம்.

மதுராந்தகம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையிலே—அங்கே
இருக்கக் கூடிய விவசாயி ரொம்ப லக்கி மேன்—கரும்பு கொடுப்ப
வனுக்கு, அரசாங்கத்திலே ரூ. 23 கொடுக்கப்படுகிறது. அதே
போல், நெல்லிக்குப்பம்—என்னுடைய தொகுதியிலே இருக்க



கூடிய கூட்டுறவு சர்க்கரை ஆலையிலே—ஒருவேளை, என்னைக்
கருத்திலே கொண்டுதான் அப்படி தருகிறார்களோ என்னவோ
தெரியவில்லை, அங்கே ரூ. 20 கொடுக்கப்படுகிறது. மதுராந்த
கத்திலே ரூ. 23 ஒரு டன்னுக்குக் கொடுக்கப்படுகிறது. நெல்லிக்
குப்பத்திலே இருக்கக் கூடிய விவசாயிக்கு ஒரு டன் கரும்புக்கு
ரூ. 20 கொடுத்துவிட்டு, ஆம்பூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை
யிலே, அங்கே கரும்பு கொடுக்கிற விவசாயிக்கு ஒரு டன்னுக்கு
ரூ. 0.60 காசுதான் கொடுக்கப்படுகிறது. அதே போல், கள்ளக்
குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலைக்குக் கரும்பு சப்ளை செய்
பவனுக்கு ஒன்றும் கிடையாது, பூஜ்யம். அதே நேரத்தில்,
திருப்பத்தூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைக்குக் கரும்பு சப்ளை
செய்பவனுக்கு ஒரு டன்னுக்கு ரூ. 2.70 கொடுக்கப்படுகிறது.
செங்கல்வராயன் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைக்கு கரும்பு
சப்ளை செய்பவனுக்கு அரசாங்கத்திலேயிருந்து ரூ. 1.70
கொடுக்கப்படுகிறது. ஜவஹர்லால் நேரு கூட்டுறவுச் சர்க்கரை
ஆலைக்குக் கரும்பு கொடுத்தவனுக்கு ஒரு டன்னுக்கு வெறும்
80 காசு. காவிரி சர்க்கரை ஆலையிலே கரும்பு சப்ளை செய்த
வனுக்கு ஒன்றும் கிடையாது. சக்தி சுகர் ஆலையிலே கரும்பு
சப்ளை செய்வதனுக்கு ரூ. 4.40; கோத்தாரி சர்க்கரை ஆலை
யில் கரும்பு கொடுப்பவனுக்கு ரூ. 7.80. இந்த அரசாங்கம்
எதற்காக, கரும்பு விவசாயிகள் மத்தியிலே ஒரு கண்ணிலே
வெண்ணெயும், ஒரு கண்ணிலே சுண்ணாம்பும் தடவ வேண்டும்?
இந்த அரசாங்கம் முறையோடு செய்ய வேண்டும் அல்லவா?
கொடுத்தால் ரூ. 10; இல்லையென்றால் ரூ. 15; இல்லையென்
றால் ரூ. 20; எல்லோருக்கும் கொடுக்க வேண்டும். அப்படி
கொடுக்காமல், இன்றைய தினம் ஒரு விவசாயிக்கு 70 பைசாவும்,
இன்னொரு விவசாயிக்கு ரூ. 23-ம் கொடுப்பதன் காரணமாக,
கிடைக்காத விவசாயிகள் எல்லாம் அதை எதிர்த்து, உயர்நீதி
மன்றத்திற்குச் சென்று, அந்த விவசாயிகளுக்குச் சேர வேண்டிய
பணம் கூட கிடைக்கவில்லை. எதற்காக ஒரு கண்ணிலே
சுண்ணாம்பும், ஒரு கண்ணிலே வெண்ணெயும் இந்த அரசாங்கம்
தடவ வேண்டுமென்று நான் குற்றம் சாட்டுகிறேன்.

[முற்பகல் 11-30].

தொழிலாளர் பிரச்னையைப் பற்றி நான் கூற விரும்புகிறேன்;
நான் தொழிற்சங்கத் தலைவன் அல்ல; எனது அருமை நண்பர்
உமாநாத்தைப் போல, ரமணியைப் போல தொழிற்சங்க வாதி
யும் அல்ல. ஆனால் என்னுடைய தொகுதியிலே இருக்கிற ஒரு
தொழிற்சாலை, அமைச்சர்கள் அத்தனை பேருக்கும் தெரிந்த
தொழிற்சாலை, ஏறக்குறைய 135 ஆண்டுகளாக இருக்கிற
தொழிற்சாலை, அங்கே இருக்கிற நிலைமை என்ன? 1,800 பேர்
கள் வேலை செய்த இடத்திலே இன்றைய தினம் பாதிக்கு மேல்
வெளியே அனுப்பப்பட்ட நிலை வந்து விட்டதே; இதிலே
அரசாங்கம் என்ன கொள்கையை பின்பற்றினார்கள்? தொழிற்
சங்கத்தைச் சேர்ந்தவர்கள் பேச்சுவார்த்தை நடத்தினார்கள்.
சம்பள உயர்வு வேண்டும், இன்னென்ன சலுகைகள் வேண்டு
மென்று லேபர் கமிஷனர் முன்னால் பேச்சுவார்த்தைகள் நடத்தி

னார்கள் அப்படி பேச்சு வார்த்தை நடத்தககூடிய சமயத்திலே
அதே மேனேஜ்மென்ட் முன்னுக்கு வருகிறது ; ஒவ்வொரு தொழி
லாளிக்கும் அட்ஹாக்காக 950 ரூபாய் கொடுக்கிறேன் என்கிறது;
ஒருதொழிலாளிக்கு 950 ரூபாய் கொடுக்கிறேன் என்று அவர்கள்
சொன்ன சமயத்திலே ஆள் குறைப்பை ஏற்றுக்கொள்ள வேண்டு
மென்று சொல்கிறார்கள். 1,500 வேலை செய்கிற இடத்திலே
200 பேரை, 300 பேரை குறைத்துக்கொள் என்றால் எந்த
தொழிற் சங்கத் தலைவர் ஒத்துக்கொள்வார் ? இன்றைய தினம்
அவர்கள் சுப்ரீம் கோர்ட்டிற்கு போய் வழக்கு தொடர்ந்து,
1,900 பேர்கள் வேலை செய்த சர்க்கரை ஆலையிலே 950 பேர்கள்
தான் வேலை செய்யலாம் ; எவ்வளவு பேர்கள் வேலை செய்ய
வேண்டும் என்பதை ட்ரிபியூனலுக்கு விடுகிறேன் என்று சுப்ரீம்
கோர்ட்டிலே முடிவு செய்வதை இந்த அரசாங்கம் வேடிக்கை
பார்த்துக் கொண்டிருக்கிறதே ; இது என்ன கொள்கை ? 'என்னு
டைய அருமை நண்பர் அழகர்சாமி போன்றவர்கள் எல்லாம்
தொழிற்சங்க விஷயங்களிலே எப்படி இந்த அரசாங்கம் இரட்டை
கொள்கையை பின்பற்றுகிறார்கள் என்று சொன்னார்கள். இந்த
அரசாங்கத்தின் கொள்கை என்ன ? தொழிற்சாலையில் நட்டம்
வந்தால், ஆள் குறைப்பை நிரந்தரமாக செய்யலாம் என்று
சொல்வதா அரசாங்கத்தினுடைய கொள்கை ? அரசாங்கத்தின்
வக்கீல்கள் என்ன பேசினார்கள் ? அரசாங்கத்தின் வக்கீல்கள்
அதை சுப்ரீம் கோர்ட்டிலே எதிர்த்துப் பேசினார்களா ? ஆகவே
தான் பாலுக்கும் காவல், பூனைக்கும் தோழன் என்ற முறையில்
அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி தொழிலாளர்
கொள்கையில் இருந்து கொண்டிருக்கிறது என்பதை திராவிட
முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே குற்றம் சாட்ட விரும்புகிறேன்.
இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். இந்த அரசாங்
கத்தைப் பற்றி ஏதாவது சொன்னாலே கோபம் வந்து விடுகிறது.
சொல்வது சரியா, தவறா என்று பார்ப்பதில்லை. நாங்கள்
சொல்வதில் தவறு இருந்தால் ஒதுக்கி தள்ளி விடுங்கள் ; சொல்
வது சரியாக இருந்தால் ஏற்றுக்கொள்ளுங்கள். புரட்சித்
தலைவர் அவர்கள் திட்டத்தை யாராவது குற்றம் சொன்னால்
அது அவரையே தனிப்பட்ட முறையில் குறை சொல்வதென்று
எடுத்துக்கொள்வது சரியா ? வில் இட் பி ஆல்ரைட், ஐ எம்
ஆஸ்கிங் தி கவர்ன்மென்ட் அண்ட் தி மெம்பர்ஸ்? ஆகவே தான்
சொல்கிறேன். உங்களுடைய திட்டத்திலே இருக்கிற குறை
பாடுகளை சொன்னால் உங்களால் பொறுத்துக்கொள்ள முடிவ
தில்லை. என்ன நடைபெற்றது ? மதிய உணவுத் திட்டத்திலே
ஆரம்பத்திலே சில தவறுகள் பத்திரிகைகளில் வெளி வந்தன.
சேலத்தில் இருக்கிற 'மாலை முரசு' அவ்வாறு எழுதியது தான்
குற்றம் ; அந்த இடத்தில் பல்லி விழுந்து விட்டதால், அதன்
காரணமாக மாணவர்கள் ஆஸ்பத்திரியிலே அனுமதிக்கப்பட்டு
இருக்கிறார்கள் ; மாணவர்கள் உடல் நலமில்லாமல் இருக்கிறார்
கள் என்று சொன்ன குற்றத்திற்காக அந்த பத்திரிகையின்
கார்த்திசன் என்பவர் கைது செய்யப்படுகிறாரே ; இது முறை
தானா ? 1937-ல் பிரஸ் ரெஜிஸ்ட்ரேஷன் ஆக்ட்டிலே இருப்





தில் செய்திக்கு யார் பொறுப்பு என்றால் எடிட்டர் தான் பொறுப்பு என்று வெள்ளைக்காரன் போட்ட சட்டத்திலேயே கூறியிருக்கிறார்கள். ஆனால் 'எதிரொலி' பத்திரிகையில் ஆற்காடு வீராசாமி யார் ? அவர் அதனுடைய பப்ளிஷர். எடிட்டர் மீது வழக்கு போட்டால் அந்த வழக்கை சந்திப்பதற்கு நாங்கள் தயார். ஆனால் பத்திரிகையின் உரிமையாளராக இருக்கக் கூடிய ஆற்காடு வீராசாமியை கைது செய்து சிறைச்சாலையில் வைத்திருந்தீர்களே, உங்களிடத்தில் இன்னமுமா எங்களுக்கு நம்பிக்கை ஏற்பட வேண்டும் ? எதிர்க்கட்சிகளை அமுக்குவது, எதிர்க்கட்சிகளை உடைப்பது, எதிர்க்கட்சிகளை தகர்ப்பது இப்படியா ? உங்களால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. ஆகவே தான் சொல்கிறேன் இந்த அரசாங்கம் நாங்கள் சொல்கிற குற்றச்சாட்டுகளை ஏற்று அதில் தவறு இருக்கிறதா ? அது சரியாக இருக்கிறதா என்று கூட பார்க்காமல் மிலிட்டரி ரூலைப் போல, நீங்களே செய்வது தான் சட்டம் என்று செய்வீர்களானால் அது சரியாக இருக்காது என்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே கூற விரும்புகிறேன்.

இன்னொன்றையும் கூற விரும்புகிறேன். இந்த அரசாங்கம் ஊழலற்ற அரசாங்கம்—திஸ் இஸ் தி கிரேட்டஸ்ட் ஜோக் ஆப் திஸ் சென்சுரி—இதை மக்கள் நம்ப வேண்டும். ஊழலே செய்யாதவர்கள் ; தவறே செய்யாதவர்கள் ; நானா ஊழல் செய்யப் போகிறேன் ; எனக்கு எதற்குப் பணம் ; இப்படியா ? ஊழலே செய்யவில்லையா ? இதே மன்றத்திலே நான் சட்டமன்ற உறுப்பினராக இருந்து, கேரளாவிற்கு எரிச் சாராயம் ஏற்றுமதி செய்வதிலே தவறு என்று சொல்லவில்லையா ?

.. ..

இதே மன்றத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் எங்கள் தலைவரும், நானும் கூறினோம்.

.. ..

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே,

.. ..

என்றெல்லாம் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இவை எல்லாம் அவைக் குறிப்பில் இருக்கலாமா என்பதற்குத் தாங்கள் தீர்ப்புச் சொல்லும்படியாகக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : விசாரணைக் கமிஷனிலே இருப்பதைப் பற்றி இங்கே பேசுவது என்றால் அந்தக் கமிஷன்கள் இருப்பதில் அர்த்தம் இல்லை. அது சம்பந்தமாக

---

.... மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[பேரவைத் துணைத் தலைவர்] [1983 நவம்பர் 11

எதையும் பேச வேண்டாம். விசாரணைக் கமிஷன்களைப்
பற்றிய விஷயங்களைப் பற்றி இங்கே விவாதிக்க வேண்டாம்.
எனவே, அதை அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கும்படி ஆணையிடு
கிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : விசாரணைக் கமிஷன் முடிவைப்
பற்றி நான் பேசவில்லை, அவ்வாறு நான் பேசுவேனா ?
உங்களைப் போலத்தான் நானும்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு
பேரவைத் துணைத் தலைவரவர்களே விசாரணையில் இருக்
கிறது என்பதோடு அவர்கள் விட்டு விடவில்லை.

* *

விசாரணை என்று சொன்னது இருக்கலாம். ஆனால்

* *

என்று சொன்னது அவைக் குறிப்பிலே இருக்கக் கூடாது என்று
தெரிவித்துக்கொள்கிறேன்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :

* *

அந்த வார்த்தைகளை அவைக்குறிப்பிலிருந்து நீக்கும்படி
உத்தரவிடுகிறேன். இங்கே பேச வேண்டுமென்றால் அந்த விசா
ரணைக் கமிஷன்களைக் கலைத்துவிட்டு நாள் முழுவதும் நாம்
பேசலாம். அதுவும் வேண்டும் இங்கேயும் பேச வேண்டும்
என்றால் அது சரியல்ல.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : தாராளமாக நீக்குங்கள். நாங்
கள் அதை உயர் நீதிமன்றத்திலே பார்த்துக்கொள்கிறோம்.
எங்கள் கழகத் தலைவர் அவர்கள் இங்கே இருந்த சமயத்தில்
சொன்னார்கள். இந்தத் திட்டத்தைக் கொண்டு வருவதற்கு
முன்னாலேயே நாங்கள் சொன்னோம். இந்தச் சாராயத்தை
உற்பத்தி செய்வது விநியோகிப்பது இவை அத்தனையையும்
அரசாங்கத் துறைக்குக் கொடுத்து விடுங்கள் என்று சொன்னோம்.
பலவிதமான ஆதாரங்களை வைத்து இவைகளையெல்லாம்
தேசிய மயமாக்கக் கூடாதா அரசாங்கமே செய்யக் கூடாதா
என்று எங்கள் தலைவர் அவர்கள் கேட்டார்கள். ஒருவேளை
அதை மனத்தில் வைத்துக் கொண்டுதான் இந்த அரசாங்கம்

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்
கிணங்க அகற்றப்பெற்றன.



1983 நவம்பர் 11] [திரு வி. கிருஷ்ணமூர்த்தி]

செயல்பட்டதோ என்னவோ தெரியவில்லை. அரசாங்கம்
சாராய மொத்த விற்பனையை இண்டியன் மேட் ஃபாரின் லிக்கர்
மொத்த விற்பனையை அரசாங்கம் எடுத்துக்கொண்டது. அதைத்
திராவிட முன்னேற்றக் கழகம் வரவேற்றது. அப்பொழுது
ஹோம் செக்ரட்டரியாக புரஹிபிஷன் அண்ட் எக்சைஸ் செக்ரட்
டரியாக இருக்கக்கூடிய திரு. வெங்கட்ராமன் அவர்கள் பத்திரிகை
களில் அறிக்கை ஒன்றைக் கொடுத்தார்கள். இதை அரசாங்கம்
எடுப்பதால் ஆண்டுக்கு ஐம்பது கோடி ரூபாய் அரசாங்கத்திற்கு
வரும் என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே. இது மகிழ்ச்சி
கரமான திட்டம்தான். மதிய உணவு கொடுப்பதற்காகப் பணப்
பற்றாக்குறையில் இருக்கின்ற நம்முடைய நிதியமைச்சர் நாவலர்
அவர்களுக்கு வருஷத்திற்கு இரண்டு ஐம்பது கோடி ரூபாய்
வந்தால் அதைப் பாராட்ட வேண்டியதுதானே ; ஆனால் நான்
கேட்கக் கூடியது என்னவென்றால் இந்த இரண்டு வருடங்களாக
ஐம்பது கோடி ரூபாய் எவன் கைக்குப் போனது ? முன்பே
திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சொன்னோமே
அப்பொழுது அதை ஏற்றுக்கொள்ளவில்லையே, ஏன் ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு
துணைத் தலைவரவர்களே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்
காலத்தில் மது விலக்கை ரத்து செய்தார்களே, அப்பொழுது
இந்த ஐம்பது கோடி ரூபாய் யாருடைய கைக்குப் போனதும்
யார் அதை வாங்கினார்கள்? அந்தப் பணத்திற்கு யார்
பொறுப்பு?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு கிருஷ்ண
மூர்த்தி அவர்கள் விரைவில் முடிக்க வேண்டும். அவர்கள்
கட்சிக்கு அரை மணி நேரம்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. (குறுக்
கீடு) முவ் செய்த கட்சிக்குக் கொடுத்ததைப் போல்
திரு கிருஷ்ணமூர்த்தி அவர்களின் கட்சிக்குக் கொடுக்க முடியாது.
(குறுக்கீடு)

[முற்பகல் 11-40]

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி ; ஆகவே நான் சொல்கிறேன். முன்
னேற்றக்கழகம் ஏற்கனவேசொன்னதை இந்த அரசு பின்பற்றி
அந்த நடவடிக்கையை முன்னதாகவே அரசாங்கம் எடுத்து
இருந்தால் இந்த 50 கோடியும் 50 கோடியும் சேர்ந்து 100 கோடி
ரூபாய் அரசாங்கத்திற்கு வந்திருக்குமே என்ற குற்றச்சாட்டினை
மீண்டும் சுமத்துகிறேன். தமிழ்நாட்டிலே..........

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, இடையிடையே நான் குறுக்கிட
வேண்டி இருப்பதற்காக மிகவும் வருத்தப்படுகிறேன். இரண்
டாண்டுகளில் 50 கோடி, 50 கோடி என்று வந்திருக்குமே
என்று கேட்டார்கள். அந்த இரண்டாண்டுக்காகத்தானே கமி
ஷனே நியமிக்கப்பட்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்

கொள்கிறேன். ஆகவே அந்த இரண்டாண்டைப் பற்றிப் பேசாமல் வேறு எதைப் பற்றி வேண்டுமானாலும் பேசலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி :** 50 கோடி ரூபாய் இந்த வருவாய்திலே கிடைத்திருக்கின்றதே. அதனால் முன்பே இப்படிப்பட்ட நடவடிக்கைகளை எடுத்திருந்தால் அரசாங்கத்திற்கு அந்த ஆண்டுகளிலும் 50 கோடி ரூபாய் என்று வருவாய் வந்திருக்குமே என்று கூட சொல்லக் கூடாதா ?

அதோடு மட்டுமல்ல. சுயதேவை என்பதைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். அதாவது வெளி மாநிலங்களிலே இருந்து வரவழைக்கவேண்டியதில்லை என்று இங்கேயே தமிழகத்திலேயே இண்டியன் மேட் ஃபாரின் லிக்கர் என்ற வகையிலே தயாரிக்கலாம் என்று சொல்லி மெட்ராசிலே ஒன்று, கோயம்புத்தூரிலே ஒன்று, விழுப்புரத்திலே ஒன்று என்று ஆரம்பிக்கப்பட்டன அதாவது வெளிநாட்டிலேயிருந்து, பெங்களூரிலே இருந்து, ஆந்திராவிலே இருந்து வந்தால் சரியானதாக இருக்காது. இங்கே இருந்தால்தான் எல்லாம் கைக்குள்ளே அடக்கமாக இருக்கும் என்று, சுயதேவையை பூர்த்தி செய்யக்கூடிய அளவுக்கு பெரிய புரட்சியைச் செய்திருக்கிறார்கள் என்றால் அதைப் பாராட்டாமல் இருக்க முடியவில்லை. ஆனால் ஒன்றைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். எங்கள் தலைவர் அவர்கள் சொன்னார்கள். இவைகளை எல்லாம் செய்திருக்கிறீர்களே, இந்த பாட்டிலிங்-லே கிட்டத்தட்ட 30 கோடி ரூபாய் இலாபம் கிடைக்கும் என்றெல்லாம் கணக்குக் கொடுத்தீர்களே என்று கேட்டார்கள். அப்படி திரு. சித்தன் அவர்களும் கேட்டார்கள், மற்றவர்களும் கேட்டார்கள். நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் தோற்றுத்தான் போகும் அதிலே சந்தேகம் இல்லை, இருந்தாலும் இந்த பாட்டிலிங் யூனிட்டை ஏன் எடுக்க பயப்படுகிறீர்கள் என்பதைக் கேட்க விரும்புகிறேன். அதை எடுக்க உங்களுக்கு முடியுமா ? எடுப்பதற்குரிய தைரியம் உங்களுக்கு இருக்கின்றதா ? நாங்கள் பலவிதமான குற்றச்சாட்டுகளைச் சொல்கிறோம். அப்படி பலவிதமான குற்றச்சாட்டுகளை எல்லாம் சொன்னாலும் கூட, அவற்றை எல்லாம் இந்தக் காதிலே வாங்கி அந்தக் காதிலே விட்டுவிடுகிறீர்கள். அதைக் கேட்டு சரியாகச் செயல்படுகின்றார்களா ? நாங்கள் தான் முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் சொல்கிறோம், அதனால் செய்யவில்லை, பரவாயில்லை. ஆனால் இந்த மன்றத்தின் அங்கங்களாக இருக்கின்ற பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டி, பப்ளிக் அண்டர்டேக்கிங்ஸ் கமிட்டி, எஸ்டிமேட்ஸ் கமிட்டி ஆகியவை சொல்வதையாவது கேட்கலாம் அல்லவா ? அவை எல்லாம் இந்தச் சட்டமன்றத்தின் அங்கம் தானே ?

மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டி தலைவராக இருந்தார்கள். அப்போது அவர்கள் ஒரு ரிப்போர்ட்டை இந்த மன்றத்திலே வைத்தார்கள்,





அந்த ரிப்போர்ட்டிலே ஸ்டீல் ரோலிங் மில் சம்பந்தமாக குறிப்பிட்டிருந்தார்கள். பொதுவாக தமிழக அரசாங்கம் என்ற நிலையில் இதனை நான் குறிப்பிடுகிறேன். கலைஞர் அரசாங்கம் அல்லது இடையில் வந்த கவர்னர் ஆட்சி அல்லது அதற்குப் பிறகு வந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி என்ற நிலையில் நான் சொல்லவில்லை. தமிழ்நாடு அரசாங்கத்தை எதிர்த்து உயர்நீதிமன்றத்திலே அந்த ஸ்டீல் ரோலிங் மில்காரர்கள் வெற்றி பெற்றாலும் அதை எதிர்த்து சுப்ரீம் கோர்ட்டிலே வழக்கு தொடரப்பட்டது. சுப்ரீம் கோர்ட்டிலே வெற்றி பெற்றதற்குப் பிறகு அந்தப் பணத்தை ஏன் வசூல் செய்யவில்லை ? அவ்வாறு வசூல் செய்யாமல் இருப்பது முறையா?

1976 ஆம் ஆண்டுக்குப் பிறகு இந்த வரியை வசூல் செய்யக் கூடாது என்று ஸ்டே கொடுத்திருக்கிறீர்களே, இது எல்லாம் மிக மிக கண்டிக்கத்தக்கது அல்லவா ? திரு. சித்தன் அவர்கள் பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டியின் தலைவராக இருக்கும்போது சொன்னார்கள். அந்த பாராவில் 26-வது பக்கத்திலே சொன்னார்கள்:

"This means that the judgment of the Supreme Court has not been given effect to. The Committee observes that in effect the re-rolling mills have demanded that the tax should not be collected even after 1976 on the basis of the Supreme Court judgment. The Commiittee is unable to understand how the stay order could have been granted on the basis of such a demand. It appears that the stay order has been accepted by the Department without further examination. The Committee recommends that the question should be examined thorougnly in consultation with the Advocate-General and immediate action taken for getting the stay order vacated. A report on the action taken in this regard may be sent to the Committee within three months" என்று திரு. சித்தன் அவர்கள் பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டியின் தலைவராக இருந்தபோது இந்த அறிக்கையினைத் தாக்கல் செய்தார்கள். அதன் பேரிலே இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்தது? ஒட்டைக்கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள் என்ற வகையிலே இந்த அரசு செய்தது. என்ன செய்தார்கள்? ஸ்டே கொடுத்தது தப்பு என்று பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டி கூறியதற்குப் பிறகு இந்த அரசு என்ன செய்திருக்கவேண்டும்? ஸ்டே ஆர்டரை வெக்கேட் செய்திருக்கவேண்டும். அப்படி வெக்கேட் செய்யப்படாமல் அந்த ஸ்டே ஆர்டர் தொடர்ந்து இருந்தது. அப்படித் தொடர்ந்து இருந்ததற்குப் பிறகு 1982 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திலே ஒரு உத்தரவு போட்டார்கள்.

அந்த உத்தரவின் பிரகாரம் 1976-லேயிருந்து ஸ்டீல் ரோலிங் மில்லில் இருந்து [illegible]க்கூடிய எல்லா சேல்ஸ் டாக்ஸையும் ரத்து செய்வது என்று சொன்னது மட்டுமல்ல செய்கிறது.

இனிமேல் வரி கட்ட வேண்டியதில்லை. ஏன் இப்படி செய்ய
வேண்டும்? எதற்காக இப்படிச் செய்யவேண்டும் என்று கேட்
டால் அப்போது சொன்னார்கள். இது சம்பந்தமாக ஒரு
டாஸ்க் போர்ஸ் கமிட்டி, நிபுணர் குழு போட்டோம். அந்த
நிபுணர் குழு இவைகளையெல்லாம் விரிவாக ஆராய்ந்து, விவா
தித்து, சிபார்சு செய்தார்கள். அந்தச் சிபார்சின் அடிப்படையில்
இது ஏற்றுக்கொள்ளப்பட்டது என்று அரசாங்கத்தின் தரப்பில்
இருந்து சொல்லப்பட்டது.

அந்த டாஸ்க் போர்ஸ் ரிப்போர்ட்டில் குறிப்பிடப்பட்டு
இருக்கிறது. அந்த டாஸ்க் போர்ஸ் இண்டஸ்டிரீஸ் டிப்பார்ட்
மென்ட்டிலே ஜி. ஓ. நம்பர் 460, தேதி 9–5–1978-ல்
உருவாக்கப்பட்டது. அது உருவாக்கப்பட்ட நேரத்தில்
அதனுடைய டெர்ம்ஸ் ஆப் ரெபரென்ஸ் என்று
அறிவிக்கப்பட்டது. ஸ்டீல் ரோலிங் மில் முதலாளிகள்
65 பேர்— ஏகபோக கொள்ளை அடிப்பவர்கள்— அரசாங்கத்
திற்கு ஒரு மனு கொடுத்தார்கள். அதை விசாரிப்பதற்காக
இந்த டாஸ்க் போர்ஸ் அமைக்கப்பட்டது என்று டெர்ம்ஸ்
ஆப் ரெபரென்ஸில் சொல்லியிருக்கிறார்கள். இந்த ஸ்டீல்
ரோலிங் மில்லைச் சேர்ந்தவர்கள் பல கோரிக்கைகளை வைத்
துள்ளனர். அதைப் பரிசீலிப்பதற்காக என்று சொன்னார்கள்.
அவர்கள் கேட்டதில் முக்கியமானது என்ன என்று சொன்னால்,
நாங்கள் வசூலிக்கிற சேல்ஸ்டாக்ஸை எங்களுக்குத் திருப்பி
லோனாகக் கொடுங்கள், நாங்கள் அதை ப்ளவ் பேக் செய்
கிறோம் என்று சொன்னார்கள். அந்த சேல்ஸ் டாக்ஸை
லோனாகப் பெற்று, பின்னர் அரசாங்கத்திற்குத் திருப்பிச்
செலுத்துகிறோம் என்று தான் சொன்னார்கள். ஆனால் அரசாங்
கம் அதை மட்டும் செய்யவில்லை. என்ன செய்தார்கள் என்றால்
எச். பி. என். ஷெட்டி அவர்கள் தலைமையில் ஒரு குழு போட்
டார்கள்.

இந்த விற்பனை வரியைத் தள்ளுபடி செய்தது தவறு என்று
பி.ஏ.சி. சுட்டிக்காட்டியிருக்கிறது. அதிலே அ.தி.மு.க. உறுப்
பினர்களும் இருக்கிறார்கள். சென்னையில் இருக்கிற அகௌன்
டெண்ட் ஜெனரல் அவர்கள் அந்தக் குழுவின் டிராப்ட்
ரிப்போர்ட்டை பார்த்து சரி என்று சொன்ன பின்னர்தான்
இந்த அவையில் வைக்கப்படுகிறது. அவர்கள் சொன்னார்கள்.
இந்த வரி விலக்கு 3 கோடியே 12 இலட்சம் கொடுத்தது தவறு
என்று, ஸ்டே ஆர்டர் எப்போது வருகிறது? 1981-ல் டாஸ்க்
போர்ஸ் கமிட்டி ரிப்போர்ட் அடிப்படையில் வருகிறது. 1979-ல்
ரிப்போர்ட் கொடுத்தார்கள். ஆனால் அரசாங்கம் 1981-லே
சி.டி.அன்ட் ஆர். இ. துறை மூலமாக அந்த வரி வசூலை நிறுத்துங்
கள் என்று ரிட்ராஸ்பெக்டிவ் எஃபெக்ட் கொடுத்து ஆணை
பிறப்பித்திருக்கிறார்கள்.





இந்த டாஸ்க் போர்ஸ் கமிட்டி எந்த அடிப்படையில் வந்தது.
யார் ஏற்படுத்தினார்கள்? தமிழ்நாடு ஸ்டீல் ரோலிங் கவுன்சில்
ரெப்ரசன்டேடிவ்ஸ் மூலமாக அரசாங்கத்திற்கு ஒரு மனு
வருகிறது பல பல சலுகைகளைக் கேட்டு. மாண்புமிகு முதல
மைச்சர் அவர்களிடத்தில் அவர்கள் அந்த மனுவைக் கொடுக்
கிறார்கள். அதை விசாரிப்பதற்காக இந்த டாஸ்க் போர்ஸ்
கமிட்டியை உருவாக்கினார்கள். ' தி கேட் இஸ் அவுட் ஆப்
தி பேக் '. இந்த டாஸ்க் போர்ஸை உருவாக்கியது நம்முடைய
முதலமைச்சர் அவர்கள் தான். (மணியடிக்கப்பட்டது) இந்த
டாஸ்க் போர்ஸ் தொழில் துறை மூலமாக நியமிக்கப்படுகிறது.
அந்த டாஸ்க் போர்ஸ் ரிப்போர்ட்டை யாரிடம் கொடுக்கிறார்கள்
என்றால், எச்.பி.என். ஷெட்டி அவர்கள் முதல் பக்கத்திலேயே
எழுதியிருக்கிறார்கள்:

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை.)

This Task Force has the pleasure of submitting this report along with the recommendations, to the Honb'le Chief Minister of Tamil Nadu.

(முற்பகல் 11-50.)

'டாஸ்க் போர்ஸை' உருவாக்கிய சீஃப் மினிஸ்டரிடம் அந்த ரிப்
போர்ட்டைக் கொண்டு போய் கொடுக்கிறார்கள் என்றால் இதற்கு
பேர் ஊழலா? இல்லையா? ஆகையால்தான் சொல்கிறேன். இந்த
ஆட்சி ''அத்திப் பழத்தைப் பிட்டுப்பார்த்தால் அத்தனையும்
புழு'' என்று சொல்வார்களே, அதைப் போன்று ஊழல் மலிந்த
ஆட்சி இது. ஆகையால் திராவிட முன்னேற்றக் கழகத்தின்
சார்பில் இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை ஆதரித்து அமர்
கிறேன்.

*திரு கோ விஸ்வநாதன் : மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்
களே, இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை கம்யூனிஸ்ட்
கட்சியோடு சேர்ந்து திராவிட முன்னேற்றக் கழகமும் கொண்டு
வந்திருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த
வரையில் அவர்கள் என்றைக்குமே இந்த ஆட்சியின் மீது நம்
பிக்கை வைத்ததில்லை. எங்கள் தலைவர் மாண்புமிகு புரட்சித்
தலைவர் அவர்கள் மீது அவர்கள் என்றைக்குமே நம்பிக்கை
வைக்கவில்லை. எனவே அவர்கள் நம்பிக்கை இல்லாத் தீர்மானம்
கொண்டு வந்ததில் எந்தவிதமான புதுமையும் இல்லை.

ஆனால் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் இந்திய கம்யூ
னிஸ்ட் கட்சியும் ஏன் இந்த தீர்மானத்தைக் கொண்டு வந்தார்
கள் என்று நான் யோசித்துப் பார்த்தேன். தி.மு.க. வைவிட
இவர்கள் மாறுபட்டிருக்கிறார்கள் என்று கருதுகிறேன்.
காரணம் தி.மு.க. வைப்பற்றி கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்
திரு. சங்கரய்யா அவர்கள் வார்த்தையில் சொல்வதாக இருந்தால்

கண்மூடித்தனமாக இந்த ஆட்சியை எதிர்க்கின்ற ஒரு கட்சி, குருட்டுத்தனமாக இந்த ஆட்சியை எதிர்கின்ற ஒரு கட்சி, இன்னொன்றையும் சொல்வார்கள். 5 பாயின்ட்ஸ் புரோகிராம், 20 பாய்ன்ட்ஸ் புரோகிராம் என்று ஒவ்வொரு கட்சியும் ஒரு புரோகிராம் வைத்திருக்கும். ஆனால் தி.மு.க.வுக்கு ஒன் பாயின்ட் புரோகிராம் தான். அதாவது எம்.ஜி. ஆர். அரசை எதிர்க்கின்ற புரோகிராம், வேறு புரோகிராம் இல்லை. ஆனால் நான் கம்யூனிஸ்ட் கட்சியை அப்படி கூறவில்லை. அவர்களுக்கு ஏதோ உள் நோக்கம் இருக் கிறது என்று மட்டும் நான் சந்தேகிக்கிறேன்.

இப்படிப்பட்ட இந்தத் தருணத்திலே இந்த அரசின் மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை திரு. உமாநாத் அவர்கள் கொண்டுவர என்ன காரணம் இருக்க முடியும்? இப்போது அவர் கள் தி.மு.க.வை சரிக்கட்ட நினைக்கிறார்கள். தாஜா செய்ய பார்க்கிறார்கள். தி.மு.க. தனிமைப்படுத்தப்பட்டு விட்டது. இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இந்த நாடே அவர்களை புறக் கணித்துவிட்டது. சட்டமன்றத்திலும் பாராளுமன்றத்திலும் எவ்வளவுதான் முரண்பாடு கொண்ட கட்சிகளாக இருந்தாலும் அத்தனை பேரும் ஒன்று பட்டார்கள். இந்த சட்டமன்றத்திலே நாம் பார்த்தோம். தி.மு.க. மட்டும் இந்தப் பிரச்சினையில் இந்தியாவிலேயே தனிமைப்படுத்தப்பட்டு விட்டது. அதனால் தான் அவர்கள் விரக்தியோடு இருக்கிறார்கள், கோபமாக இருக்கி றார்கள். ஆகையால் அவர்களை எப்படியாவது திருப்திபடுத்த வேண்டுமென்பதற்காக இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந் திருப்பார்கள் என்று நான் சந்தேகப்படுகிறேன்.

அது மட்டுமல்ல, இன்று அவர்கள் விரக்தியோடு வெளியே போயிருக்கிறார்கள். ஆயிரக்கணக்கான பேராட்டங்களை அறி வித்து, நூற்றுக்கணக்கான போராட்டங்களை நடத்தி, படுதோல்வி அடைந்திருக்கிறார்கள். அண்ணா அவர்கள் சொன்ன கடமை, கண்ணியம், கட்டுப்பாடு இழந்து அரசியல் நாகரீகம் இழந்து பேரறிஞர் அண்ணா அவர்கள் ''உள்ளம் செட்டு, உருவம் இழந்து உலகோர் கை கொட்டி நகைக்கும் நிலை'' என்று சொன் னார்கள். அது தி.மு.க. வுக்குப் பொருந்தும். இப்போது இருக்கிற அவர்களுடைய தலைவர் கூட சொன்னார். ''ஓடினாள், ஓடினாள் வாழ்க்கையின் ஓரத்திற்கே ஓடினாள்'' என்று சொன்னார். அப்படிப் பட்ட நிலை~மக்கு இன்று தி.மு.க. போய்க் கொண்டிருக்கிறது'. ஆகவே, அவர்களுக்கு கோபம் வருகிறது. விரக்தி ஏற்பட்டிருக் கிறது.

அவர்களோடு தேர்தல் உடன்பாடு செய்ய வேண்டுமென்று கருதி, இப்போதே அவர்களை திருப்திபடுத்த வேண்டுமென்ற நிலையில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார் களோ என்று நான் சந்தேகிக்கிறேன்.



இலங்கைத் தமிழர்கள் பிரச்சினையில் இதுவரையில் எந்தக் கட்சியும் எடுக்காத ஒரு நிலையை தி.மு.க. எடுத்தது. இங்கே ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்தோம், அதை ஏகமனதாக நிறை வேற்றியிருக்க வேண்டும். இலங்கைத் தமிழர்களுக்கு உண்மை யில் அனுதாபம் காட்டுவதாக இருந்தால் அப்படிச் செய்திருக்க வேண்டும். அந்தத் தீர்மானத்திற்கு மற்ற எதிர்க்கட்சிகள் எல் லாம் சேர்ந்து வாக்களித்தபோது அவர்கள் வாக்களிக்காமல் தனி யாகப் போய் இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவு தருகிறோம் என்று பேசினார்கள்.

நாம் எல்லோரும் சேர்ந்து ஒரு நாள் அர்த்தால் நடத்த முடிவு செய்து, நடத்தியபோது அவர்கள் நாங்கள் தனியாக நடத்து கிறோம் என்று சொல்லி ஒதுங்கிக் கொண்டவர்கள் தி.மு.க. வினர். அது மட்டுமல்ல, இதுவரை இலங்கைத் தமிழர் தலைவர் களைப்பற்றி ஜயவர்த்தனே கூட கேவலமாகப் பேசவில்லை. அங்கே இருக்கிற சிங்களர்கள் கூட பேச மறந்ததை இங்கே இருக் கிற தி.மு.க. வினர் இலங்கை தமிழ் தலைவர்களை கேவலமாகப் பேசுவது பொருத்தம்தானா? இது என்னுடைய கருத்து அல்ல, நான் சொல்லவில்லை, அவர்கள் நடத்துகின்ற முரசொலி பத்திரி கையில் வந்திருப்பதை நான் உங்களுக்கு எடுத்துக்காட்ட விரும்பு கிறேன்.

''ஐ கோர்ட்'' முரசொலி 19—10—83 இலங்கையிருந்து வரு கின்ற தமிழர் தலைவர்கள் இந்திய அரசை இந்தப் பிரச்சினை யில் வற்புறுத்த வேண்டிய அளவிற்கு வற்புறுத்தவில்லை என்பது எனக்குள்ள குறையாகும். அதற்கு மாறாக இந்திய அரசும், தமிழக அரசும், அந்தத் தலைவர்களை தங்களுடைய அரசியல் ஆதாரத்திற்காகப் பயன்படுத்திக் கொள்ள முயற்சிப்பதாகத் தெரிகிறது. அதற்கு அந்தத் தலைவர்கள் பலியாகாமல் இருந் தால் தான் இலங்கை தமிழர்களுக்கும், இந்திய வம்சாவழித் தமிழர்களுக்கும், எதிர்காலத்தில் நிரந்தரமான நல்வாழ்வும் பாதுகாப்பும் ஏற்படும், என்று நான் நம்புகிறேன்.'' என்று அவர் பேசியிருக்கிறார். ஆக இலங்கைத் தமிழர் தலைர்கள், சுய மாகத் சிந்திக்காதவர்கள். சுயபுத்தி கிடையாது. அவர்கள் பகடை காய்களாகப் பயன்படுத்தப்படுகிறார்கள் என்று இலங் கைத் தலைவர்களை சொன்னது தி.மு.க. தலைவர் தான் என் பதை இந்த நேரத்தில் நான் அறுதியிட்டுக் கூற விரும்புகிறேன். (கூச்சல்).

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. எஸ். ஜெகத்ரட்சகன்) :** தயவு செய்து அனைவரும் உட்காருங்கள். உறுப்பினர் பேசிய பிறகு நீங்கள் பேசலாம்.

**திரு. கோ. விஸ்வநாதன் :** இந்தப் பிரச்சினையில் தனிமைப் படுத்திவிட்ட காரணத்திற்காகத்தான் தி.மு.க. இன்றைக்கு விரக்தி அடைந்திருக்கிறது என்பதற்காகத்தான் நான் சொல்ல வந்தேன்.

திரு. துரைமுருகன் : பாயின்ட் ஆப் ஆர்டர். இலங்கைத் தமிழர் தலைவர்கள் மத்திய அரசை இன்னும் அதிகமாக வற்புறுத்தியிருக்க வேண்டும் என்பதையே திராவிட முன்னேற்றக் கழகம் இலங்கைத் தமிழர் தலைவர்கள் மீது பெரிய குற்றம் சாட்டிவிட்டதாகச் சொன்னார், அங்கத்தினர். ஆனால் ஆளும் கட்சியைச் சேர்ந்த அமைச்சர், தொண்டமான் அமைச்சராக இருக்கிறாரா; இல்லை, ஜயவர்தனாவின் தோட்டியாக இருக்கிறார் என்று மிக இழித்தும், பழித்தும் பேசியிருக்கிறார். அதையும் சேர்த்து அவர் சொல்லியிருக்க வேண்டும் என்று நான் கூறுகிறேன்.

திரு. கோ. விஸ்வநாதன் ; நான் சொல்லவந்ததை நண்பர் துரைமுருகன் அவர்கள் மறுக்கவில்லை என்பதை மறுபடியும் அவர் உறுதிபடுத்தியிருக்கிறார்கள். இலங்கைத் தமிழர்த் தலைவர்களை தி.மு.க. தலைவர் கேவலமாகப் பேசியிருக்கிறார் என்று சொன்னேன். அதை அவர்களே ஒப்புக் கொண்டு விட்டார்கள். தலைவர் அவர்களே, அழுகின்ற குழந்தையைச் சமாதானப்படுத்த சில தாய்மார்கள் பக்கத்துவீட்டுப் பையனைப் போட்டு அடிப்பார்கள். அதுமாதிரி இன்றைச்கு அழுகின்ற குழந்தையாக தி.மு.க. இருக்கிறது. அதை எப்படியாவது சமாதானப்படுத்துவதற்கு உமாநாத் அவர்கள் பக்கத்து வீட்டுப் பையன் போல் இருக்கிற எங்கள் ஆட்சியைப் போட்டு ஏன் அடிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். உமாநாத் அவர்கள் He is a very good advocate but he is handling a very weak and bad case இந்தியாவிலே பல அரசியல் கட்சிகள் இருந்தாலும் எந்த அரசியல் கட்சியும் எதிர்க்கட்சியாக நிரந்தரமாக இருப்பதில்லை, ஆளும் கட்சியாகவும் இருப்பதில்லை. இந்திய அரசிலேயே இது நடந்து கொண்டிருக்கிறது. இங்கே எதிர்க்கட்சியாக இருக்கிற மார்க்சிஸ்ட் கட்சி மேற்கு வங்கத்திலேயும் திரிபுராவிலும் ஆளும் கட்சியாக இருக்கிறது. இங்கே எதிர்கட்சியாக இருக்கிற பல கட்சிகள் ஒரு கட்டத்திலே ஆளும் கட்சியாகவும் இருந்திருக்கின்றன. எதிர்கட்சியாகவும் இருக்கின்றன. நாங்கள் இங்கே ஆளும் கட்சியாக இருக்கிறோம். டில்லியிலே எதிர்க்கட்சியாக இருக்கிறோம். ஜனதா கட்சி இங்கே எதிர் கட்சியாக இருக்கிறது. கர்நாடகத்திலே ஆளும் கட்சியாக இருக்கிறது. ஆக இப்படிபட்ட நிலை இந்திய அரசிலே இருந்து கொண்டிருக்கிறது. எனவே, இங்கே பேசும்போது மார்க்சிஸ்ட் கட்சியானாலும், மற்றக் கட்சித் தலைவர்களானாலும், அது அவரவர்கள் ஆளுகின்ற மாநிலத்திற்குப் பொருந்துமா என்றும் யோசித்துப்பார்க்க வேண்டும் என்று நான் கேட்டுச்கொள்கிறேன்.

இங்கே உமாநாத் அவர்கள் பேசிய பல விஷயங்களை நான் கூர்ந்து பார்த்தேன். இந்த விஷயங்களையெல்லாம் கல்கத்தாவிற்குச் சென்று மேற்கு வங்க சட்டசபைக்குச் சென்று, எதிர்க் கட்சியிலே உட்கார்ந்து உமாநாத் பேசியிருந்தால், அவ்வளவும் பொருத்தமாக இருந்திருக்கும். இந்த விஷயங்களை அங்கே





பசமுடியாத காரணத்தால், ஜோதிபாசுவை எதிர்த்துப் பேச முடியாது என்பதால், உமாநாத் அவர்கள் இங்கே கொட்டித் தீர்த்திருக்கிறார்கள் என்று நான் சொல்வேன். இந்த விஷயங்கள் இங்கே நடைபெற வில்லை. அங்கேதான் நடைபெற்றிருக்கின்றன. காங்கிரசினுடைய எதேச்சதிகாரத்தை, சர்வாதிகாரத்தை எதிர்காததுதான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது உள்ள குறை என்பதை அதிக நேரம் எடுத்து உமாநாத் அவர்கள் இங்கே பேசினார்கள். நான் அவர்களைக் கேட்க விரும்புகிறேன். மார்க்சிஸ்டு கட்சி முழுமையாக இந்திரா காங்கிரஸ் எந்த நேரமும் எதிர்க்கிறதா? இதற்குப் பதில் சொல்லுங்கள். மதிப்பிற்குரிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் சங்கரய்யா அவர்கள் பேசினார்கள். அவர்கள் பேசும்போது அஸ்ஸாமிலே ஏன் ஆதரித்தோம் என்பதற்கான காரணத்தைச் சொன்னார்கள், காரணத்தைச் சொன்னார்களே தவிர, ஆதரித்தோம் என்பதை மறுக்கவில்லை. என்னுடைய குற்றச்சாட்டு அதுதான். நல்ல காரியம் செய்யும்போது நல்ல காரியத்தை ஆதரிக்கிறீர்கள். 1969—லே காங்கிரஸ் இரண்டாக உடைந்து காங்கிரஸ் (O) என்றும் காங்கிரஸ் (ஆர்) என்றும் ஆரம்பித்த அந்தக் காலத்திலே தி.மு.க.-வும் மார்க்சிஸ்டும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியும், கைவிட்டிருந்தால், இந்திரா காந்தி பிரதமராக இருந்திருக்க முடியாது.

(நண்பகல் 12-00).

ஆரம்பத்திலிருந்து தொடந்து தேவைப்பட்டபோது இந்திரா காங்கிரசை நீங்கள் ஆதரித்து இருக்கிறீர்கள் என்ற குற்றச்சாட்டைத்தான் நான் சொல்ல விரும்புகிறேன். அஸ்ஸாமில் சைகமூர் மந்திரி சபையை ஆதரித்தது மட்டுமல்ல. ஒரு விநோதமான தேர்தல் நடைபெற்றது. தேர்தலை எல்லோரும் புறக்கணித்தார்கள். 80 சதவீதத்தினருக்கு மேலே புறக்கணித்தார்கள். இந்தியாவிலேயே உள்ள பெரிய கட்சிகள் அனைத்தும், பாரதீய ஜனதாக் கட்சி, ஜனதா போன்ற கட்சிகள் எல்லாம் தேர்தலை புறக்கணித்தது, பகிஷ்கரித்தன. இந்திரா காங்கிரஸ் தேர்தலில் போட்டியிட்டது. வேறு எந்தக்கட்சியும் பங்கெடுக்காதபோது, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிதான் பங்கு எடுத்தது. ஒரு லட்சம் வாக்காளர் என்றால், 100 பேர்கள், 200 பேர்கள் ஓட்டுப்போட்டு, எம்.எல்.ஏக்களைத் தேர்ந்தெடுத்து, அந்தத் தேர்தலை இந்திரா காங்கிரசோடு ஒப்புக் கொண்டு, தேர்தலில் போட்டியிட்டு ஓரே கட்சி உங்கள் கட்சிதானே? இதை எப்படி ஜனநாயகம் என்று ஏற்றுக்கொள்வது?

அதுமட்டுமல்ல, இன்றைக்கும் அவர்கள் சொல்கிறார்கள். இந்திரா காங்கிரசுனுடைய வெளிநாட்டுக் கொள்கைகளை தானே நாங்கள் ஆதரிக்கிறோம் என்று. ஆகவே இந்திரா காந்தியின் லெபனான் கொள்கையை ஆதரிக்கிறீர்கள், பாகிஸ்தான் கொள்கையை ஆதரிக்கிறீர்கள். கிரனேடாவிலே அமெரிக்காவின் ஆதிக்கத்திற்கு இந்தியா எதிர்ப்பு, அதை ஆதரிக்கிறீர்கள். காரணம் நல்ல கொள்கையை, ஆதரிக்கிறோம் மற்றவற்றை

எதிர்க்கிறோம் என்று சொல்லுகிறீர்கள். நாங்கள் மட்டும் என்ன சொல்கிறோம். அதைத்தானே நாங்களும் செய்து கொண்டிருக்கிறோம். விற்பனை வரியை ஒழிப்போம். சேல்ஸ் டாக்சை எடுத்துவிட்டு நாங்கள் எக்சைஸ் வரியைக் கொண்டுவருவோம் என்று சொன்னார்கள். நாங்கள் கடுமையாக எதிர்த்தோம், மாநில அரசுக்கு உள்ள அதிகாரத்தைக் குறைத்து, ஸ்டேட் லிஸ்டிலே இருந்து எடுத்து கன்கரன்ட் லிஸ்டிலே போடுவோம் என்று சொன்னால் அதை எதிர்க்கிறோம். அதேபோல் அதிகாரங்கள் யூனியன் லிஸ்டுக்கு கொண்டு போகவேண்டுமென்று சொன்னால் அதை நாங்கள் எதிர்க்கிறோம். அது எப்படி தவறாகும். மாநிலத் திற்கு அதிக அதிகாரம் வேண்டுமென்று கேட்கிறோமே அது இந்திரா காங்கிரசுக்கு உடன்பாடானதா? இதிலே மார்க்சிஸ்டுகள் எங்களோடு இருப்பார்கள் என்று கருதுகிறேன். ஆக தேவை யான போது எது எது நன்மை என்று கருதுகிறோமோ, அதைச் செய்கிறோம். இந்திரா காங்கிரசுக்கு ஆதரவு கொடுத்து, எங்க ளுடைய கொள்கையை எப்போதும் விட்டுக் கொடுப்பதில்லை, தேவையான போது எதிர்க்கிறோம். அல்லது எதை ஆதரிக்க வேண்டுமென்று கருதுகிறோமோ அதை ஆதரிக்கிறோம்.

உங்களுடைய கட்சித் தலைவர் திரு. சங்கரய்யா, அவர்களுக்கு மிகத்தெளிவாகச் சொல்லவிரும்புகிறேன். நாங்கள் செய்யும்போது தவறு. நீங்கள் செய்யும்போது மட்டும் தவறில்லையா? கிராமத் திலே ஒரு பழமொழி சொல்வார்கள். மாமியார் உடைத்தால் மண்குடம், மருமகள் உடைத்தால் பொன்குடம் என்று. ஆகவே இரண்டு பேரும் ஒரே நிலையில்தான் இருந்து கொண்டிருக்கிறோம் ஆகவே ஏன் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வரவேண்டும். சரி, நீங்கள் முழுமையாக எதிர்க்கவில்லை. சில கொள்கையை ஆதரிக்கிறோம். சில கொள்கையை எதிர்க்கிறோம் என்கிறீர்கள். ஆனால் நீங்கள் இன்றைக்குப் போய் யாரோடு சேரக் போகிறீர்களோ அல்லது சேர்ந்து விட்டீர்களோ, அந்த தி.மு.க. இந்திரா காங்கிரசை நிலையாக, நிரந்தரமாக எதிர்க்கிற கட்சியா? எதிர்க்கிற சக்தியா? அப்படியானால், சொல்லுங்கள். அவர்கள் நிரந்தரமாக எதிர்க் கிறார்கள், ஆகவே நாங்கள் சொல்லுகிறோம் என்று சொன்னால் நான் ஒப்புக்கொள்ளத் தயார். நேருவின் மகளே வருக நிலை யாக ஆட்சியைத் தருக என்று சொன்னது எந்தக் கட்சி? அது மட்டுமல்லாமல் இதுவரையில் தொடர்ந்து வந்திருக்கின்ற, 3, 4 ஆண்டுக்காலத்தில் நாடாளுமன்றத்தில் பல்வேறு நிலைமை களில் எதிர்க்கட்சிகள் வெளிநடப்பு செய்திருக்கின்றன. ஆனால் தி.மு.க. இந்த இலங்கைப் பிரச்சினையைத் தவிர வேறு எந்த விவகாரத்திலே எதிர்கட்சிகளோடு சேர்ந்தது என்பதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் சொல்லட்டும், அல்லது இந்திய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் சொல்லட்டும். எல்லா விவகாரங்களோடும் இந்திரா காங்கிரசோடு முழு ஒத்துழைப்பும் [illegible] தி.மு.க. நீங்கள் எப்படி அவர்களோடு [illegible]



அது மட்டுமல்ல. நாங்கள் பாராளுமன்றத்திலே, திராவிட முன்னேற்றக் கழகத்திலே இருந்தபொழுது, ஒரு முறை, அங்கே திராவிட முன்னேற்றக் கழகத்தை பார்த்து அட்டல்பிகாரி வாஜ்பாய் அவர்கள் சொன்னார்கள், ஹெர்மெஜஸ்டிஸ் லாயல் அப்போசிசன் என்று. இன்றைக்கும் திராவிட முன்னேற்றக் கழகம் அதே நிலையிலேதான் இருந்து கொண்டிருக்கிறது. நீங்கள் எப்படி திராவிட முன்னேற்றக்கழகத்தை ஆதரிக்கப் போகிறீர்கள்?

அதுமட்டுமல்ல. சில ஆண்டுகளுக்கு முன்னால் திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றியும், அண்ணா தி.மு.க. வைப் பற்றியும் ஒரு விவாதம் வந்தபோது, டாக்டர் சுப்பிரமணிய சாமி அவர்கள் சொன்னார். தமிழ்நாட்டில் 2 தி. மு. கக்கள் இருக்கின்றன. ஒன்று, அண்ணா தி.மு.க. இன்னொன்று அம்மா தி. மு. க. என்று சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழக நண்பர்கள் உட்கார்ந்துகொண்டுதான் இருந்தார்கள், நாடாளுமன்றத்திலே அதனுடைய தலைவர் எழுந்து அதற்கு பதில் சொன்னார். அவர் கோபப்படவில்லை. வெட்கப்பட வில்லை. அவர் எழுந்து, அதன் தலைவர் சி.டி. தண்டபாணி அவர்கள் எழுந்து, அம்மா தி.மு.க. என்று சொல்வதிலே நாங்கள் பெருமைப் படுகிறோம் என்று சொன்ன தி.மு. கவையா, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும் ஆதரிக்கப் போகிறது? அதைத்தான் நான் கேட்க விரும்புகிறேன்.

இன்னொன்றையும் நண்பர் உமாநாத் அவர்கள் கேட்டார் கள். தமிழக முதல்வர் அவர்கள் ஏன் காஷ்மீர் மாநாட்டிற் குப் போகவில்லை அங்கே சென்ட்ரல்-ஸ்டேட் ரிலேசன்சிப் பற்றி பேசினார்களே என்று உமாநாத் அவர்கள் மிகத் தீவிரமாகப் பேசினார்கள். நான் அவர்களை கேட்டுக் கொள்கிறேன். சரி, நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் போகவில்லை. அதனால் அவர்மீது உங்களுக்குக் கோபம். நீங்கள் போய்ச் சேரப் போகிறீர்களே, அவர் ஏன் போக வில்லை? ஏன் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் காஷ்மீர் மாநாட்டுக்குப் போகவில்லை? யாரோ இரண்டு பேரை அனுப்பிவைத்தார்களே, ஏன் அவர்கள் போகவில்லை என்று கேட்க விரும்புகிறேன். (குறுக்கீடு).

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : தலைவர் அவர்களே, இங்கே நான் பேசினாலும், அல்லது எங்களுடைய கட்சித் தலைவர் அன்பில் அவர்கள் பேசினாலும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே பேசுவதாகத்தான் அர்த்தம். எங்களு டைய கட்சியின் சார்பிலே எங்களுடைய பொருளாளர் சாதிக் அவர்களும், நாடாளுமன்றக் குழுவின் தலைவர் திரு. சி. டி. தண்டபாணி அவர்களும் அங்கே போய் பேசி யிருக்கிறார்கள். அதைப் பார்க்காமல் உறுப்பினர் ஏன் பேசவேண்டும். (குறுக்கீடு).

திரு. கோ. விஸ்வநாதன் : மாற்றுத் தலைவர் அவர்களே, நான் கேட்டது யார் போனார்கள் என்பது பற்றி அல்ல, யார் போகவில்லை என்பது பற்றித்தான் கேட்டேன். திராவிட முன்னேற்ற கழகத் தலைவர் காஷ்மீர் மாநாட்டுக்கு போகாததன் மர்மம் என்ன என்று அவருடைய வார்த்தை யிலேயே கேட்கிறேன். என்ன காரணம்?

He wants t keep his optio s open.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : எங்களுடைய கட்சியின் சார்பிலே எங்களுடைய பிரதிநிதிகள் கலந்துக் கொண்டிருக் கிறார்கள். ஆனால், நாங்கள் வருகிறோம் என்று சொல்லி விட்டு, நீங்கள் யாருமே போகவில்லையே. நாவலரை யாவது அனுப்பியிருக்கலாமே, ஒருவருமே போகவில்லையே, அதன் காரணம் என்ன?

திரு. கோ. விஸ்வநாதன் : பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, இங்கே அவர்கள் பதிலை சொல்லும்போது இரண்டு பேர்களை அனுப்பிவைத்தோம் என்று சொன்னார்கள். யாரோ இரண்டுபேரை அனுப்பி வைத்துவிட்டு, முக்கியமான தலைவர் போகாததன் மர்மம் என்ன என்று தான் கேட்க விரும்புகிறேன்?

அடுத்து, இங்கே இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்த நண்பர் உமாநாத் அவர்கள், இது தொழிலாளர் விரோத அரசு என்று குறிப்பிட்டார்கள். நன்பர் உமாநாத் அவர்கள் நன்றாகப் பேசத் தெரிந்தவர்கள். நீண்டகாலமாகவே, 17, 18 ஆண்டுக்காலமாகவே எனக்கும் அவருக்கும் தொடர்பு உண்டு. பொதுவாக அவர் வேக மாகப் பேசும்போது எதை வேண்டுமானாலும் பேசுவார். கம்யூனிஸ்ட் கட்சியினரே, பாக்கெட்டிலே ரப்பர் ஸ்டாம்பு களை வைத்திருப்பார்கள். அவைகளிலே, பிற்போக்கு என்று எழுதியிருக்கும், பூர்ஷுவா என்று எழுதியிருக்கும், தொழி லாளர் விரோத அரசு என்று எழுதியிருக்கும். யாரையாவது பிடிக்கவில்லை என்றால், அதில் ஒன்றை எடுத்து, அவர்கள் முதுகின்மீது குத்திவிட்டுப் போய்விடுவார்கள். அதைத்தான் உமாநாத் அவர்களும் செய்திருக்கிறார்கள்.

ஒன்றை நான் குறிப்பிட விரும்புகிறேன். எத்தனையோ ஸ்டிரைக்குகள் நம்முடைய மாநிலத்திலே நடைபெற்று இருக் கின்றன. என்னுடைய தலைமையிலே கூட ஒரு ஸ்டிரைக்கை நடத்தி வருகிறேன். ஏன் நடத்துகிறாய் என்று கேட்கக் கூடும். வேறு வழியில்லாமல் தான் நடத்துகிறேன். அது வேறு விவகாரம். ஆனால் மேற்கு வங்காளத்திலே எப்படி ஸ்டிரைக் நடக்கிறது என்று ஒன்றை மட்டும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.





தமிழக அரசின் அணுகுமுறைகளையும், மேற்கு வங்க அரசின் அணுகுமுறைகளையும் பாருங்கள். தொழிலாளர் விரோத அரசு மேற்கு வங்கமா? அல்லது தமிழகமா என்பது தெரியும். மேற்கு வங்க அரசை குறை சொல்லவேண்டும் என்று நான் சொல்லவில்லை. அவர்கள் நன்றாக நீடூழி இருக்கட்டும். அங்கே நம்பிக்கையில்லாத் தீர்மானம் வராமல் ஒழுங்காகவே நடக்கட்டும். ஆனால் மாண்புமிகு உமாநாத் அவர்களுக்கும், கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்களுக்கும் ஒன்றை ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

மேற்கு வங்கத்திலே, ஜூனியர் டாக்டர்கள் ஸ்டிரைக் செய்தார்கள். அந்த ஸ்டிரைக் நடவடிக்கைகளில் அரசு எப்படி கையாண்டது? அந்த அணுகுமுறைகள் என்ன என்பதை மட்டும் உங்கள் முன்னாலே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். ஸ்டிரைக் ஆரம்பித்த உடனேயே அவர்கள் செய்த முதல் காரியம், அங்கேயிருக்கிற கம்யூனிஸ்ட் கட்சியினுடைய, இடதுசாரி கூட்டணியினுடைய தலைவர் சரோஜ் முகர்ஜி அவர்கள், கூட்டணியின் கூட்டத்தை கூட்டினார்கள். அதிலே முடிவு எடுத்தார்கள். கட்சித் தொண்டர்கள் எல்லாம் இனி இதிலே ஈடுபடவேண்டும் என்றும், யார் யார் அரசாங்கத்திற்கு எதிராக இருக்கிறார்களோ, அதாவது பிளாக் லெக்ஸ் (Black legs ) என்று சொல்லப்படும் கருங்காலிகளை கண்டு பிடித்து, ஸ்டிரைக்கை முறியடிக்கவேண்டும் என்றுதான் முதல் முடிவாக எடுத்தார்கள். அடுத்து, தோழர்களை, கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்களை திரட்டி வேண்டிய காரியங்களிலே ஈடுபடுங்கள் என்று சொன்னார்கள். அதைப் பற்றி என்ன கருத்து இருக்கிறது என்று குறிப்பிட விரும்பு கிறேன். "News Today", dated 13th October 1983-இல் ஜோதிபாசுவைப் பற்றிப் குறிப்பிட்டு எழுதியிருக்கிறார்கள். The way he is handling the doctors' strike in 18 hospitals of his State does not mark him out as being any different from an Indira Gandhi or a Congress (I) Chief Minister, both classed by him as plain bourgeois creatures. என்று சொல்விட்டு அவர்கள் என்ன செய்தார்கள் என்பதையும் குறிப்பிட்டிருக்கிறார்கள். He has issued an appeal to his party workers to expose the anti-people character of the strike by doctors. In other words, the Marxist party cadre are being mobilised in defence of a Government which is faced with demands that have become routine exercises in India's public life. சரி தோழர்களே போராடுங்கள் என்று சொன்னார்கள். தோழர்கள் போராடினார்கள். பிற்பாடு என்ன செய்தார் கள் தெரியுமா? CPI (M) partymen have taken the cue in the correct spirit and are acting upto expectations. The house of Dr. Debashis Dutta, President of All-Bengal Junior Doctors Federation, was gheraoed by CPI(M) workers from 7 a.m. to 11 a.m. Monday. The Doctor, according to a Calcutta daily, made good his escape by the backdoor and informed his colleagues about what he described as a fearful raid at his residence.

[திரு. கோ. விஸ்வநாதன்] [1983 நவம்பர் 11

ஆக என்ன நடந்தது? அங்கே இருக்கிற கட்சித் தோழர்கள்
4 மணி நேரம் அந்த டாக்டர் வீட்டை கேரோ செய்து
புழக்கடைப் பக்கமாக பின்பக்கமாக அவர் தப்பியோடி
விட்டார் என்ற செய்தி கல்கத்தாவிலிருந்து வந்திருக்கிறது.
நான் இங்கே இருக்கிற கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்களைக்
கேட்க விரும்புகிறேன். அங்கே இந்திய கம்யூனிஸ்ட் கட்சி
நேரடியாக அந்த அரசாங்கத்திலே பங்கேற்கவில்லையானா
லும் இடதுசாரி கூட்டணியிலே அது உறுப்பினராக இருக்கிறது,
தவறு செய்வது மார்க்சிஸ்ட்டானாலும் அந்தத் தவறை
தாங்கிக்கொள்கிற இடத்திலே இந்திய கம்யூனிஸ்ட் கட்சி
இருக்கிறது. ஆகவே இரண்டு பேர்களையும் சேர்த்தே
நான் கேட்க விரும்புகிறேன், தொழிலாளர் விரோத அரசு
என்கிறீர்களே, இங்கே ஸ்டிரைக் நடந்திருக்கிறது, எப்போ
தாவது நம்முடைய அனைத்திந்திய அண்ணா திராவிட
முன்னேற்றக் கழகத் தோழர்கள் சென்று மறியல் செய்
திருக்கிறார்களா? கேரோ செய்திருக்கிறார்களா? அது மட்டு
மல்ல லத்தி சார்ஜ் செய்திருக்கிறார்களா டாக்டர் மீது?
அங்கே செய்திருக்கிறார்கள். ஆகவே சரியான அணுகுமுறை
இங்கேதான் இருக்கிறது. தொழிலாளர் விரோத அரசு
என்பதை அவர் போய் கல்கத்தாவிலே பேசவேண்டும், அங்கே
பேசவேண்டியதை இங்கே பேசிவிட்டார் என்று நான் கருது
கிறேன்.

(பிற்பகல் 12—10)

விலைவாசி உயர்வை எதிர்த்து அங்கே போராட்டம்
நடந்தது. அங்கே எதிர்க்கட்சியாக இருப்பது காங்கிரஸ்
கட்சி. அவர்கள் எவ்வளவு பெரிய கட்சியாக டெல்லியில்
ஆண்டுகொண்டிருந்தாலும் காங்கிரஸ்காரர்கள் பட்ட உதை
சொல்லவே முடியாது. 4 பேர்கள் செத்துப் போனார்கள்
துப்பாக்கி சூடு நடைபெற்றது. அப்போது ஜோதிபாசு
சொன்னார்கள், விலைவாசி உயர்வு எதிர்ப்புப் போராட்டத்தை
இங்கே நடத்துவதிலே அர்த்தமே கிடையாது, விலை
வாசிக்கும் மாநில அரசுக்கும் சம்பந்தமே கிடையாது,
டெல்லியிலேபோய் நடத்துங்கள் என்று சொன்னார்கள்.
அதைத்தான் நான் இங்கே இருக்கிற நண்பர்களுக்கும் சொல்ல
விரும்புகிறேன். இங்கே எதற்காக கலெக்டர் ஆபீஸ்
முன்னாலே தகராறு, ஆர்ப்பாட்டம். அதைப்போய் டெல்லி
யில் செய்வதுதானே, இங்கே இருக்கிற தி.மு.க. தோழர்கள்
கம்யூனிஸ்ட்களையும் நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

தொழிலாளர் விரோத அரசு என்று சொன்னீர்கள்.
நாங்கள் நிறைவேற்றி இருக்கிற தொழிலாளர்களுக்குச் சாதக
மான சட்டங்களைப்போல் வேறு எந்த அரசும் நிறை
வேற்றியிருக்க முடியாது. அவ்வளவு சட்டங்களைக் கொண்டு
வந்தோம். இந்தியாவிலேயே முதன்முதலாக இன்றைக்கு



1983 நவம்பர் 11] [திரு. கோ. விஸ்வநாதன்]

இரண்டு நாட்களுக்கு முன்னதாக தொழிலாளர் நலத் துறை
அமைச்சர் அவர்கள் ஒரு சட்டத்தைக் கொண்டுவந்தார்கள்.
1981 இல் ஒரு முடிவை சுப்ரீம் கோர்ட் சொன்னது. அதற்காக
கிராஜுவிட்டி திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம்.
வேறு எந்த மாநிலமும் இன்னமும் கொண்டுவரவில்லை.
ஆக்சுவலி எம்ப்ளாய்ட் என்று சொன்னால் 240 நாட்கள்
வேலை செய்வார்களானால் ஆக்சுவலி எம்ப்ளாய்ட் என்பது
ஆக்சுவலி ஒர்க்கட் ஆக இருக்கும் என்று ஒரு முடிவைச்
சொன்னார்கள். அதிலே பல தொழிலாளர்கள் பாதிக்கப்
பட்டார்கள். அதைக் தடுத்து நிறுத்துவதற்காக நாம் திருத்தச்
சட்டம் கொண்டு வந்திருக்கிறோம். அது என்ன, இன்
எம்ப்ளாய்மென்ட் அன்டர் ஏன் எம்பிளாயர் என்று இருந்தால்
கூட போதும் அவர் சஸ்பென்ஷனிலே இருந்தால்கூட
பாதிக்கப்பட மாட்டார், டெர்மினேட் செய்யாத வரையில்
தொழிலாளர்களைப் பாதுகாக்கக்கூடிய அளவில் அருமையான
சட்டம் கொண்டுவரப்பட்டிக்கிறது. அதைப்போலவே கப்
சிஸ்டன்ஸ் அலவன்ஸ் சட்டம் என்ற முற்போக்கான
சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். சுமைதூக்கும்
தொழிலாளர்களுக்குப் பாதுகாப்புச் சட்டம், கட்டடத்
தொழிலாளர்களுக்குப் பாதுகாப்புச் சட்டம், சைத்தறித்
தொழிலாளர்களுக்குப் பாதுகாப்புச் சட்டம் இவ்வளவையும்
கொண்டுவந்தோம். அது மட்டுமல்ல, இன்டஸ்ட்ரியல் டிஸ்
பியூட்ஸ் ஆக்டிலே திருத்தங்கள் வேண்டுமென்று தொழிலாளர்
நலத்துறை அமைச்சர் எதிர்க்கட்சியிலே இருந்தபோது கேட்டு
வந்திருக்கிறார், இப்போது நாம் அதை கொண்டுவந்திருக்
கிறோம். ஸ்கிரினிங் கமிட்டி என்ற கமிட்டியொன்று தி.மு.க.
ஆட்சியின்போது இருந்தது. பப்ளிக் அண்டர்டேக்கிங்ஸ்
கோவாப்ரேடிவ்ஸ் இவைகளுக்காக இருந்தது. அதை ரத்து
செய்ய வேண்டுமென்று நாமும் கேட்டுக் கொண்டிருந்தோம்,
இங்கே இருக்கிற கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்களும் கேட்டிருக்
கிறார்கள். இன்றைக்கு அரசாங்கம் ஏற்றுக்கொண்டு
ரத்து செய்துவிட்டது. இது தொழிலாளர் நல விரோத
அரசா? தொழிலாளர்களைப் பாதுகாப்பதற்கு என்று ஒரு
அரசு இருக்கிறது என்றால் அது இந்த அரசுதான். ஆனால்
மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்களும், இந்தியக்
கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்களும் தி.மு.க.வின் தயவு
வேண்டும் என்பதற்காக இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்
தைக் கொண்டுவராதீர்கள் என்று சொல்கிறேன். நீங்கள்
சுயமாக செயல்படவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.
அதுமட்டுமல்ல, ஊழலைப்பற்றியெல்லாம் குறிப்பிட்டார்கள்.
என்ன ஊழல் என்று நான்யோசித்துக் கொண்டிருந்தேன்.
என்ன சொல்கிறார்கள் என்று பார்த்தேன். திரு. உமாநாத்
சொல்கிறபோது இங்கொன்றும் அங்கொன்றுமாக சாலை
வேலைகளைக் குறிப்பிட்டு அந்த சாலைகள் சரியாகப்
போடவில்லை என்றும் அல்லது பில்லை போடுவதிலே
தவறு இருந்தது என்றும் எடுத்துச் சொன்னார்கள்.

நான் அவரை வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்வது
எங்களுடைய அரசில் வேலைகள் நடக்கும்போது, திட்டங்கள்
நடைபெறும்போது எந்தத் தவறும் நடைபெறவில்லை என்று
நான் சொல்லமாட்டேன். நம்முடைய அரசு மிகப் பெரிய
அரசு, திட்டங்களைப் போடுகிறோம், வறட்சி நிவாரணப்
பணிகளாக இருந்தாலும் சரி, தன்னிறைவுத் திட்டமானாலும்
சரி, நாம் போடுகிற திட்டங்கள் ஏதோ 10 ஊர்கள், 20
ஊர்களிலோ நடைபெறுவது அல்ல, தமிழ்நாடு முழுவதும்
இருக்கிற 12 ஆயிரத்துச் சொச்சம் கிராமங்களிலே நூற்றுக்
கணக்கான நகராட்சிகளிலே நடைபெறுகிற திட்டங்களைப்
போடுகிறோம். ஆகவே சிறு தவறுகள் எங்கெங்கு நடந்
தாலும் நடவடிக்கை எடுப்பதற்கு இந்த அரசு தயாராக
இருக்கிறது.

After all human being is imperfect என்று
சொல்வார்கள். பெர்பக்ட்டாக இருந்தால் நாம் கடவுளாகி
விடுவோம் Human beings are imperfect. God only is perfect
ஆகவே இன்றைக்கு தவறுகள் நடைபெறுகிறபோது எங்கே
இருக்கிறது என்று சொல்லுங்கள். நடவடிக்கை எடுக்கத்
தயாராக இருக்கிறோம். ஆனால் அதிகாரிகள் தவறு செய்கி
றார்கள் என்று இந்த மன்றத்திலே அதிகம் பேர்கள் பேசி
யதை நான் பார்த்ததில்லை. ஆளுங்கட்சியினர் தவறு
செய்கிறார்கள் என்று கூறுகிறார்கள், அதற்கும் நாங்கள்
தயாராக இருக்கிறோம். சட்டமன்றத்திலே ஆளுங்கட்சியைச்
சேர்ந்த எம். எல். ஏ. க்கள் ஆகிய நாங்கள் யாராவது
அரசாங்கப் பணத்தை எடுத்து விழுங்கிவிட்டோம், ஏப்பம்
விட்டோம் என்று யாராவது குறிப்பிட்டுச் சொல்லுங்கள்
நடவடிக்கைக்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். நடவடிக்கை
எடுப்பதற்கு எங்கள் தலைவர் தயாராக இருக்கிறார்.
ஏதாவது சொல்லவேண்டும் இந்த அரசாங்கத்தின்மீது குறை
சொல்லவேண்டும் என்பதற்காக தயது செய்து சொல்லாதீர்
கள்.

தன்னிறைவுத் திட்டத்தில் எவ்வளவு வேலைகளை
செய்து இருக்கிறோம். 250 கோடி ரூபாய் செலவழித்து
இருக்கிறோம். நான் கணக்குப் பார்த்தேன் 45 ஆயிரம்
வேலைகளை எடுத்து செய்து இருக்கிறோம். 27 ஆயிரம்
கிலோ மீட்டர் சாலைகளை போட்டிருக்கிறோம். 27 ஆயிரம்
கிலோ மீட்டர் சாலை போடும்போது ஏதாவது ஒன்று
இரண்டு இடத்தில் தவறு நடந்து இருக்குமானால் அதற்காக
27 ஆயிரம் கிலோ மீட்டர் சாலையும் தப்பு என்று சொல்
வதா? நண்பர் துரைமுருகன் அவர்கள் சொன்னார்கள்,
பார்த்தீர்களா, உமாநாத்தே சொல்லிவிட்டார் ஒரு பானை
சோற்றுக்கு ஒரு சோறு போதாதா பதம் பார்ப்பதற்கு
என்று சொன்னார்கள். நான் அவர்களை கேட்டுக்கொள்ள
விரும்புகிறேன், படிக்காதவர்கள் வேண்டுமானால் இப்படிப்
பேசலாம். படித்தவர்களுக்கு ஒரு வரைமுறை இருக்கிறது.





லாஜிக் படித்து இருப்பார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன்
மறந்து இருந்தால் லாஜிக் புத்தகத்தை எடுத்துப் பார்க்க
வேண்டும் அதில் Fallacy ot hasty generalsation என்று
ஒன்று உண்டு. தனியாக ஒன்றை எடுத்துக்கொண்டு அதுதான்
மொத்தத்திற்கும் பொருந்தும் என்று சொன்னால் அது தவறு.
அந்தத் தவறுக்குப் பெயர்தான் Fallacy cf hasty generalisation
என்பது. அந்த தவறை தான் திரு. உமாநாத் செய்தார்.
அந்தத் தவறை தான் இன்றைக்கு தி. மு. க. வும் செய்து
கொண்டு இருக்கிறது. தவறு என்று சொன்னால் அது
எங்கே இருந்தாலும் அதன் மீது நடவடிக்கை எடுப்பதற்கு
அரசு தயாராக இருக்கிறது. சம்பந்தப்பட்ட அமைச்சர்கள்
தயாராக இருக்கிறார்கள். எடுத்துச் சொல்லுங்கள், இன்
னார் இந்த இடத்தில் தவறு செய்தார் என்று சொன்னால்
நடவடிக்கை எடுப்பதற்கு, திருத்திக்கொள்வதற்கு நாங்கள்
தயாராக இருக்கிறோம். நாங்கள் என்றைக்குமே திருந்த
மாட்டோம் என்றோ நாங்கள் பிடித்த முயலுக்கு 3 கால்
என்றோ விவாதிக்கிற அரசு அல்ல இந்த அரசு, என்பதை
நான் எடுத்துச்சொல்ல விரும்புகிறேன்.

இன்னும் ஒன்றை சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு
உறுப்பினர் சங்கரய்யா அவர்கள் பேசும்போது சில பேர் மீது
நடவடிக்கை எல்லாம் எடுத்து இருக்கிறார்கள் என்று சொன்
னார்கள். அதை நான் பெருமையாகவே சொல்ல விரும்பு
கிறேன். கட்சி ஆட்சியில் இருப்பவர்கள் அல்ல, கட்சியில் இருக்
கின்ற அ.இ.அ.தி.மு. காரர்கள் கூட சிறு தவறுகள் செய்து
விட்டாலும் அது கட்சியையோ அல்லது ஆட்சியையோ பாதிக்
கும் என்று சொன்னால் உடனேயே நடவடிக்கை எடுக்கின்ற
ஒரே கட்சி இந்தியாவிலே அ.இ.அ.தி.மு.க. தான். இதைச்
சொல்வதில் நான் பெருமைப்படுகிறேன். வேறு எந்த கட்சியும்
அவ்வளவு சீக்கிரமாக நடவடிக்கை எடுக்கவில்லை. எங்களுக்கு
எல்லாம் பேப்பரைப் பார்த்தாலே பயமாக இருக்கும். யாருக்கு
என்ன ஆகிறதோ என்று பயப்படுகிற அளவுக்கு தலைமைக்
கழகம் இன்றைக்கு நடவடிக்கை எடுத்துக் கொண்டு இருக்கிறது.
அது இந்த ஆட்சியினுடைய நன்மைக்காகவும், தமிழகத்தினு
டைய நன்மைக்காகவும் செயல்படுகிறது என்பதை நான் பெருமை
யோடு சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஏதோ சிறு தவறுகள் இங்கு
ஒன்றும் அங்கு ஒன்றுமாக தமிழ் நாட்டில் நடைபெற்றுவிட்டது
என்பதை வைத்துக் கொண்டு அதனாலேயே இந்த திட்டம்
எல்லாம் தவறு என்று சொல்வதனால் மூட்டைப் பூச்சிக்குப்
பயந்து வீட்டைக் கொளுத்துகின்ற பைத்தியக்காரத்தனத்திற்கு
துணைப் போக வேண்டாம் என்று அருமை நண்பர்களை நான்
வேண்டி விரும்பி கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே நம்முடைய திட்டங்களைக் குறை சொல்லி பேசினார்
கள். இதில் 2 விதமாகப் பேசுகிறார்கள். ஒரு நேரத்தில் திட்
டமே தவறு என்று சொல்கிறார்கள், இன்னொரு நேரத்தில்
பேசும்போது திட்டத்தில் உள்ள குறைகளைத்தான் நாங்கள்

சொல்கிறோம், திட்டத்தை அமுல்படுத்துவதில் உள்ள குறைகளைச் சொன்னோம், திட்டத்தை சொல்லவில்லை என்று சொல்கிறார்கள். திரு. உமாநாத் அவர்கள் பேசும்போது இந்த சிவகாசி ஏரியா பற்றி குறிப்பிட்டுப் பேசி விட்டு சத்துணவுத் திட்டத்தைக் காட்டி இதை மறைக்கப் பார்க்கிறார்கள் என்று சொல்லி சத்துணவுத் திட்டம் என்பது ஒரு சாதாரண திட்டம் மாதிரியும் அதை வைத்துக் கொண்டு எதையோ நாம் மறைக்கப்போகிற மாதிரியும் நண்பர் உமாநாத் அவர்கள் சொன்னார்கள். நான் அவரை வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்வது. 35, 36 ஆண்டுகள் சுதந்திரம் வந்த பின்னால் அரசாங்கம் நடந்து இருக்கிறது. யார் ஆட்சிக்கு வந்தாலும் ஏழைகளைப் பொறுத்தவரை ராமன் ஆண்டால் என்ன? ராவணன் ஆண்டால் என்ன? என்றைக்கும் நமக்கு இருக்கிற வயிறு இருக்கிறது. நமக்கு இருக்கிற கை இருக்கிறது, நாம் உழைத்துத்தான் சாப்பிட்டு ஆகவேண்டும். எந்த அரசும் நம்மைப் பற்றி கவலைப் படுவது இல்லை என்ற எண்ணம் இருந்ததை முதன் முறையாக மாற்றி இருப்பது இந்த புரட்சித் தலைவர் அரசு என்பதை எல்லோரும் ஏற்றுக் கொண்டு ஆக வேண்டும். இன்றைக்குத் தன்னிறைவுத் திட்டத்தை கொண்டு வந்து இருக்கிறோம். அதே போல் இன்றைக்கு இலவசமாக வேட்டியும், சேலையும் கொடுக்கின்ற திட்டம், நிலம் அற்ற விவசாய கூலிகளுக்கு கொடுக்கும் திட்டம் கொண்டு வந்து இருக்கிறோம். இந்தத் திட்டம் எல்லாம் நேரடியாக பலன் போய் மக்களுக்குச் சேருகிறது. யாருக்குப் போய்ச் சேர வேண்டுமோ அவர்களுக்கு நேரடியாக போய்ச் சேருகிற திட்டங்கள். ஏதோ அங்கிருந்து காண்டிராக்ட் கேட்டு, செட்யூல் வாங்கி காண்டிராக்ட் கிட்டே கொடுத்து வேலை செய்து இடைத்தரகர்கள் சாப்பிட்டுப் போகிற திட்டங்கள் அல்ல. நேரடியாக யாருக்குப் போய்ச் சேர வேண்டுமோ அந்த பேனிபிசியரிக்குப் போய் சேருகிற திட்டம். இதில் என்ன குறையை நீங்கள் சொல்கிறீர்கள். இதிலே எங்கேயோ ஒரு ஆயா ஒரு 1/2 கிலோ அரிசி எடுத்துக்கொண்டு போய் விட்டது என்று கணக்கைச் சொல்லி சத்துணவுத் திட்டம் தப்பு என்று சொல்வதா? 67 லட்சம் குழந்தைகள் இன்றைக்கு அந்த உணவை சாப்பிட்டுக் கொண்டு இருக்கிறார்கள். இந்தத் திட்டம் நல்ல திட்டம் இல்லையா? இதில் குறைகள் இருந்தால் எடுத்துச் சொல்லுங்கள். ஆனால் திட்டமே தவறு, ஏதோ சத்துணவுத் திட்டம் என்ற மாதிரி பேசிவிட்டுப் போவதில் அர்த்தம் இல்லை. அதே போல் இன்றைக்கு 10 கோடி ரூபாய்க்கு செலவு செய்து இருக்கிறோம் நெசவாளர்களுக்கு. வேலை கிடைக்கவில்லை துணிகள் தேங்கி நின்று விட்டன. ஒரு பக்கத்தில் துணி இல்லாமல் விவசாய தொழிலாளி இருக்கிறான். இன்னொரு பக்கத்தில் துணியைத் தயாரிக்கிற நெசவாளருக்கு வேலை இல்லை. காரணம் துணி விற்கவில்லை. வாங்குகின்ற சக்தி ஏழைத் தொழிலாளிக்கு இல்லை. இன்றைக்கு புரட்சித் தலைவர் அவர்கள் அரசு 10 கோடி ரூபாய் கொடுத்து அந்தக் கைத்தறித் துணிகளை வாங்கி அங்கே நெசவாளர்களுக்கு வேலையைக் கொடுத்து விட்





டது. ஏழை விவசாய தொழிலாளிக்கு இன்றைக்கு இலவச வேட்டியையும், சேலையையும் கொடுத்துக் கொண்டு இருக்கிறது. இந்தத் திட்டத்தை பாராட்டுகின்ற நல்ல மனது ஏனோ திரு. உமாநாத் அவர்களுக்கு வரவில்லை. திரு. சங்கரய்யா அவர்களுக்கு வரவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அழகர்சாமி அவர்களுக்கு வரவில்லை. நான் அவர்களை வேண்டி விரும்பி கேட்டுக் கொள்வது நல்லதை செய்வதை பாராட்டுகிறோம் என்று இந்திரா காங்கிரஸைப்பற்றி சொல்கிறவர்கள் எங்கள் திட்டத்தை ஆதரித்து ஒரு நாலு நல்ல வார்த்தைகளை சொல்லி இருக்கக் கூடாதா?

(பிற்பகல் 12—20)

இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் இருந்தாலும் பரவாயில்லை. அதை நீங்கள் ஏற்றுக் கொண்டு சொல்லித்தான் ஆக வேண்டும். நல்ல திட்டங்கள் வரும்போது, வரவேற்கின்ற மனப்பான்மையை, தி.மு.க. வோடு சேர்ந்திருக்கிற காரணத்தால், நீங்கள் விட்டு விடக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, இன்றைக்கு இந்த அரசு கொண்டு வந்திருக்கிற திட்டங்கள் எல்லாம் மற்ற மாநிலங்களிலே செய்யாத திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறோம். நம்மைப் பார்த்து, மற்ற மாநிலங்கள், அரசுகள் எல்லாம் செய்ய ஆரம்பித்திருக்கின்றன. காப்பி அடிக்க ஆரம்பித்திருக்கின்றன. அவை கெட்ட திட்டங்களாக இருந்தால், மக்களுக்கு ஒத்து வராத திட்டங்களாக இருந்தால், அந்தத் திட்டங்களிலே இலாபம் இல்லை என்றால், இந்தத் திட்டங்களாலே பயன் இல்லையென்றால், இந்தத் திட்டங்களை யாருமே ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். ஆனால், நிலைமைகள் அப்படி இல்லை. இன்றைக்குப் பல அமைச்சர்கள் வந்து இந்தத் திட்டத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த திட்டம் எவ்வாறு செயல்படுகிறது என்பதைப் பார்க்கிறார்கள். ஐ.நா. சபை இதைப் பற்றி யோசிக்கிறது, யுனெஸ்கோ இதைப் பார்க்கிறது. ஆக, இந்தத் திட்டம் நல்ல திட்டம், அது இந்தியா முழுவதற்கும் பரவ வேண்டுமென்ற எண்ணம் எல்லோர் உள்ளத்திலும் இருக்கிறது. அது ஏனோ உங்கள் உள்ளத்திலே வரவில்லையே என்ற கவலைதான் எனக்கு. அப்படிப்பட்ட நல்ல உள்ளம் உடையவர்களாக கம்யூனிஸ்டுகள் மாற வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அந்தக் காலத்திலேயே 'நியூ டீலைக்' கொண்டு வந்தார் அமெரிக்க ஜனாதிபதி ப்ரான்க்ளின் ரூஸ்வெல்ட். அதைப் போல் ஒரு திட்டம், இந்தியாவில், நம் மாநிலத்தில் உள்ள சத்துணவுத் திட்டம்தான். அப்படிப்பட்ட திட்டத்தில் குறை இருந்தால் நீங்கள் எடுத்துச் சொல்லி, சீர்திருத்தம் செய்ய வேண்டும், ஏதாவது உருப்படியான திட்டங்கள் இருந்தால் ஏதாவது சொல்லி, அரசை ஆதரிக்க வேண்டுமென்று நான் வேண்டி விரும்பி கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. கோ. விஸ்வநாதன்] [1983 நவம்பர் 11

அது மட்டுமல்ல, இந்தக் குழந்தைகளுடைய பசியைப்
போக்குவதாலே அவர்களுக்கு ஏதாவது ஏற்படும் என்று நினைத்
தார்களோ, என்னவோ தெரியவில்லை. அதனால்தான், அவர்
கள் பேசும்போது ஆதரிக்கவில்லையென்று கருதுகிறேன். பொது
வாக, 'Poverty is the breeding centre for Communists.'
அப்படி இங்கு இருக்கிற எல்லா பட்டினியும் போய் வறுமையே
இல்லாமல், பசியே இல்லாமல் போய் விட்டால், கம்யூனிஸ்ட்
கட்சிக்கு ஆள் கிடைக்க மாட்டார்கள் என்ற அச்சம் அவர்களுக்கு
இருக்க வேண்டாம் என்று தயவுசெய்து நான் அவர்களைக்
கேட்டுக் கொள்கிறேன். நிச்சயமாக, நாட்டிலே இவ்வளவு
சீக்கிரமாக வறுமையை விரட்ட முடியாது, நீண்ட நாட்களா
கும். அது வரையில் உங்களுக்கு ஆட்கள் கிடைத்துக் கொண்
டிருப்பார்கள். ஆக, வசவாளர்களும் வாழ்க என்ற அண்ணாவின்
வார்த்தைகளை நான் சொல்ல விரும்புகிறேன்.

எப்படி இந்த அரசு நடைபெற்றிருக்கிறது? இதுவரையில்
நாம் எப்படிப் பணத்தைச் செலவழித்திருக்கிறோம். இதுவரை
யில் இந்த அரசு எப்படி நடைபெற்றிருக்கிறது என்பதைப் பற்றி
பல்வேறு நபர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆனாலும் இந்திய
அரசாங்கத்தினுடைய பொருளாதாரத்தை நடத்திக் கொண்
டிருக்கிற மத்திய நிதி அமைச்சர் அவர்கள் பேசியதை மட்டும்
நான் இங்கே சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன். காரணம்
அதற்கு ஒரு முன் உதாரணம் இருக்கிறது. இதற்கு முன்னாலே
யும் இங்கே அரசாங்கம் நடைபெற்று, மத்திய அரசாங்க நிதி
அமைச்சர் அவர்களும் அப்பொழுதிருந்த அரசாங்கத்தைப் பற்றி
பேசியிருக்கிறார்கள். உங்களுக்கு ஞாபகம் இருக்கும். ஒரு
காலத்தில் அங்கே நிதியமைச்சராக இருந்த திரு. சி. சுப்பிர
மணியம் அவர்கள், இங்கே வறட்சி நிவாரணப் பணி நடைபெற்ற
போது, அதிலே என்ன, என்ன நடைபெற்றன என்பதை எல்
லாம் குறிப்பிட்டு, நீங்கள், கணக்குக் கொடுத்தால் தான் திரும்
பப் பணம் கொடுப்பேன் என்று சொன்னார்கள். இங்கே ஊழல்
கள் நடைபெற்றன என்று மறைமுகமாகச் சொன்னார்கள்.
அப்படிப்பட்ட ஒரு மாநிலத்தில் இப்பொழுதிருக்கிற அமைச்ச
ரவையைப் பொறுத்தமட்டில் இப்பொழுதுள்ள மத்திய நிதி
அமைச்சர் என்ன பேசியிருக்கிறார் என்பதை உங்களுக்கு நான்
சுட்டிக் காட்ட விரும்புகிறேன். டிரவுட் ரிலீப் பண்ட் பற்றி
அவர்கள் பேசி இருக்கிறார்கள்.

"The Finance Minister said Tamil Nadu was properly utilising
the Drought Relief Fund for creating developmental and permanent
assets. The State's performance was better than that of others".

ஆக, இதுவரையில் மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்
போது, வறட்சி நிவாரணப் பணிகளில் நிரந்தரமான, அசெட்டை
உண்டாக்குவதில் தமிழ்நாடுதான் முன்னணியில் இருக்கிறது
என்று மத்திய அமைச்சர் அவர்கள் — சம்பந்தப்பட்ட அமைச்சர்
அவர்களே குறிப்பிட்டிருக்கிறார்கள் என்பதை நான் சுட்டிக்
காட்ட விரும்புகிறேன்.



1983 நவம்பர் 11] [திரு கோ. விஸ்வநாதன்]

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

மேற்கு வங்காளத்தைப் பற்றி இங்கே நிறைய பேசினார்கள்.
மேற்கு வங்காளத்தையும் தமிழ் நாட்டையும் நாம் ஒப்பிட்டுப்
பார்க்கக் கூடாது. காரணம் நாம் இங்கே ஆளுகிற கட்சியாக
இருக்கிறோம். அவர்கள் அங்கே ஆளுகிற கட்சியாக இருக்கிறார்
கள். ஆனால், மத்தியிலே நிதி அமைச்சராக இருக்கிறவர், 22
மாநிலங்களிலே, எவ்வளவு, எவ்வளவு பணத்தை, எதெதெற்கு
செலவழித்துப் பணிகளை நிறைவேற்றுகிறார்கள் என்று பார்த்து
விட்டு, அதற்குப் பின்னாலே சொல்லியிருக்கிறார்கள். எப்படி
பாரதியார் சொன்னாரோ,

" யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல்
இனிதாவது எங்கும் காணோம் "

என்று, அதுமாதிரி, பல மொழி படித்தவர்கள்தான் ஒரு மொழி
யைப் பற்றி சொல்ல முடியும். பல மாநிலங்களுடைய நிதியை
ஆராய்ந்த மத்திய நிதி அமைச்சர் மேற்கு வங்காளத்தையும்,
தமிழ் நாட்டையும் ஒப்பிட்டுச் சொன்னார்.

He said while Tamil Nadu spent Rs. 34 in every Rs. 100 on
development, U.P. spends Rs. 36, Rajasthan spends Rs. 26 and West
Bengal accounted for only Rs. 17.

ரூ. 100-லே, நம்மைவிட அதிகமாக உ.பி. 36 ரூபாயும், தமிழ்
நாடு ரூ. 34-ம், வளர்ச்சிக்காக செலவழிக்கின்றன. இராஜஸ்
தான் ரூ. 26-ஐ வளர்ச்சிக்காக செலவழிக்கிறது. மேற்கு வங்
காளம்— அருமை நண்பர் உமாநாத் அவர்களது கட்சி ஆளுங்
கட்சியாக இருக்கிற மேற்கு வங்காளம்—வெறும் ரூ. 17 தான்
செலவழித்திருக்கிறார்கள் என்று மத்திய நிதி அமைச்சர் அவர்கள்
குறிப்பிடுகிறார்கள்.

ஆகவே தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் நல்ல நிர்வாகம்
நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. என்ன தவறு இங்கே வந்
திருக்கிறது என்று சொல்லுங்கள். அவர்கள் சொல்கிறார்கள்.
நிர்வாகம் வேகமாக போகவில்லை என்ற குற்றச்சாட்டைச் சொல்
கிறார்கள். நான் அவர்களுக்குச் சொல்கிறேன், நிர்வாகம் வேக
மாக நடைபெற வேண்டுமென்றால் ஆளும் கட்சியின் ஒத்
துழைப்பு இருந்தால் மட்டும் போதாது; எதிர்க் கட்சிக்கும்
அதிலே பங்கு இருக்கிறது. ஆளும் கட்சி, எதிர்க்கட்சி இரண்டும்
சேர்ந்தால் தான் ஜனநாயகம். அதைத்தான் அண்ணா அவர்கள்
சொன்னார்கள். மாற்றாரை மதிக்க வேண்டுமென்று சொன்
னார்கள். அதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். நீங்கள்
நல்ல கருத்துக்களை, திருத்தங்களைச் சொல்லுங்கள்; குறைகள்
இருந்தால் சொல்லுங்கள் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்
கிறோம். ஆனால் வேறு காரணம் இல்லாமல் எதிர்க்க வேண்டு
மென்று கண்மூடித்தனமாக குருட்டுத் தனமாக, எதிர்ப்புத்

தெரிவிக்காதீர்கள் என்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.
நாள் தோறும் போராட்டமா ? எத்தனை போராட்டங்கள் வரு
ஷத்திற்கு என்று அன்றைக்குக் கேட்டேன். நம்முடைய முதல்
அமைச்சர் அவர்கள் 500 போராட்டங்கள் நடைபெற்றிருக்கிறது
என்று சொன்னார்கள். அதற்கு உடனே எதிர்க்கட்சித் தலைவர்
சொன்னார்கள். எங்கே பட்டியலை வெளியிடுங்கள் என்று கேட்
டிருக்கிறார்கள். அந்த பிகர்ஸ் ஏறத்தாழ இருந்தாலும் 450
என்பது 460 ஆக இருந்தாலும் சரி அல்லது 500 இல்லாமல்
550 ஆக இருந்தாலும் நான் ஏற்றுக் கொள்ள தயாராக இருக்
கிறேன். நீங்கள் பட்டியலை வெளியிடுங்கள். எவ்வளவு
போராட்டங்கள் உண்மையாக நடைபெற்றிருக்கிறது என்று ;
எவ்வளவு போராட்டங்களை அறிவித்திருக்கிறீர்கள் என்பதை
முன்னாள் முதலமைச்சர் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர்
வெளியிடட்டும். வெளியிட்டால் அதற்குப் பிறகு நாட்டு மக்
களுக்குத் தெரியும். இவ்வளவு போராட்டங்களைச் சந்தித்தால்
அரசு எப்படி முழுமையாக செம்மையாக வேகமாக செயல்பட
முடியும். ஆகவே போராட்டங்களை சந்திப்பதற்கே சரியாக
இருக்கிறது. அதையும் மீறித்தான் இந்த அரசாங்கம் நல்ல முறை
யில் நடந்துக் கொண்டிருக்கிறது ; அதையும் மீறித்தான் சன்
னிறைவுத் திட்டத்தை நடத்திக் கொண்டிருக்கிறோம் ; அதை
யும் மீறி தான் சத்துணவுத் திட்டத்தை நிறைவேற்றிக் கொண்
டிருக்கிறோம். இவ்வளவு நல்ல திட்டங்களையும் இந்த 500
போராட்டங்களையும் மீறி தான் நிறைவேற்றிக் கொண்டிருக்
கிறோம். கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்களை கேட்க விரும்பு
கிறேன். மேற்கு வங்காளத்தில் இப்படியா போராட்டங்களை
நடத்திக் கொண்டிருக்கிறார்கள் ? காங்கிரஸ் கட்சி போராட்டம்
நடத்தாது. அவர்கள் சுதந்திர போராட்ட காலத்தில் போராட்
டங்களை நடத்தி நடத்தி ஓய்ந்து போன கட்சி. ஆசவே அவர்
கள் போராட்டம் நடத்த மாட்டார்கள். சில குறைகளை தான்
அவ்வப்போது சொல்வார்கள். அவர்களுக்கே வேகம் வந்து கல்
கத்தாவில் போராட்டம் நடத்தினார்கள். அதைத்தான் பத்திரி
கையிலே சுட்டிக் காட்டினார்கள். அதையே மேற்கு வங்காளத்
திலே தாங்கிக் கொள்ள முடியவில்லை. இங்கே நூற்றுக் கணக்
கான போராட்டங்கள் நடக்கின்றன. நாங்கள் என்ன செய்திருக்
கிறோம். காலையிலே பிடித்து மத்தியானம் சாப்பாடு போட்டு
மாலையில் வீட்டிலே கொண்டு போய் விடுகிறோம். இப்படி
புரட்சித் தலைவர் அவர்கள் அரசு செய்கிற காரணத்தாலே
போராட்டங்களை நடத்துகிறார்கள். ஆனால் மேற்கு வங்காளத்
தில் என்ன நடைபெறுகிறது ? ஒரு கைதியை மற்ற மூன்று கைதி
களுடன் கோர்ட்டிற்கு கொண்டு வருகிறார்கள். கோர்ட்டிலே
அந்தக் கைதியை பூட்ஸ் காலால் மிதித்து அடித்ததில் அந்த
கைதி செத்து விடுகிறான். இப்படி மேற்கு வங்கத்தில் நடை
பெற்றிருக்கிறது. இங்கே அப்படி நடந்தால் என்ன ஆகும் ?
நாங்கள அப்படிச்செய்ய மாட்டோம். அப்படிப்பட்ட அணுகு
முறையை என்றைக்குமே இந்த அரசு ஏற்றுக் கொள்ளாது.
போலீஸ் இலாகாவிற்கும் அப்படிப்பட்ட அணுகு முறை வராது.





அப்படிப்பட்ட அரசியல் நாகரீகத்தை கடைப்பிடிக்கிற இந்த
அரசை தயவு செய்து நீங்கள் திராவிட முன்னேற்றக்
கழகத்துடன் சேர்ந்து குருட்டுத்தனமாக, கண்மூடித்தனமகா,
எதிர்க்காதீர்கள் என்று கம்யூனிஸ்ட் நண்பர்களுக்கு வேண்டுகோள்
விடுக்கிறேன். அவர்களுக்கு இன்றைக்கு பிரச்னைகள் இருக்கக்
கூடும். எதிர்காலம் என்னவாகும் என்ற எண்ணம் இருக்சத்தான்
செய்யும். காரணம் அவர்களும் மனிதர்கள்தானே. எதிர்
காலத்திலே எப்படி இருச்கும் ? இன்றைக்கு இருக்கிற அண்ணா
திராவிட முன்னேற்றக் கழகத்தின் தோழமை போய்விட்டால்
நாம் சட்டசபைக்கு எப்படி வருவது என்பது எல்லோருக்கும்
இருக்கும் கவலை அது இயற்கை. அதேபோன்று எனக்கும் இருக்
கும். தேர்தலுக்குச் சீட்டு கிடைக்க வேண்டுமேயென்று எங்க
ளுக்கு கவலை. சீட்டு கிடைக்கலாம், தேர்தலில் நிற்கலாம்.
ஆனால், ஜெயிக்க வேண்டுமே என்று அவர்களுக்குக் கவலை.
இந்த சர்க்காரின் பதவிக் காலம் இன்னும் 19 மாதங்கள் இருக்கிற
போது நம்பிக்கையின்மைத் தீர்மானத்தைக் கொண்டு வந்து எதிர்
காலத்தை கெடுத்துக்கொள்ள வேண்டாம் என்று சொல்ல விரும்பு
கிறேன். அதற்கு ஒரு உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன்.
1972-லிருந்து புரட்சித் தலைவரை கண்மூடித்தனமாக எதிர்த்
தவர்கள் என்னவாகி இருக்கிறார்கள் என்பதை தயவு செய்து
பாருங்கள். (we have to learn from others experience) வி ஹேவ் டு
லேர்ன் ப்ரம் அதர்ஸ் எக்ஸ்பீரியன்ஸ். ஒவ்வொன்றும் தனக்கே
தெரியவேண்டுமென்று நெருப்பிலே போய் சுட்டு, அதற்குப் பிறகு
தான் சுடும் என்று தெரிந்துகொள்ள வேண்டிய அவசியம் இல்லை.
பக்கத்திலே இருப்பவர்கள் கை வைத்து அவர்களுக்கு சுடுவதைப்
பார்த்தே தெரிந்து கொள்ளலாம். திராவிட முன்னேற்றக் கழ
கம் என்னவாயிற்று ? அவர்கள் ஓகோ என்று இருந்த கட்சி.
நாங்கள் எல்லாம் அங்கே இருந்தோம். 150-க்கு மேலே
எம். எல். ஏ.க்கள் இந்த சட்டமன்றத்திலே உட்கார்ந்து இருந்
தார்கள். எதிர்க்கட்சி சின்ன எதிர்க்கட்சியாகத்தான் இருக்கும்.
இன்றைக்கு என்ன நிலைமை ஆகியிருக்கிறது ? 150-லே ஆரம்
பித்தவர்கள் புரட்சித் தலைவரை எதிர்த்து, சரிந்து, சரிந்து,
விழுந்து, விழுந்து இன்றைக்கு முப்பதா அல்லது முப்பத்தொன்றா
என்று கேள்விக்குறி எழுப்புகிற அளவிற்கு வந்திருக்கிறார்கள்.
ஒரு பழமொழி சொல்வார்கள். கழுதை தேய்ந்து கட்டெறும்
பாயிற்று என்று. நான் கட்சியைப் பற்றி குறிப்பிடவில்லை ;
பழமொழியைத்தான் சொல்கிறேன். அந்த நிலைக்கு நீங்களும்
தள்ளப்பட்டு விடக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12—30)

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களோடும், இந்தியக்
கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களோடும் நான் பாராளுமன்றத்தில்
இருந்த பத்தாண்டுக் காலத்தில் நெருங்கிப் பழகுகின்ற வாய்ப்
பைப் பெற்றிருக்கிறேன். அவர்களிடத்தில் எனக்குப் பெரிதும்
மதிப்பும், மரியாதையும் உண்டு. அந்த அளவிற்குச் செல்வாக்கு

பெற்ற அந்தத் தலைவர்களின் தலைமையின் கீழ் உள்ள தமிழ் நாட்டில் இருக்கின்ற இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் யோசித்து இதில் முடிவெடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மற்றவர்கள் என்ன கதிக்கு ஆளாகியிருக்கிறார்கள் என்பதைப் பார்த்த பிறகாவது, நீங்கள் அந்தப் பாதையிலே செல்ல வேண்டாமென்று வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். தோழமை உணர்வோடு நான் இரண்டு கம்யூனிஸ்ட் கட்சிகளையும் எச்சரிக்கை செய்ய விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தோடு சேர்ந்து நீங்களும் அழிந்து போகாதீர்கள். அத்தகைய அழிவுப் பாதைக்குச் செல்லாமல், நம்முடைய அருமை நண்பர் உமாநாத் அவர்கள் மரியாதையாக— மரியாதையாக என்றால் கௌரவமாக இந்தத் தீர்மானத்தை வாபஸ் வாங்கிக்கொண்டு, எதிர்காலத்தில் அவர் நல்லபடியாக வாழ வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்து விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஒரு சிறு விளக்கத்தை மட்டும் நான் தர விரும்புகிறேன். இது விளக்கம்தானே தவிர விவாதத்திற்காக அல்ல. காஷ்மீர் மாநாடு பற்றிய பிரச்னை உறுப்பினர்கள் சிலரால் இங்கே கிளப்பப்பட்டது.

காஷ்மீர் மாநாட்டிற்கு வருகை தர வேண்டுமென்று காஷ்மீர் மாநில முதல்வர் அவர்கள் தமிழக முதல்வர் அவர்களைக் கேட்டுக் கொண்டது உண்டு. அதற்குப் பிறகு, தமிழக முதல்வரவர்கள் சில பல விளக்கங்களைக் கேட்டு அவைகளுக்கு விவரம் தர வேண்டுமென்று அவர்களுக்குக் கடிதம் எழுதினார்கள். இப்படி இவர்கள் எழுதிய கடிதத்திற்குக் காஷ்மீர் முதல்வரவர்கள் பதில் எழுதினார்கள். அந்த பதில் திருப்தி அளிக்காததால் இவர்கள் அங்கே போகவில்லை. ஆனால், ஒப்புக்கொண்டு போகவில்லை என்பது சரியல்ல என்பதற்காக இந்த விளக்கத்தை மட்டும் தருகிறேன். மற்ற விளக்கங்கள் பதிலிலே கிடைக்கும்.

திரு. கே. எஸ். ஜி. ஹாஜாசெரீப் : மிஸ்டர் டெபுடி ஸ்பீக்கர் சார், மாண்புமிகு கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த திரு. உமாநாத் அவர்கள் இந்த அமைச்சரவையின்மீது கொண்டுவந்திருக்கின்ற நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு நான் ஆரம்பிக்கிறேன்.

முதன்முதலாகவே ஒரு ராங் பிரீயாம்பிளை அவர் போட்டு விட்டார். சர்வாதிகாரியோடு நீங்கள் போகிறீர்கள், அவ்வாறு போகக்கூடாது என்றெல்லாம் போட்டுவிட்டார். It is a wrong Preamble. ப்ரீயாம்பிள் கொடுப்பது என்றால் நல்ல முறையில் கொடுக்க வேண்டும். ஒரு புத்தகத்திற்கு ப்ரீயாம்பிள் —அதாவது முன்னுரை கொடுப்பவர்கள் அதைச் சரியாகக்



கொடுக்க வேண்டும். அப்படிச் செய்யாமல், இவர் ராங் ப்ரீயாம்பிள் கொடுத்தார் என்றால் அது மிகவும் வருத்தம் கொடுக்கக்கூடியதாகும்.

சர்வாதிகாரம் என்றால் என்ன? யார் சர்வாதிகாரி? இந்திராகாந்தியா சர்வாதிகாரி? அலல. அல்லது கம்யூனிஸ்ட் கட்சியா? எத்தனை தடவை எல்லா லீடர்களையும் கூப்பிட்டு இந்திராகாந்தி பேசியிருக்கின்றார். அவர் சர்வாதிகாரி என்று சொன்னால் இப்படிப் பேசியிருப்பாரா? சமீபத்தில்கூட உங்கள் கட்சியைச் சேர்ந்த பி. இராமமூர்த்தி அவர்களையும், நம்பூதிரிபாத் அவர்களையும் அழைத்துப் பேசியிருக்கிறார்களே, பஞ்சாப் நிலைமையைப் பற்றிக் கூறியிருக்கிறார்களே, சிலோன் நிலைமைகளைப் பற்றிப் பேசியிருக்கிறார்களே, இது ஜனநாயகமா அல்லது சர்வாதிகாரமா என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்களுக்கு ஒரே பீதி ஏற்பட்டு விட்டது. என்ன பீதி என்றால், ஏதோ அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும், காங்கிரஸ்-ஐயும் ஒன்றாகச் சேரப்போகிறார்களாமே, அப்பொழுது நம்முடைய கதி என்ன, அதோ கதிதான் என்று நினைத்துக்கொண்டு விட்டார்கள். தேர்தலில் அவர்களோடு கூட்டு சேர்வது பற்றி பேச்சே நடத்தவில்லை என்று நாங்கள் அறிவிக்கிறோம், தீர்மானம் போட்டிருக்கிறோம், எங்களுக்கும், ஏ. ஐ. ஏ. டி. எம். கே. விற்கும் இடையே எந்தவிதமான பேச்சும் நடக்கவில்லை என்று சொல்கிறோம். ஆனால், கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்கள் தவறாக யூகித்துக்கொண்டு, பேச்சு நடந்து விட்டதுபோலச் சொல்கிறார்கள். கல்யாணத்தைப்பற்றிப் பேச்சே நடக்கவில்லை, ஆனால், கல்யாணம் நடந்ததைப் போல நினைத்துக்கொண்டு மாப்பிள்ளை என்ன நினைத்துக் கொண்டிருக்கிறார் என்றால், பிள்ளை பிறந்தால் என்ன பெயர் வைப்பது என்று. அந்த மாதிரி கம்யூனிஸ்ட் நண்பர்கள் நினைத்துக் கொண்டு, நம்முடைய கதி என்ன ஆகுமோ என்று நினைத்துக் கொண்டு என்னென்னமோ பேச ஆரம்பித்து விட்டார்கள். அது தவறான பேச்சு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அவர் என்ன சொன்னார்? முழுக்க முழுக்க இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் யாரையும் கன்சல்ட் செய்யவில்லை, அவர்கள் எதையும் தானே தீர்மானமாக எடுத்துக்கொள்கிறார்கள் என்றுதானே சொன்னார்.

Our country is a demoncratic country. We have an elected Parliament. Every issue has been spoken in Parliament and a decision is being taken.

எதிர்க்கட்சிக்காரர்கள் அவர்கள் கருத்தைச் சொல்கிறார்கள். இவ்வளவு தூரம் அவர்கள் செய்துவிட்டு, இவ்வளவு தூரம் அவர்கள் உலகத்திலேயே She is one of the ablest and strongest leaders என்று பெயுரை வாங்கிவிட்ட அவரைப் பற்றி குறை கூறினால்

அது தப்புக் கணக்கு. ஏதோ திரு. எம். ஜி. ஆர். அவர்களோடு இருந்ததன் காரணத்தால் 10, 11 சீட்டுகள் வந்துவிட்டார்கள். அதுவும் போய்விட்டால் கதி என்ன, ஃப்யூச்சர் என்ன என்ற பயம் அவர்களுக்கு ஏற்பட்டு விட்டது. திகில் ஏற்பட்டுவிட்டது, இடி ஏற்பட்டுவிட்டது. 21 சீட்டுகளில் ஒன்று கிடைக்குமா அல்லது 2 கிடைக்குமா அல்லது பூராவும் கிடைக்காமலே போகுமா என்று ஒரு திகில் அவர்களுக்கு ஏற்பட்டு விட்டது. குளறுஃபிகேஷன்....(சிரிப்பு)....என்ற ஒரு நிலைமை அவர்களுக்கு ஏற்பட்டுவிட்டது. எனவே, அவர்கள் பயப்படுகிறார்கள் என்பதை நான் சொல்கிறேன். ஆனால், கம்யூனிஸ்ட் கட்சிக்காரர்கள் பயப்படக்கூடாது. அவர்கள் இங்கே பேசுவது மாதிரி கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சியிலே இருக்கின்ற நாடுகளில் பேச முடியுமா? ரஷ்யா அல்லது சைனா போன்ற நாடுகளில் இதுமாதிரி பேச முடியுமா?

We have given the right of speech, the right of writing and the right of expression.

இவ்வளவு சலுகைகளையும் எடுத்துக்கொண்டு வாதத்திற்காக, நீங்கள் இப்படிப் பேசுவது ரொம்பவும் துரதிஷ்டவசமானது. உங்களுடைய போக்கு நல்லதல்ல என்பதைச் சொல்லிக்கொள்ள நான் ஆசைப்படுகிறேன்.

இந்த அரசாங்கத்தின்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவருகின்றபோது குறைகளை எடுத்துச் சொல்ல வேண்டும். அதே மாதிரி நிறைகளையும் எடுத்துச் சொல்வதுதான் மிகவும் நல்லது.

இலவச மதிய உணவுத்திட்டம்.

It is a formidable scheme conceived by this Party and being implemented by this Party.

நான் சில மையங்களுக்கு நேராகச் சென்று பார்த்திருக்கிறேன் சிட்டியிலும் சரி, மஃபஸிலிலும் சரி நல்லவிதமாக உணவு போடுகிறார்கள் பிள்ளைகளுக்கு. மதுரையிலே உள்ள ஒரு யூனிட்டைப் பார்க்கச் சென்றிருந்தேன். அங்கே அப்போது சாதம் வெந்து கொண்டிருந்தது. காய்கறியை வாங்கி வைத்திருந்தார்கள். காரட் இருந்தது, ஆனியன்ஸ் இருந்தது, பீன்ஸ் இருந்தது. இன்னொரு பக்கத்திலே கீரையை வாங்கிவைத்திருந்தார்கள். இவ்வளவும் செய்து கொடுக்கிறோம் என்று அவர்கள் சொன்னார்கள். ஒரு வேளை உணவைக் கூட சாப்பிட முடியாத குழந்தைகளுக்கு வயிறாறச் சாப்பாடு போடுவது என்பது ஒரு பெரிய பரந்த நோக்கமாகும். ஒரு உயர்ந்த எண்ணத்துடன் இந்த அரசு நடக்கின்றது என்பதை நான் அழுத்தம் திருத்தமாகச் சொல்லிக் கொள்ள வேண்டும். இதற்கு முன்பும் இந்தத் திட்டத்தை நான் வரவேற்று இருக்கிறேன். இது மிக முக்கியமான திட்டம். எல்லா மாநிலங்களும் இந்தத் திட்டத்தை அமுல்படுத்தினால் ஏழைக் குழந்தைகளுக்கு மிகவும் நன்றாக இருக்கும். ஆனால்





குற்றம் குறைகள் இருக்கலாம். அதை யாரும் தடுக்க முடியாது. 62 இலட்சம், 63 இலட்சம் பிள்ளைகளுக்கும், 3 இலட்சம், 4 இலட்சம் முதியோர்களுக்கும் டெய்லி சாப்பாடு போடுவது என்றால் அதாவது ஏறக்குறைய 50 ஆயிரம் மையங்களை வைத்து சாப்பாடு போடுவது என்றால் பல குறைகள இருக்கலாம், அதைத் தவிர்க்க வேண்டும். அதற்காகத்தான் இதற்காகவென்றே ஒரு தனி அமைச்சரையே ஏற்படுத்தி இருக்கிறார்கள். அவர் கண்காணித்து எங்கெங்கு குறைகள் இருக்கின்றதோ அவைகளை, எல்லாம் தவிர்க்க வேண்டும். குறைகள் இருப்பதன் காரணத்தால் இந்தத் திட்டத்தைக் கைவிடுவது என்பது நல்ல யோசனை அல்ல. அதே சமயத்தில் இந்த அரசாங்கம் செய்யத் தவறியது என்ன என்பதையும் நான் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். பஞ்சாயத்து எலக்ஷன், முனிசிபாலிட்டி எலக்ஷன், கார்ப்பரேஷன் எலக்ஷன் ஆகியவற்றை எல்லாம் ஏன் நீங்கள் தள்ளி வைத்துக்கொண்டே போகிறீர்கள்?

(பிற்பகல் 12-40]

போனதடவை இதே சபையில் வாக்குறுதி கொடுத்தார்கள். அவசியம் ஆகஸ்ட் 83-க்குள் எலெக்ஷனை நடத்திவிடுவோம் என்று சொன்னார்கள். ஆனால் அதை நிறைவேற்றவில்லை. ஏதோ ஒரு சாக்கு வைத்துக்கொண்டு 6 மாதம், 6 மாதம் என்று நீங்கள் அதிகாரிகளுக்கு எக்ஸ்டென்ஷன் வாங்கிக் கொடுத்துக் கொண்டு இருக்கிறீர்கள். இது நல்ல முறை என்று சொல்லுகிறீர்களா?

It is a wrong policy of the Government நான் கூட போன தடவை I asked my Esteemed Friend Mr. Kulandaivelu ஏன் உங்களுக்கு எலெக்ஷன் நடத்துவதற்கு பயமா என்று கேட்டேன். பயமா, எங்களுக்கா? பயம் என்ற பேச்சே எங்கள் அகராதியில் இல்லையே என்று சொன்னார்கள். அவசியம் விரைவில் நடத்திவிடுகிறேன் என்று சொன்னார்கள். ஆனால் கண்ட பலன் என்ன? ஒன்றும் இல்லை.

இன்றைக்கு கூடுதலாக இலங்கைப் பிரச்சினையைப் பிடித்துக் கொண்டு விட்டீர்கள். அதற்கும் இதற்கும் என்ன சம்பந்தம்? That is an All India issue. That is not only a Tamil Nadu issue but also an all India issue. இதைக் காரணம் காட்டி இன்னும் 6 மாதம் அவகாசம் கேட்பது ரொம்பத் தவறு. நீங்கள் இந்த எலெக்ஷன் நடத்தாத காரணத்தால், ரொம்ப கஷ்ட நஷ்டங்கள் ஏற்பட்டு இருக்கின்றன என்பதை நான் பலமுறை இந்தச் சபையில் எடுத்துச் சொல்லியிருக்கிறேன்.

Sir, who is responsible for the implementation of all the civic amenities, either in vilages or in Municipal Towns or in the Cities?

அந்தக் கவுன்சில்கள் இல்லாமல் கிட்டத்தட்ட 13–14 வருஷங்கள் ஆகிவிட்டது. எலெக்டெட் ரெப்ரசென்டேடிவ்ஸ் இல்லாததால் எவ்வளவோ கஷ்டங்கள் ஏற்பட்டு இருக்கின்றன. யாராவது அதிகாரிகளைப் போய் கேட்டால் அவர்கள் அதை கவனிப்பது இல்லை. இந்த சிட்டி நகரமாக இல்லை, நரகமாக இருக்கிறது என்று நான் ஏற்கனவே இந்த அவையில் சொல்லியிருக்கிறேன். புரட்சித் தலைவர் புரட்சிகரமான திட்டங்களைப் போட்டு இருக்கிறார்கள் என்று இங்கே போற்றுகிறீர்கள். அது வரவேற்கத்தக்கது. ஏன் புரட்சித் தலைவர் அக்கரை எடுத்துக்கொண்டு இதை முடிக்க முடியாதா ? அரசாங்கம் மனது வைத்தால் முடிக்க முடியாத விஷயம் எதுவும் இல்லை. ஏதோ உங்கள் மனதில் ஒரு கருத்தை வைத்துக்கொண்டு நீங்கள் இப்படி ஒத்திப் போடுவது தவறான கொள்கை என்பதை நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

இலவச சாப்பாடு குழந்தைகளுக்குப் போட்டால் போதுமா ? அவர்கள் இருக்கும் இடம் நல்ல சுகாதார வசதியோடு இருக்க வேண்டாமா ? அவர்கள் நல்ல சூழ்நிலையில் இருந்தால் தான் அவர்கள் பாடி பில்டப் ஆகும். வெறும் இலவச சாப்பாடு போடுவதால் மட்டும் ஒன்றும் வந்துவிடாது. இலவச சாப்பாடு போடுவது என்பது குட் ஸ்கீம். அவர்கள் அங்கேயே சாப்பிட்டு, அங்கேயே விளையாடி, அங்கேயே படிக்கிறார்கள். பின்னர் அவர்கள் வீடு செல்கிறார்கள். அவர்களுடைய வீடு சுகாதார மற்ற சூழ்நிலையில் இருக்கிறது. ஆகவே அவற்றையும் சரி பார்த்துக் கொடுக்க வேண்டும். அங்கெல்லாம் சுகாதார வசதி செய்து தரவேண்டும்.

இந்த சிட்டியை எடுத்துக்கொண்டால், 6 மாதத்திற்கு ஒரு முறை வரி வசூலிக்கிறார்கள்.

We are giving fees only for all the civic amenities. யாராவது ஒருவர் கோர்ட்டுக்குப் போய் நீங்கள் இன்னின்ன சர்வீஸ் செய்வதற்காக எங்களிடத்தில் வரி வசூல் செய்தீர்கள். நாங்கள் பணம் கட்டினோம். ஆனால் நீங்கள் அதைச் செய்யவில்லை. அதனால் நாங்கள் இனி பணம் தரமுடியாது என்று சொன்னால்

The Court will certainly charge you and say that either you implement all your promises by giving services or you have no business to collect the taxes in every six months. I wish that somebody must go to the court and say that the Government is not implementing the scheme and therefore we are not going to pay the taxes.

இது மிகவும் தவறு. ரோடு இல்லை. லைட் இல்லை. மிகுதியான தெருக்களில் லைட் இல்லை. குழாய்கள் சுத்தம் கிடையாது. சுத்தம் செய்வதற்கு கார்ப்பரேஷன் ஆட்கள் வருவது இல்லை. இவ்வளவு கஷ்டங்கள் இருக்கின்றன. பொது





மக்கள் சென்று சொன்னால் யாரும் கேட்பது இல்லை. இப்படிப்பட்ட கஷ்டங்கள் எல்லா முனிசிபாலிட்டியிலும் இருக்கின்றது. பெரிய பெரிய புரட்சித் திட்டங்களைப் போடுகிறோம் என்று சொல்கிறீர்கள். இந்த ஒரு விஷயத்தில் மட்டும் ஏன் தவறாக நடந்து கொள்கிறீர்கள். இது ரொம்பவும் வருந்தத்தக்கது என்பதை நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். இந்த சபை முடிவதற்கு முன் நீங்கள் திட்டவட்டமாக அறிக்கை கொடுக்க வேண்டும். எப்போது நீங்கள் எலெக்ஷன் நடத்தப் போகிறீர்கள் ? இதை அவசரப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒரு தேதியைச் சொல்லிவிட்டு மறுபடியும் 6 மாதம் கழித்து ஏதாவது சந்தடி சாக்கு சொல்லி எக்ஸ்டன்ஷன் கேட்கக் கூடாது.

Even if Heavenfalls on earth, you must conduct the election. என்ற ஒரு நிலை இருக்க வேண்டும். இல்லாவிட்டால் I myself say that you are afraid of conducting the elections என்றுதான் சொல்வேன்.

Mr. Deputy Speaker Sir, I must say that eventhough the Law and Order situation is not very bad, often there has been house breaking,. This shows the weakness of the Police Department.

போலீஸில் சரியான ஸ்ட்ரெங்த் இல்லையா ? 12,000 போலீஸ்காரர்களை எடுக்க வேண்டுமென்று தீர்மானம் செய்திருக்கிறீர்கள். அதற்கு இன்டர்வியூ கூட நடந்தது என்று கேள்விப்பட்டேன். ஆனால் ஆள் எடுக்கவில்லை. அவர்களை எடுத்து, சரிவர கண்காணித்து வந்தால் நிச்சயமாக இந்தமாதிரி சந்தர்ப்பங்கள் எல்லாம் ஏற்படாது என்று நினைக்கிறேன்.

தற்போது உங்களுக்கு அதற்குத் தகுந்த ஒரு முஸ்தீப், ஆள் பலம் இல்லை. உடனே தேவையான ஆட்களைச் சேர்க்க வேண்டும். There is delay. I have often said that this Government does not take quick decisions. இதிலே டிசிஷன் எடுப்பது ரொம்பவும் ஸ்லோவாக இருக்கிறது. 12 ஆயிரமோ, 14 ஆயிரமோ எவ்வளவு தேவையோ அந்த அளவுக்கு ஆட்களை எடுத்து, சட்டம் ஒழுங்கை பாதுகாத்தால் தான் ஜனங்களுக்கு நம்பிக்கை ஏற்படும். இப்போது ஜனங்களுக்கு ஒரு பெரிய பீதி ஏற்பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல. There is also Law and Order situation and communal tension. Irrespective of who is committing fault, the concerned offender should be taken to task and dealt with according to Law by this Government.

ஏற்கெனவே இரண்டு வருஷங்களுக்கு முன்னால் எவ்வளவு பயங்கரமான கம்யூனல் ட்ரபிள் ஏற்பட்டது. அப்படிப்பட்ட நிகழ்ச்சி ஏற்படாமல் தவிர்க்க வேண்டும். முளையிலேயே கிள்ளி எறிய வேண்டும். இப்போது அது வளர்ந்துகொண்டு வருகிறது. அதை யார் செய்தாலும் சரி, நீங்கள் செய்தாலும் சரி, மற்றவர்கள் செய்தாலும் சரி, கண்காணித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

[திரு. கே. எஸ். ஜி. ஹாஜா ஷெரீப்] [1983 நவம்பர் 11

இலங்கை தமிழர் பிரச்சினைபற்றி பலவிதமான கருத்துக் களைச் சொன்னார்கள். அதிலே இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் எடுத்த முடிவு சரியான முடிவு. அதை இந்த சர்க்கா ரும் ஏற்றுக்கொண்டு அமுல்படுத்துவதன் மூலமாக இப்போது ஒரு சுமுகமான, நல்ல நிலைமை உருவாகிக்கொண்டு வருகிறது என்பது மகிழ்ச்சிக்குரிய விஷயம். நேற்று ஜி.பி. இன்டர்வியூ கொடுத்திருக்கிறார்கள். நான்கு நாட்கள் சிலோனில் இருந் தேன்; பலருடன் பேச்சுவார்த்தை நடத்தினேன்; அங்கே எல்லா விஷயங்களும் நமக்கு சாதகமாக முடியும் என்ற ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். வேறு முறையிலே இதை அணுகியிருந்தால் இப்படி நடந்திருக்குமா? முடியவே முடியாது. ஒரு 'சாவரின் ஸ்டேட்டில்' ஆள் பலத் தைக் கொண்டு மிரட்டினால் முடியுமா? நாம் அப்படி நினைத் தால் அவர்கள் நம்மைத்தான் மிரட்டுவார்கள்.

அமெரிக்கா தன்னுடைய ட்ரூப்பை கிரேனடாவுக்கு அனுப்பி யது என்று சொன்னார்கள். எனக்கு டி.எம்.கே. நண்பர் ஒருவர் தர்மபுரியிலிருந்து ஒரு பெரிய தந்தி கொடுத்திருந்தார். அமெரிக்காவிலிருந்து சென்றவர்கள் ஆயிரம் மக்கள்தான் இருக் கிறார்கள். அவர்களுக்கு பாதுகாப்பு அளிக்க அமெரிக்கா பெரிய போரை ஆரம்பித்திருக்கிறது. அப்படி இருக்கும்போது நாம் ஏன் 30 இலட்சம் மக்களைக் காக்க படை அனுப்பக்கூடாது என்று கேட்டிருக்கிறார். I must say that it is a wrong argument அமெரிக்கா செய்யலாம். ஆனால் நாம் செய்ய முடியுமா? 30 இலட்சம் மக்களுக்காக நாம் துருப்புக்களைக் கொண்டு சென் றால், இங்கே நம்முடைய தமிழ்நாட்டு ஜனத் தொகை எவ் வளவு? சுமார் நாலே முக்கால் கோடி. எவ்வளவு பெரிய இன்டஸ்டிரீஸ் இங்கே வளர்ந்திருக்கிறது? இதை எல்லாம் அவர்கள் தாக்கமாட்டார்களா? Will they not be affected? Certainly they will be affected. I am very happy Mr. Deputy Speaker Sir that the things are coming to a normal settlement and in a very long way.

[பிற் பகல் 12-50]

இந்த அரசு பல விஷயங்களில் மிகவும் தாமதமாக செய்திருக் கின்றது என்பதை சில ஆதாரங்களை வைத்து, நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். உதாரணமாக 'டிரைபல் வெல்பேர் ஸ்கீம்' என்பது எல்லோருக்கும் உகந்த ஸ்கீம்.

Under that Scheme, to draw up, co-ordinate and supervise the implementation of the Tribal Welfare Programme, a Committee was constituted as Tribal Development Authority in 1978 with the Chief Minister as Chairman. The authority which was to meet once in six months, met only once in June 1982. Consequently, top level guidance was lacking to the programme and the programme suffered as follows :



1983 நவம்பர் 11] [திரு. கே.எஸ்.ஜி. ஹாஜா ஷெரீப்]

Out of electrification work sanctioned in 141 villages and hamlets in tribal areas during the years 1977-78, 81 works were still pending to be completed. 26 of these related to 1977-79. The Tamil Nadu Water Supply and Drainage Board has paid Rs. 1.50 lakhs during 1978-82 for executing drainage and water supply works to tribals. Only 23.96 lakhs were spent by the Board and 13 works remained to be executed for more than two years.

Of the 12 Dispensaries and quarters for the staff, sanctioned for construction during 1976-80 in the Tribal area, 12 works were in-complete. இதைப்பார்த்தால் ஸ்கீம் போடுவது மட்டும் பெரிய சமாதானம் அல்ல. அந்த ஸ்கீமை இம்பிளிமெண்ட் பண்ணுவதில் தான் அதனுடைய நல்ல காரியம் மக்களுக்குக் கிடைக்கும். அந்த ஸ்கீம் கவர்ன்மெண்டு ஆப் இந்தியா போட்ட ஸ்கீம். நாம் எல்லாம் ஏற்றுக்கொண்ட ஸ்கீம். சீப் மினிஸ்டருக்கு நேரம் இல்லையென்றால், மற்ற அமைச்சர்களை டெபியூட் பண்ணி கூட்டத்தை நடத்தியிருக்க வேண்டும். மிகவும் தாமதமாக இருப்ப தால் எந்தவிதமான நல்ல பலனும் கிட்டாது.

In the economic development also, there were many difficulties. நம்முடைய ஸ்டேட் பைனான்ஸ் ஹேண்டிலிங் கிட்டதட்ட 2515 கோடி ரூபாய் வருவாய் மத்திய அரசு உதவி செய்ய வில்லை என்று பலமுறை ஆளும் கட்சி உறுப்பினர்கள் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். Central Government is giving more than Rs.700 crores to the State Government both as grant as well as loan, every year. நம்முடைய வருவாய் 1,179 கோடி ரூபாய். மத்திய அரசு மானியமாக கொடுப்பது 499 கோடி ரூபாய். லோனாகக் கொடுப்பது 208 கோடி. ஆக 1,886 கோடி ரூபாய் ஸ்டேட்ல் நீங்கள் கடன் ரைஸ் பண்ணுவது 363 கோடி 1982-83 ஆம் ஆண்டில். லோன் ரெக்கவரி 106 கோடி. பப்ளிக் அக்கௌண்ட்ஸ்சில் இருந்து மிகை வருமானம் 160 கோடி ஆக 2,515 கோடி. இந்த 2,515 கோடியும் செலவாகிவிடுகிறது. டெபிசிட் 2, 3 கோடி போட்டிருக்கிறீர்கள். ஆனால் மொத்த மாகப் பார்க்கும்போது 'What is the economic development that has taken place? My esteemed Friend, the Minister for Industries, who used to be opposite me, is now sitting to my extreme left; I wish that he comes back to his original seat. சார், 2,515 கோடியிலே ரெவின்யூ எக்ஸ்பெண்டிச்சர் 1,576 கோடி ரூபாய். மூலதனம் எக்ஸ்பெண்டிச்சராக நீங்கள் 151 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறீர்கள். இன்ஸ்ட்டிடியூசன்ஸ், ஆப்பரேடிவ் சொசைடிஸ், இவைகளுக்காக 353 கோடி ரூபாய் நீங்கள் கடனாக கொடுத்து இருக்கிறீர்கள் கடன் ரீபேமெண்ட் 412 கோடி ரூபாய். If you are going to repay about Rs. 400 crores every year, I think you should have a very strong Financial Adviser to the Govt. ஆக, 2,515 கோடி ரூபாய் சரியாக போய்விட்டது. இதிலே

என்ன குரோத்? இன்டஸ்ட்ரியல் குரோத் என்ன? என்பதை நான் கேட்க ஆசைப்படுகிறேன். ஏதோ இன்டஸ்ட்ரியல் குரோத் இருக்கிறது என்று நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். பெரிய பெரிய புஸ்தகங்களிலே எல்லாம் போட்டிருக்கிறீர்கள். அது இது என்று. என்னுடைய நண்பர் பிரபாகரன் அவர்கள் பேசும்போது சொன்னார். 17 வருஷ காலமாக இல்லாத நிலைமை, இந்த 7 வருஷ காலமாக, எங்களுடைய ஆட்சி வந்ததற்குப் பிறகு, இன்டஸ்ட்ரியல் டெவலப்மென்ட் ஏற்பட்டது போல் வேறு எந்தக் காலத்திலும் ஏற்படவில்லை என்று சொன்னார்கள். I am sorry he has grossly mistaken 17 வருஷமாக நாங்கள் ஆட்சியிலே இருந்தோம். அப்போது எவ்வளவு டெவலப்மென்ட் பண்ணினோம். 35 வருஷத்திற்கு முன் நம்முடைய பொருளாதார நிலைமை என்ன? இப்போது என்ன? எத்தனை மில்கள் இருந்தன? எத்தனை தொழிற்சாலைகள் இருந்தன. இப்போது எவ்வளவு இருக்கின்றன என்று நீங்கள் பார்க்கவேண்டும். டிஸ்ட்டிரிக்ட் இன்டஸ்ட்ரிஸ் கொண்டு வரப்பட்டது. அதனுடைய காரணமே லட்சக்கணக்கான ஸ்மால் ஸ்கேல் இன்டஸ்ட்ரிஸ் அன்ட் காட்டேஜ் இன்டஸ்ட்ரிஸ் வரவேண்டுமென்று அவர்களே கொண்டு வந்தது. இது ஏதாவது சரியாக வேலை செய்கிறதா? உருப்படியாக வேலை செய்கிறதா? இல்லை என்றுதான் சொல்லவேண்டும்.

'The Scheme of District Industries Centres provided for constitution of a State Level Co-ordination Committee with the Chief Minister or Minister for Industries, as Chairman, and to meet once in six months to supervise, monitor and to review the functions of the D.I.C. The State Level Co-ordination Committee setup in 1978,, with the Chief Ministerr as Chairman, has not met till October 1982' இது சரிதானா? I am laying this charge on this Government. வாழ்க்கைத்தரம் உயரவேண்டும், சராசரி வருமானம் பெருக வேண்டும், வேலையில்லாத்திண்டாட்டம் ஒழிய வேண்டும் என்றெல்லாம் மத்திய சர்க்கார் ஸ்கிமைப் போட்டு அந்த ஸ்கிமை உங்களுக்கு அனுப்பி, பணமும் கொடுத்து இந்த ஸ்கிமை டெவலப்மென்ட் பண்ணுங்கள் என்று சொன்னால், 1978-ல் ஆரம்பித்த ஸ்கிம், 1982 முடிய கூடவில்லை என்றால் அது எப்படி? எப்படி தொழில் வளர்ச்சி ஏற்படும்? பெரிய பெரிய பேக்டரி வந்துவிட்டால் மட்டும் போதுமா?

No. If you want to solve all your unemployment and under-employment problems, we should have thousands of State owned industries lakhs of cottage and small-scale Industries. அப்படி இருந்தால்தான் நாம் இதை சால்வ் பண்ணமுடியும்.

The new unit set up in the State declined to 42 per cent during 1980-81 from 69 per cent in 1979-80. Similarly, there was also decline in the employment and the economy generated came down to 64 per



cent in 1980-81 from 79 per cent in 1979-80. Three D.I.Cs. reported as new were established in 1979-80 and they included various units that already existed and registered as new for the purpose of getting bank credits and clearance of raw materials.

(பிற்பகல் 1-00)

பாங்க் கிரெடிட்டிலே மட்டும் பெற்றுக் கொள்ளலாம், ரா-மெட்டீரியல்ஸ் பெற்றுக் கொள்ளலாம், ஆனால் இன்டஸ்டீரிஸ் சரியாக இருப்பது இல்லை, சரியாக வேலை செய்வது இல்லை என்றால், அதனுடைய பலன், கெட்ட பலன் யாருக்கும் போய்ச் சேரும்?

Small scale sick units assisted during the period 1979-81 was only 15 per cent. Only those sick units which approached D.I.Cs. were attended to. The object of providing service and support under a single roof by D.I.Cs. to the small entrepreneurs remained largely to be fulfilled as the entrepreneurs had to approach other departments as well for certai licences and clearances.

நான் கூட ஒரு தடவை பட்ஜெட் விவாதத்திலே பேசும் போது சொன்னேன். ஒரே கட்டிடத்தில் யார்யாரிடமிருந்து இன்டஸ்ட்ரிஸ் ஸ்டார்ட் பண்ணுவதற்குரிய பெர்மிஷன் வாங்க வேண்டுமோ, அவர்களெல்லாம், அங்கேயே வேலை செய்ய வேண்டும் என்று. உதாரணமாக எலக்ட்ரிசிட்டி, வாடேர் பொல்யூஷன் டிபார்ட்மெண்ட், மற்றபடி லைசென்சுகள் வழங்க வேண்டிய அத்தனை துறைகளும் ஒரே இடத்திலே இருக்க வேண்டும். ஆனால் இப்போது என்ன நிலை? எலக்ட்ரிசிட்டி போர்டு தனியாக ஒரு இடத்தில் இருக்கிறது. இந்த மாதிரி சௌகரியங்கள் கொடுக்கக்கூடிய மற்ற துறைகளெல்லாம் பல இடங்களில் சிதறி இருக்கின்றன. அதன் காரணமாகவும் காலதாமதம் ஆகிறது. In the matter of mobilisation of credit for small scale industries the performance of D.I.Cs. has not been encouraging. The achievement reported by them included loans obtained by the entrepreneurs directly from the banks and other agencies. The District Advisory Committees to be constituted for monitoring and guiding the implementation of the programme at the district level are yet to be constituted. இதில் எப்படி வளர்ச்சி ஏற்படும்? ஒவ்வொரு டிஸ்டிரிக்ட்டிலேயும் இந்த மாதிரி சிறு கமிட்டி போடவேண்டும். ஆனால் அப்படி போட முடியாத நிலை இருக்கிறது. அதிலும் காலதாமதம். இதன் காரணமாக வளர்ச்சியில்லை, குன்றியிருக்கிறது என்று நான் சொன்னால், அதை யாரும் மறுக்க முடியாது என்று கருதுகிறேன். சார், கவர்ன்மென்ட் ஆப் இந்தியா, பணம் கொடுக்கவில்லை, பணம் கொடுக்கவில்லை என்று அடிக்கடி பெரிய குற்றச்சாட்டை சொல்லிவந்தார்கள். அதற்கு நான் மறுப்பு தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. கே. எஸ். ஜி. ஹாஜா செரீப்] [1983 நவம்பர் 11

There are also instances where the assistance given by the Government of India and the monies provided in the budget had been drawn and paid to the agencies for implementation of the programme just to show the expenditure in the books of Government and thus claim achievement in financial terms. நாங்கள் கொடுத்து விட்டோம், அலாட்மெண்ட் செய்து விட்டார்கள். பணம் வாங்கி விட்டார்கள் என்று பேருக்காக இவர்கள் செய்கிறார்கள். But the monies remained unutilised for long period with the agencies, with the result the object of expenditure and the benefit of the schemes were yet to accrue to the people. For instance, இதற்கு நான் உங்களுக்கு காரணம் சொல்கிறேன். Out of 26·86 crores shown as expenditure on drought prone area programme during 1974–75 to 1981–82 this includes the Central assistance of Rs. 15.86 crore; Rs. 4·5 crores, that is nearly 17 per cent, remained unutilised with the agencies as on 31st March 1982. Out of the utilised amount, Rs. 1.30 crores were there for over 2 years. The Departments had also in a number of cases, drawn monies provided in the budget at the fag end of the year, just to show the provision as utilised and record the financial achievements, though there was no immediate need for drawing the amounts and have kept it for long periods in the cash chest of the officers of cash paying banks. இது மகா தவறுதலான ஒரு புரசீஜர் என்று சொல்லிக்கொள்ள நான் ஆசைப்படுகிறேன். நீங்கள் கேஷை எடுத்துக்கொள்வது, உபயோகப்படுத்தாமல் இருக்கும் என்று தெரிந்தும்கூட கேஷை எடுத்துக் கொண்டு உங்களுடைய செஸ்ட்களில் வைத்துக் கொண்டு ஹரிபரியாக 3 மாதங்களிலே செய்தீர்கள் என்றால் எப்படி அந்த வேலை உருப்படியாக இருக்கும்? All these things were discussed in the Public Accounts Committee meeting held recently. ஒவ்வொரு டிபார்ட்மெண்டிற்கும் இந்த மாதிரி புரசீஜர் இருக் கிறது என்று நான் கேள்விப்படுகிறேன். வேலைக்குப் பணம் வேண்டாம் என்று தெரிந்தும்கூட பட்ஜெட் முடிவதற்குள்ளாக பணத்தை வாங்கி வைத்துக்கொண்டு பின்னால் கொடுத்துக் கொள்ளலாம் என்று வைத்துக்கொண்டால் அந்த புரசீஜர் தவறா னது, அதை யார் அடிக்கடி போய் செக் பண்ணுவது? யார் சரி பார்ப்பது? எப்படி அவர்கள் கணக்குக் காட்டப்போகிறார்கள் என்பதில் எல்லாம் ஒரு கஷ்டமான நிலைமை ஏற்படும்.

The monies provided in the budget and the supplementary estimates are not spent in full and there is a saving of nearly Rs. 150 to Rs. 200 crores, about 10 per cent each year. இதை பைனான்ஸ் மினிஸ்டர் இல்லையென்று சொல்வார்களா என்று நான் கேட்க ஆசைப் படுகிறேன்.

The pace of expenditure is not uniform. ஒரு திட்டத்திற்கு 3 கோடி ரூபாய் என்று ஒதுக்குகிறீர்கள். அது [illegible] தலிருந்து கடைசிவரை யுனிபார்மாக போனால்



1983 நவம்பர் 11] [திரு. கே. எஸ். ஜி. ஹாஜா செரீப்]

நன்றாக இருக்கும். அதைவிட்டுவிட்டு 6 மாதம் அந்த ஸ்கீமை எடுத்துக்கொள்ளாமல் திரும்ப 4 மாதத்திற்குள்ளாக ஹரிபரியாக அதை செய்வீர்களானால் அது ஒரு சரியான திட்டமாக இருக்குமா அதனால் பலன் ஏற்படுமா என்று தெரிந்து கொள்ள ஆசைப் படுகிறேன்.

There is heavy rush of xpenditure during the last quarter of the year mainly due to delays in issue of sanction, delays in the implementation, etc. resulting in the intended benefit of the scheme approved by the Legislature not accruing to the public in time. There seems to be no machinery to monitor the progress of expenditure by the State as a whole and take remedial measures to see that the flow of expenditure is even and that the schemes for which the provision is made in the budget do not go un-executed and remain incomplete due to delays. பப்ளிக் டிஸ்டிரிபியூஷன் சிஸ்டத்தை எடுத்துக்கொண்டால் ஏழை, களுக்கு அது மகத்தான சேவை செய்யக்கூடிய பெரிய ஸ்கீம்.

That must function well. லட்சக்கணக்கான கடைகளை நாம் ஏற்படுத்தியிருக்கிறோம். அதில் பல பொருள்கள் சரியான விலைக்கு விற்கவேண்டுமென்ற ஒரு கொள்கை அடிப்படையில் நாம் விற்கவேண்டும். அங்கே அகப்படுவது 3, 4 பொருள்கள்தான். நீங்கள் அங்கே ஒன்றும் அனுப்புவது இல்லை. அரிசி, கிரோஸின் ஆயில் கிடைக்கிறது. அதுவும் சரிவரக் கிடைப்பதில்லை என்ற நிலைமை இருந்து வருகிறது.

In one village shop scheme run by the Civil Supplies Corporation or by the Co-operative Societies in the State all essential commodities are not supplied to the public as required. But only certain commodities like rice, sugar and kerosene are supplied. Even this supply is not regular. அமைச்சர் அவர்கள் ஏழைகளின் துயரத்தை போக்கவும் இந்த முக்கியமான பொருள்கள் எல்லாம் கிடைக்கவும் வேண்டு மென்றால் அந்தக் கடைகள் எல்லாம் நல்லவிதமாக நடத்த வேண்டுமென்பது அரசினுடைய கடமை என்று எண்ணி அதற்கு முயற்சிக்க வேண்டும்.

Even this supply is not regular. The District Level Advisory Committees have been ordered to be constituted with a view to watching the proper distribution of essential commodities to these shops But the Committee has not started functioning properly. இதை நீங்கள் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது இங்கே பல மில்கள் மூடப்பட்டிருக்கின்றன. எந்த விதமான நிவாரணமும் அளிக்கப்படவில்லை. அவர்கள் திறந்து நடத்துவதற்கு எந்தவிதமான ஏற்பாடும் செய்யப்படவில்லை என்ற புகார் சொல்லப்பட்டது. அதன் காரணமாக எவ்வளவு கஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

[திரு. கே. எஸ். ஜி. ஹாஜா செரீப்] [1983 நவம்பர் 11

There is production loss. The employees are unemployed and their families are stranded.

(பிற்பகல் 1-10)

உடனுக்குடன் இதை எல்லாம் அரசு கவனித்து இருந்தால் இந்த விதமான ஒரு நிலைமை ஏற்பட்டு இருக்காது. நீங்கள் கொடுங் கள், தர்மம் தலைகாக்கும் என்று சொல்வார்கள். Millions of sarees and dhoties எல்லாம் கொடுக்கவேண்டும். அவசியம் கொடுக்கவேண்டும். மில்களில் தேக்கம் ஏற்பட்டிருக்கிறது தேக்கத்தை எடுத்துவிடவேண்டும் என்று நீங்கள் சொல்வீர்கள். வாங்கும் சக்தியை ஏற்படுத்தவில்லையே ? வாங்கும் சக்தியை எப்படி ஏற்படுத்தப் போகிறீர்கள். You must see that the purchasing power is increased. அதற்கு நீங்கள் எம்ப்ளாய்மெண்டுக்கு ஒரு சூழ்நிலையை உருவாக்கினால் தான் அந்த வாங்கும் சக்தியை ஏற்படுத்தமுடியும் எவ்வளவு பேர் வருடாவருடம் பட்டம் பெற்றவர்கள், டிப்ளமோ ஓல்டர்ஸ் வருகிறார்கள். அவர்கள் கதி என்ன என் பதை நீங்கள் உணரவேண்டும்.

I want to see that the Industrial Development of this State is second to none. நான் 2 வாரத்திற்கு முன்பு பெங்களூரில் இருந்தேன். அங்கே அவர்கள் ஒரு திட்டம் போட்டதாக பத்திரிகையில் வந்து இருக்கிறது. அது காகிததிட்டமா நிரந்தரமாக நடக்கப் போவதா என்று தெரியவில்லை. ரிஜிஸ்டர் செய்து 10 நாட் களுக்குள்ளோ 10 மணி நேரத்திற்குள்ளோ அவர்களுக்கு வேலை கிடைக்கும் என்று அதில் சொல்லியிருக்கிறார்கள். இதை எப்படி கொடுக்கப்போகிறார்கள். இதற்கு எவ்வளவு பணம் ஒதுக்கி யிருக்கிறார்கள். இதனுடைய தன்மை என்ன, முறை என்ன என்பதை நாம் ஆராயவேண்டும். அந்த மாதிரி ஒரு ஸ்கீம் கூட நீங்கள் போடவில்லை. 3 ஆயிரம் பேருக்கு 10 ஆயிரம் ரூபாய், 12 ஆயிரம் ரூபாய் எல்லாம் கொடுப்பது நல்லதுதான். அது அவர்கள் தொழில் வளர்ச்சிக்கு நல்ல ஒரு தோதான முறை. பணம் மட்டும் கொடுத்து விட்டால் போதாது. அதை கவனிக்க வேண்டும். கொடுத்த பணம் அவர்கள் வாங்கிய பர்ப்பசுக்கு உபயோகிக்கிறார்களா அதை விட்டுவிட்டு வேறு வழியில் உபயோகிக்கிறார்கள் என்றால் The purpose for which it was given will be defeated. இதில் எந்த விதமான நல்ல பலனும் ஏற்படாது என்று சொல்லிக்கொள்ள நான் ஆசைப்படுகிறேன்.

எவ்வளவு பெரிய ஊழல் குற்றச்சாட்டுக்களை எல்லாம் இங்கே சொன்னார்கள். I do not want to go into their merits. But there is a large scale belief among the people that admission to Medical Colleges, admission to Engineering Colleges and other Colleges are not being done properly and people are suffering very much. ஒரே ஒரு இன்சிடெண்டைப் பற்றி மட்டும் நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். ஒரு மைனாரிட்டி சமூகத்தைச்



1983 நவம்பர் 11] [திரு. கே. எஸ். ஜி. ஹாஜா செரீப்]

சார்ந்த ஒரு பெண். She belongs to the Muslim community. 91 சதவீத மார்க் வாங்கியிருக்கிறது அந்தப் பெண். சீட் கிடைக்கவில்லை. It was brought to my notice. I expressed my absolute helplessness in this matter. அந்தப் பெண் இந்த ரிட்டில் பங்கு கொண்டு இருந்தால் ஆச்சரியப்படுவதற் கில்லை. ஏன் இந்த மாதிரி ஒரு புகாருக்கு நீங்கள் ஆளாகிறீர்கள் என்று எனக்குத் தெரியவில்லை. நான் ஒரு முறை இந்த சபை யில் பேசும்போது சொல்லியிருக்கிறேன். You introduce Entrance Examination Schemes, and Competitive Examinations. Constitute a Committee to see that the whole thing is being done systematically. இந்த மாதிரி நீங்கள் முயற்சி செய்தால் எந்த விதமான புகாரும் வராது. உங்கள்பேரில் எந்த விதமான ஒரு நேர்மையற்ற — உண்மையற்ற என்று நான் சொல்ல மாட்டேன் — நிலைமை வராது என்று நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அரசு என்பது மக்களுக்காக, மக்களுடைய உதவிப் பெற்று வந்து இருக்கிறது. மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும். அதுவும் துரிதமாக செய்ய வேண்டும். அதை விட்டுவிட்டு எல்லா வற்றிற்கும் தாமதம், எல்லாவற்றையும் ஒருவரே பார்க்க வேண்டும் என்ற நிலை வந்துவிட்டால் அதனால் ஏற்படக்கூடிய பல கஷ்டங்கள், ஏற்படக்கூடிய நஷ்டங்கள் தொடர்ந்து கொண்டே வரும். நான் ஏதாவது சொல்லிவிட்டால் உங்களுடைய காங் கிரஸ்-ஐ ஆட்சி நடத்துகின்ற ஸ்டேட்டில் என்ன வாழ்கிறது என்று நீங்கள் கேட்பீர்கள். That is not the point. அங்குள்ள எதிர்க் கட்சிகள் அதை கேட்டுக் கொள்வார்கள்.

I am interested in our State. I am more interested in our State functioning tremendously well so that we can continue to serve the people in the best manner possible. அதைச் செய்ய வேண்டும் என்று நான் கேட்கிறேன்.

Sir, I am fully aware that the Hon'ble Chief Minsiter is a person with lofty ideas to do something good to the people. But, on account of delay in implementation, on account of not supervising the schemes which are already being drawn up, things are moving very wrongly. That should be checked and checked immediately.

எலக்ஷன் வரப் போகிறது என்றெல்லாம் கம்யூனிஸ்ட் கட்சிக் காரர்கள் சொன்னார்கள். That is a different matter. But whatever promises you have given to people in your manifesto have not been taken up எவ்வளவோ உங்கள் தேர்தல் விஞ்ஞாபனத்திலே சொல்லி யிருக்கிறீர்கள். அதைச் செய்யப் போகிறோம், இதைச் செய்யப் போகிறோம், என்று. இன்னும் ஒவ்வொரு பட்ஜெட் ஸ்பீச்சிலும் நிதியமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இவற்றை நாங்கள் செய்யப் போகிறோம் என்றெல்லாம். ஏராளமானவை செய்யப்படவே இல்லை. அதை விட்டுவிட்டு நடுவில் பெரிய

[திரு. கே. எஸ். ஜி. ஹாஜா செரீப்] [1983 நவம்பர் 11

ஸ்கீமை எடுத்து நீங்கள் செய்கிறீர்கள். அதனால் மக்கள் ஏமாற்றம் அடைகிறார்கள் என்று எனக்கு நன்றாகத் தெரிய வருகிறது. அதை நீங்கள் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

நிறைய நீர்ப்பாசனத் திட்டங்களை நாங்கள் உருவாக்கப் போகிறோம், ஏரிகளை உருவாக்கப் போகிறோம் என்றெல்லாம் சொல்லியிருக்கிறீர்கள். For Power Generation—நாங்கள் பெரிய திட்டம் போட்டு செய்யப் போகிறோம். தெர்மல் ஸ்டேஷன்ஸ் உருவாக்கப் போகிறோம் என்று நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். அதற்கு என்ன செய்தீர்கள் என்று தெரியவே இல்லை. 3 மாதங்களுக்கு ஒரு முறையோ, 4 மாதங்களுக்கு ஒரு முறையோ அங்கத்தினர்களுக்கு ஒரு லிஸ்ட் அனுப்புங்களேன். இந்த, இந்தத் துறையில், இவ்வளவு, இவ்வளவு நாங்கள் செய்ய இருக்கிறோம். அப்படிப்பட்ட திட்டங்கள் இவ்வளவை நாங்கள் ஆரம்பித்திருக்கிறோம். அதற்கு இவ்வளவு செலவு ஆகியிருக்கிறது. அதனால் இவ்வளவு நன்மை ஏற்பட்டிருக்கிறது என்றெல்லாம் நீங்கள் லிஸ்ட் கொடுத்தால் எங்களுக்கு விவரம் தெரியும். 6 மாதத்திற்கு ஒருமுறை, அசெம்பிளியைக் கூட்டிவிட்டு, ஏதோ பில்களை பாஸ் செய்து விட்டால், எங்களுக்கு எந்தவிதமான செய்தியும் தெரிய வருவதில்லை என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

தன்னிறைவுத் திட்டம், ரூரல் எம்ப்ளாய்மென்ட் ஸ்கீம் எல்லாம் போட்டிருக்கிறார்கள். சென்ட்ரல் கவர்ன்மென்ட் எவ்வளவு பணம் கொடுத்திருக்கிறார்கள்? நானும் சில டிஸ்டிரிக்டு களுக்குப் போகும்போது பார்த்திருக்கிறேன். Concerned people are not doing proper work. I do not say that they are absolutely not doing any work or swallowing the money. But I must say that they are not doing work properly. ஓரிடத்திலே போய் பார்த்தேன். அங்கே ஒரு பெரிய குளத்தை ஆழப்படுத்துகிறோம் என்று சொல்லிக் கொண்டார்கள். 6 பேர்கள்தான் அங்கே வேலை செய்து கொண்டிருந்தார்கள். ஒரு பெரிய குளத்தை ஆழப்படுத்து வதற்கு 6 பேர்கள் மட்டும் இருந்தால், எவ்வளவு நாளைக்கு அந்த ஸ்கீம் அப்படியே போவது? இந்த மாதிரி ஒவ்வொரு இடத்திலும் நூற்றுக் கணக்கான பெரிய குளங்கள் எல்லாம் இருக்கின்றன. You must draw up a dynamic programme with proper dynamism and supervision for exhibition. That dynamism and supervision are not there என்று சொல்லிக் கொள்வது என்னுடைய கடமை என்று தெரிவித்துக் கொள்கிறேன். A State which is handling about Rs. 2,500 crores is not able to build susbstantial Plans to see that people are benefitted by the money, I am sorry to say that they are failing in their duty of fulfilling their promises to the people. My feeling is that there is not proper Industrial Development in this State. You have not created adequate civic amenities.



1983 நவம்பர் 11] [திரு. கே.எஸ்.ஜி. ஹாஜா செரீப்]

(பிற்பகல் 1-20.)

சப்ஸ்டான்ஷியல் என்று சொன்ன பிராமிசை காப்பாற்றவில்லை என்ற குறையை நான் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இவைகளை நீங்கள் நிறைவேற்ற வேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

India cannot become self-sufficient in one year, 10 years or 20 years. America has not become a highly developed country in 20 or 30 years. It took 40 years for America to come to a certain stage. Similary we have done substantially well in each and every sector. நாம் சுதந்திரம் பெற்றவுடன் எவ்வளவோ சரக்குகளை வெளி நாடுகளிலிருந்து தருவித்துக் கொண்டிருந்தோம். ஆனால் இப்போது எவ்வளவோ சரக்குகளை நாம் வெளி நாடுகளுக்கு அனுப்புகிறோம். ரெயில் என்ஜின் செய்கிறோம்; ரெயில் பெட்டிகளை செய்கிறோம்; கார், கப்பல்கள், ஏரோப்ளேன், எல்லாம் செய்கிறோம். இதுவன்னியில் எலக்ட்ரிக் கூட்ஸ் நிறைய செய்கிறோம். லட்சக் கணக்கான ரூபாய் மதிப்புள்ள ட்ரான்சிஸ்டர்ஸ் இன்றைக்கு வெளிநாடுகளுக்கு நம் நாட்டிலிருந்து போகின்றன. ரஷ்யாவிற்கு இங்கேயிருந்து கோடிக் கணக்கான ரூபாய்க்கு பவுடர், லிப்ஸ்டிக்ஸ், சோப்ஸ் போகின்றன இது எதைக் குறிக்கிறது? நம்முடைய வளர்ச்சியை குறிக்கிறது. ஆனால் நமக்கு அதற்கேற்றாற்போல பாபுலேஷன் குரோத் அதிகரித்துக் கொண்டே இருக்கிறதே, அதை கன்ட்ரோல் செய்யாமல் இருந்தால் எவ்வளவு நல்ல திட்டங்களைப் போட்டாலும்கூட, அந்தத் திட்டங்கள் Only take the fringe of the whole problem. That should be controlled. At the same time a vigorous attempt should be made to see that the Industrial Development particularly among the very small scale sector is being brought out. Thank you very much.

4. அறிவிப்பு.

(பேரவை அலுவல்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்று (11–11–1983) கூடிய அலுவல் ஆய்வுக்குழுவில் எடுக்கப்பட்ட முடிவுகளைப் பேரவைக்கு அறிவிக்கிறேன்.

1. நாளை (12—11—1983) பேரவைக் கூட்டம் இல்லை;

[பேரவைத் தலைவர்] [1983 நவம்பர் 11

2. அமைச்சரவை மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்திற்கு பதிலுரை 14–11–1983 திங்கட்கிழமையன்று தொடரும்.

3. மற்ற அலுவல்கள் ஏற்கனவே அறிவிக்கப்பட்டபடி நடைபெறும்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 14–11–1983 காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-22 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.



1983 நவம்பர் 11]

5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப் படிக்கான விதிகளும், ஆணைகளும்.

208. புதுக்கோட்டையில் ஒழுங்குமுறை அங்காடியிலிருந்து சில கிராமங்களை நீக்கியது தொடர்பாக, வேளாண்மைத் துறை யில் 11–8–1983 ஆம் நாளிட்ட 1459 ஆம் எண் அரசாணையில் பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண்மை விளை பொருள் விற்பனை சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29(4) பிரிவின்கீழ் பேரவையில் வைக்கப் பட்டது].

209. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு கள்-சாராயக் கடைகள் (ஏலத்தை முடிவு செய்தல்) விதிகளில் சில திருத்தங்களைச் செய்வது தொடர்பாக மதுவிலக்கு-ஆயத் தீர்வுத் துறையில் (II) 5–5–1983 ஆம் நாளிட்ட 308 ஆம் எண் அரசாணையல் பிறப் பிக்கப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மது விலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவையில் வைக்கப்பட்டது].

210. வணிக வரிகள்—சமய அறக் கட்டளைகள் துறையில் 18–12–1981 ஆம் நாளிட்ட II (1)/வ.வ.ச.க./579 (a)/81 ஆம் எண் அறிவிக்கையில் திருத்தம்செய்வதுதொடர்பாக வணிகவரிகள் —சமய அறக் கட்டளைகள் துறையில் 13–7–1983 ஆம் நாளிட்ட 761 ஆம் எண் அரசாணையில் பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவையில் வைக்கப்பட்டது.]

211. தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு சங்கங்கள் பதிவு விதி களில் திருத்தம் ஒன்று செய்வது தொடர்பாக, தொழில் துறை யில் 30–6–1983 ஆம் நாளிட்ட 718 ஆம் எண் அரசாணையில் பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு சங்கங்கள் பதிவுச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/975) 58 (3) பிரிவின்கீழ் பேரவையில் வைக்கப்பட்டது].

212. 1976–77 முதல் 1979-80 வரையிலான ஆண்டுகளுக் கான தமிழ்நாடு கதர்-கிராமத் தொழில் வாரியத்தின் ஆண்டுக் கணக்குகள். (தமிழ், ஆங்கிலம்). [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு கதர்-கிராமத்தொழில் வாரிய சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 18/1959) 24 (3) பிரிவின் கீழ் பேரவையில் வைக்கப்பட்டது].

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

47. 1983 ஆம் ஆண்டு கட்டிட கட்டுமானப் பணியாளர்கள் (பணி நிலைமைகள்—பல்வகை விதித் துறைகள்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 44/1983).

## உள்ளடக்கம்.

*14—11—1983*


| | | பக்கங்கள் |
|---|---|---|
| 1. | இரங்கல் தீர்மானம்— | |
| | பேரவை உறுப்பினர் திரு. என். கிட்டப்பா அவர்கள் மறைவு குறித்து. | 227—41 |
| | மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன். | 227—223 |
| | திரு. என். எஸ். வி. சித்தன் | 230—231 |
| | திரு. அன்பில் தர்மலிங்கம் | 231—233 |
| | திரு. என். சங்கரய்யா | 233 |
| | திரு. இரா. கருப்பையா | 233—234 |
| | திரு. பி. முகமது இஸ்மாயில் | 235 |
| | திரு. எஸ். ஆண்டித்தேவர் | 236—237 |
| | திரு. ப. நெடுமாறன் | 237—238 |
| | மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் | 238—239 |
| 2. | பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் | 241—242 |

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

### 1983, நவம்பர் 14, திங்கட்கிழமை

### ஐப்பசி 28, ருத்ரோத்காரி — திருவள்ளுவர் ஆண்டு, 2014.

---

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு''

இறப்பு எனப்படுவது ஒருவனுக்கு உறக்கம் வருதலைப் போன்றது. பிறப்பு எனப்படுவது உறக்கம் நீங்கி விழித்துக் கொள்வதைப் போன்றது.

(குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.)

### 1. இரங்கல் தீர்மானம்.

பேரவை உறுப்பினர் திரு. என். கிட்டப்பா அவர்கள் மறைவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1967ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் உறுப்பினராக இருந்துவந்த திரு. என். கிட்டப்பா அவர்கள் 11—11—1983, வெள்ளியன்று இரவு 10 மணிக்கு இயற்கை எய்தியதைப் பேரவைக்கு மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதுகுறித்த இரங்கல் தீர்மானத்தைப் பேரவை முன்னவர் அவர்கள் கொண்டு வருவார்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—

''திரு. என். கிட்டப்பா அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு 1967-ஆம் ஆண்டிலிருந்து 1971-ஆம் ஆண்டு வரையும், 1971-ஆம் ஆண்டிலிருந்து 1976-ஆம் ஆண்டு வரையும், 1977-ஆம் ஆண்டிலிருந்து 1980-ஆம் ஆண்டு வரையும் மற்றும் 1980-ஆம் ஆண்டிலிருந்து தற்போதைய சட்டமன்றத்திற்கும் தஞ்சாவூர் மாவட்டம், மயிலாடுதுறை தொகுதியிலிருந்து நான்குமுறை தேர்ந்தெடுக்கப்பெற்று

பலமுறையில் பணியாற்றியுள்ளார். அவர் இனிய பண்பும் உள்ளமும், செயல்திறனும் கொண்டவர். அன்னார் 11—11—1983-ஆம் நாளன்று மறைந்ததைக் குறித்து இப் பேரவை தனது ஆழ்ந்த துயரத்தைத் தெரிவித்துக் கொள் கிறது.

அன்னாரின் மறைவு குறித்து அவரை இழந்துவிட்ட குடும் பத்தினருக்கு ஆழ்ந்த வருத்தத்தையும், அனுதாபத்தையும் இரங்கலையும் இப் பேரவை தெரிவித்துக் கொள்கிறது.''

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினராக இருந்து அரும்பணி கள் பலவற்றையும் ஆற்றி வந்த திரு. என். கிட்டப்பா அவர்கள் எதிர்பாராதவகையில் மாரடைப்பின் காரணமாக 11-11-1983-ஆம் நாளன்று இரவு மறைந்தார் என்ற செய்தி நம் அனைவருக்கும் துக்கத்தையும், துயரத்தையும் அளிக்கின்ற ஒன்றாகும்.

திரு. என். கிட்டப்பா அவர்கள் நீண்ட பெரும் காலமாகப் பொது வாழ்க்கையில் தன்னை ஒப்படைத்துக் கொண்டு சிறந்த முறையில் பணியாற்றி வந்தவர்கள். அவர்களை முப்பதாண்டு களுக்கும் மேலாகவே நான் நன்கு அறிவேன். திராவிட இயக்கம் வளர வேண்டுமென்பதில் நீங்கா ஆர்வம் கொண்டு பணியாற்றி வந்தவர்கள் அவர்கள். பகுத்தறிவு இயக்கத்தோடு நெருங்கிய தொடர்பு கொண்ட அவர்கள் கொள்கைகளைப் பரப்புவதில் மிகச் சிறப்பாகப் பணியாற்றியவர்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்களின் நன்மதிப்பிற்குரியவராக வும், நம்பிக்கைக்குரியவராகவும் திகழ்ந்து, மயிலாடுதுறை பகுதி யில் இயக்கக் கருத்துக்களை வளர்ப்பதில் மிகவும் மும்முரமாக ஈடுபட்டு வந்தவர்கள். பொது வாழ்க்கையில் தன்னை ஈடுபடுத் திக், கொண்டு, தன்னுடைய நேரத்தையும், நினைப்பையும், உழைப்பையும், ஊக்கத்தையும், அறிவுத் திறமையும், ஆற்றல் திறனையும் அதற்காகவே பயன்படுத்தும் அளவிற்கு இருப்பவர் கள் ஒவ்வொரு நகரத்திலும், ஊரிலும் விரல் விட்டு எண்ணக் கூடிய அளவிற்கு ஒரு சிலரைத்தான் காணமுடியும். அப்படிப் பட்ட பொது வாழ்க்கையில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டிருப்ப வர்களின் எண்ணிக்கை மிகவும் அருகி இருக்கின்ற இந்த நாட்டில் மாண்புமிகு திரு. என். கிட்டப்பா அவர்கள் மயிலாடுதுறையில் சின்னஞ்சிறு பருவத்திலிருந்தே, பள்ளியை விட்டு வெளியேறிய நிலையிலிருந்தே பொது வாழ்க்கைக்குத் தன்னை ஒப்படைத்துக் கொண்டு, தன்னுடைய முழு நேரத்தையும் அதற்காக ஒதுக்கிப் பாடுப்பட்டு வந்தவர்கள்.

மிக்க உணர்ச்சியோடும், எழுச்சியோடும் எந்தப் பணியை யும் செய்யும் ஆற்றல் திறன் படைத்தவர்கள் அவர்கள், எந்த வொரு செயலை அவர்களிடத்திலே ஒப்படைத்தாலும் அந்தச் செயலை முழுமையாக நிறைவேற்றி வைப்பதிலே முனைப்புள்ளம் கொண்டு பாடுபடுகின்ற சிறந்த பண்புக்கு உறைவிடமாக அவர் ள் விளங்கினார்கள்.



மாயூரம் என்று இருந்த பெயரை மயிலாடுதுறை என்று மாற்ற வேண்டுமென்று நீண்ட பெருங்காலமாகவே வற்புறுத்தி பல்வேறு வகைகளில் தீர்மானம் நிறைவேற்றியும், அவற்றை அரசுக்கு அவ்வப்பொழுது அக்கறையோடு எடுத்து தெரிவித்தும் அந்த ஊரினுடைய பெயர் நல்ல தமிழிலே அமைக்கப்பட வேண்டுமென் தற்காக அரும்பாடுபட்டார்கள். அவர்களுடைய கனவு நிறைவேறத் தக்க அளவிற்கு, சென்ற ஆண்டு மாயூரம் என்ற பெயர்கூட மயிலாடுதுறையாக மாற்றியமைக்கப்பட்டது. அப்படி மயிலாடுதுறை என்று அந்த ஊரின் பெயர் மாற்றியமைக் கப்பட்ட செய்தியும் அவருக்கு மிகவும் மகிழ்ச்சி அளித்துவந்தது தப்பித்தவறி யாராவது மாயூரம் என்று சொல்லிவிட்டால். அவருக்கு அடங்காத சினம் கிளம்பிவிடும். மயிலாடுதுறை என்று சொல்ல வேண்டுமென்பதை எந்தவொரு நிலையிலும் வற்புறுத்தி வந்தவர்கள் அவர்கள்.

மயிலாடுதுறையில் முன்சீப்பாக வேலை பார்த்து, தமிழுக்கு நல்ல தொண்டாற்றி, தமிழ் வளர்ச்சிக்காகத் தன்னை ஈடுபடுத் திக்கொண்டு, நல்ல தமிழ் நாவல்களை எழுதி, தமிழ் பாடல் களையும் மிகச் சிறப்பாக எல்லோரும் பாராட்டத்தக்க அளவிற்கு எழுதி சீர்திருத்தப் பாடல்களை வரைந்த வேதநாயகம் பிள்ளை அவர்களின் புகழ் நாடெங்கும் மிகச் சிறப்பாகப் பரவ வேண்டு மென்பதில் ஆர்வம் கொண்டு, அவருக்காகத் தனி சிறப்பு விழாக் களையெல்லாம் எடுத்து தம்முடைய தமிழார்வத்தை மிகச் சிறப்பாகக் காட்டிக் கொண்டவர்கள் அவர்கள்.

மொழிக்காகவும், நாட்டுத் தொண்டுக்காகவும் பலமுறை சிறை எய்தியவர்கள் அவர்கள். தன்னலம் அற்ற ஒரு தொண் டராக, பொது வாழ்க்கைக்குத் தம்மை ஒப்படைத்த ஒருவராக அவர் விளங்கினார். "உண்டால் அம்ம இவ்வுலகம். . . ." என்று அதாவது இந்த உலகம் ஏன் இருக்கின்றது என்ற கேள்வி யினைக் கேட்டுவிட்டு அதற்காக விடையிறுத்த புறநானூற்றுப் புலவன் ஒருவன் "தனக்கென முயலான் நோன்றான் பிறர்க் கென முயலுநர் உண்மையானே" என்று கூறினார். அதாவது ஏன் இந்த உலகம் இருக்கின்றது என்று சொன்னால் தமக்கென்று பாடுபடாமல் பிறர்க்கென்று பாடுபடுகின்ற ஒருசிலர் இருப்பதன் காரணமாகத்தான் என்று எடுத்துச் சொன்னார்கள்.

அப்படி பிறருக்காக பாடுபடுகின்ற அளவுக்கு தம்முடைய நேரத்தையும், நினைப்பையும், அறிவுத் திறனையும், ஆற்றல் திறனையும் பயன்படுத்தி வந்த அருமையான தொண்டர் மறைந்தார் என்பது நமக்கெல்லாம் மிகுந்த வேதனையையும் வருத்தத்தையும் ஏற்படுத்துகின்ற ஒன்றாகும், திரு. என்.கிட்டப்பா அவர்கள் பழகுவதற்கு இனிய நண்பராக விளங்கினார்கள். அவர்கள் கொண்ட கொள்கையை நிறைவேற்ற வேண்டும் என்பதில் பிடிவாதமான தன்மை உடையவர்கள். அந்தக் கொள்கைநிறைவேற வேண்டும் என்பதில்மிகஅழுத்தந்திருத்தமான

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1983 நவம்பர் 14

போக்கையும் அவர்கள் கொண்டவர்கள். யாரும் எந்தச் சமயத்திலும் அதற்காகச் சமாதானம் சொன்னாலும் காம்ப்ரமைஸ் என்பது அவரிடத்திலே ஏற்படாது. எனவே அவர் கொண்ட கொள்கையை நிறைவேற்றவேண்டும் என்பதில் தான் திட்டமாகவும் திண்மையாகவும் இருந்து வந்தார்கள். அப்படிப் பட்டவர்களுடைய மறைவு நாட்டுக்கு பேரிழப்பாகும் என்பதை எடுத்துச் சொல்லி அவருடைய மறைவு குறித்து இந்தப் பேரவை தன்னுடைய ஆழ்ந்த வருத்தத்தையும் இரங்கலையும் தெரிவித்துக் கொள்கின்றது என்பது மட்டுமல்லாமல் அவருடைய குடும்பத்தினருக்கும், அவர்களுடைய உற்றார் உறவினருக்கும் இரங்கலையும், ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதில் நாம் அனைவரும் ஈடுபடுவோமாக என்று கூறி இந்தத் தீர்மானத்தை நான் மொழிகிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, கழிந்த வாரம் வரை இந்த மன்றத்திலே உறுப்பினராக இருந்து நம்மிலே ஒருவராக இருந்த திரு. என். கிட்டப்பா அவர்களின் மறைவு நாட்டுக்கு வேதனையைத் தருகின்றது. அவை முன்னவர் அவர்கள் சொன்னதைப் போல 1967-ஆம் ஆண்டிலே இருந்து மும்முறை மயிலாடுதுறைத் தொகுதியிலே இருந்து சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார் என்றால் அந்தத் தொகுதியின் மக்கள் அவர் மீது எந்த அளவுக்கு பாசத்தை வைத்திருக்கிறார்கள் என்பதை நமக்கு புலப்படுத்துகின்றது.

ஆளுகின்ற கட்சியிலே இருந்தாலும் சரி, எதிர்க்கட்சியிலே இருந்தாலும் சரி கேள்வி நேரத்திலே அதிகமான கேள்விகளை எழுப்பி அதன் மூலமாக பல்வேறு விவரங்களைப் பெற்று செய்திகளைச் சொல்லக்கூடிய வாய்ப்பைப் பெற்றவராக அவர் இருந்தார் என்பதை இந்த நேரத்திலே நான் நினைத்துப் பார்க்கிறேன் 1971 ஆண்டிலே இருந்து 1976-ஆம் ஆண்டு வரையும் மீண்டும் 1977-ஆம் ஆண்டிலே இருந்து 1980-ஆம் ஆண்டு வரையும் அவர் இந்த மாமன்றத்திலே பணியாற்றிய காலத்திலேயும் அவர் மிக அதிகமான, ஆயிரக்கணக்கான கேள்விகளைக் கேட்டு அதன் விளைவாக மிக அதிகமான கேள்விகளைக் கேட்டார் என்று பாராளுமன்ற பணிக்குழுவின் சார்பிலே அளிக்கப்பட்ட வெள்ளிப் பதக்கத்தைப் பெற்றார் என்பதை நான் இந்த நேரத்திலே கூற விரும்புகிறேன்.

அவை முன்னவர் அவர்கள் சொன்னதைப் போல மாயூரம் என்றிருந்த பெயரை மயிலாடுதுறை என்று மாற்றுவதற்காக அவர் அரும்பாடு பட்டார். மயிலாடுதுறைத் தொகுதியிலே பல்வேறு திட்டங்களுக்காகவும், அபிவிருத்திப் பணிகளுக்காகவும் அவர் துணையாக இருந்தார், ஆர்வமாக இருந்தார் என்று சொல்கின்ற அதே நேரத்திலே மயிலாடுதுறைப் பகுதி மக்களின் நீண்ட நாள் தேவையாகிய மேம்பாலம் கட்டுவதிலே கூட அவர் மெத்த



983 நவம்பர் 14] [திரு. என். எஸ். வி. சித்தன்]

முயற்சி எடுத்துக் கொண்டார் என்று நண்பர்கள் கூற நான் கேள்விப்பட்டிருக்கிறேன். மேலும் அந்தப் பகுதியிலே உள்ள அனைத்துக் கட்சிகளைச் சார்ந்தவர்களுடைய நன்மதிப்பையும் பெற்றவராக அடக்கமாக எளிமையாக வாழ்ந்து மறைந்திருக்கிறார். அவர் அண்மையிலே சில காலமாக உடல்நலம் குன்றியிருந்த காலத்திலேயும் கூட, சரளமாகப் பேச முடியாமல் இருந்த நேரத்திலேயும் கூட இம் மாமன்றத்தின் நிகழ்ச்சிகளில் பங்கு கொள்ள அவர் காட்டிய அக்கறையையும், ஆர்வத்தையும் இந்த மன்றத்திலே இருக்கின்ற உறுப்பினர்கள் அனைவரும் அறிவார்கள் என்று நான் கருதுகிறேன். இன்றைக்கு அவருடைய மறைவால் வாடுகின்ற உற்றார் உறவினருக்கும் அவருடைய குடும்பத்தினருக்கும் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பிலே எங்களுடைய பரிவான இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்து அமைகிறேன், வணக்கம்.

(முற்பகல் 9-10)

திரு. அன்பில் தர்மலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்தும் மறையாமலும் நம்மோடு இருந்து கொண்டு இருக்கிற மாண்புமிகு உறுப்பினர் கிட்டப்பா அவர்களுடைய மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கின்ற நேரத்தில் அருமை நண்பர் மாயவரம் கிட்டப்பா அவர்கள் பள்ளிப் பருவத்திலேயிருந்து இறுதி வரையிலே திராவிடர் இயக்கத்தில் ஈடுபாடு கொண்டு, கழகத்தை வளர்க்கின்ற பணியிலே மாத்திரம் அல்ல, அந்தப் பகுதி மக்களின் நல்வாழ்வுக்காக தன்னையே அர்ப்பணித்துக்கொண்டு வாழ்ந்து காட்டியவர்கள். அவர் பள்ளி மாணவனாக இருக்கின்ற நேரத்தில் திருச்சி மாவட்டத்திலே உடையார்பாளையம் வேலாயுதம் கொலை செய்யப்பட்டார் என்பதை அறிந்து கொதித்து எழுந்து ஓடோடி வந்து திருச்சியிலே உள்ள எங்களையெல்லாம் சந்தித்து அவர் அன்றையதினம் அந்த வழக்கு நடைபெறவேண்டும் என்பதற்காக தன்னையே வருத்திக்கொண்டு பாடுபட்டார் என்பதை நினைக்கிற நேரத்தில் உண்மையிலேயே நான் மெத்த வருத்தப்படுகிறேன். உடையார்பாளையம் வேலாயுதம் அவர்களுடைய வழக்கு முடிவுற்ற பிறகும் கூட, அந்த வழக்கு மறு விசாரணை செய்யப்படவேண்டும் என்பதற்காக ஒரு இயக்கத்தையே கூட்டிக் காட்டினார்கள். அதற்குப் பிறகு மறு விசாரணை செய்யப்பட்டு, அந்தக் குற்றம் நிரூபிக்கப்பட்டு, அப்படி நிரூபிக்கப்பட்ட பிறகு உடையார்பாளையம் வேலாயுதம் அவர்கள் நினைவாக ஒரு மன்றம் அமைக்கவேண்டும் என்று கூறி, அப்படி ஒரு மன்றத்தை அமைத்து, அந்த மன்றத்தின் மூலமாக பலவேறு பணிகளை நிறைவேற்றி வந்தார்கள்.

அதைப்போலவே அனைத்து நண்பர்களையும் இணைத்து 'அண்ணா மன்றம்' நிறுவி அதையும் சிறப்புற நடத்தி வந்தார்கள். அதைப்போலவே கழகம் நடத்திய எல்லாப் போராட்டங்களிலும் ஈடுபட்டு பல முறை சிறை சென்றவர். குறிப்பாக

[திரு. அன்பில் தர்மலிங்கம்] [1983 நவம்பர் 14

'மிசா' சட்டத்தின் கொடுமைக்கு உள்ளாகி ஓராண்டுக் காலம் சித்திரவதைக்கு உள்ளாகியிருந்தார்கள். அவரைச் சிறைச்சாலைக்கு நான் சென்று பார்த்தபோது உடல் நலிவுற்று இருந்தாலும், உள்ளம் மிக உறுதியோடு இருந்தார்கள். அதற்கு இடைக்காலத்திலே அவருக்கு ஒரு சில இடையூறுகள் வந்த நேரத்திலேதான், அதைப் பற்றி கவலைப்படாது தான் நிரபராதி என்பதை நிரூபிப்பதற்காக அவர்கள் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டார்கள். அந்த வழக்கு முடிவுறுவதற்கு முன்னாலேயே அவர் தன்னை முடித்துக்கொண்டு விட்டார்கள்.

அவர் வாழ்ந்து காட்டிய வாழ்க்கையை நினைக்கிறபோது அவர் உண்மையிலேயே அந்த ஒரு வழக்கினை நடத்தாமல் இருந்து இருந்தால் அவர் இன்னும் சில நாட்கள் நம்மோடு இருந்து இருப்பார் என்று எண்ணினாலும், அவர் தன்னைத் தானே வருத்திக்கொண்டு சென்று விட்டார்கள். இங்கே முன்னவர்கள் அவர்கள் சொன்னதைப்போல மாயூரம் முன்னேற்றத்திற்காக அவர் பல்வேறு முயற்சிகளைச் செய்தவர்கள். இரண்டு மூன்று முறை மாயூரம் நகராட்சி மன்ற உறுப்பினராக இருந்து, நகராட்சி மன்றத்திலே பல்வேறு திட்டங்களையும், தீர்மானங்களையும் கொண்டு வந்து நிறைவேற்றி இருக்கிறார். அது மாத்திரமல்ல, அவர் ஆளும் கட்சியில் இருந்தாலும் கூட, மாயூரம் நகராட்சி புறக்கணிக்கப்படுகிறது என்பதை எண்ணி, தன்னுடைய பதவியையே ராசினாமா செய்ய முன் வந்தவர்கள். இன்னின்ன காரியங்கள் செய்யப்படவில்லையென்றால், நான் நிச்சயமாக இந்தப் பதவியில் இருக்க மாட்டேன் என்று பதவியை வெறுத்துக் காட்டியவர்கள்.

சட்டமன்றத்தில் அவர் முன்னேற்றக் கழகத்தின் சார்பில் இருந்து பணியாற்றிய நேரத்திலும் அவர் எதிர்க்கட்சி வரிசையில் இருப்பவர்களை அணைத்துச் செல்லும் பாங்கு பெரிதும் பலராலும் பாராட்டப்பட்டு இருக்கிறது. அப்படிப்பட்ட நண்பர் இன்றைக்கு நம்மிடத்தில் இல்லை. அவர் தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்ந்து காட்டியவர். அந்தப் பெருமை நண்பர் திரு. கிட்டப்பா அவர்களுக்கு உண்டு. அவர் ஏதோ குடிசையில் தான் வாழ்ந்தார் என்று சொன்னார்கள். அவருடைய வீட்டைப் பார்த்தால் பலருக்கு நன்றாகத் தெரியும். எளிமையாக வாழ்ந்து காட்டியவர். எளிமையில்தான் இனிமை இருக்கிறது என்று எடுத்துக் காட்டியவர். அப்படிப்பட்டவர் இன்றைக்கு நம்மிடத்தில் இல்லை. அவர் விட்டுச்சென்ற பணியை மற்ற நண்பர்கள் எல்லாம் முயற்சி எடுத்து நடத்திக்காட்ட வேண்டும் என்பது என்னுடைய வேண்டுகோள்.

அருமை நண்பர் திரு. கிட்டப்பா அவர்களைப் பிரிந்து வாடும் அவர்களுடைய குடும்பத்தாருக்கும், குறிப்பாக அவருடைய துணைவியாருக்கும், மக்களுக்கும், சகோதரர்களுக்கும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் இரங்கலை வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்வதோடு இறுதியாக, அவர்



[1983 நவம்பர் 14] [திரு. அன்பில் தர்மலிங்கம்]

மேலே ஒரு வழக்கு இருந்தது. இன்றைக்கு அவர் மறைந்துவிட்டார் அந்த வழக்கை அரசாங்கம் திரும்பப் பெற்று, மரியாதை செலுத்த வேண்டும் என்று கேட்டு, முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே என்னுடைய மரியாதையைத் தெரிவித்து விடைபெறுகிறேன்.

**திரு. என். சங்கரய்யா:** தலைவரவர்களே, மாண்புமிகு திரு. கிட்டப்பா அவர்கள் மறைந்தது குறித்து அவை முன்னவர் அவர்கள் கொண்டுவந்துள்ள இரங்கல் தீர்மானத்தை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே வழிமொழிந்து சில கருத்துக்களை நான் கூற விரும்புகிறேன்.

1967 ஆம் ஆண்டிலே நடைபெற்ற தேர்தலில் அவர் வெற்றி பெற்று இங்கே வந்த அந்தக் காலம் முதற்கொண்டு அவரை நான் நன்றாக அறிவேன். அவர் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நான்கு முறை மயிலாடுதுறை தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப் பெற்றார் என்ற அந்த ஒரு விஷயமே அந்தப் பகுதியில் வாழக் கூடிய மக்கள் மத்தியில் அவர்களுடைய சேவை எந்த அளவுக்கு இருந்தது என்பதை தெட்டத் தெளிவாகக் காட்டுகிறது.

அவர் சுயமரியாதை இயக்கத்தினுடைய ஆரம்ப முன்னணியில் ஒருவராகவும் பகுத்தறிவுப் பிரச்சார இயக்கத்திலே தீவிரமாகப் பங்குகொண்டு நீண்ட காலம் பணியாற்றிய மூத்த தலைவர்களில் ஒருவராகவும் வாழ்ந்தார். எப்போதுமே அவர் இனிய சுபாவத்தோடு அனைத்துக்கட்சி சட்டமன்ற உறுப்பினர்களுடன் பழகிக் கொண்டிருந்தார், மிகவும் அடக்கமான குணத்தைப் பெற்ற அவர் ஏற்கெனவே இங்கே உறுப்பினர்கள் குறிப்பிட்டதைப்போல் ஏராளமான கேள்விகளை சட்ட மன்றத்திலே கேட்டு, அவை மூலம் அரசாங்கத்தினுடைய பதிலைப்பெற்று, அந்தப் பிரச்சனை பற்றி மக்களுக்கு தெரிவிப்பதற்கு அவர் காரணமாக இருந்தார் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அவருடைய மறைவினால் இன்றைக்கு வாடுகின்ற அவருடைய மனைவியாருக்கும் குடும்பத்தாருக்கும் உற்றார் உறவினர்களுக்கும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து இந்தத் தீர்மானத்தை வழிமொழிந்து அமர்கிறேன்.

**திரு. இரா. கருப்பையா:** மாண்புமிகு பேரவை தலைவரவர்களே, இந்த சட்டப்பேரவையில் உறுப்பினராக இருந்து எதிர்பாராத நிலையில் திடீரென்று சென்ற 11-ம் தேதி அன்று மறைந்து விட்ட மாண்புமிகு உறுப்பினர் மாயுரம் கிட்டப்பா அவர்களுடைய மறைவு குறித்து நம்முடைய சட்டப் பேரவை முன்னவர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற இரங்கல் தீர்மானத்தை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக வழிமொழிந்து, எங்களுடைய இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

[திரு இரா கருப்பையா] [1983 நவம்பர் 14

திரு என் கிட்டப்பா அவர்கள் இந்த சட்டப்பேரவையில் உறுப்பினராக இருந்து ஆற்றியுள்ள பணிகளை இந்த நாடு நன்றாக அறியும் அவருடைய பணி எந்த அளவுக்கு சிறப்பாக இருந்திருக் கிறது என்பதற்கு தொடர்ந்து நான்குமுறை இந்தச் சட்டமன்றத் திற்கு மாயுரம் தொகுதியிலிருந்து உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றிருக்கிறார் என்பதே ஒரு மிகப்பெரும் சான்றாக அமைந் திருக்கிறது மக்களிடத்தில் எளிய முறையில் அன்போடு பழகி, மக்களுடைய நம்பிக்கையைப் பெற்ற ஒருவரை இன்றைய தினம் அந்தத் தொகுதி மக்கள் இழந்திருக்கிறார்கள்.

அது மட்டுமல்ல, மாயுரம் என்கின்ற பெயரை மயிலாடுதுறை என்று மாற்ற வேண்டும் அழகிய வரலாற்றுப் புகழ் கொண்ட மயிலாடுதுறை என்ற பெயரை வைக்க வேண்டும் என்பதற்காக இந்தச் சட்டப்பேரவையிலே தொடர்ந்து போராடி, அதில் வெற்றியும் பெற்ற ஒரு வீரர் என்பதை நான் குறிப்பிட விரும்பு கிறேன். அவர் இந்தச் சட்டப்பேரவையிலே எழுப்பிய வினாக்கள் இந்தச் சட்டப் பேரவையின் வரலாற்றிலே இடம் பெற்றுள்ளது, என்பது மட்டுமல்ல. இந்தப் பேரவையில் அதிகமான வினாக்களை எழுப்பியவர் என்பதற்கான சான்றையும் பெற்றிருக்கிறார்.

அவர் உடல் நலம் இல்லாத நிலையிலும் விடாப்பிடியாக தான் எடுத்துக் கொண்ட பிரச்சினையில் முடிவுகாண வேண்டும், அதை முடித்துக் கொடுக்க வேண்டும் என்ற உணர்வோடு இங்கே அவர் ஆற்றிய பணிகளையும் செயல்பட்ட விதங்களையும் என்னை போன்றவர்கள் எப்போதும் நிச்சயமாக மறக்க முடியாது.

முற்பகல் 9-20

அவர் உடல் நலம் குன்றியிருந்த நேரத்திலேயும் அவர் எவ் வளவு உறுதியாகவும், விடாப்பிடியாகவும் அரசு தரப்பிலே இருக் கின்ற அமைச்சரிடத்திலே அவர் எடுத்துக்கொண்ட பிரச்சனை யிலே ஒரு உறுதியைப் பெற்றுக்கொண்டுதான் இந்த அவையிலே உட்கார்ந்தார் என்கின்ற நிலையிலே நின்று செயல்பட்ட ஒரு நண்பரை இழந்திருக்கிறோம். நான் சட்டமன்ற உறுப்பினராக இடம் பெற்ற பிறகு அவருடைய நடவடிக்கைகளை அவையில் கூர்ந்து கவனித்திருக்கிறேன். அந்த முறையிலே அவருடைய செயல்கள் எல்லோருக்கும் ஒரு வழிகாட்டியாக அமைந்திருந்திருக் கிறது என்பதை குறிப்பிட விரும்புகிறேன். அந்த முறையிலே மக்களுடைய சேவையிலே தன்னை அர்பணித்துக் கொண்டு' தொடர்ந்து பாடுபட்ட ஒரு நண்பரை இழந்து நிற்கிறோம் என்பதைத்தான் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அவருடைய மறைவு எல்லோருக்கும் வருத்தத்தை ஏற்படுத்தி இருக்கிறது என்பதோடு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக ஆழ்ந்த வருத்தத்தையும் இரங்கலையும் நான் தெரிவித்துக்கொள் கிறேன். அவரை இழந்து இருக்கிற அவருடைய குடும்பத்தாருக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பாக ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன்.



1983 நவம்பர் 14]

திரு. பி. முகமது இஸ்மாயில்: பேரவைத் தலைவர் அவர்களே, திரு. கிட்டப்பா அவர்களைப் பற்றி இங்கே எடுத்துச் சொல்லப் பட்ட நல்ல கருத்துக்களை நான் பிரதிபலிப்பதோடு காட்டப்பட்ட உணர்ச்சிகளை நானும் பகிர்ந்துகொள்கிறேன்.

திரு. கிட்டப்பா அவர்கள் 1967 முதல் தொடர்ச்சியாக இந்த மன்றத்தில் சட்டமன்ற உறுப்பினராக சிறப்பாக செயலாற்றி வந்திருக்கிறார்கள். இந்த மன்றத்தில் அவரோடு சேர்ந்து பணியாற்றுகின்ற வாய்ப்பினை பெற்றவன் என்ற முறையிலே அவருடைய ஆக்கப்பூர்வமான பணிகளை இந்த மன்றத்திலே நேரடியாகப் பார்க்கின்ற வாய்ப்பினை நான் பெற்றிருக்கிறேன். கருத்துக்களை எடுத்துக் கூறுகின்ற நேரத்தில் மிகவும் தெளிவாகவும், நிதானமாகவும், ஆணித்தரமாகவும் எடுத்துக் கூறுகின்ற ஆற்றல் பெற்றவர் நண்பர் கிட்டப்பா அவர்கள். அவர் 17 ஆண்டுக்காலம் சட்டமன்றத்தில் உறுப்பின ராக இருந்தும் பொருளாதாரத்தில் தன்னுடைய நிலையை மேம் படுத்திக்கொள்ளவில்லை என்பதை நண்பர்கள் எடுத்துக்காட்டி னார்கள். தான் சில காலமாக நோய்வாய்ப்பட்டு இருக்கிறோம் என்பது அவருக்குத் தெரியும். அவருடைய வாழ்நாட்கள் எண்ணப் பட்டு வருகிறது என்பதையும் மிக நன்றாக உணர்ந்திருந்தார். அதை வெளிப்படையாக நண்பர்களிடத்தில் சொல்லிக் கொண்டதும் உண்டு. அந்த நிலையிலும் கூட தனக்காக இல்லாமல் இருந் தாலும், தன்னைச் சேர்ந்திருக்கிற குடும்பத்திற்கும் ஏதாவது சேர்த்துக் கொள்ளக்கூடிய எண்ணம் அவரை தொட்டது கிடை யாது என்பதற்காக நாம் அதிகமாக அவரைப் பாராட்டியாக வேண்டும்.

அரசியல் சேவை என்ற நிலை மாறி, அரசியல் ஆதாயம் தருகின்ற தொழில் என்ற எண்ணம் வெகு வேகமாக மாறி வரு கின்ற இந்த வேளையில், திரு. கிட்டப்பா போன்ற தோழர்கள் அரசியலில் சில உயர்ந்த கொள்கைகளைக் கோட்பாடுகளை மிக உயர்வாகக் கடைபிடித்து வந்திருக்கிறார் என்பதை எண்ணிப் பார்க் கிறபோது அவரின் மதிப்பு இன்னும் மேலே ஏறுகிறது. கிட்டப்பா அவர்கள் எந்த அளவுக்கு சமுதாயத்தின் மதிப்பை பெற்றிருக்கிறார் என்பது தொடர்ச்சியாக 4 முறைகள் ஒரே தொகுதியில் இருந்து மீண்டும் மீண்டும் அவர் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்ததில் இருந்து தெளிவாகத் தெரிகிறது. அந்தப் பகுதியிலே வசிக்கின்ற மக்கள். அவர் பொருளாதாரத் துறையில் ஏற்றம் பெறாமல் இருந்தால் கூட, அவர் கடைபிடித்த ஒழுக்கசீலமான நடவடிக்கைகளால் மிக உயர்ந்த மதிப்பைத் தந்திருக்கிறார்கள் என்பது தெளிவான எடுத்துக் காட்டாக அமைந்திருக்கின்றது.

இன்றயதினம் நல்லதொரு ஆற்றல் பெற்ற உறுப்பினரை இந்த மன்றம் இழந்திருக்கிறது. அவருடைய மறைவால் வாடும் குடும்பத்தாருக்கு ஜனதா கட்சி இதயப்பூர்வமான அனுதாபத்தை தெரிவித்துக்கொள்வதோடு, அவருடைய ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன் என்று சொல்லி அமர்கிறேன்.

[1983 நவம்பர் 14

**திரு. எஸ். ஆண்டித்தேவர்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. கிட்டப்பா அவர்கள் மறைந்ததற்காக அவை முன்னர் முன்மொழிந்த இரங்கல் தீர்மானத்தில் அகில இந்திய பார்வார்ட் பிளாக் கட்சியின் சார்பிலே எனது கருத்துக்களை இத்தோடு இணைத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் கிட்டப்பா அவர்கள் இந்த மன்றத்திலே பணியாற்றுகின்றபோது அவர்கள் உடல் நலம் தளர்ச்சியாக இருந்தாலும் பல்வேறு சந்தர்ப்பங்களிலே அவர் கருத்தைக் கூறவேண்டும் என்று எழுந்து நின்று ஒருசில வார்த்தைகள் சொன்னாலும், அவைகள் இந்த நாட்டு மக்களுக்கான நல்ல காரியமாக இருக்கும் என்பதோடு மட்டுமல்லாமல் அவர்கள் தான் சார்ந்திருந்த திராவிட இயக்கத்தின் கொள்கைகளை இந்த மன்றத்திலேகூட பல்வேறு சந்தர்ப்பங்களிலே நடுநிலையில் இருந்து பேசியதை நான் பார்த்திருக்கிறேன்.

ஒரு முறை இந்த மன்றத்திலே மயிலாடுதுறை சம்பந்தமாக கேள்வி வருகின்றபோது அவர்கள் நீண்டநேரமாக தன்னுடைய கையை உயர்த்திக்கொண்டு இருந்தபோது, அவைத் தலைவர் அவர்கள், கிட்டப்பா அவர்கள் முன்னால் இருக்கின்ற காரணத்தால் அவரைக் கவனிக்காமல் இருந்த நேரத்தில் திடீரென்று இந்தப்பேரவையில் நான் இருப்பதைவிட வெளியேறிவிடுவது நல்லது என்று வெளிநடப்பு செய்தபோது, அவைத் தலைவர் அவரை சமாதானப்படுத்தி, மறுபடியும் நீங்கள் கேளுங்கள் என்று சொன்னபோது கேள்வியைக்கூட கேட்காமல் விட்டு விட்டு, நான் எனது தொகுதி மக்களுக்காக சில நல்ல காரியங்களுக்காக கேள்வி கேட்க வேண்டுமென்று நினைக்கின்றபோது அவைத் தலைவர் பாராமுகமாக இருந்த காரணத்தால் நான் ஏன் இந்த அவையில் இருக்க வேண்டும் என்றும், மக்களுக்காக ஆற்றவேண்டிய கடமைகளில் இருந்து நான் தவறியவனாவேன் என்றும் சொல்லி, வெளிநடப்புச் செய்கிறேன் என்று கூறிய அந்தக் கருத்தினைக் கேட்டபோது, எந்த அளவிற்கு அவர் தமது பகுதி மக்களுக்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர் என்பது நமக்குத் தெரியும்.

அது மட்டுமல்லாமல், நஞ்சையில் இன்றைக்கும் திராவிட இயக்கம் வலுவாக இருப்பதற்கு கிட்டப்பா அவர்கள் ஒரு காரணமாகவும், மற்ற தலைவர்களோடு நீண்டகாலமாக அந்த இயக்கத்திலே தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர் என்ற செய்தியையும் பல்வேறு சந்தர்ப்பங்களிலே கேள்விப்பட்டு இருக்கிறோம். இந்த மன்றத்திற்கு நான் வராதபோது, இந்த மன்ற நிகழ்ச்சியைப் பார்க்கின்றபோது கிட்டப்பா அவர்களுடைய கேள்வி தான் அதிகமாக இருந்தது என்பதை நான் பார்த்திருக்கிறேன். 11-ஆம் தேதி இரவு 10 மணிக்கு சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியில் அவர்கள் மறைந்தார் என்ற செய்தி ஒவ்வொரு அங்கத்தினருக்கும் அறிவிக்கப்பட்டபோது உண்மையிலே மிகவும் அதிர்ச்சியாக இருந்தது. அன்றைக்கு முன்தினம்தான் அவர்கள் மயிலாடுதுறையில் ஒரு பொதுக்கூட்டத்திலே தலைமைதாங்கிய நேரத்திலே உடல்நலக்



1983 நவம்பர் 14] [திரு. எஸ். ஆண்டித்தேவர்]

குறைவு காரணமாக நான் ஒரேஒரு விசயத்தைமட்டும் சொல்
முடித்து விடுகிறேன் என்று ஆரம்பித்து, நான் அரசியலில் புகுந்
நாளிலிருந்து இந்த மாயவரத்தை மயிலாடுதுறை என்று மாற்
வேண்டும் என்று எண்ணியிருந்த அந்தக் கனவு நிறைவேற்ற
பட்டது என்று அந்தச் செய்தியைமட்டும் கூறிவிட்டு, உட
நலக் குறைவு காரணமாக இத்தோடு நான் முடித்து
கொண்டு அமர்கிறேன் என்று சொல்லிவிட்டு அமர்ந்தா
அவர்கள் அந்தப் பொதுக்கூட்டத்திலே பேசிவிட்டு அமர்ந்
தற்குப் பின்னால் அவர்கள், நான்கு முறை சட்டமன்ற உறு
பினராக இருந்தும், குடிசை வீட்டிலே வாழ்கிறார்கள் என்
தற்காக, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சா
பிலே அந்த மேடையிலே கொள்கை பரப்புச் செயலாள
அவர்கள் கிட்டப்பா அவர்களுக்கு 10 ஆயிரம் ரூபாய் வீ
கட்டுவதற்காக முதல் தவணையாகக் கொடுத்தார்கள் என்
செய்தியைப் பார்க்கின்றபோது, நீண்டகாலமாக சட்டமன்
உறுப்பினராக இருந்தும், அவர்கள் எப்படி வாழ்ந்திரு
கிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். ஆளும் கட்சியில் இருந்
போது 2 முறை சட்டமன்ற உறுப்பினராகவும், எதிர்கட்
வரிசையிலே 2 முறை சட்டமன்ற உறுப்பினராகவும் இருந்து
மயிலாடுதுறை போன்ற நகரத்திலே வாழ்கின்ற நேரத்தி
இன்னும் குடிசையிலேதான் வாழ்கிறார்கள் என்பதைப் பார்
கின்றபோது, பொதுவாழ்க்கையிலே இருக்கின்றவர்கள் அத்தனை
பேரும் மாண்புமிகு உறுப்பினர் கிட்டப்பா அவர்களை உதார
மாக வைத்து வாழவேண்டும் என்ற அந்தக் கருத்தினை இந்
நாட்டிலே பொதுவாழ்க்கையிலே ஈடுபடுபவர்களுக்கு நா
உதாரணமாகச் சொல்ல முடியும். அப்படிப்பட்ட இனி
நண்பர், இளம் வயதிலேயே நம்மைவிட்டுப் பிரிந்துவிட்டார்கள்
இன்னும் அவர்கள் இந்த மன்றத்திலே தொடர்ந்து ப
யாற்றக்கூடிய வாய்ப்பிருந்தும், அந்த வாய்ப்பு அவருக்கு
கிட்டவில்லை என்பதை நினைக்கின்றபோது உண்மையிலே
எங்களது இயக்கத்தின் சார்பாக அவருடைய ஆத்மா சாந்
யடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கிறேன். அவரை இழந்
வாடுகின்ற அவருடைய குடும்பத்திற்கும், குழந்தைகளுக்கும் ஆழ்ந்
வருத்தத்தையும், அனுதாபத்தையும் அகில இந்திய பார்வார்
பிளாக் கட்சியின் சார்பிலே தெரிவித்துக்கொண்டு, அமர்கிறே

(முற்பகல் 9-30)

**திரு. பழ. நெடுமாறன்** : அவைத் தலைவர் அவர்களே, மறை
மாண்புமிகு உறுப்பினர் திரு. கிட்டப்பா அவர்களை எண்ணு
போது என்னுடைய நினைவுகள் 25 ஆண்டுகளுக்கு முன்னா
செல்கின்றன. அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் நாங்
எல்லாம் மாணவர்களாக இருந்தபோது மயிலாடுதுறையிலிருந்
எளிய தொண்டனான கிட்டப்பா அவர்கள் அண்ணாமலை
பல்கலைக் கழகத்திற்கு வந்து எங்களையெல்லாம் சந்தித்
அரசியல் உரை ஆற்றிய, அரசியல் விவாதங்கள் நடத்தி

அந்த நாட்களை நான் இன்றைக்கு நினைத்துப்பார்க்கிறேன். அன்றிலிருந்து ஒவ்வொரு கட்டத்திலும் அவர்களது அரசியல் வளர்ச்சி அவ்வளவு பிரமிக்கத்தக்கதாகும். அதுவும் தஞ்சை மாவட்டத்திலே, பெரிய பெரிய வசதிபடைத்தவர்கள் அரசியல் ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருக்கிற ஒரு மாவட்டத்தில் எளிய குடும்பத்தில் பிறந்த கிட்டப்பா அவர்கள் எளிய தொண்டனாக அவர்கள் அரசியல் வாழ்வைத் தொடங்கி இன்றைக்கு இந்த மாநிலம் பூராவும் மதிக்கக் கூடிய ஒரு சிறந்த நாடாளுமன்ற வாதியாக இருந்தார்கள் என்பது பெருமை கொள்ளத்தக்க ஒரு செய்தியாகும். அவர்கள் தொடர்ந்து இந்த மன்றத்தில் 16 ஆண்டுக்காலத்திற்கும் மேலாக அங்கம் வகித்திருக்கிறார்கள். அதிலும் ஒரே தொகுதியில் அவர்கள் தொடர்ந்து வெற்றி பெற்றது என்பது ஒரு பெரிய செய்தியாகும். ஆம் இந்த அளவிற்கு அந்தத் தொகுதி மக்கள் மத்தியில் தஞ்சை மாவட்ட மக்கள் மத்தியில் நிலையான ஒரு இடத்தைப் பெற்றவர் அவர். அவர்களுடைய மறைவு இந்த மாவட்ட மக்களுக்கு ஒரு பெரிய இழப்பு. இந்த மன்றத்தைப் பொறுத்தவரையில் ஒரு சிறந்த நாடாளுமன்றவாதியை நாம் இழந்திருக்கிறோம். அவர்களுக்கு எங்கள் இயக்கத்தின் சார்பில் அஞ்சலி செலுத்தி அமர்கிறேன்.

*மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னவர் அவர்கள் முன்மொழிந்த இரங்கல் தீர்மானத்தை வழிமொழிந்து பேசுவதில் நான் பங்கு பெற விரும்பினேன். ஆகவேதான் இந்தப் பேச்சு. மயிலாடுதுறை கிட்டப்பா அவர்கள் இந்த மன்றத்திலே இருக்கிற ஒவ்வொரு உறுப்பினரும் எப்படி தங்கள் பணியைச் செய்ய வேண்டும் என்பதற்கு முன்மாதிரியாக இருந்தார்கள் என்பதை நான் குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் அரசைக் கண்டிக்கும்போது எவ்வளவு ஆழமாகவும், அழுத்தமாகவும், தெளிவாகவும் பணிவாகவும் வார்த்தைகளைப் பயன்படுத்தவேண்டுமோ அப்படி பயன்படுத்துவார். ஆனால் யாரை அவர் கண்டிக்கிறாரோ அவர்கள் அதை ரசிக்கவும் அதைப்பற்றிச் சிந்திக்கவும்தான் முடியுமே தவிர ஆத்திரப்படுத்த முடியாத அளவிற்கு அவர்கள் வார்த்தைகள் அவ்வளவு சீராகவும் ஒழுங்காகவும் இருந்தன என்பதை நான் இந்த நேரத்தில் நினைவுபடுத்த விரும்புகிறேன்,

அது மட்டுமல்ல, என்னுடைய பெயரில் மயிலாடுதுறையில் முதலில் எம். ஜி. ஆர். மன்றம் என்று வைத்தவர் திரு. கிட்டப்பா அவர்கள் என்று எண்ணும்போது, நான் அவரைச் சந்திக்காத அந்த நேரத்தில் அவர் அந்தப் பணியைச் செய்தார்கள் என்பதைப், பார்க்கும்போது எந்தளவிற்கு கொள்கை அடிப்படையிலே, கருத்தின் அடிப்படையிலே அவர் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார் என்பதை நான் எண்ணிப் பார்க்கிறேன். தவறுகள் யார் செய்தாலும் கண்டிப்பது என்ற துணிவை அவர்கள் இறுதி





வரையிலும் பெற்றிருந்தார்கள். இங்கே எவ்வளவு எதிர்த்துப் பேசினாலும் அவர் பழகுகிற முறையில் தன்னோடு உடன் பிறந்த ஒருவர் எதிர்க்கட்சியில் இருக்கின்றார் என்ற எண்ணம்தான் மற்றவர்களுக்குத் தோன்றுமே தவிர வேறு எந்த வகையிலும் ஒரு வேறுபாடு தோன்றாத வகையில் அவர் தம் கடமையை ஆற்றினார். ஆயிரக்கணக்கான கேள்விகளைக் கேட்டு பதில்கள் பெற்றாலும் அந்தக் கேள்விகளால் இந்த மாநிலத்தில் உள்ள மக்கள் பயன் பெறக்கூடிய செய்தியை வெளிப்படுத்தினாரே தவிர ஒரு பிரச்னையை உருவாக்க வேண்டி கேள்வியை அவர்கள் பயன் படுத்தவில்லை என்பதை இந்த நேரத்தில் நான் சொல்ல வேண்டியவனாக இருக்கிறேன். அவர்கள் எதிர்க்கட்சியில் இருக்கும்பொது உடல்நலம் இல்லாமலிருந்தபோது எத்தனையோ முறை அவர்களுக்கு நான் எச்சரிக்கை செய்தும் அதை—அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதல்ல—அவர்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்பதை நான் உணர்ந்தேன். அவர் எதிர்க்கட்சியில் இருந்தபோதும் சரி ஆளும்கட்சிக்கு வந்தபோதும் சரி தன் மேல் இருக்கிற வழக்கை தன்மேல் இருக்கிற குற்றச்சாட்டை வாபஸ் வாங்கவேண்டுமென்று ஒருபோதும் யாரிடமும் கேட்டதில்லை என்பதை எண்ணிப்பார்க்கும்போது அந்த துணிச்சல் மிக்க தியாகியை நான் வணங்க வேண்டியவனாக இருக்கிறேன். இந்த நிலையில் அவர்களுடைய மறைவு இந்த மன்றத்திற்கு பேரிழப்பாகும் என்பதோடு அவர்கள் குடும்பத்தாருக்கும் நண்பர்களுக்கும் நம் அனைவருக்கும் சேர்த்துத்தான் சொல்லவேண்டும்—இரங்கல் தீர்மானத்தின்மீது இரங்கலை இந்த வகையில் சொல்லிக் கொண்டு நானும் என்னை அதில் உட்படுத்திக் கொண்டு என்னுடைய இரங்கலை எல்லோர் சார்பாகத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர், மாண்புமிகு பேரவை முன்னவர், மற்றக் கட்சித் தலைவர்கள் தெரிவித்த இரங்கல் கருத்துக்களோடு, என்னுடைய இரங்கலையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. நடேசன் கிட்டப்பா அவர்கள் 1931—ஆம் ஆண்டு, பிப்ரவரி மாதம், 10-ஆம் தேதி பிறந்தார். மயிலாடுதுறை நகராட்சி உயர்நிலைப் பள்ளியில், பள்ளி இறுதி வகுப்புவரை கல்வி பயின்றார்.

1962—ஆம் ஆண்டில் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒவ்வொரு மாவட்டத்திலேயும், யார் யாரை சட்டமன்றத்திற்கு போட்டியிட நிறுத்தலாம் என்பதற்காக ஒரு நபர் குழுவை நியமித்தார்கள். ஒவ்வொரு நபரையும் ஒவ்வொரு மாவட்டத்திற்கு அனுப்பினார்கள். அப்படி அனுப்பியபோது, என்னை தஞ்சை மாவட்டத்திற்கு அனுப்பியிருந்தார்கள், முன்னாள் அமைச்சர் மன்னை அவர்களும், நானும் தஞ்சை மாவட்டத்தில் சுற்றுப்பயணம் செய்தோம். அப்போது மாயவரத்தில் பொது வியாபாரிகளையும், கழகத் தோழர்களையும் சந்திக்கின்ற

வாய்ப்பினை நான் பெற்றேன். அன்றைக்கே எல்லாத் தரப்பிலேயும் கிட்டப்பா அவர்கள் சட்டமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டால், இந்த வட்டாரத்திற்கு சிறப்பாக பணியாற்றுவார்கள் என்ற தீர்ப்பை நல்கினார்கள். அவர்கள் அளித்த தீர்ப்பின்படி 1967-ஆம் ஆண்டிலேயிருந்து இன்றுவரையில் அவர்கள் தொடர்ச்சியாக சட்டமன்றத்திலே உறுப்பினராக பணியாற்றி இருக்கிறார்கள் என்பதை நான் நினைவுகூறக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்கள் முன்னேற்றக்கழகத்தில் இருந்தபோது மாவட்ட துணைச் செயலாளராக இருந்ததை நாம் அறிவோம். அவர்கள் திராவிட இயக்கப்பணிகளில், திரு. ப. நெடுமாறன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல், மாணவர்கள் இயக்கத்தில் பங்குகொண்டு பணியாற்றினார்கள். திராவிட கழகத்திலும் பணியாற்றினார்கள். அதற்கு பிறகு, முன்னேற்றக் கழகத்திலும், அதற்கு பிறகு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திலும் இருந்து பணியாற்றினார்கள்.

அவர்கள் பொதுவாழ்க்கையில் எவ்வளவு தீவிரமானவர்கள் என்பதற்கு, எடுத்துக் காட்டு அவர் தன் சட்டமன்றத் தொகுதியில் கூட்டத்தை நடத்தி விட்டு, அன்றைக்கே புறப்பட்டு மறுநாள் சட்டமன்றக் கூட்டத்திலே கலந்து கொள்ள இங்கே வந்தவர், எதிர்பாராத வகையில் நம்மையெல்லாம் விட்டு பிரிந்தார் அவர்கள் மிகக் குறைந்த வயது நிரம்பியவர்கள். ஆனால். இன்னும் பல ஆண்டுக் காலம் இருந்து தொகுதிக்கும் மக்களுக்கும் தொண்டு செய்யக்கூடிய ஆற்றல் பெற்றவர், ஆனால், உடல்நலம் மிகவும் பாதிப்பு ஏற்பட்டுவிட்ட காரணத்தினால், நம்மையெல்லாம் மீளாத் துயரத்தில் ஆழ்த்தி விட்டு. மறைந்துவிட்டார் என்பதை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்,

, அவர்கள் கேள்வி நேரங்களில் பல்வேறு கேள்விகளைக் கேட்டதாக அனைவரும் எடுத்துச் சொன்னார்கள். மயிலாடுதுறை என்று பெயர் வைக்க வேண்டுமென்பதற்காக, அவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சிகள் கொஞ்சநஞ்சமல்ல, கடைசியாக இன்றைக்கு அவர்கள் விரும்பியதுபோல், அந்த நகரத்திற்கு மயிலாடுதுறை என்று பெயர் கிடைத்திருக்கிறது, அதுவும் அவர்கள் வாழ்நாளில் எல்லோருக்கும் வாழ்நாளிலே எடுத்துக் கொண்ட காரியங்களில் வெற்றி கிடைப்பதென்பது சுலபமான காரியமல்ல, ஆனால், கிட்டப்பா அவர்களுக்கு அந்தச் சிறந்த வெற்றி கிடைத்திருக்கிறது என்பதிலே நாம் மகிழ்ச்சி அடையலாம் என்பதை தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மயிலாடுதுறை நகர மன்றம், 20 அங்காடிகளைக் கட்டியிருக்கிறது. அந்த அங்காடிக்கு 'கிட்டப்பா நினைவு அங்காடி' என்று பெயர் சூட்ட வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் விரும்புகிறார்கள் என்ற நல்ல செய்தியை நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொண்டு, அவர்களுக்கு நீங்கள் எல்லாம் தெரிவித்த இரங்கலோடு, என் இரங்கலையும் சேர்த்து தெரிவித்துக்கொண்டு அமைகிறேன்.





இரங்கல் தீர்மானத்தை நிறைவேற்றும் வகையில். மாண்புமிகு உறுப்பினர்களை இரண்டு நிமிடங்கள் எழுந்து மவுனமாக நிற்கும்படி கேட்டுக் கொள்கிறேன்,

உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மவுனமாக எழுந்து நின்றதன் மூலம் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப் பெற்றது,

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மறைந்த பேரவை உறுப்பினர் திரு. கிட்டப்பா அவர்களுக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில், பேரவையின் நிகழ்ச்சிகள் இன்று இத்துடன் ஒத்தி வைக்கப்படுகின்றன,

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று 15—11--1983 காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்,

பின்னர் பேரவை முற்பகல் 9-40 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது,

## 2. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்

*214.* தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் 1980—81 ஆம் ஆண்டிற்கான நான்காவது ஆண்டறிக்கை (தமிழ், ஆங்கிலம்) [1956ம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619—ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

*215.* தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனத்தின் 1980-81-ஆம் ஆண்டிற்கான இரண்டாவது ஆண்டறிக்கை (தமிழ், ஆங்கிலம்) [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

*216.* தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனத்தின் 1981–82 ஆம் ஆண்டிற்கான மூன்றாவது ஆண்டறிக்கை (தமிழ், ஆங்கிலம்) 1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

*217.* தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் 1980—81-ஆம் ஆண்டிற்கான முப்பத்திரண்டாவது ஆண்டறிக்கை (ஆங்கிலம்) [1956—ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது],

*218.* தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் 1981-82ம் ஆண்டிற்கான முப்பத்திமூன்றாவது ஆண்டறிக்கை (ஆங்கிலம்) [1956-ஆம் ஆண்டு நிறுவனங்சள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது],

[1983 நவம்பர் 14

(ஆ) அறிக்கைகள் அறிவிப்புகள் ஏனைய தாள்கள்.

48. 1980-85-ஆம் ஆண்டின் ஆறாம் ஐந்தாண்டுத் திட்டம்—தமிழ் நாடு (தமிழ்).

49. 1983-ஆம் ஆண்டு சென்னை மாநகர் காவல்—தமிழ்நாடு மாவட்ட காவல் (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவு சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 45/1983—நகலும இணைப்பும்.

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்
136066
சென்னை-600 008.

D
V211,31 'N83
N83.54.2 4391